..ாஜ வெளியீடு

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

T. 15078

மாணிக்கவாசக சுவாமிகள்
அருளிச்செய்த

# திருவாசகம் திருக்கோவையார்

[எட்டாந் திருமுறை]

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர்
அருளிச்செய்த

# திருவிசைப்பா திருப்பல்லாண்டு

[ஒன்பதாந் திருமுறை]

GL. 57756
2003

அ. சோமசுந்தரம் செட்டியார், M. A., அவர்கள்
எழுதிய

## அரும்பொருள் விளக்கவுரை

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
திருவருளகம், 22-A. கல்லுக்கார தெரு,
மயிலாப்பூர், சென்னை.
பிரமாதி௵, மார்கழி௴

உரிமை
பதிவு செய்யப்பட்டது.

1939

தனிப்பிரதி ரூபா 1-2-0
8 பிரதிகள் ரூபா 7-4-0



சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை
சென்னை

உ

# திருவாசகப் பதிப்புரை

**வா**தவூர் எங்கோன் திருவாசகம் என்னும்தேன், நமது ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் உலப்பிலா ஆநந்தமாய தேன்; உள்ளகந்ததும்ப, வாக்கிறந்தமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிட, எற்புத் துளைதொறும் பாய்ந்து நிரம்பும் தேன்; நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்புள் நெகச் சொரியும் ஆநந்தத்தேன். இத்தேனைப் பருகுதற்கு முன்பு செய் தவத்தின் ஈட்டம் வேண்டற்பாலது.

திருவாசகத்துக்கு வாச்சியப் பொருள் தில்லைத் திருக்கூத் தனேயாவன். அவனருளாலே அவன்தாள் வணங்கி அவனருளே கண்ணாகக் கொண்டு காணினல்லால் திருவாசகப்பொருள் விளங்குவ தன்று. சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல விரும்புவார் முதற்கண் சொல்லிய பாட்டின் பொருள் தெரிந்து சொல்லுவார் ஆதல்வேண்டும். திருவாசகத்தின் பதவுரை பொழிப்புரை கருத்துரை முதலியவற்றைக் கற்று கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த பிறகே அநுபவ வுரையை உணர்ந்து நிட்டைகூடுதல் சித்திக்கும். இம் முதற்படிகளில் நிற்கும் சிற்றுயிர்க்கு உற்ற துணையாகவே இச் சிற்றுரையைக் கொள்ளவேண்டும். இவ்வுரைக்கு முன்தோன்றிய சில உரை நூல்கள் இதற்குத் துணைசெய்தன. இம்முயற்சியில் ஈடுபட்டு இவ்வுரையை யெழுதி நல்கியதோடமையாது இவ்வெளியீட்டின் செலவையும் தாமே ஏற்றுக்கொண்டுபகரித்த திருவாளர் அ. சோமசுந்தர செட்டியார் அவர்களுடைய பெருந்தொண்டு என்றும் மறக்கற் பாலதன்று. நமது சமாஜத்துக்கு நான்குமுறை பொருளுதவி புரிந்து எ, அ, க, கஉ திருமுறைகளை வெளியிட்ட பெரியாரும் இவரே யாவர். இவரது தொண்டின் பெற்றியைக் காணும் செல்வர்கள் ஒரு முறையேனும் முன்பணம் உதவித் திருமுறை வெளியீடுகட்குத் துணைபுரிவார்களாக.

இத் திருவாசகத்தேன் வெளியீடு தேன்பொழியுங் கொங்கு நாட்டில் வாதவூரடிகள் நம்மில்லங்கடோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் திருவெம்பாவைத் திருவிழா நாட்க ளொன்றில் சமாஜ விழாவின் தொடக்கத் திருப்பணியாக நிகழ்வது சால அழகுடைத்து. இச் சிறுநூல் நம்மைச் சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திருக்கூட்டத்து இருத்துக; பத்திநெறி யறிவித்துச் சித்தமலம் அறுவித்துச் சிவனடிக் கீழ் நிறுத்துக.

கோயன்புத்தூர்
வெகுதான்யஹு
மார்கழிமீ கஙஉ
28—12—1938

இங்ஙனம்
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்.

உ
சிவமயம்

# முன்னுரை

சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் இதுவரை அச்சிட்டு முற்றுவித்த 12 திருமுறைகளில் மூவர் தேவாரங்களும் பெரிய புராணமும் முதல் பதிப்பு செலவழிந்து இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளன. 8, 9 திருமுறைகள் முதற் பதிப்பு செலவழிந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தும், இரண்டாம் பதிப்பு வெளியிட சமாஜத்தின் பொருள் நிலை இடந்தராமையால் காரியதரிசியின் கட்டளையின்படி அத்திருமுறைகளைப் பதிப்பிக்க முன்வந்துள்ளேன். திருவாசகத்திற்குச் சைவத்திருவாளர் சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் பொழிப்புரை முதல் பதிப்புப் பிரதிகள் செலவாய்விட்டமையாலும் திருவாசகத்தில் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவனடிக்கீழ்" என்று சொல்லப்பட்டுள்ளமையாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தைப் பதிப்பித்ததுபோல் அரும்பொருள் விளக்க உரையுடன் அச்சிட்டு, திருவாசகத்தைக் குறைந்த விலையில் வெளியிட்டால் சைவமக்களுக்கு மிகவும் பயன்படுமென்று கருதி அவ்வாறு வெளியிடத் துணிந்தேன். இம்முயற்சியில் எனக்குப் பெரிதும் உதவி புரிந்த எனது நண்பர்கள் திருவாளர்கள் ரா. ஷண்முகசுந்தர செட்டியார், வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A. அவர்களுக்கும், சாது அச்சுக்கூடத்தினருக்கும் என்றும் மறவாத நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். இதற்குமுன் வெளிவந்துள்ள உரைகளுக்கும் இதற்கும் அநேக இடங்களில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவற்றுள் சில இடங்களிலும் இன்னும் வேறு இடங்களிலும் சொற்பிழைகளும் பொருட்பிழைகளும் இருத்தல் கூடும். அவற்றைக் கண்ணுறும் அறிஞர்கள் எனக்குத் தெரிவிப்பாராயின் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்வேன். சைவ மக்கள் அனைவரும் இப்புத்தகத்தைப் படித்துப் பொருளுணர்ந்து சிவனடிக்கீழ்ப் பேரின்பப் பெருவாழ்வை அடைவார்களாக.

15, கிழக்கு மாதா கோவில் வீதி,
இராயபுரம், சென்னை.

அ. சோமசுந்தரம்.

T.15078

உ

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்

"எழுதரு மறைகள் தேரு இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்."

"தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்."

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டிலே, மதுரையம்பதிக்கு ஏழுமைல் தூரத்திலே, வைகையாற்றங்கரையிலே, திருவாதவூரிலே, இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து அறுநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் அந்தணர் குலத்திலே மாணிக்கவாசகசுவாமிகள் என்னும் வாதவூரடிகள் தோன்றியருளினார். இவர் வாதவூரர் என்ற பெயர் சூட்டப்பெற்று இளமையிலேயே எல்லாக் கலைகளையும் கற்று நல்லொழுக்கமுடையவராயினார். இவரது மேன்மையை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசன் இவரைத் தனது முதல்மந்திரியாக்கித் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்தையும், சிவிகை, குடை, சுவரி முதலிய விருதுகளையும் திரண்ட செல்வத்தையும் இவருக்களித்தான். இவர் சில காலம் அறநெறி பிறழாது அமைச்சுரிமை செலுத்தி வந்தார். ஆயினும் அதில் பற்று வைக்காமல் சிவஞானம் தரவல்ல நல்லாசிரியனை வேண்டி நின்றார்.

ஒரு நாள் ஆரிய வணிகர் கீழ்க்கடற்கரையில் நல்ல குதிரைகளை விற்பனைக்காகக் கொண்டு வந்துள்ள செய்தியை யறிந்த அரசன், மிகுந்த பொன்னைத் தந்து வாதவூரரைக் குதிரைகள் வாங்கி வரும்படி பரிசனங்களோடு அனுப்பினான். வாதவூரரும் கடினமான வழி பல கடந்து திருப்பெருந்துறை யென்ற இடத்தை யடையும்போது ஆங்கொரு சோலையினின்றும் அரநாம முழக்கம் கடல்போன்றொலிப்பதைக் கேட்டார். ஆங்கு சிவபெருமானார் மானுடச் சட்டை தாங்கி மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல வாதவூரருக்கு ஞானோபதேசம் செய்யத் திருவுளங்கொண்டு ஒரு சிவயோகி வேடம் பூண்டு சிவகணங்கள் தமக்குச் சீடர்களாக வீற்றிருக்க, ஒரு குருந்த மரத்தடியில் அவர்கட்கு ஞானப் பொருள்களை விளக்கிக்கொண்டிருந்தார்.

இக்காட்சியைக் கண்ட வாதவூரர் 'தொழுத கை தலைமேலேறத் துளும்பு கண்ணீருள் மூழ்கி' குருமூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்து தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். இதற்கென்றே வந்துள்ள குருமூர்த்தியும் வாதவூரருக்குத் திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் ஞானதீக்கை செய்தருளினார். சிவஞானம் கைவரப்பெற்ற வாதவூரர் உள்ளக் கனிவொடு பல பாடல்களைச் சிவபெருமான் மீது பாடினார். குருந்த மேவிய குருநாதரும் இவர் பாடல்கள் அருளொளி வீசும் மாணிக்கவாசகமாக இருத்தலுக்கு மகிழ்ந்து வாதவூரருக்கு "மாணிக்க வாசகர்" என்ற தீக்ஷாநாமம் சூட்டினார். மாணிக்க வாசகரும் தமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றும், அரசன் தந்த பொருளும் இறைவன் உடைமைகளே யென்றும், அரசனும் தாமும் அடிமைகளே யென்றும் உணர்ந்து அவைகளை இறைவனாகிய குருமூர்த்திக்கே அர்ப்பணம் செய்தனர். இறைவனும் அப்பொருளைப் பெருந்துறையில் திருக்கோயில் கட்டுவித்து அடியவர்க்கு உதவுமாறு கட்டளையிட, அவ்வாறே செய்து உலகப்பொருள்களை நீத்துக் கோவண ஆடையும் திருநீறும் கொண்டு மெய்த் துறவியாகத் திருப்பெருந்துறையில் அமர்ந்திருந்தனர்.

பரிசனங்களால் இவற்றையறிந்த பாண்டியன், உடனே தன்னிடம் வரும்படி ஒரு திருமுகம் விடுத்தான். மாணிக்கவாசகர் அத்திருமுகத்தைப் பொருட்படுத்தவில்லை யாயினும், இறைவன் "நாம் ஆவணிமூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம். நீ முன்னதாகச் செல். இம்மாணிக்கக் கல்லையும் அரசனிடம் கொடு" என்று கட்டளையிட்டு ஒரு மாணிக்கத்தையும் தர, அதைக் கொண்டுபோய் அரசனிடம் தந்து ஆவணிமூலத்தில் குதிரைகள் வருமெனச்சொல்லி அரசனை மகிழ்வித்தார். ஆவணி மூலத்துக்கு இரண்டொரு நாள் முன்னர் வரை மதுரையின் பக்கலிலாவது பெருந்துறையிலாவது குதிரைப் படையொன்றும் வரக்காணாத பாண்டியன், மாணிக்கவாசகர் தன்னை ஏமாற்றிப் பொய் யுரைத்தன ரென்றெண்ணி அவரைச் சிறையிலிட்டுப் பலவகையாகத் துன்புறுத்தினான். சுவாமிகள் எம்பெருமானையே நினைந்து "நன்றே செய்வாய்ப் பிழைசெய்வாய், நானோ இதற்கு நாயகமே" என்ற உறுதியோடு விளங்கினார்.

ஆவணி மூலத்தன்று காலையில் குதிரைகள் வந்தன. ஆலவாய்க் கடவுளும் குதிரைச் சேவகனாக வந்தான். பாண்டியன் மனமகிழ்ந்து மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து மன்னிப்புக்கேட்டுக் கொண்டான். இறைவன் திருவிளையாடலால் நரிகளே குதிரைகளாக வந்தன. அன்றிரவே மீண்டும் அவைகள் நரிகளாயின. பாண்டியன் சினம் மிகுந்தவனாய் மாணிக்கவாசகரை மீண்டும் துன்புறுத்தினான்; உச்சி வேளையில் சுடுகின்ற வைகை மணல் நடுவே நிறுத்தினான்;

உடனே இறைவன் கருணை கூர்ந்து வைகையில் பெருவெள்ளத்தை விரப்பினன். வெள்ளம் கரைகளையுடைத்து மதுரைக்குள் பாய்ந்தது. அமைச்சர் சிலரால் மாணிக்கவாசகப் பெரியாரைத் துன்புறுத்துவதால் இக்கேடு வந்ததென அரசன் உணர்ந்து அவரை விடுவித்து வணங்கி வெள்ளத்தைத் தடுத்து அருள்புரியுமாறு வேண்டினன். அவரும் கரையிற் செல்லவும் வெள்ளப்பெருக்கு நின்றது. உடைப்புக்களை யடைத்தற்கு மதுரையின் குடிகளிடம் கட்டளையிட்டு மாணிக்கவாசகர் நிட்டை கூடியிருந்தார்.

எல்லா உடைப்புக்களும் அடைபட்டன. வந்தியென்ற கிழவியின் பங்குமட்டும் அடைபடவில்லை. இறைவனே அவளுக்குக் கூலியாளாக வந்து அவள் தந்த பிட்டை உண்டு வேலை செய்யாமல் திருவிளையாடல் புரிந்தான். அரசன் வந்தியின் ஆள் வேலை செய்யாததை யுணர்ந்து அவனைப் பிரம்பாலடிக்கவும், அந்த அடி, அரசன், தேவர், மனிதர் முதலிய எல்லா உயிர்கள் முதுகிலும் பட்டது. வேலை ஆளும் மறையவே, பாண்டியன் இறைவன் திருவிளையாடலையும் மாணிக்கவாசகர் பெருமையையும் நன்குணர்ந்து அவரை வணங்கினன். மாணிக்கவாசகர் அமைச்சர் பதவியை நீத்துத் திருப்பெருந்துறை சென்ருர்.

ஆங்கு மீண்டும் குருந்தம்மேவிய குரவரையும் அடியவர் குழாங்களையும் கண்டார். இறைவனும் ஆங்குள்ள குளத்தில் தோன்றும் சோதியிற் கலக்கும்படி குழாங்கட்குக் கட்டளையிட்டுப் பல தலங்களையும் வணங்கி, “நலமலி தில்லையுள், கோலமார்தரு பொதுவினில் வருகென” மாணிக்கவாசகருக்கும் கட்டளையிட்டு மறைந்தான். குழாங்களும் சோதியிற் கலந்தன. வாதவூரடிகள் உத்தரகோசமங்கை, இடைமருது, அண்ணமலை, கழுக்குன்றம், காஞ்சி முதலிய பல தலங்களை வணங்கித் திருவாசகப் பாடல்களைப் பாடித் தில்லையில் வந்து திருக்கூத்தனை வணங்கி ஊருக்குப் புறம்பே ஓரிடத்தில் வசித்து வந்தார்.

சிவனடியார் ஒருவர் ஈழநாட்டில் “பொன்னம்பலம்” என்று கூறியிரந்துண்டு வந்தார். இதைக் கண்ட புத்தர்கள் பொருதவர்களாய்த் தமது மன்னனிடம் தெரிவித்தனர். அரசன் அவ்வடியாரைத் தருவித்து, “பொன்னம்பலம்” என்பதின் வரலாற்றையறிந்து தனது குருவோடும் ஊமைப் பெண்ணேடும் தில்லைப் பொன்னம்பலம் சென்று புத்ததேவரை ஆங்கு நிலைநாட்டும் உறுதிகொண்டு புறப்பட்டுத் தில்லையை யடைந்தான். புத்த குருவும் தில்லையிலுள்ளாரை வாதுக் கழைத்தான். இறைவன் தில்லைவாழந்தணர்கட்குக் கனவில் மாணிக்கவாசகரைக்கொண்டு புத்தரை வாதில் வெல்லுமாறு கட்டளையிடலும், மாணிக்கவாசகரும் சிற்சபையில் சோழமன்னனும் அந்தண

ரும் அறிஞரும் அமர்ந்திருக்க, புத்த குருவை நோக்கி "உன் வாதம் என்னை?"யென வினவினர். அவன் தனது கொள்கைகளைக் கூறவே, இவர் சைவ உண்மையை எடுத்துரைத்து,புத்தவாதத்தை மறுத்தார், புத்தகுரு இதை யுணராது, மீண்டும் தனது வாதத்தையே உரைக்க, மாணிக்கவாசகர் இறைவன் திருவருளை நினைந்தார். உடனே கலைமகள் புத்தர் வாக்கினின்றும் அகன்று அவர்களை யெல்லாம் ஊமர்களாக்கினள். உடனே புத்த அரசன் "பேசுவாரை ஊமர்களாக்கினீர், என் ஊமை மகளைப் பேசவைத்தால் நானும் என் நாடும் சைவத்தை மேற்கொள்ளத் தடையில்லை" யென்றான். மாணிக்கவாசகர் அப்பெண்ணைப் பல கேள்விகள் கேட்க, அவைகட்குப் பிறவி ஊமையான அப்பெண் வாயால் பேசிப் பதில் கூறினள். (இவற்றைத் தொகுத்து சுவாமிகள் "திருச்சாழல்" என்று அருளிச் செய்தார்.) பிறகு புத்த மன்னன் சைவனாயினன். அவன் வேண்ட சுவாமிகள் அருள் கூர்ந்து வாதுசெய்த புத்த ஊமர்களைப் பேசச் செய்தார். அனைவரும் சைவராயினர்.

பிறகு சில காலங்கழிந்த பின்னர், இறைவனே ஓரந்தண வுருக்கொண்டு, மாணிக்கவாசகரிடம் சென்று, தான் பாண்டி நாட்டிலிருந்து வந்ததாகக் கூறித் திருவாசகம் முழுமையையும் சுவாமிகள் சொல்ல, ஏடும் எழுத்தாணியுங் கொண்டு எழுதி அகப்பொருட் கோவை சொல்ல வேண்டுமென்று கூறலும், சுவாமிகள் சொல்ல, அதையும் எழுதிக்கொண்டு "மாணிக்கவாசகன் சொல்ல, அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது" என்று கைச்சாத்திட்டு, சிற்சபையின் பஞ்சாக்கரப்படியிலே ஒருவருங்காணாதவாறு வைத்தனன். தில்லைவாழந்தணர் இவ்வேட்டை மாணிக்க வாசகருக்குக் காட்டி, இப்பாடல்களின் பொருளைத் தெரிவிக்க வேண்டினர். மாணிக்கவாசகரும் அவர்களை அழைத்துச் சென்று தில்லைத் திருக்கூத்தனைச் சுட்டி இவனே பொருளெனக் காட்டி அவன் திருவடியில் ஆனிமா மகத்திலே இரண்டறக் கலந்தனர்.

---

## ஆராய்ச்சிக் குறிப்புகள்

**அடிகள் காலம்:**—கி. பி. மூன்றும் நூற்றாண்டு என்பது பலரும் ஒப்ப முடிந்த கொள்கை. அடிகள் ஏனைய மூன்று சமயகுரவர்க்கும் முற்பட்டவரென்பதே பழைய வரலாறுகளிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. சில ஆண்டுகட்கு முன் சில அறிஞர்கள் திருத்தொண்டத் தொகையில் அடிகள் கூறப்படாமை, ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்த வரகுணனை அடிகள் திருக்கோவையார் ௩௦௬, ௩௨௭-வது பாடல்களிற் கூறியுள்ளமை, மாயாவாதம் மும்மலம் ஆக

மம் முதலிய சொற்களை அடிகள் உபயோகித்துள்ளமை, அடிகள் அருளிய செய்யுள் வகைகள் (கோவை, சதகம், அம்மானை, விருத்தம் முதலியன), "கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்," "ஒரு தோழன் தொண்டருளன்" என்று அடிகள் கூறினமை சம்பந்தரையும் சுந்தரரையும் குறிக்கும் என்பன போன்ற காரணங்கள் கூறி, அடிகள் காலம் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டென்கின்றனர். இக்காரணங்களை யெல்லாம் நன்காய்ந்து, உயர் திருவாளர்கள் மறைமலை யடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை, சி. கே. சுப்பிரமணிய முதலியார் ஆகிய மூன்று பேரறிஞர்களும் முறையே எழுதியுள்ள "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்", மாணிக்கவாசகர் சரித்திரம்", "மாணிக்கவாசகர் அல்லது சீத்தார் பெருமை" என்ற உரைநடை நூல்களில் கண்டுகொள்க.

**அடிகள் திருவாக்கு**:—இதில் அடிகள் வரலாற்றுக்குரிய அகச்சான்றுகள் நிரம்பியுள்ளன. "எங்கள் திருப்பெருந்துறை மேவினன், காயத்துள் அமுதூறவூற நீ கண்டுகொள் என்று காட்டிய, சேய மாமலர்ச் சேவடி" (சென்னிப்பத்து-௫) "நாயினேனை நலமலி தில்லையுள், கோலமார் தருபொது வினில் வருகென "(கீர்த்தித் திருவகவல் - ௧௨௭, ௧௨௮), "நரியைக் குதிரைப் பரியாக்கி......மதுரை யெல்லாம் பிச்சதேற்றும்......" (ஆனந்தமாலை - ௭), "மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவான்மொத்துண்டு, புண் சுமந்த பொன்மேனி பாடுதுங் காண்அம்மானாய்" (திருவம்மானை-௮)என்பன போன்ற பல பகுதிகளில் இச்சான்றுகள் அமைந்துள்ளன. பதியிலக்கணம், பாச இலக்கணம், பசு விலக்கணம், பசுத்தன்மை கெடுதல், குருவின் உபகாரம், இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம், அடியாரிலக்கணம் முதலிய பல சைவசித்தாந்த சாத்திரப் பகுதிகட்கும் அடிகள், திருவாக்கில் ஆதாரங்கள் பலவுள. நயங்கள், அணிகள், உவமைகள் சுவைகள், பழமொழிகள் முதலியன அடிகள்வாக்கில் செறிந்துள்ளன. இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கடவுள் வடிவாகவும் சத்தி சிவமயமாகவும் உவமித்து விவரித்தலில் அடிகள் வல்லுநர். விளையாடல்களில் கடவுளுணர்ச்சியைப் புகுத்திப் பூவல்லி, அம்மானை, கோத்தும்பிபோன்ற பாடல்களைப்பாடுவதிலும் அடிகளை ஒப்பாரிலர். சுருங்கக் கூறின் அடிகள் திருவாக்கு மெய்யுணர்வையும், உள்ளக் கனிவையும், முத்தியையும் நல்கும் பெற்றியுடையதென்று கூறலாம்.

இச்சரித்திரமும் ஆராய்ச்சிக்குறிப்புகளும் **திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.,** அவர்களால் எழுதப்பட்டன.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திருவாசகப் பதிப்புரை ... ... | ௩ |
| முன்னுரை ... ... | ௪ |
| மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் ... | ௬ |

| | பக்கம் | | |
|---|---|---|---|
| அச்சப்பத்து | ௨௧௫ | சதகம் | ௩௫ |
| அச்சோப்பதிகம் | ௨௬௬ | சாழல் | ௧௨௩ |
| அடைக்கலப்பத்து | ௧௭௪ | சிவபுராணம் | ௧ |
| அண்டப்பகுதி | ௧௪ | செத்திலாப்பத்து | ௧௬௯ |
| அதிசயப்பத்து | ௧௮௦ | சென்னிப்பத்து | ௨௩௮ |
| அம்மானை | ௯௪ | தசாங்கம் | ௧௫௨ |
| அருட்பத்து | ௧௯௩ | தெள்ளேணம் | ௧௧௭ |
| அற்புதப்பத்து | ௨௩௪ | தோணோக்கம் | ௧௩௮ |
| அன்னைப்பத்து | ௧௪௬ | நீத்தல்விண்ணப்பம் | ௬௮ |
| ஆசைப்பத்து | ௧௭௭ | படையாட்சி | ௨௫௯ |
| ஆனந்தமாலை | ௨௭௪ | படையெழுச்சி | ௨௫௨ |
| உந்தியார் | ௧௩௪ | பண்டாயநான்மறை | ௨௫௬ |
| உயிருண்ணிப்பத்து | ௨௧௧ | பள்ளியெழுச்சி | ௧௫௫ |
| எண்ணப்பதிகம் | ௨௪௫ | பாண்டிப்பதிகம் | ௨௧௮ |
| எம்பாவை | ௮௩ | பிடித்தபத்து | ௨௨௨ |
| ஏசறவு | ௨௨௬ | பிரார்த்தனைப்பத்து | ௨௦௩ |
| கண்டபத்து | ௨௦௦ | புணர்ச்சிப்பத்து | ௧௮௪ |
| கழுக்குன்றப்பதிகம் | ௧௯௭ | புலம்பல் | ௨௩௦ |
| கீர்த்தித்திருவகவல் | ௭ | பூவல்லி | ௧௨௮ |
| குயிற்பத்து | ௧௪௯ | பொற்சுண்ணம் | ௧௦௨ |
| குலாப்பத்து | ௨௩௧ | பொன்னூசல் | ௧௪௨ |
| குழைத்தபத்து | ௨௦௮ | போற்றித்திருவகவல் | ௨௫ |
| கோத்தும்பி | ௧௧௧ | யாத்திரைப்பத்து | ௨௪௭ |
| கோயில்திருப்பதிகம் | ௧௬௪ | வார்த்தை | ௨௪௧ |
| கோயில் மூத்ததிருப் | | வாழாப்பத்து | ௧௮௯ |
| பதிகம் | ௧௬௦ | வெண்பா | ௨௫௩ |


---

குறிப்பு :—இந்த உரையில் மேற்கோள்களுக்குப் பிறகு ( ) குறிக்குள் இருப்பது மேற்கோள் பாட்டிற்கு முதல்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

## சிவபுராணம்

### சிவனது அநாதி முறைமையான பழமை

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேக னிறைவ னடிவாழ்க

---

(௨) "நெஞ்சமுமக்கே யிடமாக வைத்தேன் நினையா தொரு போதும் இருந்தறியேன்" என்னும் அப்பர் கருத்தோடு ஒப்பிடுக. (௩) கோகழி - ஒரு தலத்தின்பெயர்; திருப்பெருந்துறை யென்றும், திருவாவடுதுறை யென்றுங் கூறுவர். (௪) ஆகமம் ஆகி நின்று - சிவாகமங்களில் கூறப்படும் பரம்பொருளாகி நின்று. அண்ணிப்பான்- இனிமை தருபவன்; சமீபிப்பவன் என்னலும் ஆம். "அண்ணித்திட் டமுதூறும் என் நாவுக்கே"—அப்பர், (வெண்ணித்). (௫) ஏகன் அநேகன் - ஒருவனுயிருப்பவன், உயிர்கள் வினைகளைப் போக்கப் பல வடிவங்களைக் கொள்பவன்.

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி

---

(௬) வேகம் கெடுத்து ஆண்ட - ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி விரைந்து செல்லும் மனத்தின் தன்மையைக் கெடுத்து அமைதி அளித்து அடிமை கொண்ட. வேகம் கெடுத்து - (மும்மலங்களின்) கொடுமையைப் போக்கி என்றும் கொள்ளலாம். வெல்க - வெற்றி அடைக. (௭) பிஞ்ஞகன் - தலையில் கங்கை சந்திரன் முதலிய பல வித அணிகளைத் தரித்தவன். பெய் கழல்கள் - வீரச் சிலம்புகளை அணிந்துள்ள திருவடிகள். (௮) புறத்தார் - அன்பிற்குப் புறம்பாய் உள்ளவர்கள்; அன்பரல்லாதவர்கள். (௯) கைகளைக் கூப்பித் தொழுவார்கள் உள்ளத்தில் நினைந்து மகிழ்தற்கு ஏதுவாகிய இறைவன். (௧௦) சிரம் குவிவார் - தலைவணங்கிக் கைகளைத் தலையோடு சேர்த்துத் தொழுவார். (௧௧) அடி போற்றி - திருவடிகளுக்கு வணக்கம்; திருவடிகளை வணங்குகின்றேன். (௧௨) தேசன் - ஒளிவடிவினன். தேஜஸ் என்னும் வடமொழியின் திரிபு. (௧௩) நேயத்தே நின்ற நிமலன் - அன்பால் நினைவாரது மனத்தின் கண்ணே நிலைத்து நின்ற மலமில்லாதவன். (௧௪) மாயப்பிறப்பு - நிலையில்லாத பிறவியை. (௧௬) ஆராத இன்பம் - தெவிட்டாத பேரானந்தம். (௧௭) சிவன்அவன் - மங்களத்தைச் செய்பவனாகிய முழுமுதற் கடவுள். (௨௦) ஓய - முடிந்துபோக.

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னும்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

---

(உ௬) எண் இறந்து எல்லை இலாதானே - நினைப்பின் எல்லையைக் கடந்து ஒரு வரம்பிற்குட்படாதவனே. எண் - எண்ணம்; நினைப்பு. (உ௭) விருகம் - விலங்கு. (௩உ) உன்னுடைய அழகிய திருவடிகளைக்கண்டு இன்று பாச நீக்கம் பெற்றேன். இது உண்மை. அல்லது, மெய் ஏய் உன் என்று பிரித்து உண்மைப் பொருளான உன் திருவருள் பொருந்தியுள்ள திருவடிகளைக் கண்டு இன்று பாச நீக்கம் பெற்றேன் என்றுரைப்பினுமமையும். (௩௫) வேதங்கள் ஐயா என - (உன் தன்மையினை அறியமாட்டாது) வேதங்கள் ஐயனே என்று அலறும்படி. ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே - உயர்ந்தும், தாழ்ந்தும், விரிந்தும் நுட்பப் பொருளாய் (அணுவுக்கணுவாய்) இருப்பவனே. "ஆழியனாய் அகன்றே உயர்ந்தானை"—**சுந்தரர்.** (௩௬) வெய்யாய் த(ண்)ணியாய் - வெப்பமுடையவனே, குளிர்ச்சி யுடையவனே. இயமானனும் விமலா - உயிர்க்குயிராய் இருந்தும் மலமில்லாதவனே.

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

---

(சக) ஆக்கம் - தோற்றம். அளவு - கால எல்லைக்குட்பட்டு நிற்றல். (சஉ, சங) ஆக்குவாய்......போக்குவாய்-இறைவன் இயற்றும் ஐந்தொழில்களைக் குறிப்பன. தொழும்பு - திருத்தொண்டு. (சச) நாற்றத்தின் நேரியாய் - பூவின் மணம் போன்றவனே. (சசு) கன்னல் - கருப்பஞ் சாறு. (சஎ) தேனூறி நின்று - தேன் ஊற்றெடுப்பதுபோல் பேரானந்தத்தைப் பெருக்கெடுக்கும்படிச் செய்து நின்று. (ருஉ) அருங்கயிறு - போக்குதற்கு அரிய கயிறு. (ருச) மலத்தை (அசுத்தத்தை)ச் சொரியும் நவத்துவாரங்களையுடைய குடிசைபோன்ற சரீரத்தை. (ருரு) மலங்க - கலங்கும்படி. (ருசு) விலங்கு மனம் - மிருகத்தின் மனம்போன்ற (அறிவில்லாத) மனம். அல்லது விலங்கும் மனம் - (உன்னை விட்டு) விலகிச்செல்லும் மனம் என்றும் கொள்ளலாம். (ருஅ) நலம் - நல்ல தன்மை. (சுக) தத்துவனே - மெய்ப்பொருளானவனே.

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே [தின்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற [ய்
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வா

---

(கூச) பற்று (அவா) ஆகிய பாசத்தை அறுத்து என்னை வளர்க்கும் குருவே. பாரிக்கும் - வளர்க்கும்; ஆரியன் - ஆசாரியன், குரு. (கூரு) நேச அருள்புரிந்து - என்னிடத்து அன்பு உண்டாகும்படி அருள்செய்து. (கூசா) பேராது நின்ற-(என் உள்ளத்தை விட்டு) நீங்காது நிலைத்திருந்த. (கூஅ) உன்னை ஆராய்ந்து அறியாதார் உள்ளத்தில் மறைந்து நின்ற ஒளிவடிவினனே. (கூகூ) (என் கல் மனத்தை) நீரைப்போல உருகச்செய்து என் உயிர்க்கு உயிராய் நின்றவனே. (எ0) உள்ளானே - (அன்பர் பொருட்டாக) இன்ப துன்பங்களை ஏற்றுக்கொள்பவனே. (எச) (தீ நெறியிற் செல்லவொட்டாமல்) இழுத்து என்னை அடிமைகொண்ட எனது தந்தையே, தலைவனே. (எரு, எசா) கூரிய மெய்யுணர்வைக் கொண்டு உணர்பவர்களுடைய மனத்தில் (பிறராற்) காணக்கூடாத காட்சியே! நுட்பமான அறிவினுக்கும் எட்டாத நுட்ப அறிவாய் இருப்பவனே! (எஅ) காவலன் - காப்பதில் வல்லவன்; அரசன். (எகூ) ஆற்றின்ப வெள்ளமே - ஆற்றின் வெள்ளம்போன்று மேன்மேலும் எழுகின்ற இன்ப வெள்ளப் பெருக்கே.

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

---

(அக) மாறுபடும்படியான இயல்பையுடைய இவ்வுலகில் வெவ்வேறு வடிவங்கொண்டு வந்து அறிவுக்கு அறிவாய் நின்று தேறுதலைச் செய்பவனே. மனம் தேறுதலை அடைந்த போது தெளிவாகக் காணப்படும் பரம் பொருளே. (அங) ஊற்று நீர்போல இடைவிடாது சுரக்கும்படியான உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதமே. (அச) வேறு வேறான மாறுபாட்டையுடைய மாமிசத்தாலாகிய சரீரத்தினுள் பொருந்திக் கிடப்பதாலுண்டாகும் துன்பத்தைப் பொறுக்கமாட்டேன். (அசு) பொய் கெட்டு மெய்யானார் - அஞ்ஞானத்தினின்றும் நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்கள். (அஎ) வினைப்பிறவி - வினையினால் உண்டாகும் பிறவி. (அஅ) கள்ளப் புலக்குரம்பை - வஞ்சப்புலனைந்தும் வாழ்கின்ற உடம்பு. கட்டழிக்க - முற்றிலும் தொலைக்க. (கூக) ஓ - ஓலம். (கூஉ) திருவடிக்கீழ் சொல்லிய பாட்டின் - திருவடியின்கீழ் இருந்து (சிவபெருமான் திருவருள் வயமாய் நின்று) பாடிய இப்பாட்டினுடைய. சிவபெருமான் திருவருளைத் திருவடி என்று சொல்லுவது மரபு. (கூச, கூ௫) சிவபுரத்தின் செல்வர்; சிவனடிக்கீழ் பல்லோரும் பணிந்து ஏத்த உள்ளார் - சிவலோகத்தினுட் புகுவார்கள். அவ்விடத்தே சிவபெருமான் திருவடிக்கீழ் பல அடியார்களும் வணங்கித் துதிக்க இருப்பார்கள்.

தில்லையில் அருளிய

# கீர்த்தித் திருவகவல்

## சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை

### நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத்(து) அன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திரம் அதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்துங்

---

(க, உ) நடராஜப்பெருமான் எல்லா உயிர்களிலும் பொருந்திக் கூத்தியற்றுவதால் அவைகள் தொழிற்படுகின்றன. ஆதலால் திருவடி பல்லுயிரெல்லாம் பயின்றனன் (பொருந்தச்செய்து இடைவிடாது ஆடுபவன்) என்று கூறப்பட்டது. (சு) இருளை ஏறத்துரந்தும் - அறியாமையை முற்றிலும் போக்கியும். (எ, அ) அடியவர் உள்ளத்தே அன்பு மிகுதியாகத் தோன்றியவுடன் அவ்வுள்ளமே கோயிலாகக் கொண்டு வீற்றிருத்தல் சிவபெருமானுடைய தனிச் சிறப்பாகும். “ எம்மானை என்மனமே கோயிலாக இருந்தானை ”—அப்பர் (கைம்மான) (கஉ) நயப்புறவு - விருப்பத்தோடு கூடிய உறவு. (கச) எஞ்சாது ஈண்டும் - குறையாது வளரும்.

கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்(து)
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்
நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

---

(௧௫) கிராதவேடம் - வேடனாகிய கோலம். கிஞ்சுகம் - முருக்கம் பூ. (௧௬) நெருங்கிய கொங்கைகளாகிய நல்ல தடாகத்தில் மூழ்கியும். (௧௭, ௧௮) வலைஞர் வேடம் பூண்டு கெளிற்று மீனை வலை வீசிப் பிடித்து அதன்பாலிருந்த பெரிய ஏடுகளில் எழுதப்பட்டிருந்த ஆகமநூலை மீளப்பெற்றும். (௨௦) பணித்து - உபதேசித்து. (௨௨) ஆரியன் - ஆசாரியன். (௨௮) சாத்தாய் - குதிரை வீரனாய். (௨௯) விட்டேறு - வேல். (௩௧, ௩௨) சாந்தம்புத்தூர் என்னும் ஊரில் கண்ணாடியில் தோன்றி, வில்லினாற் போர்புரியும் வேடனுக்கு வாள் முதலிய கொடுத்த அருட் செயலும். தர்ப்பணம்- கண்ணாடி. (௩௩) மொக்கணீச்சரத்தில் எழுந்தருளியுள்ள. மொக்கணீச்சரம் என்பது கொங்குநாட்டு வைப்புத்தலம். மொக்கணி என்பதற்குக் கொள்ளுப்பை என்றும் பொருளுரைப்பர். (௩௪) சொக்கதாக - அழகிய வடிவமாக. தொன்மையும் - பழைய முறையும்.

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்புந்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்

---

(௩௭-௪௧) அழகிய தனது திருவடியில் சேர்ப்பித்து ஆட்கொள்ளும் பொருட்டு, பாண்டியனுக்குக் குதிரைகளை விற்று அவன் கொடுத்த திரண்ட பொன்னை வாங்கிக்கொள்ள உடன்படாது, எம்மை ஆண்டவனும் எமது அரசனுமாகிய சிவபெருமான் தன் திருவருள் வழியில் நான் இருக்கும்பொருட்டு மிகுந்த சோதி வடிவத்தை அடியேனுக்குக் காட்டிய பழமையான தனது தன்மையும். தூண்டுசோதி - தூண்டப்பட்ட ஒளி. "தூண்டு சுடரனைய சோதி கண்டாய்"—**அப்பர்.** (௪௩) இந்திரஞாலம் - இந்திரஜாலம்; மாயவித்தை. (௪௭) பாங்காய் - அழகிய வடிவங் கொண்டு. (௪௯) வித்தகவேடம் - ஞானாசாரிய வடிவம். (௫௧) தூவண - தூய (பொன்) வண்ணமான. (௫௫) கருவார் சோதி - எல்லாப் பொருள்களும் தோன்றுதற்கு மூல காரணமான ஒளி. "மூவருருத் தனதாம் மூலமுதற் கருவை."—**சுந்தரர்** (மாவையுரித்).

பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட இருந்துந்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனி லீண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசுங்
கடம்பூர் தன்னி லிடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையி லெழிலது காட்டியும்

---

(௬௬) உண்மையைக் காட்டி விடுவதற்கு வேண்டிய உருவத்தை எடுத்து. (௬௭) தக்கான் - நீதிமான். (௬௮) ஓரியூர் - ஓரி என்னும் ஊர். (௬௯) பார் இரும் - இப்பூவுலகில் பெருமையுடைய. (௭௦) ஈண்ட (அடியார் கூட்டம்) நெருங்க. (௭௬) படிமம் - ஒளி வடிவம். (௮௧) சேவகன் - வில்வீரன். (௮௨) பாவகம் - இயல்புகள்.

ஐயா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல அருளியுங்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை யண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்

---

(அரு) சைவனாகியும் - ஆதி சைவ வேடம் தாங்கியும். (அசு) அருத்தியோடு - (அடியார்க்கு அருளும்) விருப்பத்துடன். (கூக) குறி- சிவலிங்கவடிவம். “ நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் ”—**பெரியபுராணம்.** (காணாத). (கூரு, கூசு) எப்படிப்பட்டவர்களுடைய குணங்களையும் தன்னிடத்தே அடக்கிக் கொண்டு தன் வயமாக்கித் தன்னைத்தவிர வேறு பொருள் இல்லை என்று சொல்லும்படி தன்னோடு அத்துவிதமாய்க் கலக்கும்படிச் செய்யும் மேலான கருணையோடு கூடியவன் எமது தலைவன். (கூஎ) சாத்திரனாகி - சாத்திரங்களில் வல்லவனாகி. (கூஅ) பாலையுள் - பாலை நிலத்து ஊர் ஒன்றில். (கூகூ) துதைந்த சுந்தரத் தன்மையொடு - அழகு நிறைந்த தன்மையோடு. (க0ச) (மூன்று) கோடுகளாக இடப்பட்ட திருநீற்று அடையாளத்தை நன்றாக விளங்கும்படித் திருமேனியில் தரித்து உயர்ந்து காண்பித்தும்.

ஊனந் தன்னை யொருங்குட னறுக்கும்
ஆனந் தம்மே யாறு அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல ளுகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற்(கு) அளவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத்(து) உய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்
ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய

---

(க0ரு, க0சு) ஆனந்தம்மே - ஆனந்தமே. ஊனம் - மும்மலம். ஆன்மாக்களின் மும்மலங்களைக் கழுவும் பேரானந்தப் பெருக்கே சிவபெருமானுக்கு ஆறு ஆவது. "மலங்கழுவ வந்திழியும் ஆனந் தம் காணுடையான் ஆறு"—**திருவாசகம்** (செய்யவாய்). (க0அ) நாத தத்துவமாகிய பெரிய பறையானது இடைவிடாது ஒலிக்கவும். (க0கூ) வினைமலமானது சேரவொட்டாமல் ஆன்மாக்களை அடிமை கொண்டு அருள்பவன். (கக0) கழுக்கடை - மூவிலைச் சூலம். (ககக) மூலமாகிய - பிறவிக்கு மூலகாரணமாகி அநாதியே உயிரைப் பற்றியுள்ள. (ககஉ) பரிசுத்தமான அருள்திருமேனி கொண்டு எழுந்தருளி சுடரை விடுகின்ற ஒளிப்பிழம்பு வடிவினளுகிய சிவ பெருமான் அடியாரிடத்து அன்பு உடையவளுகி. சோதியானது வடிவங்கொண்ட விடத்துச் சுடராகின்றது. (ககஎ) திரும்பிப் பிறவியில் வாராதபடி அன்பர்களை அருள் வழி (திருவருள் நெறி) யில் செலுத்துபவன். (கககூ) பரம்பரத்து உய்ப்பவன் - எல்லாப் பதவிகளுக்கும் மேலான சிவசாயுச்சிய பதவியில் சேர்ப்பவன். (கஉக, கஉஉ) ஆதி தேவர்களுக்குத் திருவருள் புரிந்து அதிகார பதவியைக்கொடுத்த பெருமானுக்குத் தேவதேவன் என்பதே திரு நாமமாகவும்.

தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்

---

(௧௨௨) இருள் - ஆணவம். ஊர்தி - வாகனம். பேரின்ப உணர்ச்சியானது உயிர்களைப் பரமுத்தியில் கொண்டு சேர்த்தலினால் இன்பத்தை ஊர்தி என்றார். (௧௨௩ - ௪) அடியார்க்கு ஆணவமலத்தை நீக்கியருளிப் பேரின்பமாகிய வாகனத்தை அருள் செய்த பேருருளே மலையாகவும். (௧௨௬) அப்பரிசதனால் - அவரவர்க்கு ஏற்ற முறையினால். (௧௨௮) பொது - அம்பலம். (௧௨௯) என் வினைக்குத் தகுந்தபடி என்னை இந்நிலவுலகத்தே இருக்கச் செய்து. (௧௩௫) மண்டி - நெருங்கி. (௧௩௮) பரமநாடக - ஒருவராலும் செய்ய முடியாத மேலான (அற்புதத் தனிக்) கூத்து இயற்றுபவனே. (௧௪௧) புலியூர்ப் பொது - தில்லை அம்பலம்.

கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# திருவண்டப்பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

### இணைக்குறள் ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்

---

(கசசு) ஒலிதரு - மறையொலி பயிலும்; உயர் கிழவோன் - மேம்பட்ட உரிமையுடையவன். (கசக - கசசு) பொதுவினில் நடம் நவில் ஒலிதருகயிலை உயர் கிழவோன் கனிதரு...சிறுநகை(யை) இறைவன்...புலியூர் புக்கு (எனக்கு) இனிது அருளினன் (பேரின்பம் மிக அருள் புரிந்தனன்) - **உரைநடை.**

(க) அண்டம் - பல உலகத் தொகுப்பு (Universe). உண்டைப் பிறக்கம் - உருண்டை வடிவான விளக்கம். (ரு) வீட்டினுள் சிறு துவாரத்தின் வழியாகப் புகும் சூரிய கிரணத்தில் காணப்படும் நெருங்கிய அணுக்களைப் போன்று உலகப் பகுதிகளெல்லாம் தோன்றும்படி தான் பெரியனாய் விளங்குபவன்.

வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்(து)
எறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற, விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் நாடொறும்
அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோன் நிழல்திகழ்

---

(எ) வேதியன் - பிரமன். “ நூறு கோடி பிரமர்கள் நுங்கினார், ஆறு கோடி நாராயணர் அங்ஙனே,”—**அப்பர்.** (க0) சூக்கம் - சூக்குமம், நுட்பம். தூலம் - பருமை. சூறை மாருதம் - பெருங்காற்று. (கக, கஉ) வீசும் காற்றினால் சருகுகள் சுழல்வதுபோல அண்டப் பகுதிகளை யெல்லாம் இயங்கச் செய்யும் வல்லமை வாய்ந்த இளையோன். கொட்க - சுழல. (கரு) கரப்போன் - ஒடுக்குபவன். (கஎ, கஅ, கக௯) அறுவகைப்பட்ட உயர்வாகிய சமயங்களைச் சேர்ந்த வெவ்வேறு வகைப்பட்டவர்களுக்கும் முத்தியளிக்கும் உரிமை வாய்ந்தவன்; அவனை நோக்கத் தேவவர்க்கத்தினர் புழுவினை ஒப்ப மிக இழிந்த நிலையினராவர். வீடுபேறாய் நின்ற என்றதை கிழவோன் என்பதோடு கூட்டுக. எல்லா உயிர்களுக்கும் வீடுபேற்றை யளிப்பவர் சிவபெருமான் ஒருவரே. “யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்.”—**சிவஞான சித்தியார்.** (உ0) திருத்தகு - அழகு பொருந்திய. (உ௩) கலப்பு-எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துக் கலந்து நிற்கும் தன்மை. (உச) ஊக்கம்-அசையும் தன்மை. நிழல் திகழ்-குளிர்ச்சி பொருந்திய.

நீரி னின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மை இலையோன் காண்க

---

(௨௫) நிகழ்ந்தோன் - நிகழச் செய்தவன். (௨௮) அவ்வவற்றின் தன்மைகளை அவ்வவற்றில் பொருந்தச் செய்தவன். (௨௯) காண்க - என்று அறியுங்கள். (௩௩) அவன் அருள் திறத்தை நினைக்கும் பொழுதெல்லாம் அவனுடைய பிரிவினைப் பொறாது வருந்துவேன். (௩௫) வீணையில் இன்னிசை மறைந்திருந்து மீட்டினவிடத்து வெளிப்படுவதுபோல இறைவன் பொருள்களிடத்துத் தோன்றாது மறைந்திருந்து அன்பு செய்தவிடத்து வெளிப்படுவன்; அல்லது, வீணையினின்று உண்டாகும் இன்னிசையில் பொருந்தியுள்ளவன். (௪௧, ௪௨) மனத்தினாலும் சென்று எட்ட முடியாத தூரத்திலுள்ளவன் ; ஆயினும், அன்பாகிய வலையில் தானே வந்து அகப்பட்டுக்கொள்ளுவோன். (௪௩) ஒப்பற்றவன் என்று சொல்லப்படும் ஒரு கடவுள். (௪௪) விரிபொழில் - பரவிய உலகங்கள். (௪௫) அணுவின் தன்மையும் கடந்த நுட்பமானவன்.

இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ணாண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர(வு) இரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப

---

(சசு) இணைப்பு - ஒப்பு, "இணையொருவர் தாமல்லால் யாரு மில்லார்" - அப்பர். பெருமையில் ஈசன் - பெருமையுள்ளவற்றுள் தலைநின்றவன். (ருச) கற்பம் - உலகம் முடியுங்காலம். (ருஎ) பெற்றியன் - தன்மை யுடையவன். (ருஅ) (அவன் தன் திருவருளினால் காட்சி கொடுக்க) நானும் என் கண்களால் அவனைத் தரிசித்தேன். (சுஉ) எல்லாவித நன்மைகளையும் செய்பவனென்று சிறியேனும் தெளிந்தேன். (சுஎ) கரிய பெரிய மேகம்போல வடிவம் கொண்டு.

நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்(து)

---

(எஉ) மிக்க அழகுடன் தோன்றி ஒளிமிக்கு விளங்க. (எச) முரசெறிந்து - பறை அறைந்தாற்போல. (எரு) பூவினைப் போன்ற அடியாருடைய கூப்பிய கைகள் காந்தள் மலர்போல் விளங்க. (எசு) சிவபெருமானுடைய குறையாத இன்பத்தைத் தரும் திருவருளானது அடியார் கண்களின் நின்று வெளிப்படும் ஆனந்தக் கண்ணீர்த் துளி வடிவத்தை அடைய. (எஎ) சிவந்த சுடர்போன்ற அருள் வெள்ளம் நாற்றிசைகளிலும் மிக்குப்பரவி. வரையுற - மலையின் மேற்பொருந்த. (எஅ) துன்பமாகிய நீரையுடைய குளங்கள், தாகத்தைத் தணிப்பதற்குப் பயனின்றி நிறைந்து நிற்க. (எகூ, அஉ) நீர்வேட்கையோடுகூடிய நீண்ட நோக்குடைய மான் கூட்டம் அக்குளங்களை விடுத்துக் கானல்நீரை நல்ல நீர்நிலையெனக் கருதித் தம்முடைய மிகப் பெரிய வாயினாற் பருகமுயன்றும், துன்பத்தைத் தரும் தாகம் நீங்காததுபோல, சிற்றறிவுடைய மக்கள் அறுவகைப் புறச்சமயங்களைச் சார்ந்து, அச்சமய நெறிகளில் நின்று இன்பம் அடைய முயன்றும், அது கைகூடாமல் துன்பத்தினால் மிகத் தளர்ச்சியுற்று மெள்ளச் சென்றனர். (அங) ஆயிடை - அந்த சமயத்தில். வானப் பேர்யாற் றகவயின் பாய்ந்து - சிவபெருமான் திருவருளாகிய செஞ்சுடர் வெள்ளம் மலையின் உச்சியிலுள்ள பெரிய ஆற்றில் பாய்ந்து. அகவயின் - உள்ளிடத்து. (அச) இன்பப் பெருஞ் சுழி - பேரின்பமாகிய நீர்ச்சுழி. கொழித்து - ஒதுக்கி. (அரு) மும்மலக் கட்டுகளாகிய பெரிய கரையை மோதி அசைத்து இடித்து.

ஊழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ அருள்நீர் ஓட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட வுழவர் ஆரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க

---

(அசு, அஎ) நெடுங் காலமாக ஓங்கி வளர்ந்துள்ள நம் இருவினைகளாகிய பெரிய மரத்தினை வேரோடு பிடுங்கி. (அஅ...கூஉ) வேர்ச் சந்துகளில் நுழைந்து ஓடிவருகின்ற அருள் நீரை வைராக்கியம் என்னும் பெரிய மலையின் சந்தில் உயர்ந்த அணை (dam) யைக் கட்டி, வாசனையுடைய தேனொழுகும் மலர்களையுடைய குளத்தினிடத்துப் பாயும்படி கால்வாய்களை அமைத்து, அவ்வருள் வெள்ளம் தொண்டர்கள் உள்ளமாகிய குளத்தில் மேன்மேலும் பெருகி நிறைவதை மிக்க மகிழ்ச்சியோடு கண்டு. சிறை - அணை, கரை. "சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்"—திருவாசகம். (குறைவிலா). நிறைஅகில் மாப்புகை கரைசேர் வண்டுடை-நிறைந்த அகிற்புகையின் தோற்றத்தையுடைய வண்டுக்கூட்டங்கள் சூழ்ந்துள்ள கரையையுடைய. (கூரு...கூரு) வழிபாடு என்னும் வயலில் அன்பு என்னும் விதையை விதைத்துத் தொண்டராகிய உழவர்கள் சிவபோகமாகிய விளைவை அநுபவிக்க (அருள் நீரை) உதவிய அண்டங்களெங்கும் தேடியும் பெறுதற்கரிய மேகம்போன்ற சிவபெருமான் வாழ்க. கூகூ-வது வரிமுதல் கூரு-வது வரி வரையில் சிவபெருமானுகிய மேகம் அருளாகிய மழையைப் பொழிந்து கொண்டிருக்க, பிற சமயத்தவர் அதைப் பயன்படுத்தாது துன்பப்பட, சிவனடியார்கள் எவ்வாறு பயன்படுத்திச் சிவபோகமாகிய விளைவை அனுபவிக்கின்றார்கள் என்பது விளக்கப்பட்டிருக்கின்றது.

(கூகூ) பணக்கச்சை - படத்தையுடைய பாம்பை அரைக்கச்சையாகக் கட்டிய. (கூஅ) சேவகன் - வீரன்.

நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு(து) அளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர(வு) ஆட்டிய நம்பன் போற்றி
பிச்(சு)எமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை யொழியச்செய்த வொண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி

---

(௯௯) நாடோறும் தீ நெறியிற் செல்லாமல் இழுத்து ஆட்கொண்டருள்பவன் வாழ்க. (௧௦௨) மிக்க இருளில் (மகா சங்காரத்தில்) நடனம் புரிவோன். (௧௦௩) பேரமை தோளி - பெரிய மூங்கிலைப் போன்ற நயப்புடைய தோள்களையுடைய உமாதேவியார். (௧௦௪) "ஏதிலர்க்கு ஏதில் - தன்னைச் சாராதவர்கட்கு அயலார் போன்ற. ஏதிலார் தமக்கு ஏதிலன் றன்னை"-சுந்தரர் (துன்னுவார்). (௧௦௫) எய்ப்பினில் வைப்பு - இளைத்த காலத்து உதவும் செல்வம். (௧௦௭) எம்மைப் பேரன்பு என்னும் பைத்தியம் கொள்ளச் செய்த. (௧௦௯, ௧௧௦) யாவற்றையும் இயங்கச் செய்து. நடாஅய் - நடப்பித்து. (௧௧௩) (தன் கருணையினால் தானே உருக்கொண்டு வந்தாலன்றி) கண் முதலிய பொறி அறிவினாற் காணப்படாதவன். (௧௧௪) வெளிப்பட வகுத்தோன்-வெளிப்பட்டுத் தோன்றச் செய்தவன். (௧௧௬) ஒழிவற - நீக்கமற.

அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்

---

(கஉ0) அளிதரும் ஆக்கை செய்தோன் - அன்பினாற் கசிந்து உருகும் உடலினைத் தந்தோன். (கஉக) இன்ப ஊற்றாக உள்ளத்தே அமர்ந்து அதனை மகிழச் செய்பவனுக்கு வணக்கம். (கஉஉ, கஉங) தாங்க முடியாத பேரின்ப வெள்ளம் விரிந்து (பரவி) அலை வீசும்படியாகத் துதி செய்யாத சரீரத்தைத் தாங்கியிருக்க விரும்பேன். (கஉச) குவாஅல் - குவியல். மா மணிப் பிறக்கம் - பெரிய மாணிக்கச்சுடர். (கஉசு) ஒளித்தும் - தன் உண்மை இயல்பினை மறைத்தும். (கஉஎ) முறை உ(ள்)ளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும் - நல்லொழுக்கமே மேலானது என்று எண்ணி அவ்வழியிலே நடந்து, காண முயன்றவர்க்கு ஒளித்தும். (கஉஅ - கஉகூ) உற்றவர் வருந்த ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து உறைப்பவர்க்கு ஒளித்தும் - உரைநடை. (உலகநடைக்கு மாறாக நடப்பதால்) உறவினர்கள் வருத்தமடையவும், மனவொருமை கொண்டு இறைவனைக் காணும் விருப்புடன் உறுதியாக (மாறுபடாமல்) நின்றவர்க்கு ஒளித்தும். (கங0) வேதங்களில் கூறப்பட்ட வகைகளில் காணமுயன்று வருத்தம் அடைந்தவர்களுக்கு ஒளித்தும். (கஙங...கஙரு) இறைவனை வெறுப்பற்ற (அன்போடு கூடிய) பார்வையோடு பார்த்தும், நன்றாக விடாது பற்றியும் (காண முயன்றவர்க்கு), ஆணாகத் தோன்றியும், அலியாக மாறியும்,

ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன் றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்னே ரில்லோன் தானே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென்(பு) உருக வோலமிட்(டு)
அலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்

---

ஒளிபொருந்திய நெற்றியுடைய பெண்ணாக வடிவு கொண்டும் தன்னியல்பு இன்னதென்று அறிய முடியாதபடி மறைத்தும்.

(கஙசு...கஙஅ) ஐம்புல நுகர்ச்சியைத் தூரத்தே செல்லவிட்டு (முற்றிலும் நீக்கி) செல்லுதற்கு அரிய மலைகள்தொறும் சென்று உணவை நீக்கினமையால் தசையற்ற உடம்பையுடைய அரிய தவத்தினரது காட்சிக்கு எட்டினாலும், அவர்கள் திருத்தமடைதற் பொருட்டு முற்றிலும் தோன்றாது ஒளித்தும். (கஙகூ) கடவுள் ஒருவர் உண்டோ இல்லையோ என்று ஐயுறவு உண்டாகும்படி மறைந்தும். (கசo) பயில்தொறும் - பழகுந்தோறும். (கசஉ) ஆர்மின் - கூடுங்கள். (கசரு) பற்று முற்று(ம்) - பிடிக்கு முற்றிலும். (கசசு) தானே ஆன - எல்லாப் பொருள்களிலும் அத்துவிதமாய்க் கலந்து நின்ற. (கசஅ) அறைகூவி - போருக்கு அழைப்பதுபோல் உரத்த குரலுடன் அழைத்து. (கருo) உளையா அன்பு - குறையாத அன்பினால். (கருக) திரையின் - அலைபோல. (கருங) பித்தரைப் போல் மதிமயங்கி மதங்கொண்டவர்போல் இறுமாந்து.

கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூ ரெழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்(கு)அன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்(து)
உவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்

---

(கருரு...கருஎ) ஒருவரையும் தன்மீது ஏறவிடாதபடி மிக்க மதங் கொண்ட ஆண் யானையைப் போல நான் தாங்க முடியாதபடி என் அவயவங்களை யெல்லாம் கொம்புத்தேன் கொண்டு நிரப்பினாற் போல பேரின்ப உணர்ச்சியைக் கொடுத்தனன். (கருஅ) ஏற்றார் - பகைவர். (ககூ0 - க) தனது திருவருளாகிய பெருந்தீயால் அடியோங்களில் ஒருவரும் தவறாதபடி எங்கள் அடிமை உடம்பாகிய குடிசையை ஒடுங்கச் செய்தான். (ககூஉ) தடக்கை - விசாலமாகிய கை. (ககூ௩) சிவபெருமான் எனக்களித்த பேரானந்தத்தை வாயினால் இத்தன்மையது என்று சொல்ல அறியேன். சிவபெருமான் வாழ்க. (ககூச) தான் எனைச்செய்தது நாயேன் தரியேன்; முறையோ-சிவபெருமான் எனக்குச்செய்த கருணையின் திறத்தை நாய்போன்ற நான் தாங்கமுடியவில்லை. இதற்கு நான் தகுதியோ? (ககூரு) தெரியேன் - இதனை அறிந்துகொள்ளும் ஆற்றலும் எனக்கு இல்லை. ஆ ஆ - இரக்கக் குறிப்பு. செத்தேன் - நான் என்னும் முனைப்பு அற்றேன். (ககூகூ) பருகியும்......ஒல்லகில்லேன் - உன் அருளைக் குடித்தும் திருப்தி அடைகின்றேனில்லை. அதனை விழுங்கியும் அதனோடு பொருந்தும் ஆற்றலில்லாதவனாய் இருக்கின்றேன். "வழங்குகின்றாய்க்குன் அருளாரமுதத்தை......விழுங்குகின்றேன் விக்கினேன்"—திருவாசகம். (ககூகூ) பௌர்ணமி தினத்தில் கடல்நடுவில் பொங்கும் நீர்போல பேரானந்தம் மனத்தினுள் நிறைந்து வழிய.

தேக்கிடச் செய்தனன் ; கொடியேன் ஊன்றழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கினன் ; என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

---

(கஎக) தேக்கிட - தேங்கிக் கிடக்க, நிரம்பியிருக்க. (கஎஉ) நாயுடலகத்தே குரம்பை கொண்டு - நாய்போன்ற என் உடலையே தனது வீடாகக்கொண்டு. (கஎ௩) ஊன் தழை குரம்பை தோறும் இன் தேன் பாய்த்து - என்று கூட்டுக. மாமிசத்தால் நிறைந்துள்ள உடலின் பகுதிகள் தோறும் இனிய தேன் போன்ற பேரானந்தத்தைப் பாயச் செய்து. (கஎசு) ஆங்கு எனக்கு அள்ளூறு ஆக்கை அல்லது ஆங்கென கள் ஊறு ஆக்கை எனவும் பிரிக்கலாம். அள் ஊறு - மிகுதியாக (இன்பம்) ஊறும். கள் - தேன், இன்பம். (கசுஅ) வரி முதல் (கஅக) வரி வரையில் சிவபெருமான் திருவருளால் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உண்டான பேரானந்த அநுபவம் விளக்கப்பட்டுள்ளது. (கஎஅ) கன்னல் கனி - கற்கண்டைப் போல இனிமை மிகுந்த பழம். (கஎகூ) என்னில் - என்னிடத்து. (கஅக) அருளொடு - திருவருளுடன் கூடியுள்ள. பரா அமுது ஆக்கினன் - மிக மேம்பட்ட பேரின்பத்தை எனக்குத் தந்தனன்.

தில்லையில் அருளிய

# போற்றித் திருவகவல்

## சகத்தின் உற்பத்தி

### நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல(கு) அளந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்(று)
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏன மாகிமுன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்துபின் னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்

---

(௩) ஐம்புலன் மலர - ஐம்புலன்களாலும் இன்பம் அடைய. (௫) அடிமுடி - அடியினது முடிவு. ஆதரவு - விருப்பம். (௬) கடுமுரண் ஏனம் - வலிமை மிக்க பன்றி. (௭) ஏழுலகங்களும் ஊடுருவிச் செல்லும்படி தோண்டி, அதனால் இளைத்துப் பின்பு. (௧௨) கெடுதலில்லாத கருப்பையினுள் புகுந்து பிறக்கும்படியான செயல்களின் நின்று தப்பியும். (௧௪) செரு - போர். (௧௫) ஒரு மாதத்தில் தான்றிக் காய் அளவு அடைந்த கருவானது இரண்டு கூறாகப் பிளவு படுதலின் நின்று தப்பியும்.

இருமதி விளைவி னொருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

---

(௧௯) முஞ்சுதல் - சாதல். (௨௦) ஊறு அலர் - தினவினால் உண்டாகும் துன்பம். (௨௧) தாழ்புவி பிழைத்தும் - (சரியான பருவம் அடைவதற்குமுன்) பூமியில் பிறப்பதனின்று தப்பியும். (௨௪) தச மதி - பத்தாவது மாதத்தில். ௧௬ வரிமுதல் ௨௫ வரி வரையில் கருவுற்றநாள் முதல் பிறக்கும் வரையில் உயிர் அநுபவிக்கும் துன்பம் கூறப்பட்டுள்ளது. (௨௭) நெருக்கியும் அழுத்தியும் துன்புறுத்தல் முதலிய பலவித துன்பங்களின் நின்று தப்பியும். (௨௭, ௨௮) காலையில் மலத்தாலும், பகற்காலத்தில் கடும் பசியாலும், இரவில் நித்திரையிலும்,பிரயாணத்திலும் வரும் துன்பங்களினின்று தப்பியும். நிசி வேலை - இராக்காலம். (௩௦) கார்மயில் ஒருங்கிய சாயல் - கார்காலத்து மயிலும் அடங்குதற்கு ஏதுவாகிய அழகு. நெருங்கி உள்மதர்த்து - ஒன்றோடொன்று நெருங்கி உள்ளே செழித்து. (௩௫) கூரிய வேல்போன்ற கண்களால் ஆசையை எழுப்பி ஆடவர்களுடைய அறிவையும் பொருளையும் கொள்ளை கொள்ளுவதில் நின்று தப்பியும்.

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்

---

(ஙசு, ஙஎ) பொருள் இன்பங்களைத் தேடுவதில் ஈடுபட்டு மயங்கிய உலகத்தாருடைய பலவித பரந்த துறை (வழி)களில் செல்வதற்குக் காரணமாகிய, மதங்கொண்ட யானையைப்போல் தன்புறத்தும் தன்மையுடைய ஆசையினின்று தப்பியும். (சக) சிறு எல்லைகளையுடைய பலவித முயற்சிகளினின்று தப்பியும். (சங) முனிவு இலாததோர் பொருள் - வெறுப்பு எக்காலத்தும் தோன்றாத பொருள். அது பேரின்பம். (சச) மயக்கத்தை விளைவிக்கும் எண்ணிறந்த ஆற்றல்கள். (சசு) ஆத்தமானார் - ஆப்தமானார், நண்பர். "ஆத்த மென்றெனை ஆளுகந் தானை"—சுந்தரர். (சகூ) பெருகவும் பதறினர் - மிகவும் பதை பதைத்தனர். (ருo) விரத அநுட்டானங்கள் (புறக்கிரியைகள்) தாம் மேலான சாதனமென்று வேதங்களை உணர்ந்த பார்ப்பனரும். (ருக) சரதமாகவே - உண்மை என்று நம்பச் செய்ய. (ருஉ) தத்தம் மதங்களே...மலைந்தனர் - தம் தம் மதங்களிலேயே முடிந்த உண்மைகள் இருப்பதாகக் கூக்குரலிட்டு எதிர்த்தனர். (ருச) மிண்டிய மாயாவாதம் - பலமுள்ள ஏகான்மவாதம்; பௌத்தம் என்றுங் கூறுவர்.

சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்(து)
ஆடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா(து)

---

(௫௫) சண்டமாருதம் - சுழற் காற்று. (௫௬) உலோகாயதம் - கடவுள், உயிர் இல்லை என்று கூறும் மதம். (௫௭) பலவித கலை வேறுபாடுகளையுடைய கொடிய விஷம் வந்து சேர்ந்து. (௫அ) எனைப்பல - எத்தனையோ பல. (௫௯) மேற் சொன்ன இடையூறுகளால் தாம் செல்லும் நெறி நின்று வழுவாமல், தாம் உறுதியாகப் பிடித்த, கடவுளை அன்பினால் வழிபடும் கொள்கையைத் தளரவிடாமல். (௬௧) கம்பித்து-நடுங்கி. (௬௩) கொடிறு - குறடு. (௬௪) எனும்படியே ஆக - என்று சொல்லும் பழமொழிக்கு ஒப்ப. (௬௬) கடலென மறுகி - கடல் அலைபோலச் சுழன்று. (௬௭) அனுகுலமாய் மெய்விதிர்த்து - அதற்கேற்றபடி உடல் நடுங்கி. (௭௦) ஆபரணமாக ஏற்று மனம் கோணாமல். (௭௧) சதுர் இழந்து - தற்போத உணர்ச்சி கெட்டு. அறிமால் - சிவஞானம் பெறுதலில் பேரவா. சாரும் கதி - வீடுபேறு. (௭௨) பரமா அதிசயமாக - மேலான விரும்பத்தக்க பொருளாக அல்லது வியப்பாக. (௭௩) கற்றா - கன்றையுடைய பசு.

அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா(து) அத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினு ளாடி போற்றி

---

(எரு) அருபரத்து ஒருவன்-அரிய வீடுபேற்றை அளித்தற்குரிய ஒப்பற்ற முதல்வன். (எஎ) சிறுமையென்று இகழாதே - எளிமை யானது என்று எண்ணி அசட்டை செய்யாமல். திருவடி......அத் திசை - ஒரு பொருளின் நிழல் அப்பொருளை விட்டு நீங்காத தன்மை போல குருபரனுடைய இரண்டு பாதங்களையும் விடாது முன்னும் பின்னுமாகத் தொடர்ந்து, அவன் அருளாவிடினும் வெறுப்படை யாமல், அவன் காட்சி கொடுத்த திசை நோக்கி வணங்கி. (அஉ) நல்ல ஐம்பொறி அறிவுகள் இறைவனோடு ஒன்றாகக் கலந்து. புலன்கள் இறைவனோடு கலந்தவிடத்து நன்புலன்க ளாயின. உலக விஷயங்களின் ஈடுபட்ட விடத்து வஞ்சப் புலன்களாயின. (அச) மொட்டித்து - மொக்குப் போன்று குவிந்து. (அகூ) சாயா - நிலைதளராத. தழைப்பவர் - வளர்ப்பவரை. (அஎ) போற்றி - வணக்கம். (அஅ) மெய்தரு - மெய்யுணர்வைக் கொடுக்கும். (அகூ) கைதர வல்ல - அருள் செய்யவல்ல. "கொடு நரகக்குழி நின்று அருள்தரு கைகொடுத்தேற்றும் ஐயாறன் அடித் தலமே"—அப்பர். (இருள்தரு) (கூ0) அம்பலத்தில் ஆடுகின்ற மதுரை மன்னனே வணக்கம். (கூக) குருமணி-ஒளி சிறந்த மாணிக்கம்.

இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை

---

(கூரு) சேஆர் - இடபவடிவம் எழுதப்பட்டுள்ள. (கூஎ) கல்வி னின்று நார் உரிப்பதுபோல் பிறரால் செய்தற்கரிய செயல்களைப் புரியவல்ல கனிபோல் இனிமை தருபவனே. (க0௩) தேசப் பளிங்கு - ஒளி மிக்க படிகம். (க0கூ) வேதி - அறிவுறுத்துபவனே. (ககச) குறியே - எனக்கிலக்காயுள்ளவனே. (ககஎ) ஏனோர் - அன்பர். (ககஅ) முரண் உறு - துன்பத்தை அனுபவித்தற்கு ஏதுவாகிய.

ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர்(வு) இறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி

---

(௧௨௫) விளைவே - பயனே. (௧௨௬) அரிய பொருளாயிருந்தும், (அன்பர்க்கு) எளிதின் வந்தருளும் அழகனே. (௧௨௯) ஒருவன் - அன்பன். (௧௩௧) கும்பிட்ட கையினரின் துன்பம் களைபவனே. (௧௩௪) எல்லாவற்றையும் கடந்த தலைவனே. (௧௩௭... ௧௪௨) ஐந்தாய்ப் பரந்தாய்-ஐந்து தன்மைகளுடன் விரிந்தவனே. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இவைகளுக்கு முறையே ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று குணங்கள் உண்டு. அளிபவர் - மனம் உருகுபவர்.

நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி

---

(௧௫௯) பாங்கு ஆர்-அழகு நிறைந்த. (௧௬௦) விடங்கன் - வீரன். (௧௬௨, ௩) கல்லாலின்கீழ் இயக்கிகள் அறுவர்க்கும் வெள்ளானைக்கும் அருள் புரிந்த அரசனே வணக்கம். (௧௬௬) பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்த்தவனே வணக்கம். (௧௬௭) மான - பெருமை மிக்க. (௧௬௮) இருளை (அஞ்ஞானத்தை) நீக்கி ஞானம் நல்குந் தலைவனே வணக்கம்.

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியோன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயே னடியேன் போற்றி
இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

---

(கஎக) (அழிவில்லாத) இடத்தைப் பெறவும் நான் உன்னையே கருதவும் அருள் புரிவாய். (கஎங) அமுதா நயந்தாய் - அமுதாக விரும்பி உண்டவனே. (கஎசு) (எல்லா உயிரிடத்தும்) அன்புடையவனே வணக்கம்; எவற்றிற்கும் பிறப்பிடமானவனே வணக்கம். (கஅஉ) சிறவே - சிறந்த பொருளே. (கஅங) மஞ்சா - அழகனே. (கஅஎ...ககூ0) கவைத்தலை, குவைப்பதி, அரிகேசரி - சிவஸ்தலங்கள். (ககூஉ) பொருப்பு அமர் - குன்றின்மீது அமர்ந்த. (ககூரு) துரியம் - சாக்கிரம், சுழுத்தி, சொப்பனம், துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளுள் நான்காவது.

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

---

(கக௯) அறிவதற்கரிதாய் சிவஞானத்தாற் றெளியப்பட்ட பொருளே வணக்கம். (உ0௬) சாந்தின் - சாந்தினை அணிந்த. (உ0எ) புல்வாய்-மான். (உக0) வலிய ஐம்புல வேட்கைகள் கெட்டு ஒழியும்படி அருள் புரிந்தவனே வணக்கம். (உகக) நிலத்தின்மேல் திருவடி பொருந்தப் பழகிய பல திருவுருவங்களெடுத்தவனே. (உக௯) பிழை இன்னதென்றும் பிழையில்லாதது இன்னதென்றும் தெரியாத நாயேன். (உஉ0) குழைத்த - தொடுத்த அல்லது மனதைக் குழைவிக்கும். சொல்மாலை - பாமாலை.

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
௨௨௫ போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருச்சதகம்

## பக்தி வைராக்கிய விசித்திரம்

## ௧. மெய்யுணர்தல்

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேன்உடை யாயென்னைக்கண்டு கொள்ளே.

---

(௨௨௧) புராண - பழமையானவனே. (௨௨௨) மேலான பொருட்கெல்லாம் மேலான ஒளியுடைய மேலோனே. (௨௨௩) புயங்கப் பெருமான் - பாம்பை அணிந்தவன், புயங்கம் என்னும் கூத்தாடுபவன். (௨௨௪) எல்லாப் பொருள்களுக்கும் பழமையானவனே, வணக்கம். எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயிருப்பவனே வணக்கம். (௨௨௫) சயசய - வெற்றி உண்டாகுக.

---

**திருச்சதகம்** - நூறு செய்யுட்களாலாகிய திருப்பாடற்றொகை.

பக்தி வைராக்கிய விசித்திரம் - அன்பின் உறுதி அழகு.

(௧) அரும்பி - மயிர்ப்புளகம்கொண்டு. விதிர்விதிர்த்து - நடுங்கி. கைதான் நெகிழவிடேன் - ஒழுக்கத்தையே நழுவவிடாது மேற்கொண்டு நிற்பேன். அல்லது நான் தொழும்பொருட்டு குவித்த கைகளைத் தளரவிடமாட்டேன். கண்டுகொள் - கண் பார்த்துக் கொள்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே.

உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவருந்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே. ௫

சாவமுன் னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென்(று) அவிதா இடு(ம்)நம் மவரவரே

---

(௪) இறைவா! திருவருளாலே இருச்கப்பெறின், புரந்தரன் மால் அயன் வாழ்வு கொள்ளேன். குடிகெடினும் நினது அடியாரொடு அல்லால் நள்ளேன். நரகம் புகினும் எள்ளேன். எங்கள் உத்தமனே! உன்னை யல்லாது பிறதெய்வம் உள்ளேன் - உரைநடை. திருவருளாலே இருக்கப்பெறின் - திருவருள் உணர்ச்சியோடு இருக்கப்பெற்றால். வரி 1. இந்திரன், மால், அயன் என்போர் பதவிகளை ஒரு பொருளாக மதியேன். குடிகெடினும் - என் வாழ்க்கைக்கு முடிவு வந்தாலும். நள்ளேன் - நட்புக் கொள்ளமாட்டேன். எள்ளேன் - இகழமாட்டேன்.

(௫) மத்தம் - பெருங்களிப்பு. மால் - மயக்கம் கொண்டவன்; பித்தன். எவரும் மனம் நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட ஊர் ஊர் திரிந்து, எவரும் தத்தம் மனத்தன பேச, சாவது எஞ்ஞான்று கொல் - எல்லோரும் தங்கள் கருத்தில் தோன்றினபடி எல்லாம் சொல்லும்படியாக ஊர் ஊராகத் திரிந்து, யாவரும் தங்கள் மனம் போனபடி பேசவும், செயலற்று (தற்போதம் ஒழிந்து) பிணம் போற் கிடப்பது எப்போது நிகழும்.

(௬) வரி 1. முன்னாளில் தக்கன் சாக, யாகத்தில் ஆட்டின் ஊனைத் தின்று, ஆலகால விஷத்திற்கு அஞ்சி. 2-வது வரி. மெது தந்தையே காப்பாற்றுவாய் என்று முறையிடும் நம்மைப்போன்ற உயிர் வர்க்கத்தைச் சேர்ந்த அவர்களே (அயனும், அரியும்).

மூவரென் றேயெம்பி ரானொடும் எண்ணிவிண் ணாண்டுமண்
தேவரென் றேஇறு மாந்தென்ன பாவந் திரிதவரே. [மேல்

தவமே புரிந்திலன் தண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்கெம் பரம்பரனே. ௫

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. ௬

முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடஅப் பாலன்இப் பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்தம் மேல்கொண் டுழிதருமே.

---

(௪) வரி 3, 4. சிவபெருமானொடு தம்மையும் சேர்த்து மூவரென்று எண்ணி, தேவலோகத்தை ஆண்டு, நில உலகில் தேவரென்று எண்ணிச் செருக்கடைந்து திரிகின்ற இயல்பினராயிருக்கின்றனர். என்ன பாவம்!

(௫) சிவம் - இறைவன் திருவருள். திரு - புண்ணியம். திருவடிக்காம் பவம் - திருவடிக்கு அடிமை செய்யும் பிறவி.

(௬) பரந்து - பரவி, துதித்து ; அல்லது பலவிடங்களுக்குச் சென்று. அன்பர் உள்ளம் கரந்து நில்லாக் கள்வனே - அன்பர் மனதில் ஒளித்து நில்லாது மற்றவர்க்கு ஒளித்து நிற்கும் மாயமுடையவனே. நின்னை முழுவதுமே (முழு மனதுடன்) ஏத்த நின்றன்...... அருளாய் - உரைநடை.

(௭) 1-வது வரி - எல்லாவற்றையும் படைத்தவனாகிய அயனைப் பெற்றோனாகிய அரி. அப்பாலன் - அப்பாலான், அப்பாற்பட்டவன். கழுது - பேய். கதியிலி - போக்கிடமில்லாதவன். இகழ்ச்சிபோல் புகழ்ச்சி. யாவர்க்கும் புகலிடமா யிருக்கும் இறைவனுக்குச் செல்கதி ஒன்றுமில்லை. உன்மத்தம் மேல்கொண்டு உழிதருமே - பித்துக் கொண்டவன்போல அலைந்து திரிவான் ; இது என்ன ஆச்சரியம்.

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. அ

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான், சிவனெம் பிரான்என்னை ஆண்டுகொண்டான் என் சிறுமைகண்டும், அவனெம் பிரானென்ன நானடியேனென்ன இப்பரிசே, புவனெம் பிரான்தெரி யும்பரிசாவ(து) இயம்புகவே. ௯

புகவே தகேன்உனக் கன்பருள் யானென்பொல் லாமணியே, தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை, மிகவே உயர்த்திவிண் ணோரைப் பணித்தி அண் ணாவமுதே, நகவே தகும்எம் பிரானென்னை நீசெய்த நாடகமே. ௧௦

---

(அ) உழிதரு காலும் - சஞ்சரிக்கும் இயல்பினதாய காற்றும். இழிதரு காலம் - ஒடுங்கும் காலம். உழிதருகால் அத்த - நடனம் புரியும்படியான திருவடிகளையுடைய தந்தையே. காத்து - தடுத்து. “ கண்டுகொண்டாரைவர் காக்கிலும் ”—சுந்தரர். (தூவாயா)

(௯) பவன் - எல்லாம் தோன்றுதற்கு இடமானவன். வரி 3, 4. எம்பிரானுகிய சுயம்பு தான் எமது பிராளுகவும், நான் அவன் அடிமையாகவும் இருக்கும் தன்மையை எனக்குத் தெரிவித்த விதத்தை நான் சொல்லுவேனுக.

(௧௦) பொல்லாமணி - பொள்ளா (தொளைபடாத) மாணிக்கம். எ(ன்)னை உனக்கு ஆட்கொண்ட தன்மை தகவே (தகுதியோ ?). எப்புன்மையரை...நாடகமே—என்னைப் போன்ற எப்படிப்பட்ட தாழ்ந்தோரையும் மிகவும் உயர்வடையச் செய்து, வானவரை அவருக்குப் பணியச் செய்கின்ருய் ; என்பால் நீ செய்த கூத்து பிறர் நகையாடத் தக்கதாய் இருக்கின்றது.

## உ. அறிவுறுத்தல்

### தரவு கொச்சகக் கலிப்பா

நாடகத்தா லுன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே. கக

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும்பெறில்வேண்டேன் மண்ணாள்வான்மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.

வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநான் ஆமாறே. கங

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. கச

---

அறிவுறுத்தல் - நெஞ்சிற்கு புத்தி கூறுதல்.

(கக) நாடகத்தால் - (அன்பில்லாமல்) வெளித்தோற்றத்தால்மட்டும். ஆடகச்சீர் மணிக்குன்றே - பொன்னைப்போல் மாறுபாடில்லாத சிறப்பையுடைய மாணிக்கமலையே. ஊடகத்தே - மனத்தினுள்ளே.

(கஉ) வரி 1. நான் பிறப்பதற்குச் சிறிதும் பயப்படமாட்டேன். இறப்பு வந்தாலும் நான் செய்யக்கடவது ஒன்றுமில்லை. (வரட்டும், அதற்கும் அஞ்சேன்.)

(கங) இருந்தும் - உடலோடு சுகமாய் இருந்தும். நற்றமியேன் ந+தமியேன், தனிமை மிகுதியுடையேன். நான் ஆம் ஆறு என் - நான் உய்யும் வழி என்ன.

(கச) ஆமாறு - (உன் திருவடி அடைவதற்குத் தகுதியுடையேன்) ஆகும் வண்ணம். தூகேன் - அலகிடமாட்டேன். சாமாறே விரைகின்றேன் - வீணே காலத்தைக் கழித்து சாவதற்கே துரிதப் படுகின்றேன். சதுராலே சார்வானே - எல்லா உயிர்களிடத்தும்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. கரு

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன் [டிச்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

பரவுவார் இமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே. கஎ

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்

---

தன் திறமையால் சார்ந்து அவற்றை நடத்துபவனே; (என்னையும் நல்வழிப்படுத்தவேண்டும்). மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றினாலும் வழிபடவேண்டிய அவசியம் கூறினார்.

(கரு) கூத்தாட்டுவான் - உலகமாகிய நாடகசாலையில் ஆடும்படிச் செய்பவன்.

(கசு) சூழ்ந்து மதுகரம் முரலும் - வண்டுகள் சூழ்ந்துகொண்டு ரீங்காரம் செய்யும். எதுகைபற்றிச் சூழ்ந்து சூழ்த்து என்று ஆயிற்று. பாழ்த்த பிறப்பு - பாழாகச் செய்யும் பிறவி.

(கஎ) குரவுவார் குழல் - நறுமணம் கமழும் நீண்ட கூந்தல். அரவுவார் கழலிணைகள் - சப்திக்கின்ற பெரிய கழல்கள் அணிந்த திருவடிகள். காண்பாரோ - இவர்களில் உன்னைக் காண்பவர் யார்? கடைசியாகக் கூறப்பட்ட மெய்யன்பு பூண்ட அடியார்கள் தாம் காண்பர் என்பது குறிப்பு.

(கஅ) அம்பரவா - ஞானஆகாயமா யிருப்பவனே. பெய்கழல் - வீரக்கழல்கள் அணிந்த திருவடிகள்.

விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேன்நான் சாவேனே. கஅ

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரி[ய]
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. கக

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்(டு)
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே. உ௦

---

(கஅ) வியந்து அலறேன் - உன் வியப்பாகிய புகழ்களைச் சொல்லித் துதியேன். நயந்து - விரும்பி. தரியேன் - இவ்வுடலோடு வாழமாட்டேன். மலர் தூவல், அலறுதல், உருகுதல்—முறையே மெய், மொழி, மனம் ஆகிய முக்கரணங்களால் செய்யும் வழிபாடு. சாவேன் நான் சாவேனே - பிறப்பினால் அடையக்கூடிய பயனை அடையாமல் வீணே இறந்தொழிவேன்.

(கக) வேனில் - இளவேனிற்காலம். இது காமனுக்குரிய காலம். வேள் - மன்மதன். பானல் ஆர் - குவளை மலரை ஒத்த. காணாய் நீ - நீ காணமுயலமாட்டாய். மாளா - மாளாமல், இறந்து ஒழியாமல்.

(உ௦) வாழாத - (பேரின்ப அனுபவத்தோடு) உயிர் வாழாத. ஆழ்கின்றாய் - துன்பத்தில் அழுந்துகிறாய். கேடு உனக்குச் சூழ்கின்றாய் - உனக்கே கேடு தேடிக் கொள்ளுகின்றாய். அவலக் கடல் - மிகுந்த துன்பம்.

## ரு. சுட்டறுத்தல்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்(கு)
உள்ளந்தாள் நின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே. உக

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போது,நான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானாய்க்(கு) இரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே. உஉ

---

சுட்டறுத்தல் - சுட்டி அறியும் அறிவை ஒழித்தல்.

(உக) எனக்கேட்டு - என்று அன்பர் துதிக்கக் கேட்டவுடன். வேட்ட நெஞ்சாய் - விருப்பத்தோடு கூடிய நெஞ்சினராய். வரி 3,4. மேட்டிலிருந்து பள்ளத்தில் விழுகின்ற நீர்போல மேல்கீழாக விழுந்து வணங்கி, மனம் துடிதுடித்து உருகுகின்ற சிறந்த அடியார்கள் உன் திருவருளை எதிர்பார்த்து நிற்க, அவர்களுக்கு அருள் செய்யாமல் என்னை அடிமையாகக்கொண்ட உனக்கு. வரி 5...8. கொடிய வினையினேனுக்கு உள்ளங்கால் முதல் உச்சியளவும் நெஞ்சு ஆகி உருகவில்லை. ஆதலால் என் நெஞ்சம் கல்லைப்போன் றிருக்கின்றது. உடம்பெல்லாம் கண்ணாகி, ஆனந்தக்கண்ணீர் வெள்ளம் பாயவில்லை. ஆதலால் என் இரு கண்களும் மரத்தினால் ஆனவை.

(உஉ) புகுந்து நின்று - என்னுள்ளத்திற் புகுந்து நிலைபெற்றிருந்து. போது - வா. வினைக்கேடன் - வினையை ஒழிப்பவன். இனையன் நான்......அறிவித்து - நான் இன்ன தன்மையன் என்றும் உன் இயல்பு இன்னதென்றும் அறியச்செய்து. உலறிடேன் - உளறிடேன், பிதற்றமாட்டேன். முனைவன் - முன்னவன். முறையோ நான் ஆன ஆறும் முடிவு அறியேன் - நான் இவ்வாறு ஆன விதம் நியாயமோ? எனக்கு என்ன கதி வருமென்று அறிகிலேன்.

ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்துயான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோர் அன்ப னென்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே. உங

பேசிற்றாம் ஈசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே. உச

வண்ணம்தான் சேயதன்று வெளிதே யன்று
அநேகனேகன் அணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி யிமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தா யுன்றன்

---

(உங) ஆய - ஆராயப்பட்ட, அல்லது, என்னை ஆட்கொள்ளும் பொருட்டு குருஉருவாகி வந்த. நான்மறையவன் - நான்கு வேதப் பொருளாயிருப்பவன். நோக்கிக் கண்டும் - நன்றாகத் தெரிந்திருந் தும். பேயனேன் அன்றி மற்றோர் அடியார் தாம் இல்லையே, இது தான் நின்பெருமை அன்றே - பேய்த்தன்மையனாகிய என்னை அன்றி வேறு அடியார் இல்லையோ? தகுதியற்ற என்னை ஆட்கொண்டது உனக்குப் பெருமை அல்லவா?

(உச) பேசில்தாம் - தாம் பேசுவதானால். பூசில்தாம் - தாம் ஏதாவது பூசுவதானால். பின்றா - பின்னடையாத; குறையாத. வண் ணந்தான் என்னை - வகைதான் என்ன ஆச்சரியம். ஏ - அசை. அவா வெள்ளக் கள்வனேனை ஆட்கொண்ட - என்று கூட்டுக.

(உரு) வரி 1, 2. உன்னுடைய நிறந்தான் சிவப்பன்று, வெள்ளை யன்று, நீ பலவாயிருப்பவன், ஒருவனாயிருப்பவன், அணுவாயிருப் பவன், அணுவினையும் கடந்த அதிநுட்பமாயிருப்பவன் என்று பல

வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணம்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே. உரு

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. உசு

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்சேழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே. உஎ

---

வாருகப் பேசி. எய்துமாறு அறியாத எந்தாய்-உன்னை அடையும்விதம் இன்னதென்று அறியமாட்டாத தன்மையுடைய எந்தையே. வழியற்றேனை-கதியற்ற என்னை. திண்ணம்தான்-நிச்சயமாக. காத்து-தடுத்து.

(உசு) போது - மலர். வந்தனை - வணக்கம். வாக்குன் மணி வார்த்தைக்காக்கி - என் வாக்கை உன் அழகிய புகழைப் பேசும் மாணிக்கவாசகத்திற்கு உரியதாகச் செய்து. ஆர வந்தனை - உன்னையே நிறைய அனுபவிக்கும்படி எழுந்தருளினாய். விச்சை - வித்தை; செயற்கருஞ் செயல். மாலமுதப் பெருங்கடலே - அன்பு மயமாகிய பேரின்ப சாகரமே. இரண்டும்இலி - இம்மை மறுமைப் பயன் இரண்டும் இல்லாதவனான.

(உஎ) பௌவம் - கடல். எவ்வம் - துன்பம். துவர் - பவளம் (போன்ற). காலால் - புயற்காற்றால். காமவான் சுறவு - ஆசை என்னும் பெரிய சுறாமீன். மல்லல் - வளப்பம். கரை - முத்திக்கரை. மூர்க்கன் - பிடிவாத குணமுடையவன்.

கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
  கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
  நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
  கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
  எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. உஅ

விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்
  மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுத மூறி
  அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்ணலிஆ காச மாகி
  ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி யெங்கள்
  சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. உகூ

தேவர்கோ அறியாத தேவ தேவன்
  செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோன் ஆய்நின்ற முதல்வன் மூர்த்தி
  மூதாதை மாதாளும் பாகத் தெந்தை

---

(உஅ) கேட்டு ஆரும் அறியாதான்-யாவராலும் கேள்வி அறிவினால் அறியப்படாதவன். தவிசு - ஆசனம். காட்டாதன - பிறராற் காட்ட முடியாதன. கேளாதன - பிறர்பாற் கேட்டு அறியக்கூடாதன. வரி 8. இவையெல்லாம் எம்பெருமான் செய்த மாயவித்தை. இது என்ன ஆச்சரியம்!

(உகூ) அன்புகூர புகுந்து ஆண்டான் - அன்பு மிகுதிப்படும்படி என் உள்ளத்தே புகுந்து என்னை ஆண்டருளினன். அச்சன் - அத்தன், தந்தை. செச்சை மாமலர் புரையும் - வெட்சி மரத்தின் சிறந்த மலர்போலும் செந்நிறமுள்ள.

(௩0) பொழில் - உலகம். பயந்து - படைத்து. மூவர் - மும்மூர்த்திகள் - அயன், அரி, அரன். மூர்த்தி - எல்லாம் தனது வடிவாகக் கொண்டவன். மூதாதை - பாட்டன்.

யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே. ௩0

---

## ரு. ஆத்தும சுத்தி

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

அறிவி லாதஎனைப் புகுந்தாண்டு கொண்டறிவதை யருளிமேல், நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானைப், பிறிவிலாத இன்னருள்கள் பெற்றிருந்தும் மாறுடுதி பிணநெஞ்சே, கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய் கெடுத் தாயென்னைக் கெடுமாறே. ௩௨

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி மடநெஞ்சே, தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச் சிவன வன் திரள்தோள்மேல், நீறு நின்றது கண்டனை யாயினும்

---

(௩0) குடைந்தாடி - இன்பக் கடலில் மூழ்கி விளையாடி.

---

ஆத்தும சுத்தி - நெஞ்சறிவுறுத்தி உயிரைத் தூயதாக்குதல்.

(௩க) ஆடுகின்றிலை கூத்து, உடையான் கழற்கு அன்பிலை. உடையான் - யாவரையும் அடிமையாக உடைய சிவபெருமான். சூட்டுகின்றதுமிலை - மலர்களைச் சிவபெருமானுக்கு அணிவிப்பதுமில்லை. பிணநெஞ்சே - உயிரற்ற (அறிவில்லாத) மனமே.

(௩௨) மாறுடுதி - தடுமாறுகிறாய். கிறியெலாம் மிகக் கீழ்ப்படுத்தாய்-பொய்யெலாம் மிகுதிப்படும்படியாக என்னைக் கீழேதள்ளினாய்.

(௩௩) மாறிநின்று எனைக்கெடக் கிடந்தனையை - திருவருள் நெறியில் நான் செல்லவொட்டாமல் வழிமறித்து நின்று நான் கெடும்படித் தடுக்கின்ற உன்னை. தேறுகின்றிலம் - நம்பமாட்டோம். சிக்கென - (உயிர்க்கு) உறுதியாக. நெக்கிலை - மனம் கசிந்து உருகுகின்றாய் இல்லை.

நெக்கிலை யிக்காயங், கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே. ௩௩

கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை [ம்
விற்றெலாம்மிக ஆள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாஇளந் தளிர்பிரிந் திருந்துநீ யுண்டன எல்லாமுன்
அற்ற வாறுநின் னறிவுநின் பெருமையும் அளவறுக்கில்லேனே.

அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்(கு) அடியவர்க்கெளியான்நம், களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட்கசிந்துணர்ந் திருந்தேயும், உளகறுத்துனை நினைந்துளம்பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே, பளக றுத்துடையான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. ௩௫

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற், குகுவ தாவதும் எந்தையெம் பிரானென்னை யாண்

---

(௩௩) 4-வது வரி. அன்பினால் உருகாத இச்சரீரத்தை கிழித்தெறிந்தாய் இல்லை ; கெட்டுப் போவது உன் தன்மையாய் இருக்கின்றது ; உன் தன்மையைக் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை.

(௩௪) கில்தவா மனமே - (உலக விஷயங்களில் செல்லும்) ஆற்றல் கெடாத மனமே. முற்றிலா - முதிராத. உண்டன...... அளவறுக்கில்லேனே - நீ அனுபவித்தனவெல்லாம் கெட்டொழிந்த விதத்தையும் உன் அற்ப அறிவையும் உன் போலிப் பெருமையும் அளந்து அறியும் ஆற்றலில்லாமலிருக்கின்றேன்.

(௩௫) களவு அறுத்து - வஞ்சகத்தன்மையை ஒழித்து. உள்ளகறுத்து - உலகில் உள்ளனவற்றை வெறுத்து. உனை நினைந்துளம் - உன்னையேதுணை என்று நம்பி உள்ளோம். பெருங்களன் செய்ததும் இலை நெஞ்சே - மனமே! நீயோ என்னோடு பெருநட்புச் செய்தாய் இல்லை. (என்வழி வாராமல் இருக்கின்றாய்). பளகு அறுத்து-குற்றங்களை யொழித்து. பரகதி புகுவானே - மேலான மோட்சத்தை அடையும் பொருட்டு. ஏ - அசை.

(௩௬) வரி 1. சென்று அடையத்தகுந்ததும், அடைந்தவர் மீளுதல் இல்லாததும் சிவலோகமாகும். உகுவதாவதும் - பற்று விடுவதும்.

டவன் கழற்கன்பு, நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு தேனொடு பால்கட்டி, மிகுவ தாவதும் இன்றெனின் மற் றிதற் கென்செய்கேன் வினையேனே. கசு

வினையென் போலுடை யார்பிறர் ஆர்உடை யானடி நாயேனைத், தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பன்று மற் றதனாலே, முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்தும்நான் முட்டிலேன் தலைகீறேன், இனையன் பாவனை யிரும்புகல் மனஞ்செவி யின்னதென் றறியேனே. கஎ

ஏனை யாவரும் எய்திட லுற்றுமற் றின்னதென் றறி யாத, தேனை ஆன்நெயைக் கரும்பின் இன் தேறலைச் சிவனை யென் சிவலோகக், கோனை மான்அன நோக்கிதன் கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம், ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே. கஅ

ஓய்வி லாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த் தாள் தந்து, நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும் என்னைநன் னெறிகாட்டித், தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன் தலை வனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள் கிலேன் செழுங்கடல் புகுவேனே. கக

---

(கசு) அன்பு நெகுவதாவதும் - அன்பினால் நெக்குருகுவதாவ தும். நித்தலும் அமுதொடு தேனொடு பால் கட்டி மிகுவதாவதும் - அமுதம், தேன், பால்,கற்கண்டு ஆகிய இவற்றினும் மிகுந்தபேரின்ப உணர்ச்சி நாளுக்கு நாள் அதிகரிப்பதும். வரி 4. இல்லையாயின் உன்னைத் திருத்துவதற்கு நான் என்ன செய்யக்கூடும்.

(கஎ) திருக்குறிப்பன்று - அவனது திருவுள்ளக்குறிப்பல்ல. முனைவன் - முதல்வன். முட்டிலேன் தலைகீறேன் - தலையை மோத மாட்டேன். (உடலைக்) கிழித்தெறியமாட்டேன். இனையன் - இத் தன்மையன். பாவனை - எண்ணம்.

(கஅ) வரி 1, 2. (அன்பரல்லாத) மற்று யாவரும் அடைய முயன்றும் இன்ன தன்மையன் என்று அறியப்படாதவனும், (அன் பர்கட்குத்) தேன்,பசுநெய், கருப்பஞ்சாறு போல்பவனும் ஆகிய சிவ பெருமானை. உயிர் ஓயாதே - பிராணன் போகாதோ ?

(கக) ஓய்வு - அழிவு. உவமனில் இறந்தன - உபமானமாகக் கொள்ளப்படும் பொருள் எல்லாவற்றையும் கடந்தன.

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும் அதுதனை நினையா
மான்நி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்[தே
தேன்நி லாவிய திருவருள் புரிந்தவென்சிவனகர்புகப்போகேன்
ஊனில்ஆவியை ஓம்புதற்பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே.

---

## ரு. கைம்மாறு கொடுத்தல்

### கலி விருத்தம்

இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட(து) எவ்வமே
வருக என்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே. சக

உண்டொர் ஒண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே. சஉ

---

(சo) வரி 1. மன்மதன் அம்பு நெஞ்சைப் பிளந்திட சந்திரன் உடம்பைச் சுடுவான். அது தனை நினையாதே - (மன்மதன் அம்பினால் வரும்) கேட்டினை நினையாமல். மான் நிலாவிய நோக்கியர் - மானை ஒத்த பார்வையையுடைய மாதர்கள். படிறு - வஞ்சகம். தயிராகி - தயிரைப்போல் கலங்கி. தேன் நிலாவிய - தேன்போலும் இனிமை நிலைபெறச் செய்த. சிவன் நகர் புகப் போகேன் - சிவபுரத்தை அடையும் நெறியிற் செல்ல மாட்டேன்.

---

(சக) இரு கை யானை - இரண்டு அல்லது பெரிய துதிக்கை உடைய யானை. உளக்கரு - உள்ளத்தினுள்ளே மறைந்திருக்கும் இறைவன். "உள்ளத்தினுள்ளே நின்ற கருவே"—அப்பர். (திருவே) எவ்வம் - துன்பம். கிற்பன் - அடியவன். உண்ண கிற்றிலேன் - (உன்னுடன் கலந்து ஆனந்தத்தை) அனுபவிக்க வல்லேனல்லேன்.

(சஉ) ஒள்பொருள் - அறிவொளிப் பொருள். அறியொண்கிலை - அறிய வொண்ணுமல் இருக்கின்றாய். உள்ளவா - நீ உண்மையாக இருக்கின்றவாறு. 4-வது வரி. உன்னைத் தரிசிக்கப்பெற்றும், பிறகு காணமுடியாதவனாயிருக்கிறேன். இது என்ன கண்கட்டி வித்தையாயிருக்கின்றது.

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. ௪௩

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. ௪௪

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின் (று)
ஆற்றல் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே. ௪௫

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறுமலர்க் கொன்றையான்

---

(௪௩) மேலை - மேலிடம்; விண்ணுலகம். ஓர் கோலமே - ஒப்பற்ற திருவுருவை யுடையவனே. வந்துபோம் - தோற்றி ஒடுங்கும்.

(௪௪) 1-வது வரி. (அடியவர்க்குக்) காணக்கூடிய மேலான பொருளே, கண்ணுக்கு எட்டாத (காட்சியைக் கடந்த) சோதியுடன் கூடிய பொருளே. பார்ப்பென - பறவைக் குஞ்சுபோல. பாணனேன் - பாழாகப்போக இருக்கின்றவனாகிய நான். படிறு - வஞ்சகம். வரி 3,4. நான் ஐம்புல நுகர்ச்சியில் ஈடுபட்டிருப்பதனால், பறவைக்குஞ்சு முட்டை ஓட்டினின்றும் வெளிவருவதுபோல் வஞ்சகத்தோடுகூடிய உடம்பை விடுத்து, உன்னைக் கூடும் வகை அறியேன்.

(௪௫) வரி 1. உன்னை எக்காலத்தும் வணங்கியும், நிலத்தே புரண்டு வலம் வந்தும், உன் புகழைப் பாடியும் செய்யும் திருத்தொண்டிலே நிலைத்து நின்று. அன்பு சிவபெருமானிடத்துக் கூட்டுவிக்கும் ஆற்றல் உடைமையால் ஆற்றல் மிக்க அன்பு எனப்பட்டது. (3, 4 வது வரி) உன்னை எதிர்த்து வந்து உன் தாமரைபோன்ற பாதத்தினால் உதையுண்ட யமனை ஒத்ததன்மை என் தன்மையா யிருக்கின்றது. யமனை உதைத்துத் திருத்தியதுபோல் என்னையும் திருத்த வேண்டும்.

(௪௬) எனை அன்பரிற் கூய்ப் பணி கொள்ளுங்கில் - என்னை மெய்யன்பரைப்போல வலிய அழைத்து அடிமை கொள்ளுவானே.

T-15078



நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே. ௪௬

எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே. ௪௭

செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. ௪௮

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே. ௪௯

அறிவ னேயமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோஅல்ல னோஅரு ளீசனே. ௫௦

---

(௪௬) நள்ளும் - நடுவிலும்.

(௪௭) ஆய் - தாய். பிரான் - தலைவன். முந்தி-எதிரில்தோன்றி.

(௪௮) வரம்பு இன்றி - வரையறையில்லாமல். எல்லையில் கழல் - இறைவனுடைய அளவுகடந்த அறிவு செயல். பட்ட கட்டமே - அடைந்த துன்பம் (எத்தன்மையது)!

(௪௯) கட்டறுத்து - பிறவித் தளையை நீக்கி. கண்ஆர - கண்கள் பார்த்து மகிழ்ச்சி மிகும்படியாக. பட்டிமண்டபம் - வித்யாமண்டபம், சிவஞானிகள் நிறைந்த தூய சிவஞான மண்டபம். எட்டு=அ. இரண்டு=உ. அகர உகரமாகிய சிவம் சத்தியின் தன்மை அறியாதவனாகிய என்னை ; ஆன்மநிலை யறியாதேனை என்றுங் கூறுவர்.

(௫௦) அறிவனே - ஞானவடிவினனே, எல்லாம் அறியும் தன்மையனே. வரி 4. நான் அறிவு உடையவனாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஈசனே ! நீ அருள் புரியவேண்டும்.

## ௬. அநுபோக சுத்தி

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

ஈச னேயென் எம்மானே யெந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே செய்வ தொன்றும் அறியேனே.

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர் காணாப், பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரி யேன் பொய்யிலா, மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டுங் கேட்டிருந்தும், பொய்ய னேன்நான் உண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே. ௫௨

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருள் நீக்கி, வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள அருள்பெற்ற, சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண் கெட்ட, ஊரே றாயிங் குழல்வேனோ கொடியேன் உயிர்தான் உலவாதே. ௫௩

உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான், பலமா முனிவர் நனிவாடப் பாவியேனைப் பணிகொண்டாய், மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே உனைக்காண்பான், அலவா நிற்கும் அன்பிலேன் என்கொண் டெழுகேன் எம்மானே. ௫௪

---

(௫௧) ஒன்று அல்லா - ஒரு பொருளுமல்லாத.

(௫௨) பேறு - பெறப்படுவதாகிய துன்பம். போர்ஏறே-போரில் ஆண் சிங்கத்தை ஒத்தவனே.

(௫௩) வார் ஏறு - கச்சு அணிந்த. ஊர் ஏறுஆய் - ஊர்ப்பன்றி யைப் போன்று. உயிர்தான் உலவாதே - உயிர் நீங்காதோ ?

(௫௪) உலவா - அளவில்லாத. உறுப்பு - உடம்பு. மலமாக் குரம்பை - மிக்க அழுக்கைச் சொரியும் (கூடு) உடல். அலவா நிற் கும் அன்பிலேன் - இடையறாது நிற்கும் அன்பில்லாதேன். என் கொண்டெழுகேன் - (அன்பு ஒழிந்த வேறு) என்ன துணையைக் கொண்டு மேற்செல்வேன். அரன்பால் அன்பே நன்னெறியிற் சேர்ப்பிக்கும்.

மானேர் நோக்கி உமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தென் தில்லைக்
கோனே உன் தன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானேன் உடையானே.

உடையா னேநின் றனையுள்கி உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்(டு)இங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தாக முடித்தாயே.

முடித்த வாறும் என்றனக்கே தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை யொளியைத் தெளிந்தார்தம், ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன், நானின் னடியேன் நீயென்னை யாண்டா யென்றால் அடியேற்குத், தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் தன்மையே. ருஅ

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா புறமே போக விடுவாயோ

---

(ருரு) திருக்குறிப்புக் கூடுவார் - திருவருள் வழிச்செல்லுவார்.

(ருசு) ஊர்நாய் - ஊரில் அலைந்துதிரியும் நாய். கல்லா(த) மனத்தேன் அல்லது கல்லா(ம்) மனத்தேன் - உன்னை அடையும் நெறியைக் கற்றுக்கொள்ளாத மனத்தினேன், கல்லைப்போன்ற உருகாத மனத்தினேன். முடித்தாயே - முடிவு செய்துவிட்டனையோ?

(ருஎ) முன் அடியாரைச் சோராமற் பிடித்தவாறும் என்னைப் (புழுக்கூடு காத்திங்கு இருப்பதாக) முடித்தவாறும் தக்கதே. இறையே - சிறிதே. முகம் குறுவேர்ப் பொடித்தவாறும் - முகத்தில் சிறுவேர்வைத் துளிகள் தோன்றினவாறும். சூழ்ந்தேனே - கருதி (தேடி)க் கொண்டேனே.

(ருஅ) கன்னலின் தெளிவை - கருப்பஞ்சாற்றின் தெளிவை. உம்பரானை - சிதாகாச சொரூபனை.

(ருக) புறமே - அருளுக்குப் புறம்பாக.

என்னை நோக்கு வார்யாரே யென்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப்புகுவேனே.

புகுவே னெனதே நின்பாதம் போற்றும் அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோணேக்கி நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள அடியேனுந்
தகுவ னேயென் தன்மையே எந்தாய் அந்தோ தரியேனே.

---

## எ. காருணியத்திரங்கல்

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி. சுஉ

---

(ருக) என்னை நோக்குவார் யாரே - என்மீது கருணை நோக்கம் செய்பவர் யார்? எங்குப் புகுவேன் - எங்கே (யாரிடத்தே) அடைக்கலம் புகுவேன்.

(சுO) புகுவேன் எனதே நின்பாதம் - உன் திருவடிகள் எனக்கு உரியதே; அதனையே அடைக்கலமாக அடைவேன். நினைக்காண நெகும் அன்பில்லை - உன்னைக் காண்பதற்குரிய உள்ளத்தை உருக்கும் அன்பு என்னிடம் இல்லை. தகுவனே - தகுதியுடையவனே?

---

காருணியத்து இரங்கல் - கருணையினுல் இரங்கும்படி இறைவனை வேண்டுதல்.

(சுக) போற்றி - வணங்குகின்றேன் அல்லது காத்தருள்க. வான விருத்தன்-சிதாகாயத்தில் இருக்கும்பழையவன். விடலை-திண்ணியன்.

(சுஉ) ஓ நமச்சிவாய போற்றி - ஓ நமச்சிவாயனே வணங்குகின்றேன். அல்லது ஓ(ம்) நமச்சிவாய போற்றி - ஓம் சிவனுக்கு வணக்கம், காத்தருள்க. புறமெனைப் போக்கல் - (திருவருள் நெறிக்குப்) புறம்பே என்னைப் போகவிடாதே.

போற்றியென் போலும் பொய்யர் தம்மைஆட் கொள்ளும்வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம் இருசுடர்க் கடவு ளானே. சுங

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே உருக்கி யென்னை ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. சுச

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட் டேனே.

இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே.

---

(சுங) கருணைவெள்ளப் புது மது போற்றி - கருணைசமுத்திரமாகிய புதிய தேனுக்கு வணக்கம். புவனம்...கடவுளானே - நிலம் முதலாக எட்டினையும் வடிவமாகக் கொண்ட கடவுளே. இயமானன் - உயிர். இருசுடர் - சூரியன், சந்திரன். கடவுள் - மனம் மொழி மெய் ஆகிய மூன்றையும் கடந்த பொருள்.

(சுச) கண்டுகொண்டு - கிருபாநோக்கம்செய்து. விட உ(ள்)ளே உருக்கி - (உலகப் பற்றுக்கள்) விட்டொழிய மனதை உருகச்செய்து. ஒல்லை - விரைவாக. உம்பர் - மேலிடம்; முத்திப்பேறு.

(சுரு) கோலப் பொங்கு அரா அல்குல் - சீற்றங்கொண்ட பாம்பின் அழகிய படத்தை ஒத்த அல்குல். மால்விடை ஊர்தி-திருமாலைக் காளை வாகனமாக உடையவனே. 4-வது வரி. (இங்கு இவ்வாழ்வு) இவ்வுலக வாழ்க்கையைப் பொறுக்க முடியவில்லை. இதை மிக இழிவாகக் கருதுகின்றேன்.

(சுசு) வரி 1, 2. என்னை யானே இழிவுபடுத்திக் கொண்டேன். நான் உன்மீது குறைகூற இல்லை. "என்னலறியாப் பதம் தந்தாய் யானதறியாதே கெட்டேன். உன்னலொன்றும் குறைவில்லை......" என்னும் திருவாசகத்தோடு ஒப்பிடுக. உம்பர்நாடு - முத்தி உலகம்.

எம்பிரான் போற்றி வானத் தவரவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை ஆளுடை ஒருவ போற்றி. ௬௭

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

தீர்ந்தஅன் பாய அன்பர்க்(கு) அவரினும் அன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமைபோற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி. ௬௯

போற்றியிப் புவனம் நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவு யிர்க்கும் ஈறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்கள்நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

---

(௬௭) வானத்து அவரவர் ஏறு - தேவலோகத்துள்ள யாவர்க்கும் அவரவர்களுக்குத் தக்கவாறு அருளும் ஆண் சிங்கம் போன்றவனே (தலைவனே). கொம்பர்ஆர் மருங்குல் - பூங்கொம்பு (பூங்கொடி) போன்ற நுண்ணிய இடையையுடைய.

(௬௮) ஒருவன் - (கடவுளாகிய) ஒருத்தன். குருவன் - ஆசாரியன். கோமளக் கொழுந்து - இளமை அழகு வாய்ந்த சோதியே. வாங்கிட - அழைத்துக் கொள்ள. தமியன் - ஆதரவில்லாதவன்.

(௬௯) தீர்ந்த அன்பு - முடிந்த (மிக மேலான பயன் கருதாத) அன்பு. பேர்ந்தும் - மீண்டும் மீண்டும். பொய்ம்மை ஆட்கொண்டு - பொய்த்தன்மையை நீக்கி அடிமையாகக் கொண்டு. வார்ந்த - பெருகிய. அயின்று - உண்டு. ஆர்ந்த - எங்கும் நிறைந்த.

(௭0) தோற்றம் ஆகி - பிறப்பிற்குக் காரணமாகி. 4-வது வரி. ஐம்புல அறிவினால் உன்னை அடைய முடியாதவனாய், எல்லா உயிரிலும் கலந்திருப்பவனே. "அனைத்துலகுமாய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா."—திருவாசகம். (நினைப்பதாக).

# அ. ஆனந்தத் தழுந்தல்

## எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டு பூணநோக்கினய்
புணர்ப்பதன்றி தென்றபோது நின்னொ டென்னொடென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே. எக

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலிணைய லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை யாற தாக ஐயனே. எஉ

---

(எக) உரை நடை - அங்கணாள ! புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு பூண நோக்கினய். நின்னொடு என்னோடு இது புணர்ப்பதன்று என்றபோது இது என் ஆம். இது புணர்ப்பதாக அன்று ஆக. அன்பு நின் கழற்கணே புங்கமான போகமே புணர்ப்ப தாக. பொழிப்புரை:—அழகிய கண்ணுளனே ! உன்னோடு அத்து விதக் கலப்பு கைகூடும் பொருட்டு, எந்தையாகிய நீ ஞானசாரியனய் எழுந்தருளி அடியேனை ஆட்கொண்டு, நான் உன்னை அடையும்படி திருவருட் பார்வை நல்கினய். உன்னோடு என்னை இந்த உடம்பு பானது கூட்டுவிக்காது என்று அறிந்தபோது இதனல் என்ன பயன் ? இந்த உடம்பு உன்னோடு கூட்டுவித்தாலும் சரி, கூட்டு விக்காமற் போயினும் சரி. உன்னிடத்துப் பேரன்பு என்னை உன் திருவடியினிடத்து உள்ள உயர்ந்த சிவானந்த போகத்துடன் சேர்ப்ப தாக.

(எஉ) 1-வது வரி. சிவபோகத்தை விரும்பி, இந்திரன் முதலிய தேவர்கள் பதவிக்குரிய இன்பங்களை நான் விரும்பவில்லை. ஏக-ஒரு வனே; ஒப்பற்றவனே. கழலிணையலாது இலேன் - உன் இரண்டு திருவடிகளல்லாமல் வேறு துணை இல்லேன். ஆகம் விண்டு - உடல் மலர்ந்து (மயிர்க்கூச்செறிந்து). கம்பம் - நடுக்கம். என் கை குஞ்சி அஞ்சலிக்கணே ஆக - என் கைகள் சிரசின்மீது கும்பிடும் தொழிலில் பொருந்துக. குஞ்சி - ஆண் தலைமயிர். கண்கள் தாரை - கண்கள் பொழியும் நீர்ப்பெருக்கு. ஆறு அது ஆக - ஆறுபோல் பெருகுவதாக.

ஐய நின்ன(து) அல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்ம்மை யேனென் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே. எ௩

வேண்டும் நின்க ழற்க ணன்பு பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை ஆவ வென்ற ருளுநீ
பூண்டு கொண்(டு) அடியனேனும் போற்றி போற்றியென் றுமென் றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே. எ௪

வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேதம்நான்கும்ஓலமிட்
டுணங்கு நின்னை எய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொ லோநி னைப்பதே.

---

(எ௩) பொய்ம்மையேன் என்பதை பொய்ம்மையேன் (ஆகிய) எனக்கும் வந்து ஆகவேண்டும் என்று கூட்டுக. மெய்கலந்த - உண்மைப் பொருளான உன் திருவருளோடு கலந்திருக்கும்படியான. "உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வதும் நின்னருள் மெய்யினையே"—**சம்பந்தர்.** அன்பர் அன்பு - அன்பர்கள் (உன்னிடத்து வைத்துள்ள அன்பைப் போன்ற) மெய்யன்பு.

(எ௪) நீ ஆவ என்று அருளும் - நீ ஐயோ என்று என்மீது இரங்கி அருள் புரிவாயாக. பூண்டு கொண்டு-உன் திருவடிகளை என் சிரத்தின் மேற்கொண்டு. 4-வது வரி. இறந்து இறந்து மீண்டும் பிறந்து பிறந்து எனது அரசனாகிய உன்னை வணங்குதற்கு, நின் கழற்கண் அன்பு வேண்டும். (வரி 1).

(எ௫) மண்ணும் விண்ணும் - மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும். உணங்கும் - வாடும். நின்னை எய்தலுற்று - உன்னை அடைய விரும்பி. இதனை வணங்கும் என்பதனோடும் உணங்கும் என்பதனோடும் கூட்டுக. மற்றொருண்மை...நினைப்பதே - (உன்னையன்றி) வேறு உண்மைப் பொருள் இல்லாமையால், நாங்கள் உன்னை வணங்கி விடமாட்டோம் என்று கூறவும், எதிரில் வந்து தோன்றி அருள் செய்யும் விஷயமாகத் திருவுள்ளம்பற்றி யிருப்பது யாது? இணங்கு கொங்கை - ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும்படியான பருத்த கொங்கைகள்.

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவதில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாய நின்னை ஐம்பு லன்கள் காண்கிலா
எனைத் தெனைத்த தெப்புறத்த தெந்தை பாத மெய்தவே.

எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரான்இவ் வஞ்சனேற்(கு)
உய்த லாவ துன்க ணன்றி மற்றோ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவி யேற்(கு)
ஈத லாது நின்கண் ஒன் றும் வண்ண மில்லை யீசனே. ௭௭

ஈசனேநீ அல்ல தில்லை இங்கும் அங்கு மென்பதும் [ன்
பேசி னேனொர் பேத மின்மை பேதை யேனென் எம்பிரா
நீச னேனை ஆண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே.

---

(௭௬) 1, 2-வது வரி. மனம் உன்னை நினைப்பதற்குச் செல்லும் அளவில், பொருந்திய வாக்கினால் உன் தன்மையைக் கூறவும் கேட்கவும் முயன்றால் சிறிது அளவுகூட முடியாது. எந்தைபாதம் எய்த எனைத்தெனைத்தது எப்புறத்தது - எந்தையாகிய உன் திருவடியை அடைவதற்கு அது எவ்வளவு அளவினது, எவ்விடத்திலுள்ளது.

(௭௭) வரி 1. உன்னை அடைவது எப்போது நிகழும். வரி 2. உன்னிடத்துச் சரண் அடைதலன்றி நான் உய்வதற்கு வேறு உண்மை நெறி இல்லாமையினால். வரி 3. (உன்னை அடையா விட்டால்) துன்பம் உண்டாகுமென்று எண்ணி, அல்லது இவன் சிறுவன் என்று எண்ணி, என்னைக் காப்பாற்றி இரக்கங்கொண் டருளுக. பைதல் - துன்பம்; சிறுவன். ஈது அலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை - உன்னுடன் கூடும் வழி உன்னிடத்துச் சரண் அடைவது அல்லாமல் வேறு இல்லை.

(௭௮) நீ அல்லது இல்லை - உன்னைத் தவிர வேறு ஆதரவு இல்லை. இங்கும் அங்கும் - இம்மையிலும் மறுமையிலும். வரி 2. வேறுபாடு ஒன்றும் இன்றி எங்கும் கலந்துள்ளாய் என்பது எடுத்துரைத்தேன். தேசன் - ஒளி வடிவினன். தேசனே ! ஓர் நின்னலால் ஓர் தேவருண்மை (என்) சிந்தை சிந்தியாது - ஒளி வடிவினனே ! ஒப்பற்ற உன்னை யல்லாமல் பிறிதொரு கடவுள் உண்டு என்பதை என் மனம் நினைக்க மாட்டாது.

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில் ஐம்பு லன்களால்
முந்தை யான காலம் நின்னை எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனென் உள்ளம் வெள்கி விண்டிலே
எந்தை யாய நின்னை யின்னம் எய்த லுற்றி ருப்பனே. [ன்

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டு யானு முண்(டு)இ ருந்த துண்ட தாயினும்
விருப்புமுண்டு நின்கண் என்கண் என்பதென் னவிச்சையே.

---

## ௯. ஆனந்த பரவசம்

### கலிநிலைத்துறை

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூரெம்
பிச்சைத் தேவா என்னான் செய்கேன் பேசாயே. அக

---

(எகூ) வரி 1, 2. மனம், வாக்கு, செயல், கேள்வி, ஐம்புலன்கள் ஆகிய இவற்றை நின்வழிச் செலுத்தி முற்காலத்திலேயே உன்னை அடையாத மூடனேன். வெந்து ஐயா விழுந்திலேன் - ஐயனே, தீயில் வீழ்ந்து வெந்து இறந்தேனில்லை. எய்தலுற்று இன்னம் இருப்பனே - அடையக்கருதி இன்னும் உயிர் வாழ்கின்றேன்.

(அ0) இரும்பு நெஞ்சம் - இரும்புபோல் கடினமான உருகாத மனம். நின்ன தாள்......போகவும் - உன் திருவடிகளில் நின்று பெருகும் கரும்பின் சாறுபோன்று இனிய உன் திருவருள் என்னை விழுங்கி என்னுடன் கலந்து பிறகு என்னைவிட்டு நீங்கவும். வரி 3, 4. நெருப்பு இருக்கது நானும் உணவுகொண்டு உயிருடன் இருந்தேன் எனினும் தீயில் வீழ்ந்து உன்னை அடையாத என்னிடத்தில் உன்பால் அன்புண்டென்று சொல்லுவது என்ன விந்தை (ஆச்சரியம்). விச்சை - வித்தை.

---

(அக) வரி 1. பொய்யினுடைய வித்து கெட்டொழியக் கூடா தென்று எண்ணிப் பொய்யனாகிய என்னை இவ்வுலகத்தே இருத்தினாய். வித்து, விச்சு என மருவிற்று. பிச்சைத் தேவா - பிச்சை ஏற்கும் பெருமானே.

பேசப் பட்டேன் நின்னடி யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் அடியானென்
றேசப் பட்டேன் இனிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேனுன் அடியேனே. அஉ

அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண் டிலை
அடியா ரானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார் [கொல்லோ
செடிசேர் உடல மிதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே. அங

காணு மாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என்தன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தா செத்தே போயினேன்
ஏணு ணில்லா நாயினேன் என்கொண்டெழுகேன் எம்மானே.

மானேர்நோக்கி யுடையாள்பங்கா மறையீறறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்

---

(அஉ) வரி 1. உன் அடியார்களில் ஒருவனாகப் பெரியோர்களால் எடுத்து உரைக்கப் பட்டேன். அடியார்களில் ஒருவனாக (அருட் பேற்றிற்கு அறிகுறியாகிய) திருநீறு அணியப் பெற்றேன். பூதலர் - உலக மக்கள். ஏசப்பட்டேன் - இகழப் பட்டேன். இனிப்படுகின்றது அமையாது - இனி நான் இவ்வுலகில் துன்பம் அனுபவித்துக்கொண்டிருப்பது பொருந்தாது. ஆசைப் பட்டேன் - (வீடு அடைய) விரும்புகின்றேன். ஆல் - அசை.

(அங) வரி 1. நான் உன் அடியான் அல்லனோ? நீ தானே வந்து என்னை ஆட்கொள்ளவில்லையா? செடி - பாவம். கடியேன் - கடுமையுடையேன். கண்ணாரக் காணுமாறு காணேன் - கண் குளிரப் பார்க்கும் வழியை அறியேன்.

(அச) கண்டேனும் - காணப்பெற்றும். வரி 2. இகழ்ச்சியாகப் பேசி என்னைத் தள்ளியது என்ன காரணம். பாண் பேசிப் படுதலை யிற் பலிகொள்கை தவிரீர் - **சுந்தரர்.** (பூண்பதோர்). ஏண்-பெருமை. ஏண் நாண் இல்லா. என் கொண்டு எழுகேன் - எதனைத் துணையாகக் கொண்டு மேற் செல்வேன்.

(அடு) மறையீறு அறியா மறையோனே - வேத முடிவும் (உபநிடதங்களும்) அறிய மாட்டாத இரகசியப் பொருளானவனே.

கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே.

புறமே போந்தோம் பொய்யும் யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே.

தாராய் உடையாய் அடியேற் குன்தா ளிணையன்பு
போரா உலகம் புக்கார்அடியார் புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங்(கு)உன்தா ளிணையன்புக்
காராய் அடியேன் அயலே மயல்கொண் டழுகேனே. அஎ

அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே. அஅ

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும் அரிதென்றால்

---

(அரு) கொடுமை பறைந்தேன் - கொடிய வார்த்தைகளைக் கூறினேன்.

(அசு) மெய்யன்பு...பெற்றேன் யான் - மெய்யன்பினை முயன்றால் பெறக்கூடிய யான் அதற்கு மாறுபாடான பொய்யுறவு கொண்டேன். வரி 3. மற்ற சார்புகளெல்லாவற்றையும் ஒழித்து, உன்னையே சார்பாகக் கொண்ட அடியார்கள். சிறவே செய்து - உனக்குச் சிறப்பாகிய தொண்டுகளையே செய்து. வழிவந்து - உன் திருவருள் நெறியிலே சென்று.

(அஎ) போரா உலகம் - மீண்டு வாராத முத்தி உலகம். மிலைக்க-மேய்ந்திட. ஆராய் - தேடுகின்ற. அயலே மயல்கொண்டு அழுகேன் - அடியார்கள் பக்கலில் உன்மீது பேரன்பு கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரியேன். ஏ - அசை.

(அஅ) வரி 2, 3. தீயிடைப்பட்ட மெழுகுபோல் உருகும் மனத்தினராய மெய்யடியார்கள் உன் மின்னொளி பொருந்திய அழகிய திருவடிகளைக் கண்டு தொழுது உன்னைத் தொடரக்கண்டும் அவர்களைப் பின்பற்றித் தொடர்ந்து போகாமல். பழுதே - வீணே.

(அகூ) அணியார் - அழகு நிறைந்த.

திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே. கூ0

---

## ௧0. ஆனந்தாதீதம்

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே. கூக

---

(அகூ) திணி ஆர்·வன்மை பொருந்திய. தணியார் பாதம் - தண்ணளியோடு கூடிய திருவடி. ஒல்லை - விரைவாக. பொய்தீர் மெய்யானே - பொய்ப்பற்றை ஒழிக்கின்ற மெய்ப்பொருளானவனே.

(கூ0) அழுதால் உன்னைப் பெறலாமே - அன்பினால் உளங்கசிந்துருகிக் கண்ணீர் சொரியும் நிலை வந்தால் உன்னை அடையலாம். (வேறு விதமாய் இறைவனை அடைய முடியாது). "உள்ளம் உருகின் உடனாவர்" என்னும் பெரியார் வாக்குடன் ஒப்பிடுக. மானே - மகானே; பெரியோனே. அடியேன் உ(ன்)னை வந்து உறும் ஆறு (கூடும் விதத்தை) அருளாய்.

---

ஆனந்தாதீதம் - பேரின்பமேலீடு.

(கூக) மாறு - மாறுபாடு. தாளிணை வேறு இலாப்பதப் பரிசு - திருவடி இரண்டினையும்விட்டு நீங்காத நிலையாகிய சிறப்பினை. மெய்ம்மை மேவினார் - நிலையான முத்தி இன்பம் பெற்றார்கள். வரி 6. அருளொளி வீசும் மனித வடிவத்தொடு திருக்கண் பார்வை சாத்தியும். கீறிலாத நெஞ்சு - உருகாத கல்நெஞ்சு. பட்ட கீழ்மையே - நான் அடைந்த இழிந்த நிலையை என்னென்பது.

மைஇ லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கைஇ லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினர்
பொய்யி லங்குவெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. கூஉ

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத என்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. கூ௯

(கூஉ) பணி கொண்ட - அடியனுக்கிக் கொண்ட. மழக்கை - இளமை அழகு வாய்ந்த கை. வரி 3, 4. குழந்தை கையிற் பொற் கிண்ணத்தைக் கொடுத்தால் அதன் அருமை தெரியாததுபோல, (நீ எளிவந்து ஆண்டுகொண்டமையால்) உன் அருமையை நான் உணர வில்லை. மெய்ம்மை அன்பர் - மெய்யன்பர், பயன் கருதாத அன்பை யுடைய அடியவர். மெய்ம்மை - என்றும் மாறாத முத்திநிலை. அங்கு எனைப் பொய்யில் புகுதவிட்டு - அவ்விடத்தில் என்னைப் பொய் (நிலையில்லாத இவ்வுலக) வாழ்க்கையில் புகும்படிச் செய்துவிட்டு. வரி 8. போவது பொருத்தமாவதோ (தகுதியோ) சொல்லாய்.

(கூ௯) வரி 1, 2. உன்னருளைப் பெறுதற்குத் தகுதியில்லாத வனும், பொய்யாயினவற்றை மெய்யென்று கருதுபவனுமாகிய என்னை. வா என்று அழைத்து அருட்பார்வை தந்தும். வருத்தம் இன்மையேன் - என் குறைகளைக் கருதி வருந்தாதவனாய நான். அரத்த மேனி - செவ்வரத்தம் பூப்போன்ற சிவந்த மேனி. அருள் செய் - அருள் செய்யப்பெற்ற. அங்கு - முத்தியுலகிற்கு. வம்பன் - துஷ்டன்.

இல்லை நின்கழற் கன்ப(து) என்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. கூச

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. கூரு

---

(கூச) ஏலம் ஏலும் - நறுமணம் பொருந்திய. விச்சை - மாய வித்தை. ஏதுகொண்டு - எதனைக் கருவியாகக்கொண்டு. ஏதுசெய் யினும் - என்ன குற்றம் செய்யினும். மீட்கவும் - மீள ஆட்கொள்ள வும். மறுஇல் வானனே - குற்றமில்லாத சிதாகாயத்திலுள்ளவனே.

(கூரு) அறிய ஒண்ணாத நீ - அறியக்கூடாதவன் நீயே. மறை யில் ஈறு - வேதமுடிவு; உபநிடதங்கள். வரி 4. இனிய கருணை யோடு என்னை ஆண்டு கொண்டவனே! வரி 5. ஆன்மாக் களுக்கு ஊனுடல் ஆகிய சரீரத்தைக் கொடுத்து உலகமாகிய நாடக சாலையில் நடிக்கும்படிச் செய்தவனே! வரி 6. என் உள்ளத்தை உருகும்படிச்செய்து, உன்னோடு கலந்து ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்தவனே. வரி 7, 8. உலக போகத்தில் இச்சை நையும்படி ஞானக் கூத்தாடும்படிச் செய்தவனே!

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொ(ல்)லார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. ௬௬

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி என்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே. ௬௭

அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே. ௬௮

---

(௬௬) விச்சு அது இன்றியே - வித்து இல்லாமலே. வைச்சு வாங்குவாய் - காத்து ஒடுக்குவாய். பிச்சன் - பித்தன். நச்சு மா மரம் - விஷத்தன்மை பொருந்திய பெரிய மரம். உடைய நாதன் - (யாவரையும் அடிமைகளாக) உடைய தலைவன்.

(௬௭) பணி - சொல்லு.

(௬௮) அகம்நெக - மனம் உருகும்படி. அள்ளூறு - மிகுதியாகச் சுரக்கின்ற. பருக நின்றதோர் துப்பனே - அனுபவிக்கும்படி செய்த சாமர்த்திய முடையவனே. எய்ப்பினில் வைப்பன் - இளைத்த

மன்ன எம்பிரான் வருக என்னெனைப்
மாலும் நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண்அன் பாயென் நாவினாற்
பன்ன எம்பிரான் வருக என்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. கூகூ

பாட வேண்டு(ம்)நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டு(ம்)நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டு(ம்)நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டு(ம்)நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. கOO

திருச்சிற்றம்பலம்

---

காலத்து உதவும் வைப்பு நிதி! போன்றவனே. எங்கள் மன்னனே! வையகத்து நைய எனை வைப்பதோ (வைப்பது நீதியோ) சொல்லாய் - **உரைநடை.**

(கூகூ) வருக என் எனை - என்னை வருக என்று அழைத்துக் கொள். முன்ன - முற்பட்டவனே. பின்ன - பிற்பட்டவனே. பன்ன - துதிக்க. "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே"— **திருவெம்பாவை.**

(கOO) பாடி நைந்துநைந்து நெக்குநெக்கு உருகி நான் ஆட வேண்டும் - உன்னைப் பாடி என் பாசக் கட்டுகள் அறுபட்டு, மனம் இளகி இளகி உருகி ஆனந்தக் கூத்தாடவேண்டும். புழுக் கூடு - புழுக்கள் நிறைந்துள்ள உடல். வீட - தொலைக்க. நின்மெய்யர் மெய்யனே - உன் மெய்யடியவர்கட்கு உண்மையானவனே.

உத்தரகோசமங்கையில் அருளிய

# நீத்தல் விண்ணப்பம்

## பிரபஞ்ச வைராக்கியம்

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன் னும் உத்தர கோசமங் கைக்கரசே [ளே.
சடையவ னே தளர்ந் தேன்எம்பி ரான்என்னைத் தாங்கிக்கொள்

கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர் கொவ் வைச் செவ்வாய், விள்ளேன் எனினும் விடுதிகண் டாய்நின் விழுத்தொழும்பின், உள்ளேன் புறமல்லேன் உத்தர கோச மங் கைக்கரசே, கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்ட தெக் காரணமே. உ

---

நீத்தல் விண்ணப்பம் - உலகப்பற்றுவிட இறைவனை வேண்டுதல். அல்லது " என்னைக் கைவிடாதே " என்று இறைவனை வேண்டுதல்.

(க) கலந்து - அத்துவிதமாய்க் கூடி. விட்டிடுதி கண்டாய் - விட்டிடுவையோ? கைவிடாதே. இனி வரும் செய்யுள்களிலும் விடுதி அல்லது விட்டிடுதி என்பதற்குக் கைவிடாதே என்றுவது செய்யுள் முதலில் குறிக்கப்பட்ட தீமைகளினின்றும் என்னை நீக்கி யருள்க என்றுவது கொள்ளலாம். கண்டாய் - அசை. தாங்கிக் கொள் - காப்பாற்று.

(உ) கொள் ஏர் - ஏர் கொள், அழகு வாய்ந்த. வரி 1. பிளவுபட்டு அகலாத (மிகநெருங்கிய) அழகிய பருத்த கொங்கைகளையும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயையுமுடைய மாதர்களைவிட்டு நீங்காதவனானாலும். விழுத்தொழும்பு - மேலான தொண்டு செய் யும் அடியவர். வரி 4. வஞ்சகனான நான் உன்னை விட்டு நீங்கிப் போகவும் என்னைத் தேடிக்கொண்டு வந்து ஆண்டுகொண்டது எக் காரணம் பற்றியோ? உன் பெருங்கருணையன்றி வேறல்ல.

காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே. ௩

வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும் நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண் டாய்வெண் மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீள்முடி உத்தர கோசமங் கைக்கரசே [டரே
தெளிகின்ற பொன்னும்மின்னும்அன்ன தோற்றச் செழுஞ்சு

செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே. ௫

மறுத்தனன் யானுன் அருளறி யாமையில் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்தொகுதி

---

(௩) கருநிறம் பொருந்திய கண்களையுடைய மாதர் மூலமாக நுகரப்படும் ஐம்புல இன்பமாகிய ஆற்றின் கரையிலே வளர்கின்ற மரமாய். வேருறுவேனை - வேர் ஊன்றுகின்ற என்னை. ஐம்புலன் - ஐம்புலன்களால் நுகரப்படும் இன்பம். “கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணேயுள”— திருக்குறள். ஆற்றங்கரை மரம் வெள்ளம் வரும்போது வீழ்ந்து அழிதல் போல் ஐம்புல இன்பங்களில் தோய்ந்தவர்கள் அழிவார்கள்.

(௪) வரி 1. நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு போகிற உன் திருக்கருணையாகிய கையினால் என்னைப் பிடித்து இழுக்கவும், உன் பிடியினின்று நீங்கி இவ்வுலக போகத்தில் உழலுகின்ற. மதிக்கொழுந்து - இளம்பிறை. பொன் திருமேனிக்கும், மின் சடைக்கும் உவமையாயின.

(௫) செழிகின்ற - செழித்து ஓங்குகின்ற. விட்டிலில் - விட்டிற் பூச்சி போன்று. சில்மொழியாரிற் பன்னாள் விழுகின்ற - அற்ப மொழி பேசும் இளமங்கையர்பால் பல நாளும் விருப்பம் வைக்கின்ற. வெறிவாய் - தேன் தங்கிய வாயினையுடைய. அறுகால் - வண்டு. வரி 4. நின் திருவருளாகிய அமுதத்தை உண்பிக்கவும், நின் அருள்வழிச் செல்லாமல், எதிர் நின்று மறுத்துவிட்டேன்.

(௬) வரி 2. என்மாணிக்கமே! நான் என் அறியாமையினால், நீ உன் திருவருளை (உண்பிக்கவும்)வேண்டாமென்று மறுத்துவிட்டேன்.

ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்ப ரன்றேபெரி யோர்சிறு நாய்கள் தம் பொய்யினையே.

பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று பொத்திக்கொ
மெய்யவனே விட்டிடுதி கண்டாய் விடமுண் மிடற்று [ண்ட
மையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப்பவனே. எ

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரருள் என்கொலென்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண் டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை யேனை இருதலையே. அ

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூஇலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே. கூ

---

(சு) ஒறுத்து - கடிந்து ஒதுக்கி.

(எ) ஒன்று பொத்திக்கொண்ட - முத்தியாகிய ஒன்றினை மறைத்துக்கொண்ட. விடம் உண் மிடற்று மையவனே - விடத்தை உண்ட கண்டத்தில் கருநிறம் பொருந்தியவனே. பவம் தீர்ப்பவனே-பிறவியை ஒழிப்பவனே.

(அ) என்பிழையை நின் சீரருள் தீர்க்கின்றவாறு என்கொல் - என் குற்றங்களை உன் சிறப்பாகிய திருவருள் தீர்க்கின்ற விதம் எப்பொழுது ? வேர்க்கின்ற-மனம் புழுங்குகின்ற; கவலைப் படுகின்ற. விரவார் - பகைவர். தார்விடை - கிண்கிணிமாலை கட்டிய இடபத்தை வாகனமாக உடைய. வரி 4. ஐம்புல ஆசை ஒருபக்கமும் பயம் ஒரு பக்கமும் தீவினையேனை இருபுறமும் இழுத்துத் துன்பம் விளைவிக்கின்றன.

(கூ) விரிதலையேன் - தலைவிரித்து அலங்கோலமுடையேன். பொருது அலை - பகைவரோடு போர் செய்து துன்புறுத்துகின்ற.

பொலிகின்ற நின் தாள் புகுதப்பெற் ருக்கையைப் போக்கப்
மெலிகின்ற என்னை விடுதிகண் டாய்அளி தேர்விளரி [பெற்று
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புரம் மாறுபட்டே. கo

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறும்மட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே.

நெடுந்தகை நீயென்னை ஆட்கொள்ள யான்ஐம்புலன் கள்கொ
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ [ண்டு
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேன்உண் ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே

கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேஅமு தேயென் மதுவெள்ளமே.

---

(கo) வரி 1. விளங்குகின்ற உன் திருவடிகளில் சரண் புகுந்து, உடல் நாளுக்குநாள் வற்றி மெலிந்திருக்கின்ற. அளிதேர் விளரி-வண்டுகள் தேர்ந்து பாடுகின்ற விளரிப் பண்ணின்.மாறுபட்டு - பகைத்து.

(கக) மாறுபட்டு அஞ்சு - ஐம்புலன்களும் என்வழி நில்லாமல் பகைத்து. வேறு பட்டேனை - நீங்கின என்னை. மட்டு - தேன்.

(கஉ) நெடுந்தகை - பெருந்தன்மையன். ஐம்புலன்கள் கொண்டு விடுந் தகையேன் - ஐம்புலன்கள் செலுத்தும் வழியை மேற்கொண்டு உன் திருவருளை விடுந் தன்மையனுயினும். அடுந்தகை வேல்வல்ல - கொல்லும் தன்மையுடைய மூவிலை வேலைச் செலுத்தவல்ல. கடும் தகையேன் - கொடிய தன்மையுடையேன்.

(கங) உள்ளம் விடலரியேனை - மனதைச் செலுத்தி நன்ருகப் பருகமாட்டாத என்னை. விடல்இல் அடியார் உடல் இ(ல்)லமே மன்னும் - உன்னை விடுதல் இல்லாது பற்றும் அடியார்களுடைய சரீரமே கோயிலாகக் கொண்டு நிலைபெற்றிருக்கும். மடலின் மட்டே - பூ இதழ்களின் நின்று ஒழுகும் தேனே.

வெள்ளத்துள் நாவற் றியாங்குன் அருள்பெற்றுத் துன்பத்தினி
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும் பும்அடியார் [ன்றும்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே. கச

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங் கைக்கரசே
எளிவந்த எந்தைபிரான் என்னை ஆளுடை என்னப்பனே.

என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாய்எனக் கத்தனொப் பாய்என் அரும்பொருளே.

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழ்இகழ்வார்
வெருளே எனைவிட் டிடுதிகண்டாய் மெய்ம்மையார் விழுங்கும்
அருளே அணிபொழில் உத்தர கோசமங் கைக்கரசே
இருளே வெளியே இகபர மாகி யிருந்தவனே. கள

---

(கச) வரி 1. வெள்ளத்தின் நடுவே இருந்தும் நீர் பருகாது தாகத்தினால் நா உலர்ந்து போனாற்போல, உன் அருள்வெள்ளத்தைப் பெற்றும். விள்ளக்கிலேனை - நீங்க ஆற்றல் இல்லாதவனை. வரி 4. வஞ்சகம் பொருந்திய மனதை உடைய எனக்கு இதுவரையில் நான் அடையப்பெறாத பேரின்பத்தை அருள வேண்டும்.

(கரு) வரி 1. உன் திருவடிகளைக் காணப்பெற்றும், நீ என்னுடன் கலந்து அருள் செய்வதற்கு, மகிழ்ச்சி மிக்க மனத்தோடு. வெளிவந்திலேனை - அருள் வெளியில் வராத என்னை.

(கசு) உவமிக்கின்......ஒப்பாய் - உனக்கு உவமை சொல்லப் புகுந்தால், உண்மையாகவே உனக்குச் சமானமானவர் எவருமின்மையால், உனக்கு உன்னைத்தான் ஒப்புமை சொல்ல வேண்டும்.

(கள) பொருளே - மெய்ப்பொருளே ; என்றும் நிலைத்த பொருளே. வெருளே - அஞ்சும்படிச் செய்பவனே. மெய்ம்மையார் விழுங்கும் அருளே - மெய்யடியார்கள் ஆர அனுபவிக்கும் அருளமுதமே. இகபரம் - இம்மை மறுமை.

இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை யென்னின
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க நஞ்சமுதா [ல்லால்
அருந்தின னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே. ௧௮

மடங்கஎன் வல்வினைக்காட்டைநின் மன்னருள் தீக்கொளுவும்
விடங்கஎன் தன்னை விடுதிகண் டாய்என் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே.

கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேஅனல் காலொடப் பானவனே. ௨௦

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை யும்அமு தத்தையும்ஒத்(து)
ஊனையும் என்பினை யும்உருக் காநின்ற ஒண்மையனே. ௨௧

---

(௧௮) விருந்தினனேனை - புதிதாய் அடியவனான என்னை. மருந்தினனே பிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கு - பிறவிப் பிணியினால் உண்டாகும் உடல் கைகால்கள் முடக்கத்தைத் தீர்க்கும் மருந்துபோல்பவனே. கருவில் இருக்கும் காலத்தில் முடங்கிக் கிடக்கும் நிலையைக் குறிக்கின்றார். "யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன்" - பெரிய புராணம். (தேனும் குழலும்).

(௧௯) மடங்க - அழிய. நின்மன் அருள்தீ - நிலைபெற்ற உன் திருவருளாகிய தீயினால். கொளுவும் - கொளுத்துகின்ற. விடங்க - அழகனே. வஞ்சிக்கொம்பினையே - வஞ்சிக்கொடி போன்ற உமாதேவியாரை.

(௨௦) கொம்பர் - கொழு கொம்பு. அலமந்தனன் - துன்புற்றேன். கோமளமே - (என்றும் மாறாத) இளமை யழகு வாய்ந்தவனே. வெம்புதல் - தவித்தல். உம்பர் - மேலிடம் ; சிவலோகம். அம்பரம் - ஆகாயம். அப்பு - நீர்.

(௨௧) குறுந்தூறு-சிறு புதர். ஒண்மையனே-ஒளி வண்ணனே.

ஒண்மைய னேதிரு நீற்றையுத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென் றுஞ் சேயாய் பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மையனேதொன்மை ஆண்மையனே அலிப்பெற்றியனே.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்தன்னைத் தாங்குநர் இல்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேனெனக் குள்ளவனே. உ௩

உள்ளன வேநிற்க இல்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட் போதலொட்டா
மெள்ளெனவேமொய்க்கும்நெய்க்குடந் தன்னைஎறும்பெனவே.

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவர் உம்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே. உரு

---

(உஉ) உத்தூளித்து - நீர் கலவாது பூசி. பெற்றி - தன்மை.

(உ௩) பெற்றது - பெற்ற உடம்பு. சுருக்கும் - சுருங்கிய. வெற்றடியேன் - பயனற்ற அடியவன். உற்று - உன்னை அடைந்து. தேறி - துன்பந்தீர்ந்து. உள்ளவன் - உள்ளத்தில் இருப்பவன்; உயிர்க்குயிராயிருப்பவன்.

(உச) உள்ளனவே - உண்மையான (உயிர்க்குறுதி பயக்கும்) காரியங்கள். இல்லன - பொய்பாயின; நிலையில்லாதன. மையல் - மயக்க உணர்வு. மையல் துழனி வெள்ளன் - மயக்க உணர்வாகிய ஒலிமிகக வெள்ளத்தில் மூழ்கியிருப்பவன். அலேன் - அல்லேன்; கொடியேன். வியன்மாத்தடக்கைப் பொள்ளல் நல்வேழம் - அகன்ற பெரிய நீண்ட துதிக்கையில் தொளையினையுடைய சிறந்த யானை. நெய்க் குடத்தில் வீழ்ந்த எறும்பு வெளிவாராதபடி அதில் வீழ்ந்து இறப்பதுபோல், ஐம்புல ஆசை என்னை அதிலே மூழ்கச் செய்து உன்னை அடைய வொட்டாமல் தடுக்கின்றது.

(உரு) நாங்கூழ் - நாகப்பூச்சி. அலந்த - துன்புற்ற. வெறும் - பயனற்ற. வரி 3, 4. கொடிய யமன் அடங்கும்படி அவன்மீதுபட்ட

பெருநீ ரறச்சிறு மீன்துவண் டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே. உசு

கொழுமணியேர்நகை யார்கொங்கைக்குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே.

புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கோர்பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்டாய் விண்ணும் மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை யாயென் தொழுகுலமே.

---

(அவனை உதைத்த) வாசனை மலர் போன்றதும் மேலான தேவர்களாகிய திருமாலும் அயனும் உணரமுயன்று பிறகு (வணங்கிப்) பெற்றதுமான திருவடிப் பேற்றையே தன் அடியார்கள் நிலைபெற்று நீங்காதபடிக் கொடுத்த பெருமையுடையவனே.

(உசு) அற - வற்ற. துவண்டாங்கு - வாடினாற்போல. வெருநீர்மை - அஞ்சுந் தன்மை (வெருவும் நீர்மை). மலை - அசைந்துகொண்டிருக்கும். வெள்ளைக் குருநீர் - வெண்மைநிறம் பொருந்திய. கொழுமணியே - வளமான மாணிக்கமே. சிவபெருமான் சடையில் கங்காநதி பொங்கி வந்த மடுவில் பிறைச்சந்திரன் தோணிபோன்று அசைந்துகொண்டிருக்கின்றது.

(உஎ) கொழுமணி ஏர் நகையார் - வளமான முத்து போன்ற அழகிய பற்களையுடைய மாதர்கள். கம்பித்து அழும் - நடுங்கி ஆனந்தக் கண்ணீர் சொரியும். ஆர்த்து வைத்து - பொருந்தச் செய்து. கழுமணி - அழுக்கைக் கழுவும் (தூய்மைப்படுத்தும்) மாணிக்கம். புலன் கழல் - அறிவு மயமான திருவடி.

(உஅ) விலங்குகின்றேனை - (மெய்ந்நெறியைவிட்டு) விலகிச் செல்லுகின்றேனை. முந்நீர் - கடல். கருணாகரன் - கருணைக்கு இருப்பிடமானவன். துலங்குகின்றேன் - துளங்குகின்றேன்; கலங்குகின்றேன். குலம் - இனத்தைச் சேர்ந்தவன்.

குலங்களைந் தாய்களைந் தாய் என்னைக் குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கலெந் தாய் விட்டிடுதிகண்டாய் பொன்னின் மின்னுகொன்
அலங்கலந் தாமரை மேனியப் பாவொப் பிலாதவனே [றை
மலங்களைந் தாற்சுழல் வன்தயி ரிற்பொரு மத்துறவே. உகூ

மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாரச்செஞ் சாந்தணி சச்சையனே. ௩௦

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் படஅரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள அடற்கரியே. ௩க

---

(உகூ) குலம் களைந்தாய்-குலப்பற்றை ஒழித்தவனே. என்னைக் குற்றம் களைந்தாய் - என்னுடைய குற்றங்களைப் போக்கினவனே. கொற்றச் சிலையாம் விலங்கல் எந்தாய் - மேருமலையை வெற்றி பொருந்திய வில்லாகவுடைய எந்தையே! மலங்கள் ஐந்து - ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதாயி.

(௩௦) வரி 1. குளிர்ந்த தயிர் மத்தினாற் கடையும்போது உடைவதுபோல், புலன்களாகிய தீப்பற்ற அதனாற் கலங்கி. கதுவ - பற்ற. வித்துருவேனை - வித்தின் தன்மையுடையேனை ; வேரூன்றும் தன்மையுடையேனை. மிலைச்சி - அணிந்து. கொத்துறு போது மிலைந்து - கொத்தாயுள்ள கொன்றைப்பூவைச் சூடி. குடர் நெடு மாலை சுற்றி - நீண்ட குடர் மாலை அணிந்து. தத்துறு நீறு - பல விடங்களில் அணியப்பட்ட திருநீறு. செம்சாந்து அணி - சிவந்த சந்தனக் கலவை பூசின. சச்சையன் - இளமையாயுள்ளவன், அல்லது சத்து ஐயன், மெய்ப்பொருளாயுள்ளவன்.

(௩க) விச்சை - வித்தை ; வியக்கத்தக்க செயல். வெளியாய், கரியாய் பச்சையனே செய்ய மேனியனே - என்பதை “கண்டம் கரியான், செம்மேனியான் வெண்ணீற்றான்” என்னும் திருவாசகத்தோடு ஒப்பிடுக. பச்சை - அம்மையின் நிறம். கடந்தாய் - வென்றவனே. தடம் தாள அடல்கரி - அகன்ற அடியையுடைய வலிய யானை.

அடற்கரி போலைம் புலன்களுக் கஞ்சி அழிந்தஎன்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்குங் கறைக்கண்டனே. ௩௨

கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை யாய குதிகுதிப்பே.

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து நின்குறிப்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை யார்ந்தினிய [பில்
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின் மனங்கனி
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப் பரம்பரனே. [வித்

பரம்பர னேநின் பழஅடி யாரொடும் என்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையின்

---

(௩௨) அடல்கரி - வலிமிக்க யானை. அழிந்த - மனம் தளர்ந்த. விடற்கு அரியாய் - பற்றி விடக்கூடாத அருமையுடையவனே. விழு - மேன்மை. தொடற்கு அரியாய் - பற்றுதற்கு அரியவனே. சுடு தீச் சுழல - வடவைத் தீயும் நிலை கலங்கும்படி. கடல் கரிதாய் எழு - கடலின்கண் கருநிறத்துடன் எழுந்த.

(௩௩) கண்டது செய்து - மனம் போனபடி எல்லாம் செய்து. கருணை மட்டுப் பருகிக் களித்து - உன் கருணையைச் சிறிதளவு குடித்து மகிழ்ந்து. மிண்டுகின்றேனை - மதங்கொண்டு திரிகின்ற என்னை. பணித்து - பணிவித்து. கூவித்து - அழைத்து. கொண்டு - ஆட்கொண்டு. களையாய குதுகுதுப்பே களையாய் - குற்றமாயுள்ள (துன்பத்திற்குக் காரணமாயுள்ள) உலகபோக நுகர்ச்சி விருப்பத்தைப் போக்குவாயாக. குதுகுதுப்பு - ஆசைப்படுதல்; மகிழ்ச்சி. சிவ போகத்திற்குக் களையாயிருப்பது ஐம்புல இன்ப விருப்பம். இந்த களையைப் பிடுங்காவிட்டால் சிவபோகம் (பேரின்பம்) விளையாது.

(௩௪) வரி 1, 2. உன்னிடத்து அன்பில்லாமல், என் மனம் போனபடி காரியங்களைச் செய்து உன் (திருவருள்) வழியிற் செல்ல விரைகின்றேனை. மதுமது - தேனொழுக்கு. எதிர்வது - எதிர்ப்படுவது. பயில்வி - மனம் கனியும்படி என்னைப் பழக்குவாயாக.

(௩௫) என்படிறு - படிறுஎன், வஞ்சகனாகிய என்னை. விரும்பு அரனே. முயற் கறையின் அரும்பு அர நேர்வைத்து அணிந்தாய் -

அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவி ஐவாயரவம் [வே.
பொரும்பெ ருமான்வினை யேன்மனம் அஞ்சிப் பொதும்புற

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தேன் அவிர்சடை வானத் தடலரைசே.

அரைசே அறியாச் சிறியேன் பிழைக்கஞ்ச லென்னின் அல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண் நகைக்கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந் தடர்வனவே.

அடர்புல னால்நிற் பிரிந்தஞ்சி அஞ்சொல்நல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந் தேயெரியுஞ்

---

முயல்போலும் களங்கத்தையுடைய இளம்பிறையையும் பாம்பையும் சிநேகம் உண்டாகும்படி தலைமீது அணிந்தவனே. "பாம்பொடு திங்கள் பகைதீர்த்து ஆண்டாய்"—**அப்பர்.** (அங்கமே). அர - அரவு. நேர்தல்-பகையின்றி இருக்கச் செய்தல். வரி 3, 4. பெருமானே! தீவினையேன் மனம் நடுங்கிப் பொந்தினை (புகலிடத்தை) அடையும்படி, பிறவிக்கு ஏதுவாகிய ஐம்புல நுகர்ச்சியாகிய ஐந்து வாயையுடைய பாம்பானது என்னுடன் சண்டையிடுகின்றது. பரம்பரனே...விட்டிடுதி கண்டாய் என்று முடிக்க.

(நுசு) வரி 1. மரப்பொந்தில் வைக்கப்பட்ட நெருப்பானது முதலில் புகைந்து பிறகு கொழுந்துவிட்டு எரிந்து மரத்தை அழிப்பதுபோல் ஐம்புல ஆசையாகிய தீ ஐம்பொறிகளாய வாயில்களின் வழிச்சென்று பற்றி என்னை எரிக்க அதனால் துயரப்படுவேனை. நறவம் - தேன். ததும்பும் மந்தாரம் - நிறைந்துள்ள மந்தாரமலர். தாரம் பயின்று மந்தம் முரல்வண்டு - வல்லோசை பழகிப்பின் மெல்லோசையை ஒலிக்கின்ற. அதும்பும் - அழுந்தும். அவிர் - ஒளிவீசுகின்ற.

(நுஎ) அஞ்சல் என்னின் அல்லால்(உய்யேன்). வரி 3, 4, அலைகள் வீசும்படியான கங்கா தேவியை மணந்த பொன்னிறமுடைய திருவடிகளையுடைய பாம்பணிந்த பெருமானே, மலைகள் ஒன்று சேர்ந்து நெருக்கினாற்போல கொடிய வினைகள் வந்து தாக்குகின்றன.

(நுஅ) அவர்தம் விடர் விடலேனை - அவர்கள் கூட்டமாகிய காட்டை விட்டு நீங்கமாட்டாமல் இருக்கும் என்னை. அல்லது விடர்-

சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி நீக்குந் தனித்துணையே.

தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய [பே
மனத்துணையே என்தன் வாழ்முதலே எனக்கெய்ப்பில் வைப்
தினைத்துணை யேனும் பொறேன்துய ராக்கையின் திண்வலையே.

வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண வாளஎன் வாழ்முதலே. சo

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ னேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காஎன் சிவகதியே. சக

---

காடு. தொடர்வு அரியாய் - (அன்பரல்லாத பிறரால்) தொடர்ந்து பற்ற முடியாதவனே!

(௩௯) தனித் துணை - ஒப்பற்ற துணைவன். தருக்கி - செருக்குற்று. வினைத்துணையேன் - உன்னைத் துணையாகக் கொள்ளாமல் வினைகளைத் துணையாகக் கொண்ட என்னை. வரி 4. மிக்க துன்பத்தைச் செய்யும் உடம்பாகிய வலிய வலையிற் சிக்குண்டு கிடப்பதை தினை (மிகச்சிறிய) அளவுகூடப் பொறுக்கமாட்டேன்.

(சo) வரி 1. வலையில் அகப்பட்ட மானின் பார்வையைப் போன்ற மருண்ட பார்வையையுடைய மகளிரது கண்வலையில் அகப்பட்டு. மிலைத்து - சூடி, (அவர்வழியை மேற்கொண்டு).

(சக) வரி 1. ஆசையாகிய சுடுநீரில் சிவந்தவாயையுடைய மாதரென்னும் முதலைகள் கடிக்கும்படியாக மூழ்கி (தோய்ந்து), துன்பப்படுவேனை. விடக்கூன்......பொறேன் - புலால் நாற்றம் வீசும் மாமிசத்தாலாகிய நோய்க்கிடமாகிய உடலைப் பொறுத்து (தாங்கி) இருக்கமாட்டேன். விதலை - துன்பம். விடக்கு - மாமிசம். சிதலை - நோய். திதலை - தேமல்.

கதியடி யேற்குன் கழல்தந் தருளவும் ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் தலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்கஅஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே. சஉ

மன்னவ னேயொன் றுமாறறி யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னும் ஆனவ னேயிம் முழுதையுமே. சஙு

முழுதயில் வேற்கண் ணியரென்னும் மூரித் தழல்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுது செல்வான்நற் றொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாய்உன்னைப் பாடுவனே.

---

(சஉ) வரி 1. உன் திருவடிகளை எனக்குப் புகலிடமாகத் தந்து அருள் புரியவும். வரி 3. 4. வெண்தலையாகிய குகையினை இருப்பிடமாகவுடைய ஒளிபொருந்திய பாம்பு இறைவனைப் பார்த்துப் பயந்து படத்தைச் சுருக்கிக் கொள்ள அதைப் பார்த்துச் சந்திரன் பயந்து கங்கா நதியில் மூழ்கி ஒளிக்கும் சடையையுடைய அரசனே. பைத்து - படமெடுத்து.

(சஙு) ஒன்றுமாறு - (தற்போதமற்றுக்) கலந்து நிற்கும் விதம், அல்லது (ஒன்றும்+மாறு) ஒரு வித கைம்மாறும். மகிழ்ச்சி மின்னவன் - களிப்பைத் தரும் ஒளி வடிவினன். கழிந்தவன் - கடந்து நின்றவன். கழியாத்.........முழுதையுமே - உன்னைப் பற்றி விடாத அடியவர் முன்னின்று அவரைக் காப்பவனே, பின்னும் இப்படைப்பு முழுதும் ஆனவனே.

(சச) அயில் (கூரிய) வேற் கண்ணியர் என்னும் மூரித் (வலிய) தழல் முழுது(ம்) முழுகும் விழுது (வெண்ணெய்) அனையேனை - மாதர் குணங்களில் ஈடுபட்டு அவர்களுக்காக உருகும் தன்மையுடையேனை. வரி 3. உன் வாசனை மிக்க மலர்போன்ற திருவடிகளைத் தொழுது முத்திக்குச் செல்லும் பொருட்டு நல்ல தொண்டரொடு (மெய்யடியாருடன்) என்னைச் சேர்த்து விடு. சோத்து - வணக்கம், வணங்குகின்றேன். சோத்தம் - இழிந்தோர் செய்யும் அஞ்சலி. பழுது - குற்றம்.

பாடிற்றி லேன்பணி யேன்மணி நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தான்எவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேன்நின் றுழைத்தனனே.

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத் தீயினைப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென் றறைவன் பழிப்பினையே.

பழிப்பில்நின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே. சஎ

---

(சடு) மணிநீ ஒளித்தாய்க்கு - மாணிக்கமே ! எனக்கு ஒளித்துக் கொண்ட உன்பொருட்டு. பச்சூன் வீடிற்றிலேனை - பசிய ஊனு லாய உடம்பைத் தொலைத்திடாத என்னை. உழைத்தனன் - வருந் தினேன்.

(சசு) உழைதரு - மான்போலும். வரி 1. பலாப்பழத்தை மொய்க்கும் ஈயைப்போல், மான்போலும் பார்வையுடைய மாத ருடைய கொங்கையின்கண் ஆசைப்படுவேனை. மழை தருகண்டன் - மேகம் போலும் கரிய கண்டத்தை யுடையவன். குணமிலி - குண மில்லாதவன் (குணத்தைக் கடந்தவன்). மானிடன் - மனிதன் (மானை இடக்கையில் ஏந்தியவன்). தேய்மதியன் - குறைந்த அறி வினை உடையவன் (தேய்ந்த பிறைச் சந்திரனைத் தரித்தவன்). பழைதரு மாபரன் - பழைய பெரிய ஆண்டி (பழமையான பெரிய மேலோன்). பழிப்பினை அறைவன் - உன் இகழ்ச்சியைப் பிறர் அறி யக் கூறுவேன்—**நிந்தாஸ்துதி**. குணமிலி முதலிய சொற்களுக்கு இருபொருள் படக் கூறியிருத்தல் காண்க.

(சஎ) வரி 1. இகழ்ச்சிக்கு இடமில்லாத பழமையான உன் திருவடித்தொண்டில் ஈடுபட்டு, பிறகு அந்தத் தொண்டினின்றும் வழுவி உன்னை இகழ்ந்து, செய்வதறியாது விழித்துக்கொண்டிருந்த என்னை. வெண் மணி - முத்து. பணிலம் - சங்கு. கொழித்து - ஒதுக்கி. மந்தாகினி - ஆகாய கங்கை. நுந்தும்.........தாரவனே - தள்ளிக்கொண்டு வரும் அழகும் பெருமையும் வாய்ந்த கங்கா நதியா கிய தடைப்பட்டநீரில் பிறைச்சந்திரனாகிய மரக்கலம் மிதந்துகொண் டிருக்கும் சிரத்தினை உடைய வெற்றி மாலையை அணிந்தவனே.

தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்
வீரஎன் தன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார்
ஆரடி யானென்னின் உத்தர கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே. சஅ

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப்பிச்சன் நஞ்சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன்என்னையும் ஆளுடைப் பிச்சனென்றேசுவனே.

ஏசினும் யானுன்னை யேத்தினும் என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை ஆளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு துண்ணக் கடையவனே. ருO

திருச்சிற்றம்பலம்

---

(சஅ) தாரகை - நட்சத்திரம். தழல் அரப்பூண் - நெருப்பைப் போலும் விடத்தையுடைய பாம்பைப் பூண்ட. மிக்கார் என்னை யார் அடியான் என்னின் - பெரியோர் என்னை யாருடைய அடியானென்று வினவினால். வரி 4. சிறப்பான அடியார்களின் அடியவன் நான் என்றுசொல்லி அவர்கள் உன்னை நகையாடும்படிச் செய்வேன். அடியவனைக் கைவிடுதல் பழிப்பிற்கு இடமென்பது கருத்து.

(சகூ) வரி 1. வெறுக்கத்தக்க என் வாழ்க்கையைப் பெரியோர் நகையாடும்படி செய்வேன். என்னுடைய தொண்டும் ஈசனுக்கே என்று எல்லோரும் அறியும்படி பரவச்செய்வேன். பிச்சன் - பித்தன். தோல் உடைப் பிச்சன் - புலித்தோலை ஆடையாக உடைய பித்தன். ஊர்ச்சுடுகாட் டெரிப்பிச்சன் - ஊர்க்குப் பொதுவான சுடுகாட்டு நெருப்பில் ஆடும் பித்தன். ஏசுவன் - வைவேன்.

(ருO) வேசறுவேன் - துக்கப்படுவேன். காய் சினம் - சுடுகின்ற கோபம். வரி 4. கடையவனுகிய நான் அமுது உண்ண (பேரானந்தம் அனுபவிக்க) என்போன்ற சிறிய உயிர்க்கு இரங்கி, கோபம் முதலிய விஷத்தன்மைகளைப் போக்கி என்னை ஆண்டுகொண்டாய்.

திருவண்ணாமலையில் அருளிய

# திருவெம்பாவை

## சத்தியை வியந்தது

### வெண்டளையால்வந்த
### இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். க

---

இப்பதிகம் திருவண்ணாமலையில் மார்கழி மாதத்தில் விடியற் காலையில் குளத்தில் முழுகச் செல்லும் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்புவதாகவும், ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதாகவும் பாடப்பெற்றுள்ளது.

(க) வாள்தடங்கண்-ஒளி பொருந்திய பெரிய கண்களையுடைய. வளருதியோ - தூங்குகின்றாயோ? வன்செவியோ - கேளாத செவியோ? வரி 5, 8. - வீதியினிடத்துக் கேட்டவுடன் (ஒருத்தி) அழுது அழுது தன்னை மறந்து பூக்கள் நிறைந்த படுக்கை மேலிருந்து கீழே விழுந்து புரண்டு ஒன்றிற்கும் ஆகாதவள்போல் (மூர்ச்சித்துக்) கிடந்தாள். இது என்ன அதிசயம். அவள் செயல் அவ்வாறு இருக்க, எம்முடைய தோழியே, இது தானோ (எழாமல் இருப்பது) உன் தன்மை. ஏல் - சொல்வதை ஏற்றுக்கொள். ஓர் - (அதன் பொருளை) ஆராய்ந்துபார். எம்பாவாய் - எம் பதுமைபோன்ற பெண்ணே. இந்தப் பாட்டு பல பெண்கள்கூடி ஒருத்தியை எழுப்ப வந்தபோது கூறிய பாட்டாக அமைந்துள்ளது.

"பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்" "நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ" "விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்." உ

"முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்"
"பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ"
"எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்." ௩

---

(உ) வரி 1, 2. மேலான ஒளி வடிவமான பெருமானிடத்து வைத்த பாசத்தால் (பேரன்பினால்) எலும்பு வடிவம் ஆகும்படி. பேசும்போது எப்போது - துதிக்கின்ற காலம் எக்காலம். வரி 3, 4. "திருத்தமான ஆபரணங்கள் அணிந்த பெண்ணே! இந்த மலர்கள் நிறைந்த படுக்கைமீது விருப்பம் வைத்தாய் போலும்" (என்று எழுப்பும் பெண்கள் கூற, துயில் நீங்காத மாது கூறுவாள்) "பெண்களே, சீ, சீ, நீங்கள் கூறும் வசைமொழிகளுள் இம்மொழிகள் சில ஆகும் போலும்." ஏத்துதற்குக் கூசும் - துதித்தாலும் அவர் காணமுடியாதபடி ஒளிக்கும். தேசன் - ஒளி வடிவினன். தேஜோமயன். அன்பு ஆர் - அன்பு எத்தன்மையது? யாம்ஆர் - நாம் யார் (அடிமைகளல்லவா?

(௩) நகை-பற்கள். இதற்கு முன்னெல்லாம் நீ எழுந்து எதிரிலே வந்து. அள்ளூறி-மிகுதியும் இன்பம் ஊறி. தித்திக்க-(கேட்பவர்க்கு) இன்பம் உண்டாகும்படி. வந்து உன் கடைதிறவாய்-"இன்று நாங்கள் வந்து உன்னை எழுப்பவும், வாயிற் கதவைத் திறவாதிருக்கின்றாய்" என்று பல மாதர்கள் ஒருத்தியை எழுப்ப, அவள் கூறுவாள். பத்து-பற்று, ஈசன்பால் அன்பு. பாங்கு-அழகு, உரிமை. புத்தடியோம்-புதிதாக வந்த அடியோங்களது. நின் அன்புடைமை எத்தோ-(எழுப்பிய

"ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ"
"வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ"
"எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக, யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்." ச

"மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்

---

மாதர்கள் கூறுவார்கள்) "நீ ஈசனிடத்து அன்புடையாய் என்பது வஞ்சகமோ"? சித்தம் அழகியார் - தூய(களங்கமில்லாத) மனமுடையவர்கள். இத்தனையும் - இவ்வளவு தானே (நீ பாடவேண்டுமென்பது தானே).

(ச) "ஒளியுடைய முத்துபோன்ற பற்களையுடைய பெண்ணே, இன்னும் பொழுது விடியவில்லையா" என்று பல மாதர்கள் வினவ, துயில் நீங்காத பெண் "அழகிய கிளி போன்ற சொல்லினர் எல்லாரும் வந்துவிட்டார்களா?" என்று வினவ, மற்ற மாதர்கள் கூறுவார்கள் "எல்லாரும் வந்து விட்டார்கள். எண்ணிக்கொண்டு உள்ளபடியே சொல்லுகிறோம். அதுவரையிலும் தூங்கி வீணாகப் பொழுது போக்காதே." விண்ணுக்கொரு மருந்தை - தேவர்களுக்கு அமுதம் போன்றவனை. விழுப்பொருளை - மேலான பொருள். உள்நெக்கு நின்று உருக, யாம் மாட்டோம் - உள்ளம் நெகிழ்ந்து உருகுவதனால் நாங்கள் வந்திருப்பவர்களை எண்ணமாட்டோம். வரி 8. கணக்கிட்டு வந்தவர்கள் குறைந்தால் நீ தூங்கு.

(ரு) மலையினை-மலை யுருவங்கொண்ட சிவபெருமானை. போலறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும் - அறிவோம் என்று பிறர் எண்ணும்படி பொய்மொழிகளையே பேசுகின்ற. போல்-அசை. உள்ள - நினைக்க. பாலும் தேனும் ஊறுகின்ற வாயினையுடைய படிறீ - வஞ்சகக்காரி. கடை திறவாய் - கதவைத் திறக்கமாட்டாய்.

கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.'' ரு

"மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.'' சூ

"அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்

---

(ரு) கோலமும் - வடிவத்தையும். கோதாட்டும் சீலமும் - சீராட்டும் மேன்மைக் குணத்தையும். உணராய், உணராய்-அறியமாட்டாய்; துயில் நீங்கமாட்டாய். ஏலக்குழலி - மயிர்ச்சாந்து அணிந்த கூந்தலையுடைய பெண்ணே! பரிசு - உன் தன்மை இது தானோ?

(சூ) மானே - (விழியாலும் அழகாலும்) மான் போன்றவளே! வரி 1, 2. "நாளையதினம் நான் வந்து உங்களை நானே எழுப்புவன்" என்று நேற்று நீ சொன்ன உன்சொல் போன திக்கைச் சொல், (உன் சொல் எங்கே போயிற்று.) நாங்கள் எழுப்பியும் வெட்கமில்லாமல் தூங்கிக் கொண்டிருக்கின்றாய். வானே, நிலனே, பிறவே- தேவலோகம், பூலோகம், பிற உலகம் ஆகிய இவற்றில் உள்ளவர்களெல்லாம். தலையளித்து - முதற்றரமான கருணையைக் காட்டி. உனக்கே உறும் - இந்த உருகாத தன்மை உனக்கே பொருந்தும்.

(எ) வரி 1, 2. தாயே (உன் விளையாடல்களில்) இவையும் சில போலும். தேவர்கள் பலரும் மனதினால் நினைத்தற்கும் எட்டாத ஒப்பற்ற பெருமான், பெரும் புகழுடையவன். சின்னங்கள் - அடையாளமாகிய சங்கு முதலிய இசைக் கருவிகள். தென்னா - தென்னாடுடைய சிவனே.

என்னானை யென்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.'' எ

''கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.'' அ

''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோம்'' ஏலோ ரெம்பாவாய். கூ

---

(எ) வெவ்வேறாய் சொன்னோம் கேள் - தனித் தனியாகச் சொன்னோம். கவனித்துக் கேள். என்னே துயிலின் பரிசு - தூக்கத்தின் சிறப்பு தான் என்ன என்பது.

(அ) சிலம்ப - ஒலிப்ப ; கூவ. குருகு - பறவைகளின் பொதுப் பெயர். ஏழில் இயம்ப - திருப்பள்ளி எழுச்சியை உணர்த்த, அல்லது ஏழிசை போல் ஒலிக்க. இயம்பும் - ஒலிக்கும். கேழில் - ஒப்பற்ற. வாழி - நீ வாழ்வாயாக. ஆழியான் - ஆஞ்ஞா சக்கரத்தையுடைய சிவபெருமான் (இடத்து). ஏழைபங்காளன் - உமையொருபாகன்.

(கூ) வரி 2. பிற்பட்ட புதுமையானவற்றிற்கும் மீண்டும் அத்தன்மை (புதுமை) யானவனே. பெற்ற உன்சீர் அடியோம் - பெற்ற சிறப்பை உடைய உன் அடியோம். பாங்கு - உரிமை. தொழும்பு - அடிமை. இப் பாட்டு கன்னிப் பெண்கள் இறைவனை நோக்கிப் பாடியதாக அமைந்துள்ளது.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். க0

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். கக

---

(க0) சொற்கு அழிவு பாதமலர் - திருவடித் தாமரைகள் சொல்லின் அளவைக் கடந்தவை. புனைமுடி - அழகிய திருமுடி. வரி 3. அவன் திருமேனியில் ஒரு பக்கத்தில் உமை அம்மை இருப்பள். அவன் பலதிறப்பட்ட வடிவமுடையவன். வரி 5. அவனுடைய புகழ்களைக் கூறப்புகின் அது முடிவில்லாதது (அளவுபடாதது); ஒப்பற்ற உயிர்த்துணைவன்; தொண்டருடைய உள்ளத்தில் கோயில் கொண்டிருப்பவன். குலத்து உயர்குலத்திற் பிறந்த. பிணாப்பிள்ளை - பெண்பிள்ளை. வரி 8. அவனைப் பாடும் பரிசு (வகை) யாது ?

(கக) மொய் ஆர் - வண்டுகள் நிறைந்த. முகேர் என்ன - 'முகேர்' என்று ஒலிக்கும்படி. குடைந்து - மோதி. குடைதல்-ஒருவித நீர் விளையாட்டு. வழி அடியோம் - பரம்பரை அடிமைகள். வாழ்ந்தோம் - அப்படி உனக்கு அடிமைப் பட்டமையால் மேலான வாழ்வடைந்தோம். செய்யா - செந்நிறமுள்ளவனே. அருளும் விளையாட்டின் - செய்த திருவிளையாடல்களால் (எளிதாகச் செய்யும் தொழில்களினால்).வரி 7. உய்தி கூடுபவர்கள் பிழைத்துக் கதி சேரும் வகைகளிலெல்லாம் (படிப்படியாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளில் நின்று) உய்தி கூடி (பிறவிகளினின்று) தப்பினோம். எய்யாமல் - இளைப்படையாமல்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
 தீர்த்தன்நற் றில்லைசிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
 காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
 ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
 ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். கஉ

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
 அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
 எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

---

(கஉ) ஆர்த்த - (நம்மைக்) கட்டிய. ஆர்த்து ஆடும் தீர்த்தன் - மகிழ்ந்து நீராடும் பரிசுத்த நீருடையான். "கங்கையாளை நின் சடைமிசைக் கரந்த தீர்த்தனே."—சுந்தரர். (போர்த்த). குவலயம் - பூலோகம். விளையாடி - விளையாடுபவன். படைத்தல் முதலிய வற்றை விளையாட்டுபோல் மிக எளிதாக (நினைத்த அளவில்) செய்ய வல்லவன். வார்த்தையும் பேசி - (இத்தகைய பெருமானுடைய) புகழ்களைப் பேசி. வார்கலைகள் - நீண்ட மேகலையாகிய ஆபரணங்கள். ஆர்ப்பு அரவம் செய்ய - ஆரவாரத்தோடு ஒலி எழுப்ப. பொய்கை குடைந்து - குளத்தில் மூழ்கி விளையாடி.

(கங) இப்பாட்டில் மடுவுக்கும் சிவபெருமானுக்கும் உமாபிராட்டியாருக்கும் ஒப்புமை கூறுகின்றார். மடுவில் கரிய குவளையும், செந்தாமரையும் பூத்திருக்கின்றன. உமாதேவியாரின் கரிய நிறத்திற்கும் சிவபெருமான் செந்நிறத்திற்கும் உவமை. அங்கம் குருகு இனத்தால் - அழகிய குருகு இனங்களாலும். குருகு - (1) பறவைப் பொதுப் பெயர், (2) குருக்கத்தி மலர், (3) வளையல்கள். இவைகள் மடுவிற்கும் சிவபெருமானுக்கும், உமாதேவியாருக்கும் முறையே பொருந்துவன. பின்னும் அரவத்தால் - (1) மற்றும் அலை மோதும் ஓசையினலும் (மடுவு) (2) பின்னிக் கொண்டிருக்கும் பாம்புகளாலும் (பெருமான், பிராட்டி). மலம் கழுவுவார். (1) அழுக்கைப் போக்கிக் கொள்பவர் (மடுவு) (2) மும்மலங்களைப் போக்கிக் கொள்பவர்(பெருமான், பிராட்டி).

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். கங

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். கச

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணி [யாள்

(கங) சங்கம் சிலம்ப - சங்கினால் ஆகிய வளையல்கள் ஒலிக்க. சிலம்பு - காற்சிலம்புகள். வரி 7. கொங்கைகள் பூரிக்கவும். மூழ்கு கின்ற நீர் மேலெழவும்.

(கச) பூண்பைங்கலன் - அணிந்த (பொன்னால் ஆகிய) பசிய ஆபரணங்கள். கோதை குழல் ஆட - பூமாலையைத் தரித்த கூந்தல் ஆடவும். வேதப்பொருள் பாடி - வேதத்தின் உள்பொருளாயிருக் கும் சிவபெருமானைப்பாடி. அப்பொருள் ஆமா(று) - அந்த வேதப் பொருளாயிருக்கும் விதத்தையும். பேதித்து - (பிறரினின்றும் நம்மை) வேறுபடுத்தி. பெய்வளை - அணிந்த வளைகளையுடைய உமா தேவியார். பாதத் திறம் - திருவடிப் புகழ்.

(கரு) வரி 1, 2. ஒருத்தி ஒவ்வொரு சமயத்தில் எம்பெருமான் என்று சொல்லிச் சொல்லி, எம்பெருமானுடைய புகழை வாயாற் சொல்லுவதை ஒருகாலும் நீங்கமாட்டாள். சித்தம்...பனிப்ப - மனம் மகிழ்ச்சி கூர்வதனால், ஒருகாலும் வற்றாத நீண்ட அருவியைப் போல கண்கள் இடைவிடாது நீரைச்சொரிய. பார் ஒருகால் வந்தனை யாள் - ஒரு சமயத்தில் நிலத்தில் வீழ்ந்து வணங்குதலை உடையாள்.

பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். கரு

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். கசு

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்

---

(கரு) ஆம் ஆறும் - ஆகும் விதத்தையும்; இதனை வாயார நாம் பாடி என்பதோடு கூட்டுக. வித்தகர் - ஞானவடிவினர். வரி 6. இவ் வண்ணம் ஆண்டு கொள்ள வல்ல ஞானவடிவினராகிய பெருமான் யாரோ அவருடைய திருவடியையும். வார் உருவம் - கச்சு அணிந்த அழகிய. ஏர் உருவம் - அழகிய தோற்றம்.

(கசு) முன்னி - முற்பட்டு. உடையாள்-(எம்மை அடிமையாக) உடையவளாகிய உமாதேவியார். என்னத் திகழ்ந்து - திருமேனி போல(க் கருமை நிறத்தோடு) விளங்கி. இட்டிடையின் மின்னி - நுண்ணிய இடைபோல மின்னலை விடுத்து. தேவியின் இடை மின் னற்கொடிபோல விளங்குகின்றது. பொன் அம் சிலம்பிற் சிலம்பி - பொன்னாலாகிய அழகிய சிலம்புகள் போலச் சப்தித்து. சிலைகுலவி - (வான) வில்லை வளைத்து. மழை - மேகமே. இப்பாட்டு மேகத்தை உமாதேவியாருக்கு ஒப்பிட்டு அதற்குக் கூறியதாக அமைந்துள்ளது.

(கஎ) செங்கண் அவன் - சிவந்த கண்ணையுடைய திருமால்; செந்தாமரைக் கண்ணன். நம்பாலது ஆ(க) - நம்மிடத்து உண்டா கும்படியாக. கொங்கு உண் கருங்குழலி - வாசனையைக் கொண்ட கரிய கூந்தலையுடைய பெண்ணே. கோதாட்டி - சீராட்டி.

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். கஎ

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். கக

---

(கஎ) சேவகன் - வீரன். அம்கண் - அழகிய கிருபாநோக்கம். பாடி நலம் திகழ - பாடி அதனால் நன்மை உண்டாகும்படி.

(கஅ) வீறு அற்றாற்போல் - (இறைவன் பேரொளி முன்பு) சிறப்பு ஒளி இழந்தாற்போல். கண் ஆர் இரவி கதிர் - ஆகாயத்தினிடத்து நிறைந்துள்ள சூரியன் கிரணங்கள். கண் ஆர் அமுதமாய் - அன்பர்கள் கண்களில் நிறைந்து இன்பத்தைக் கொடுப்பவனாய்.

(கக) வரி 2. அப்பழமொழியைப் புதுப்பிக்கின்றோம் என்று நீ கூறுவாய் என்று அஞ்சி. வரி 6. இரவும் பகலும் எம் கண்கள் உன்னைத் தவிர வேறொன்றையும் காணாதொழிக. வரி 8. சூரியன் எங்கு உதித்தால் என்ன, (எது எப்படி ஆனாலும் எங்களுக்குக் கவலையில்லை.)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். உ0

திருச்சிற்றம்பலம்

---

(உ0) வரி 1. (எல்லாப் பொருள்கட்கும்) முதலாயுள்ள உன் திருவடிக் கமலங்களைக் கொடுத்தருளுக. உனக்கு வணக்கம். அந்தம் ஆம் - (எப்பொருட்கும்) முடிவு ஆகிய. வரி 3. முதல் 7 வரையில் சிவபெருமானுடைய, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலையில் அருளிய

# திருவம்மானை

## ஆனந்தக் களிப்பு

### ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். க

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய். உ

---

(க) இடந்து சென்றும் - பன்றியுரு வெடுத்துத் தோண்டிக் கொண்டு போயும். பொங்கு - ஒளி விளங்கும். எந்தரமும் - எம் போன்ற தகுதியற்றவரையும். தென்னன் - அழகும் நன்மையும் உடைய. அறைகூவல் - போருக்கு அழைத்தல், இங்கே வலிய அழைத்து என்பது பொருள். அங்கருணை வார்கழலே - அழகிய திருவருளாகிய நீண்ட கழல்கட்டிய திருவடிகளையே. அம்மானை - மகளிரது ஓர் விளையாட்டு. அம்மானாய் - அம்மனை ஆடும் பெண்ணே.

(உ) வரி 2. யாராலும் (தம்முடைய முயற்சியால்) காணமுடியாதவன். பேராளன் - பெருமையுடையவன். பிச்சேற்றி - பித்தை (மிக்க அன்பை) விளைவித்து. மீன் விசிறும் - மீனைப் பிடிக்க வலை வீசும். பேராசை வாரியன் - பெரிய அன்புக் கடலாயிருப்பவன்.

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். ௩

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். ௪

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். ரு

---

(௩) அந்தரம் - ஆகாயம். எந்தரமும் - எம்போன்ற பக்குவமில்லாதவர்களையும். பந்தம் பறிய - பாசத்தளை விடுபட.

(௪) கான்நின்று வற்றியும் புற்றெழுந்தும் - தவம் புரியும் பொருட்டு காட்டிலே நின்று உணவின்றி உடம்பு உலரப் பெற்றும், உடல்மீது புற்றால் மூடப்பெற்றும். தலையளித்திட்டு - முதற்றரமான கருணையைப் பாலித்து. வரி 4. என் உடலில் புகுந்து, மயிர்க்கால்களை உயிர்பெறச் செய்து, (புளகம் கொளச்) செய்து. "வாக்கிறந்தமுதம் மயிர்க்கால்தோறும் தேக்கிடச் செய்தனன்" **திருவண்டப்பகுதி**—வரி 170. தேன் வந்து அமுதின் தெளிவின் (வந்து) - தேன் போலவும் அமுதத்தின் தெளிவு போலவும் இனிய சுவையாகி வந்து.

(ரு) வரி 1. உன் புகழைக் கல்லாத மனத்தினையுடைய யாவர்க்கும் தாழ்ந்த நாய் போன்ற என்னை. அல்லது கல் ஆம் மனத்து என்று பிரித்து, கல்லைப் போன்று இளகாத மனத்து என்றும் கொள்ளலாம். வல்லாளன் - பேராற்றலுடையவன். பிச்சேற்றி - பித்தேறும்படிச் செய்து. வரி 3. மனமாகிய கல்லினைப் பிசைந்து இள

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டி
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆள் தான்கொண்(டு) ஆண்டவா பாடுதுங்காண் அம்மானாய். சு

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். எ

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை

---

கும் தன்மையதாகச்செய்து, (காயைப் பழமாக்குவதுபோல் மனதைப் பக்குவப்படுத்தி.) ஒல்லை - விரைவாய்ச் செல்லும்.

(சு) கிறி - மாயம். தீட்டு ஆர் - சித்திரங்கள் வரையப்பட்டுள்ள. காட்டாதன - பிறர் எனக்குக் காட்டாத (பிறரால் நான் அறிந்து கொள்ளாத அரிய உண்மைகளை.) வரி 5, 6. உலகினர் நம்மை இகழ்ந்து சிரிக்கவும், நாம் மேலாகிய முத்தியின்பத்தை அடையவும், என்னைத்தான் அடிமைகொண்ட விதத்தைப் பாடுவோமாக.

(எ) வரி 1. இடையறாது நினைப்பவர் நெஞ்சில் வீற்றிருப்பவனை (அந்தர்யாமி ஆனவனை.) சேயான் - (அங்ஙனம் நினையாதவர்க்குத்) தூரத்திலிருப்பவன், அல்லது செங்நிறம் பொருந்தியவன். தத்துவன் - உண்மைப் பொருளானவன். ஏழு உலகங்களாய் (க் கலந்து) நிற்பவனை ; ஏழுலகங்களையும் ஆட்சி புரிபவனை.

(அ) வரி 1. பண்ணோடு (இசையமைப்புடன்) கூடிய பாடல்களுக்கு வெகுமதி கொடுத்தருளுகின்ற அல்லது பண்ணோடு கூடிய பாடல்களைப் பாடும் பரிசு (தன்மையை) அருள் புரிகின்ற. வரி 3. மேலுலகம் வரையில் அளாவிய பெரும் புகழையுடையவனும் அகன்ற பூமண்டலத்தின்கண் ஆண்டவனும் விளங்குபவன். கலி - ஒலி (மிக்க).

மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். அ

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். கூ

விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். க0

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த

---

(அ) அக்கோவால் மொத்துண்டு - அம்மதுரை மன்னனால் அடிபட்டு.

(கூ) பிறைக்கீற்றை அணிந்தவன். வேதங்களால் புகழ்ந்து ஓதப்பட்டவன். கொண்ட புரிநூலான் - முப்புரிநூலைக் கொண்டவன் (அணிந்தவன்). கோலம் மா - அழகிய எருது. பண்டைப் பரிசே - பழமையான முறையில். ஈந்தருளும் அண்டம் வியப்புறுமா(று) பாடுதும் - உலகத்தவர் அதிசயிக்கும்படி ஈந்தருளும் விதத்தைப் பாடுவோமாக.

(க0) மாண்பாகி - மாட்சிமை தருபவனாகி. தண் ஆர் - இனிமை மிகுந்த. தமிழ் அளிக்கும் - தமிழ்மொழியை (அகத்தியருக்கு) உபதேசித்தருளிய.

(கக) செப்பு ஆர் - சிமிழை ஒத்த. தாள் அடைந்தார் நெஞ்சு தப்பாமே உருக்கும் தன்மையினான் - தன் திருவடியைச் சரணாக அடைந்தவருடைய மனதைத் தவறாமல் உருகுவிக்கும் இயல்பினன்.

அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலை
ஒப்பாக வொப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். கக

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நஞ்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். கஉ

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். கங

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை

---

(கக) அப்பு ஆர் - நீர் (கங்கை) நிறைந்த. ஆனந்த...அப்பாலை - பேரானந்தத்தைத் தரும்படியான வீரக்கழலைக் கட்டிய திருவடிகளே புகலிடமாக ஒப்புக்கொடுத்த உள்ளத்தினையுடையவர் மனத்தினுள் கோயில் கொண்டிருப்பவனும் அப்பாற்பட்ட இடத்திற்கெல்லாம் அப்பாற்பட்டவனுமா யிருப்பவனை.

(கஉ) தோற்றமாய் - விளக்கமாய். மெய்யே நிலைபேறாய் - உண்மையே நிலைபெற்றிருக்கும் இடமாய். தானேயாய் - தானே ஆதாரமாய். யாவைக்கும் வீடாகும் - எல்லா உயிர்களுக்கும் முத்தி இன்பத்தைக் கொடுப்பவனாகும்.

(கங) சேர்ந்து அறியாக் கையானை - வணக்கத்தின் பொருட்டு கைகளைக் கூப்பி அறியாதவனை, அதாவது தனக்கு மேலானவர் ஒருவருமில்லாதவனை. செறிந்தானை - வியாபித்திருப்பவனை. மெய்யானை - உண்மையாய் விளங்குபவனை. (கச) கீடம் - புழு. பிறவாய் - பிறப்புக்களாய். எய்த்தேனை - இளைப்புற்றேனை.

ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல்வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். கச

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்(து)
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன்பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். கரு

ஊனாய் உயிராய் உணர்வாய்என் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். கசூ

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்

---

(கச) ஓட்டு உகந்து - விருப்பத்துடன் ஓடச்செய்து. கன்னல் - கரும்பு; சர்க்கரை. கோன் - (காதலனாகிய) தலைவன்.

(கரு) எச்சன் - யாகத்தலைவன். சிந்தி - சிதறி. செந்தார்ப் பொழில் - சிவந்த பூக்களையுடைய சோலைகள். தார் - பூ.

(கசூ) கரும்பின் கட்டி - கற்கண்டு. வானோர் அறியா வழி - தேவர்களும் அறியாத திருவருள் நெறி. சேவகனார் - வீரர். சீர் ஒளி சேர் ஆனா அறிவாய் - சிறப்பாகிய அழியாத ஞான வொளியாய். நின்றவா(று) - நின்ற முறையை.

(கஎ) இப்பாட்டில் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் வைத்துப் பாடப்பட்டுள்ளது. கூடுவேன் - தழுவுவேன். முயங்கி - புணர்ந்து. ஊடுவேன் - பிணங்குவேன்.

வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். ௧௭

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். ௧௮

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். ௧௯

---

(௧௭) வரி 5. அவனருளைப் பெறாது வாட்டமடைவேன். மறுபடியும் மகிழ்வேன். மலர்தல் - மகிழ்தல்.

(௧௮) கிளி வந்த - கிளியின் சொல்லைப் போன்ற. கேழ் கிளரும் - ஒளி விளங்கும். வரி 2. (காண்போம் என்று) வெளியே வந்த திருமால் பிரமன் ஆகிய இருவரும் காணமுடியாத சாமர்த்தியமுடையவனை. தெளிவந்த தேறல் - தெளிந்த தேன். எளிவந்து - எளிதாக வந்து. எண்(ண) அரிய - அளவிடக் கூடாத. வரி 5. பேரொளி வடிவாய் வந்து என் மனத்தினுள்ளே ஞானப் பிரகாசம் விளங்குமாறு. அளி வந்த - திருவருள் புரிந்த.

(௧௯) வரி 1. மும்மூர்த்திகளுக்கும் முற்பட்டவனை, (கலப்பினால்) எல்லாப் பொருளுமாய். தென் ஆனைக்காவானை-அழகிய திருவானைக்காவில் உறைபவனை. என்னானை - என்னவனை ; எனக்கு இனியவனை. அன்னானை - அன்னை ஆவானை ; (அல்லது) ஒப்பவனை. அம்மானை - தந்தையை.

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். உ0

---

(உ0) பெற்றி பிறர்க்கு அரிய பெம்மான் - (அன்பர் அல்லாத) பிறருக்கு இன்ன தன்மையன் என்று அறிய முடியாத பெருமான். கோதாட்டி - சீராட்டி. தொடர்வு - சம்பந்தம். வரி 4, 5, 6. நம்மைச் சூழ்ந்து பிணித்துள்ள குடும்பப் பாசத்தைத் தொலைப்பவனுடைய பழமையான திருப்புகழ்களையே இடைவிடாது கூறி, நம்மைப் பற்றிய மும்மலங்களின் தொடர்பு அறும்படியாக நாம் இறைவனைப் பற்றும் பொருட்டு, நாம் பிடித்துக்கொண்ட பேரானந்தத்தைப் பாடுவோமாக. "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" - என்னும் திருக்குறளோடு ஒப்பிடுக. இறைவன் புகழ்களைக் கூறுவதால் பேரானந்தம் நிகழும். பேரானந்த அநுபவத்தால் இறைவனோடு அத்துவிதக் கலப்பு உண்டாகும். அதனால் மும்மலத் தொடர்பு ஒழியும்.

தில்லையில் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. க

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்

---

**திருப்பொற்சுண்ணம்:—**அழகிய பொன்போல் ஒளி செய்யும் வாசனை (திருமஞ்சன)ப் பொடி இடிக்கும்போது பாடும் பாட்டு.

(க) வரி 1, 2. நல்ல முத்து மாலைகளையும் பூமாலைகளையும் தொங்கவிட்டு, பயிர் முளைகளிட்ட குடம், நறும்புகைக் கலசம், நல்ல விளக்கு என்பவைகளை வைப்பீர்களாக. சோமி - திருமகள். கவரி - சாமரம். வரி 8. அவனுக்குத் திருமுழுக்காட்ட, திருமஞ்சனப் பொடியை நாம் (இடித்தும்) இடிப்போமாக.

(உ) வரி 1. கொன்றை மலர் பொருந்திய நீண்ட சடையை யுடைய எம்பெருமானுக்கு. வரி 3. மாங்காய் வடுவின் (பிஞ்சின்) பிளப்பு போன்ற கண்களையுடைய பெண்களே.

கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. ௨

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தாம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. ௩

காசணி மின்கள் உலக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுகஎன்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. ௪

---

(௨) வரி 5. அடியார்கள் வெளியே நில்லாதபடி அவர்களை அழையுங்கள். குனிமின் - ஆடுங்கள். ஆள - ஆண்டருளும்படி.

(௩) பொன்சிந்தி - பொன்பொடியைத் தூவி. நிதி - நவமணிகள். வரி 3. இந்திர லோகத்திலுள்ள கற்பக மரத்தின் கிளைகளை நட்டு. எழில் சுடர் - அழகிய தீபங்கள். வரி 5. தேவர் கோவாகிய இந்திரனுக்கும், பிரமனுக்கும் தலைவன். ஆழியான் நாதன் - சக்கரத்தைக் கையில் ஏந்திய திருமாலுக்கு நாயகன். எந்தாம் ஆள் - எம்போலியரையும் ஆட்கொள்ளும். ஏய்ந்த - தக்க.

(௪) காசு - மணிவட்டம். வரி 2. கருங்காலி மரத்தாற் செய்த உரலுக்குப் பட்டுச்சீலை சுற்றுங்கள். காம்பு - பட்டுச்சீலை. கறை - கருங்காலிமரம். ஆடும் கச்சி - கொண்டாடும் காஞ்சி மாநகர். வரி 7. நின்று பாடி (அதனால்) நம்மைக் கட்டிய இருவினைகளையும் களைந்து.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுகற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ரு

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே. சு

---

(ரு) அறுகு - அறுகம் புல். நறும் உறு - நலம் பொருந்திய வரி 4. (இறைவனுக்கு உகந்த அறுகு முதலியவற்றை) இந்திரன் முதலியோர் நமக்கு முன்பு எடுத்துக்கொண்டு போக இடங்கொடுக்க மாட்டோம். செறிவுடை - நெருங்கிய. முறுவல் - புன்சிரிப்பு.

(சு) வரி 1, 2. உலகமெல்லாம் உரலாகக்கொண்டாலும், உலக்கைகள் பல இருப்பதனால் அவைகளைக்கொண்டு இடிப்பதற்கு இடம் போதாதென்று சொல்லும்படி பெரியோர்கள் அளவிறந்த உலக்கைகளைக் கைக்கொண்டுள்ளார்கள். ஓச்சுதல் - உயர்த்துதல். வரி 3, 4 உலகங்கள் காணப்போதாது என்றே அடியவர் கலக்க வந்து நின்றார்- எல்லா உலகங்களிலும் தேடினாலும் காணமுடியாது என்று சொல்லும்படியான பெருமை வாய்ந்த அடியவர்கள் சிவபெருமானோடு கலக்கும் பொருட்டு வந்து நின்றார்கள். நலக்க - நலம் அடையும் பொருட்டு. மலைக்கு - மலையரையனுக்கு - ஆகுபெயர்.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
　　தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
　　நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும்மங்கை
　　பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்னகோவுக்
　　காடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. எ

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
　　வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
　　சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
　　நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
　　ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. அ

வையகம் எல்லாம் உரலதாக
　　மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
　　மேதகு தென்னன் பெருந்துறையான்

---

(எ) சூடகம் - கைவளை. ஆர்ப்ப - ஒலிக்க. வரி 2. ஆர்ப்ப - (அரகரவென்று) முழக்கம் செய்ய. வரி 3, 4. உலகினர் நம்மை இகழ்ந்து பேசி நகையாட. நாமும் அவர்கள் இயல்பினைக் கருதி நகையாட. வரி 5. மெல்லடிகளில் பாடகம் ஒலிக்கும் உமாதேவியார். பராபரன் - மேலான கடவுள். வரி 7. பெரிய பொன்மலையை ஒத்த அரசனாகிய சிவபெருமானுக்கு.

(அ) வரி 3. தோள்களும் நெற்றியும் திரு (நீற்றினால்) ஒன்று சேர்ந்து விளங்கவும், அல்லது தோள்களில் திரிபுண்டரமாக (மூன்று கோடுகளாக) அணிந்த திருநீறு ஒருங்கு சேர்ந்து விளங்க. திருமுண்டம் - நெற்றி ; திரிபுண்டரம். சோத்து - வணக்கம். வரி 5. (மலரும்) பருவம்கொண்டு மலர்ந்த (நாள் மலர்) அன்று மலர்ந்த பூவைப் போன்ற பாதங்களைக் காட்டி.

(கூ) மெய் - உண்மை. அட்டி - போட்டு. மேதகு - மேன்மை மிக்க.

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. கூ

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடப்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. கO

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினனுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. கக

---

(கூ) வாணன் - வாழ்நன்; வாழ்பவன்.

(கO) வரி 3, 4. மனமானது சிவபெருமானிடத்து இடைவிடாது பொருந்தி நிற்கவும், சிவந்த கயல் மீன் போன்ற கண்களினின்று (மனம் உருகுவதால்) ஆனந்தக் கண்ணீர் பனித் துளிபோன்று அசைந்து கொண்டிருக்கவும். பித்து - காதலால் உண்டாகும் மயக்க உணர்வு. வரி 6, 7. பிறவி (நம்மோடன்றி) பிறரிடத்து நிலவி நிற்கவும், நாம் (பிறவியினின்று நீங்கி) எந்தை திருவருளில் மூழ்கித் திளைக்கவும்.

(கக) வரி 1. (நங்கையரே) உங்கள் பற்கள் பக்கங்களில் நிலவு போன்று ஒளி வீசவும், அம்பவளம் - அழகிய பவளம் போன்ற உதடுகள். திகைத்து சித்தம் களிப்பத் தேறி - தேடிக் காணாமையால் திகைப்படைந்து, பின்பு தெளிந்து அதன் பயனாக மனமகிழ்ச்சி அடைந்து.

மையமர் கண்டனை வானநாடர்
　　மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
　　அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
　　போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
　　பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. கஉ

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
　　வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
　　எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
　　தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
　　பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. கங

---

(கஉ) மருந்தினை - அமுதத்தினை. மாணிக்கம் போன்ற செம்மேனியோடு நடனம் செய்பவனை. வரி 3, 4. நமக்குத் தலைவனை, தலைவர்களுக்கும் தலைவனை, நம்மைப் பற்றிக்கொண்டு அடிமையாகச் செய்து, அருமை பாராட்டுகின்ற. போது அரிக்கண்ணிணை - தாமரைமலர் போன்று சிவந்து செவ்வரி படர்ந்த இரு கண்களையும்.

(கங) செந்துவர்-சிவந்த பவளம் போன்ற.இமவான்...தமையன்-மலையரயன் மகளாகிய உமாதேவியாருக்குத் தன்னை உடைய கணவனுமாவன், மகன் ஆவன், தகப்பன் ஆவன், தமையனுமாவன். ஆணும் பெண்ணுமாக உயிர்களைப் படைத்தற் பொருட்டு, இறைவன் சிவமும் சத்தியுமானபோது சத்திக்குச் சிவன் கணவனுவன். சத்தியினின்றும் சதாசிவம் தோன்றிய காரணம்பற்றி சதாசிவமூர்த்தி சத்தியின் மகனுவன். சிவத்தினின்று சத்தி தோன்றுவதால் சிவன் சத்திக்குத் தகப்பனுவன். சுத்த மாயையினின்று இறைவனது ஞானசத்தியும் கிரியாசத்தியும் அதிட்டித்தலால், முறையே சிவதத்துவமும் சத்தி தத்துவமும் முன் பின்னுக உண்டாதலால், சத்திக்குச் சிவம் தமையன் முறையாதல் காண்க.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. ௧௪

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௧௫

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்

---

(௧௪) வரி 2. சங்கினாலாகிய கைவளையல்கள் ஒலிக்கக் காற் சதங்கைகள் சப்திக்க. சேயிழையீர் - செம்மையான நகைகளை அணிந்த பெண்களே. வரி 5. கங்காநதி ஒலிக்கப் பாம்பு இரைச்ச விடும். வரி 7. மிகுந்த காதலினால் கொங்கைகள் பூரிக்க அல்லது பால் சுரக்க.

(௧௫) பாகு - சர்க்கரைப்பாகு. நாடற்கு அரிய நலத்தை - கிடைத்தற்கு அரிய நன்மையைச் செய்பவனை. நந்தா - என்றும் கெடாத. பானல் தடங்கண் - அகன்ற (நிறத்தால்) குவளை மலர் போன்ற கண்கள்.

(௧௬) ஆவகை - ஆகின்றவகை ; உய்தியடையும் வகையாக. செல்வச்.........கொடியான்-(இறைவனைத் தாங்கும்) செல்வம் (சிறப்

சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. ௧௬

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. ௧௭

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. ௧௮

---

புப்)பெற்ற இடப உருவத்தைத் தாங்கிய வெற்றிக் கொடியையுடைய சிவபெருமான். கொற்றச் சேவகன் - வெற்றியுடைய வீரன்.

(௧௭) வரி 1. தேனை உள்ளே கொண்ட பெருமை பொருந்திய கொன்றை. மதிப்பிள்ளை - பிறைச் சந்திரன். வரி 5. பகைவர் தசையைக் கொண்ட மழுவையும் சூலத்தையும் பாடி. இம்பர் - இவ்வுலகினர். போனகம் - உணவு.

(௧௮) செண்டு - பந்து. எயிறு - பல். கயம் - கஜம்; யானை. இயைந்தன - ஒருங்கு சேர்ந்து உலவிய. நயம் - நன்மை.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. கக

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. உ0

திருச்சிற்றம்பலம்

---

(கக) மத்தம் - ஊமத்த மலர். சிட்டர் - நல்லோர். மாசுணம் - பாம்பு. கங்கணம் - (பாம்பாகிய) காப்பு. கவித்த கை - வளைந்த (இடது) கை.

(உ0) வரி 2. மெய்யர்க்கு மெய்யராயும், பொய்யர்க்குப் பொய்யராயும் ஆனவர்க்கு.

தில்லையில் அருளிய

# திருக்கோத்தும்பி

## சிவனோடைக்கியம்

### நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. க

நானார்என் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ. உ

---

இப்பதிகம் தும்பியை விளித்து இறைவன் திருவடிக்கமலங்களினிடத்துச் சென்று ரீங்காரம் செய்யும்படி ஏவுவதாக அமைந்துள்ளது.

(க) வரி 1. தாமரை மலர்மேல் ஏறித் தங்கும் பிரமனும், இந்திரனும் அழகு வாய்ந்த நாவிற் றங்கும் சரஸ்வதியும். மா ஏறு சோதி - பெருமை பொருந்திய ஒளி வடிவினராகிய உருத்திர மூர்த்தியும். கோத்தும்பீ - அரச வண்டே. சென்று ஊதாய் - சென்று ரீங்காரம் செய்வாயாக.

(உ) வரி 1, 2.தேவர் பிரான் என்னை ஆட்கொண்டிராவிட்டால். நான் எத்தன்மையனா யிருப்பேனோ? என் உள்ளம் எப்படி யிருக்குமோ? என் அறிவு எத்தன்மையதா யிருக்குமோ? என்னை இன்னானென்று யாரறிவார். மதிமயங்கி - அறிவு மயங்கினவனைப் போல் நடித்து; அல்லது, அறிவு மயங்கின பிரமனது. உண் பலி தேர் - உண்பதற்குப் பிச்சையைத் தேர்ந்து (ஆய்ந்து) ஏற்கும். கமலமே - திருவடித்தாமரை.

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தோறுங் காண்தோறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௩

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௪

அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௫

---

(௩) தினைத்தனை - தினை அளவு; மிகச் சிறிய அளவு. உள் நெக - உள்ளே நெகிழ (இளக). ஆனந்தத் தேன்-பேரானந்தமாகிய தேன். குனிப்பு-கூத்து. உலக இன்பமான சிற்றின்பத்தை விட்டு, இறைவன் திருவடி மலரினின்று பெருகும் பேரின்பமாகிய தேனை, அவனை எக்காலமும் நினைந்தும், கண்டும், அவனது புகழைப் பேசியும் அடையும்படி மனதிற்கு அறிவுறுத்து முகத்தாற் கூறப்பட்டுள்ளது.

(௪) வரி 1, 2. கண்ணப்ப நாயனாரது பேரன்பிற்குச் சமமான அன்பு வேறு எவரிடத்தும் இல்லாமையை அறிந்தபின், என் தந்தையான சிவபெருமான் (அன்பின்மையில்) எனக்குச் சமமானவர் எவரும் இல்லை என்று சொல்லும்படியான என்னையும் ஆண்டு கொண்டு. வண்ணப் பணித்து-நற்குணம் உடையனாகும்படி செய்து, அல்லது நன்மையைச் செய்து. பொன் சுண்ண நீற்றற்கே - அழகிய வெண்ணீற்றை அணிந்த சிவபெருமானிடத்தே.

(௫) அ தேவர் தேவர்-அந்தத் தேவர்தான் தேவர் (முழுமுதற் கடவுள்). அவர் தேவர் - அவர்தான் தேவர், என்று இப்படிப் பலவாறாக ஒவ்வொரு சமயிகளும் வாதிட்டுப் பிறப்பு இறப்புள்ள பொய்த் தேவர்களை முழுமுதற் கடவுள் என்று பேசிப் பிதற்றுகின்ற இந்நிலவுலகில். வரி 3. பற்று (ஆசை) ஒன்றுமில்லாமல் என் பற்றுக்கள் ஒழியும் பொருட்டு நான் பற்றிக்கொண்டு நின்ற. பத்து - பற்று.

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௬

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனே கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோஞ்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௭

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௮

கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு

---

(௬) வைத்த நிதி - தேடிவைத்த செல்வம். பித்த உலகில் - மயக்க உணர்ச்சியோடு கூடிய உலகத்தில். சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த - மன அலைவினால் உண்டாகும் குழப்பத்தை நீக்கித் தெளிந்த உணர்வினைக் கொடுத்த. வித்தகத்தேவர் - ஞானவடிவினனாகிய கடவுள்.

(௭) சட்டோ - விரைவு அல்லது அதிசயக்குறிப்பு. வரி 1 - நினைத்த மாத்திரத்தில் மனத்தில் இன்ப உணர்ச்சியாய் இருக்கும் சங்கரனை. சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். கேடுபடாத் திருவடியை ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உருவறியோம் - என்றும் அழிவில்லாத திருவடியைச் சாராத பாவிகளாகிய அடிமைகளை நாம் பார்க்கமாட்டோம். சிட்டாய சிட்டன் - நல்லோனாகிய நல்லோன்; மிக நல்லோன்.

(௮) வரி 1. ஒரு பொருளாகத் தோன்றி, பல பொருள்களாக விரிந்து. கவடு - கிளைகள். வரி 2. என்னை நல்ல நிலைமையில் வைத்து, நாயைச் சிவிகையின்மேல் ஏற்றினாற்போல நாய்போன்ற என்னை உயர்ந்த பதவியில் இருக்கச் செய்த. எம்மனைக்கும் - எம் அன்னைக்கும்.

(௯) கரணங்கள்-கருவிகள்; அகக்கரணம், புறக்கரணம் என்பன. அகக்கரணம் :—மனம், புத்தி, சித்தம், அகங்காரம். புறக்கரணம் :— மெய், வாய், கண், மூக்கு, செவி. கறைமிடற்றன் - நீலகண்டன்.

மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௯

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றா யிங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாந்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௧௦

வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கல்நெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௧௧

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ. ௧௨

நான்தனக் கன்பின்மை நானுந்தா னும்அறிவோம்
தானென்னை ஆட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்

---

(௯) இரண்டின் மயக்கு - இரண்டால் உண்டாகும் மயக்கம்.

(௧௦) நுந்து கன்று - தாயினாற்றள்ளப்பட்ட கன்று. வரி 2, 3. நாய் தான் பெற்ற செல்வத்தை மதித்து அறியமுடியாத தன்மை போல உன் திருவருட் செல்வத்தை அநுபவிக்க வகை யறியாத என்னை, எல்லா வகையாலும் தாய்போல வந்து ஆண்டுகொண்ட அருட் பேரொளியுடைய செல்வன். தேய் - தேசு ; ஒளி.

(௧௧) மனவலியன் - கல் நெஞ்சையுடையவன். என்னாதே - என்று தள்ளிவிடாமல். திளைக்கும் - நீரில் மூழ்கி விளையாடும்.

(௧௨) வரி 2. பேய்போல அலையும் தன்மையுடைய மனத்தில் உள்ள குற்றங்களை மன்னித்து அருளும் பெருந்தன்மையுடையவனை. சீ ஏதும் இல்லாது - சீ என்பது போன்ற வசைமொழி ஒன்றும் சொல்லாமல், இகழாமல்.

(௧௩) எல்லாரும் - உலகினர் யாவரும்.

ஆன கருணையும் அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. க௩

கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. க௪

நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானுந் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. க௫

உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம் பிரான்என்னை வேறேஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. க௬

---

(க௩) வரி 3, 4. என்னை ஆட்கொள்ள எழுந்த கருணையும் அங்கு எனக்குக் கிடைத்ததுபோல (கோன் அவன் தானே) தலைவனாகிய அவன்தானே வலிய வந்து என்னைக் கூடும்படி மகிழ்ந்து ஊதுவாயாக.

(க௪) கருவாய் - உலகப்பொருள் எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாய். வரி 3. அரிய வாயினிடத்து வேதமந்திரங்களை ஓதும் வேதியனாகி ஆண்டுகொண்ட. திருவான - எல்லா ஐஸ்வரியங்களுக்கும் காரணனான.

(க௫) தானும் தன் தையலும் தாழ் சடையோன் ஆண்டிலனேல் நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்—**உரைநடை.** தையலும் - தையலுமாக ; உமாதேவியாருடன். எவ்விடத்தோம் - எவ்வளவு தூரத்தில் இருப்போம். தேன் உந்து - (ஆனந்தத்) தேனைச் சொரியும்.

(க௬) வரி 1, 2. நினைக்க முடியாத இறைவனது திருவுருத்வத்தை (அவனருளால்) நினைத்தவுடன், அழியாத பேரின்பத்தைத் தந்த கருணைக் கடலாகிய பெருமான். கள்ளப்படாத - மறைதலில்லாத; அழியாத. வேறே ஆட்கொள் அப்பிரானுக்கே - என்னைத் தனியாக ஆட்கொண்ட அந்த பெருமானுக்கே. "யாவரையும் வேறடிமையாவுடைய எம்மான்"—பெரியபுராணம். (ஆவது)

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. கஎ

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. கஅ

கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. ககூ

பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்(று)
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. உ0

திருச்சிற்றம்பலம்

---

(கஎ) வரி 1. நிலையில்லாத செல்வத்தை ஈட்டுதலிலும், காப்பதிலும் என் வாழ்நாள் முழுமையும் கழித்து. மெய்யாக் கருதி - நிலையான பொருளென்று எண்ணி. செய் ஆர் - செந்நிறம் பொருந்திய.

(கஅ) துகில் - ஆடை. தொக்கவளை - தொகுதியான வளையல். தொன்மைக்கோலம் - பழமையான மாதொருபாக வடிவம். இறைவனது வலப்பாகத்தில் இறைவனுக்குரிய புலித்தோலும், குழையும், நீறும், சூலமும் இருப்பன. இடப்பாகத்தில் அம்மைக்குரிய துகிலும், தோடும், சாந்தும், கிளியும், வளையும் இருப்பன.

(ககூ) கடியன் - கொடியவன். கலதி - கயமைக் குணமுடையோன். என்னாதே - என்று தள்ளிவிடாமல். வரவர வந்தொழிந்தான் - கொஞ்சம் கொஞ்சமாக வந்து பூரணமாயினன். ஒன்று ஒழியா வண்ணம் எல்லாம் - ஒன்றையும் தப்பவிடாமல் எல்லாவற்றையும். தெள்ளும் - நீக்கித் தெளிவு படுத்தும்.

(உ0) புகல் அரிது - (புகுதல்) அடைய அரியது அல்லது புகல (சொல்ல) அரியது. இறுமாக்க - இறுமாப்பு அடைய. "இறுமாந்திருப்பன் கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு"—**அப்பர்.** மேல் தவிசு-உயர்ந்த ஆசனம். பொருள்படுத்த-மதித்து அருள்செய்த.

தில்லையில் அருளிய

# திருத்தெள்ளேணம்

## சிவனோ டடைவு

### நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. க

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவுந்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. உ

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ங

---

தெள்ளேணம் - ஒருவித மகளிர் விளையாட்டு.

(க) திருவடியை உரு - திருவடியின் வடிவத்தை. ஒன்றும் இல்லாற்கு - குலம், குணம், ஊர் முதலிய யாதும் இல்லாதவனுக்கு.

(உ) பிறவிக் கருவேர் - பிறப்பினுக்குக் காரணமாயிருக்கும் மூலம், பற்று. யாவரையும் கண்டதில்லை - எவரையும் சிவத்தினின் றும் வேறாகப் பார்த்ததில்லை.

(ங) தெரிக்கும் படித்தன்றி - தெரிந்து கொள்ளும் தன்மைய தாகாமல். உருக்கும் பணிகொள்ளும் - உள்ளத்தை உருகச்செய்து அடிமையாக்கிக் கொள்ளும். சிரிக்கும் திறம் - (வியப்பால்) நகை யாடும் வகை.

அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ச

அருமந்த தேவர் அயன் திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. ரு

அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாடஉள் ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. சு

ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன் [டான்
வாவாவென் றென்னையும் பூதலத்தேவலித் தாண்டுகொண்

(ச) அவமாய - பயனற்ற. வரி 1. முத்தியடையும் நெறியைப் பின்பற்றாமல் வீண்பொழுது போக்கும் தேவர்களுடைய பயனற்ற பிறப்பில் வீழாவண்ணம். பவமாயம் - மாயப்பவம்; வஞ்சப் பிறவி. வரி 3, 4. புதுமையாகிய செம்மையான (மெய்ஞ்) ஞானத்தைக் கொடுத்தவுடன் நமது தற்போதம் நீங்கிச் சிவமாந் தன்மை அடைந்த விதத்தைப்பாடி.

(ரு) அருமந்த- அருமருந்து அன்ன; கிடைத்தற்கரிய தேவாமிர்தம் போன்ற. உருவந்து - உருவுகொண்டு வந்து. உகப்பு - மகிழ்ச்சி. பூதலத்து ஓர் உரு வந்து (யான்) உகப்பு எய்த ஆட்கொண்டருளி— எனவும் கூட்டலாம். கரு - பிறவி. கடைக்கணித்து - கடைக்கண்ணால் நோக்கி. உளம் புகுந்த திருவந்தவா - உளம் புகுந்தமையால் (பேரின்பச்) செல்வம் வந்த விதத்தை, அல்லது உள்ளத்தில் குடி கொண்ட எல்லா ஐஸ்வரியங்களுக்கும் காரணனை சிவபெருமான் வந்த விதத்தை.

(சு) வரி 1. படமெடுத்து ஆடும் பாம்பினை அரையின்கண் கட்டிய பெருமான். வரையாடு மங்கை - மலையின்மீது விளையாடிய உமா தேவியார். உரையாட......மாபாடி - சொற்கள் தடுமாறவும், மனத்தின்கண் ஞான ஒளி விளங்கவும், ஒளி பொருந்திய மலர் போன்ற கண்களில் ததும்பும் ஆனந்தக் கண்ணீர் அலை வீசும்படியும், பாடி.

(எ) ஆஆ - ஆச்சரியக் குறிப்பு. வலித்து - வலிய வந்து அல்லது இழுத்து.

பூவார் அடிச்சுவ(டு) என் தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. எ

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவ மென்றிரண் டச்சந்தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்
மறந்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. அ

கல்நா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்நகையீர்
தென்னா தென்னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. கூ

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. க0

---

(எ) பொறித்தலுமே - பதியச் செய்தலுமே. தேவானவாபாடி- தெய்வத் தன்மையடைந்த விதத்தைப் பாடி.

(அ) கறங்கு ஓலை - (காற்றில் சுழலுகின்ற) ஓலைக் கறங்கு, ஓலைக் காற்றாடி. காயப்பிறப்......அச்சம் தவிர்த்து - உடம்போடு கூடிய பிறப்பு இறப்புகளுக்குக் காரணமான நல்வினை தீவினை என்னும் இரண்டின் பயத்தை நீக்கி. வரி 3. எல்லாவற்றையும் மறந்தும், தன்னுடைய திருவடிகளைமட்டும் நான் மறவாதபடி அருள் புரிந்த அல்லது தன் திருவடிகளை எப்போதும் நினைந்து இருந்தும், நினைக்கின்றேன் என்ற தற்போத உணர்ச்சியை இழந்திருக்கும்படி அருள் புரிந்த; நினையாமல் நினைந்து என்றதுபோல்.

(கூ) பொன் ஆர் கழல் பணித்து-பொன்மயமான தன் திருவடிகளில் பணிவித்து. தென்னா தென்னா என்பது இசைக்குரிய மரபு ஒலிகளுள் ஒன்று. தென்னா என்பதை அழகனே என்று விளியாகவும் கொள்ளலாம்.

(க0) கனவேயும் - கனவிலுங்கூட. வரி 2. வளையல்கள் அணிந்த மூங்கிலை யொத்த தோளினையுடைய உமாதேவியாரோடு. வரி 3. நனவிலேயே என்னைக் கைப்பிடித்து (வலிய வந்து) ஆட்கொண்ட விதத்தை மனம் கசிந்து. "கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி, நனவிலும் நாயேற் கருளினைபோற்றி"—போற்றித் திருவகவல் (வரி 143 - 144.) சின வேல்கண்-கோபத்தோடு செல்லும் வேலையொத்த கண்; உடையவனது சினத்தை வேலுக்கு ஏற்றினது உபசாரம்.

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமும்மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. கக

முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. கஉ

பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. கந

மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. கச

---

(கக) வரி 1, 2. கயல்மீன் தன்மையினை யொத்து மாட்சிமை கொண்ட கண்ணினையுடைய உமையாள் (அங்கயற்கண்ணி) பாகன் என்னோடு அத்துவிதமாய்க் கலந்து ஆண்டவுடனே, அயலார்பாற் பற்றொழிந்து, அரியவினைத் தொடர்பும் ஒழிந்து. மயல் - மயக்கம். வாசகம் மாண்டு - பேச்சும் ஒழிந்து.

(கஉ) முத்திக்கு உழன்று - முத்தி அடைதற் பொருட்டு திரிந்து. வரி 2, (விலங்காகிய) யானைக்கும் அருள் செய்து, (கடைப் பட்ட) அடியேனையும் ஆண்டுகொண்டு. வரி 3. பேரன்பாகிய கட லுள் மூழ்கும்படிச் செய்த மேலான சோதிவடிவினனை இன்சுவை உண்டாகும்படிப் பாடி.

(கந) பார்பாடும் - நில உலகத்தார் பக்கமும். ஆர்பாடும் - வேறு எவ்வுலகினர் இடத்தும். நேர்பாடல் பாடி - நேர்மையைப் புகழ்ந்து பாட்டுகளாகப் பாடி. பாடு - பக்கம்; இடம். சீர் - புகழ்.

(கச) மாலே பிரமனே - மாலும், பிரமனும். நூலே - ஞான நூல்களும். நுழைவு அரியான் - புகுந்து அறிய முடியாதவன். பரிந்து உருக்கும் - இரங்கி மனதை உருகுவிக்கும். பாவகத்தால் - இயல்பினால். சேல் ஏர் - சேல்மீன் போலும் அழகிய.

உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. கரு

புத்தன் புரந்தரா தியயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. கசு

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. கஎ

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்(கு)
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. கஅ

---

(கரு) உருகிப் பெருகி - உள்ளம் உருகி; அன்பு பெருகி. முகந்து - மொண்டு. மருவி - அணைந்து; மூழ்கி.

(கசு) பித்தன் - (அடியவர் பால்) பேரன்பு உடையவன். அருட் கழல்கள் - திருவருள் உருவமான திருவடிகள்.

(கஎ) உவலை - பொய். ஒவ்வாத - கருத்து மாறுபாடுள்ள. கடலுளனாய்க் கிடந்து சவலை (உற்று) தடுமாறும்-கடலுள் வீழ்ந்து மெலிவுற்றுத் தடுமாறுதற்கு ஏதுவாகிய.

(கஅ) சலிப்பு அறியா - அசைவு (மாறுபாடு) ஒன்றும் இல்லாத. ஊன்கெட்டு - தசை ஒழிந்து. உயிர் - உயிர்ப்பு; சுவாசம். நான் கெட்டவா - தற்போதம் ஒழிந்த விதத்தை.

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோங்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. கக

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. உ0

திருச்சிற்றம்பலம்

---

(கக) தேவர்களுக்கு முழுமுதற் கடவுள். கீழுலகத்தவர்க்குத் தோன்றுவதற்குக் காரணமாகிய விதைபோல்பவன். மருந்து-அமுதம். வைப்பு - தேடிவைத்த நிதி. தென்னா - அழகனே.

(உ0) குலம்பாடி - சிவபெருமான் எடுத்த திரு வடிவங்களுக் குரிய வேடர் முதலிய குலத்தைப்பாடி. கோல் வளையாள் - அழகிய வளையல்களை அணிந்த உமாதேவியார். அலம்பு ஆர் புனல் தில்லை - நிறைந்து ஒலிக்கின்ற நீரையுடைய தில்லைப்பதியின்கண்.

தில்லையில் அருளிய

# திருச்சாழல்

## சிவனுடைய காருணியம்

### நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. க

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. உ

---

சாழல் - ஒருவித மகளிர் விளையாட்டு. ஒவ்வொரு பாட்டிலும் முதல் 2 அடிகள் வினா ; பின் 2 அடிகள் விடை.

(க) பொங்கு அரவம் - சீறுகின்ற பாம்பு. மறைபோலும் - வேத வாக்கியங்களே. போலும் - அசை. ஏடி - தோழியை விளிக்கும் சொல். வரி 3. இவற்றைப் பூசுவது, பூண்பது, பேசுவது ஆகிய செயல்களைச் செய்தால்தான் என்ன ? இயல்பானான் - அன்புடையவனாயிருக்கின்றான்.

(உ) ஈசன் - முழுமுதற் கடவுள். துன்னம்பெய் - கிழிந்த ; தையலையுடைய. வரி 3, 4. நிலைபெற்ற கலை நூல்களில் நிறைந்துள்ள பொருள்களைக் கொண்டுள்ள நான்கு வேதங்களையும் மேன்மையான நூலிழைகளாகக் கொண்டு செய்த கோவணத்தையே அணிந்துள்ளான்.

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. ௩

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. ச

தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தமர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. ரு

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. சா

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெலாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. எ

---

(௩) காயில் - கோபித்தால். கற்பொடிகாண் - கற்பொடிபோலத் துகளாகி அழியும்.

(ச) அனங்கன் - அங்கமில்லாதவன்; மன்மதன். அந்தகன் - யமன். வயனம் - அடையாளம்.

(ரு) எச்சன் - யாகத் தலைவன். தொக்கன - தொகுதியாக; கூட்டமாக. மிகைத்தலை - இழிவாகிய தலை; ஆட்டுத்தலை.

(சா) நிலம் முதற்கீழ் - கீழ்நிலம் முதல், எல்லாவற்றிற்கும் கீழான நிலம்முதல். அண்டமுற - அண்டமுகட்டில் பொருந்த. சலமுகத்தால் - தணியாத கோபத்தால் உண்டான.

(எ) சலமுகத்தால் - நீர் வடிவமாக. பிலமுகத்தே புக - பாதாளத்தில் புகுந்து அழுந்தும்படி.

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. அ

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. கூ

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. கo

நங்காய் இதென்ன தவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. கக

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ

---

(அ) கோலாலமாகி - பேரொலியோடு வந்து. சதுர் - திறமை. வீடுவர் - அழிவார்கள்.

(கூ) தென்பால் - தெற்கு நோக்கி. வரி 4. விண்ணுலகில் யோக நிலையடைந்து அழிவார்கள்; அவ்விடத்திலும் போகம் அனுபவிக்க மாட்டார்கள் என்றபடி.

(கo) தனை அடைந்த - தன்னைச் சரணாக அடைந்த. வரி 4. ஆகாயத்தில் (விண்ணுலகில்) சஞ்சரிக்கும் தேவர்களுக்கு ஒப்பற்ற மேலான பொருளாகும்.

(கக) தவம் - தவவேடம். கங்காளம் - முழு எலும்புக்கூடு. ஆமா - ஆகும்விதம்; வந்தவிதம். காலாந்தர.........காண் - பேரூழி முடிவில் அரி அயன் என்பவர்கள் முடிவு அடைய அவர்கள் எலும்பைத் தரித்தனன் என்றறிக.

(கஉ) உடை தலை ஊண் - உடைந்த தலைஓடு உண்ணும் பாத்திரம். காடு பதி - சுடுகாடு அவனுக்கு இருப்பிடம்.

ஆனாலுங் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. கஉ

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்றபொருள்களெல்லாங்கலங்கிடுங்காண் சாழலோ.

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்
ஊன்புக்க வேற்காளிக்(கு) ஊட்டாங்காண் சாழலோ. கச

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. கரு

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. கசு

---

(கஉ) வானநாடர் கோ - தேவேந்திரன். வழி அடியார் - பரம்பரை அடியார்கள்.

(கங) தீ வேட்டல் - மணத்தல்; தீமுன் விரும்பிய பெண்ணைக் கொள்ளுதல். வரி 4. கலைகளிற் கூறப்பட்ட எல்லாப் பொருள்களும் நிலைமாறும்.

(கச) தேன் புக்க - தேன் பெருகும். பணை - வயல். வரி 4. புலாவில் பதிந்த வேலையுடைய காளிக்கு உணவாகிவிடும். ஊட்டு - உணவு.

(கரு) கடகரி - மதத்தைச் சொரியும் யானை. பரிமா - குதிரை

(கசு) கூட்டோடே - அடியோடு; முற்றிலும். நல்லோர்களுக்கு அநுக்கிரகம் செய்தலும் தீயோர்களைத் தண்டித்தலும் இறைவன் செயல் என்று கூறப்பட்டுள்ளது.

அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென்(று) ஏத்தினகாண் சாழலோ. கஎ

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன் தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. கஅ

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏ(து)உடுத்தங் கேதமுது செய்திடினுந்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. கக

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. உ0

திருச்சிற்றம்பலம்

---

(கஎ) நண்ணுமது - ஏற்றுக்கொள்ளுவது. நம்பன் - சிவபெருமான்- நம்பினவரைப் பற்றியவன். ஆம் ஆ - ஆகும் விதம்; தேவனென்று ஏற்றுக்கொள்ளும் விதத்தை. அறியா - அறியாமல்.

(கஅ) சலமுடைய-தணியாக் கோபத்தையுடைய. வரி 3, 4. காத்தலாகிய நல்ல தொழிலைச்செய்யும் நாராயணன் தன் கண்ணைத் தோண்டிச் சிவபெருமான் திருவடிக்கண் மலராகச் சாத்தலும், சக்கரத்தை அருள்செய்தான்.

(கக) அம்பரம் - ஆடை. அம்பரம் ஆம் புள்ளித்தோல் - புள்ளிகளையுடைய புலித்தோல் ஆடை ஆகும். ஆலகால விஷத்தை அரிய அமுதம்போல் உண்ட சாமர்த்தியம். வரி 4. இவற்றையெல்லாம் செய்தது தன் பெருமையை வெளிப்படுத்த அல்ல. தன் கருணையினால் என்றபடி.

(உ0) வரி 1, 2, அரிய தவசிரேஷ்டர்களான நால்வருக்கு அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு பொருள்களையும் கல்லாலின் கீழ் இருந்து உரைத்த காரணத்தை எனக்கு அறியும்படி கூறு என்னில். திருந்த அவருக்கு - திருத்தமாக (நன்றாக) அவர்களுக்கு.

தில்லையில் அருளிய

# திருப்பூவல்லி

## மாயாவிசய நீக்குதல்

### நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. க

எந்தையெந்தாய் சுற்றம்மற்று மெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. உ

---

**திருப்பூவல்லி.**—இதில் உள்ள பாட்டுகள் பெண்கள் இறைவனுக்குச் சாத்துதற்கு மலர்களைப் பறிக்கும்போது பாடும் பாட்டுகளாக அமைந்துள்ளன. பூ அல்லி - கொடிப்பூ அல்லது அல்லிப்பூ.

(க) இணை ஆர் - ஒன்றோடு ஒன்று ஒத்த. துணையான - எனக்குத் துணை யென்று இதுவரையில் நான் கருதியிருந்த. அணை ஆர் - அணைகளை மிகுதியாக உடைய. புணையாளன் - (பிறவிக் கடலைக் கடப்பதற்குத்) தெப்பத்தைச் செலுத்துகிறவன். "இடர்க் கடலிற் சுழிக்கப்பட்டிங்கு இளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏறவாங்கும் தோணியை"—அப்பர் (பேணிய).

(உ) மற்றும் எல்லாம் - மற்றும் (எனக்கு நன்மையைச் செய்கின்ற நண்பர் முதலிய) எல்லாமாகியும். பொந்து - மரப்பொந்து. மரங்களின்மேல் கட்டியிருக்கும் தேன் கூடுகளிலிருந்து தேன் ஒழுகி மரப் பொந்துகளில் தங்கி யிருப்பதுண்டு. ஆனந்தத் தேன் இருந்த பொந்து - பேரானந்தத் தேனான சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயில்.

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. ௩

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன்எச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. ௪

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தான் உலகர்முன்னே
நானாடி ஆடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. ௫

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. ௬

---

(௩) வரி 3, 4, மாயப் பிறப்பு அறுத்து என்னை ஆட்கொண்டான். (ஆதலினால்) வல்வினையின் வாயில் பொடி அட்டி (மண்ணைப் போட்டு) பூவல்லி கொய்வோமாக.

(௪) பண்பட்ட - வளப்பம் பொருந்திய, அல்லது பாட்டுக்களால் புகழப்பட்ட. எண்பட்ட - மதிப்பு இழந்த. விண்பட்ட - ஆகாயத்தினின்றும் இழிந்த. புண்பட்டவா - அடியுண்டு காயப்பட்ட விதத்தை.

(௫) தேன்நாடு - வண்டுகள் நாடுகின்ற. ஊன் நாடிநாடி - என் ஊனாலாகிய சரீரத்தை விரும்பி வந்து.

(௬) எரி மூன்று தேவர் - காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி என்னும் முத்தீயை வேட்கும் தேவர் (பெரியோர்). சிரம் மூன்று அற - தக்கன், எச்சன், பிரமன் ஆகிய மூவரின் தலைகள் அற்று விழ. உரு மூன்று - மூன்று வடிவம். அருவம், அருவுருவம், உருவம்.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கோ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. எ

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. அ

பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்னாகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கல்நா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. கூ

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. கO

---

(எ) வரி 1. தன்னை வணங்குதற் பொருட்டுத் தலையினைக் கொடுத்து,நீண்ட சிலம்பு அணிந்த திருவடிகளை வாழ்த்தும் பொருட்டு வாயினை அமைத்து. அணங்கு - தெய்வப்பெண் (உமாதேவியார்). குணம் கூர - அருட்குணங்களை மிகுதியாக.

(அ) நெறி செய்தருளி - எனக்கு உய்யும் நெறி (வழி) யைக் காட்டி அருள்செய்து. பொன் அடிக்கே குறிசெய்து - அழகிய திருவடிகளுக்குத் தொண்டு செய்தலையே இலட்சியமாகச்செய்து. வரி 3. நம்மை அடிமைப்படுத்தித் துன்பத்தில் மூழ்கச் செய்யும் பழைய வினையைத் தொலையச்செய்த.

(கூ) வரி 1, 2. பல காலங்களாக வணங்கித் தொண்டு செய்ததின் பயனாகத் தன் திருவடியாகிய தாமரையை (திருவருளை) என் உடல் முழுமையும் நிறையச்செய்த (யாவர்க்கும்) மேலானோன். வரி 3. கல்லினின்றும் நார் உரிப்பதுபோல் கல்போன்ற மனத்தேனைப் பக்குவப்படுத்தி அடிமை ஆக்கிக்கொண்டான். செயற்கரிய செய்கை செய்தான் என்றபடி.

(கO) வரி 1. பேராசை காரணமாக உண்டாகின்ற இந்த உடம்போடு கூடிய பிறவி ஒழிய. பிண்டம் - உடல். கார்ஆர் - கருமை மிக்க. காபாலி - கபாலத்தை யுடையவன். போர் ஆர் புரம்பாடி - முப்புரங்களைப் போர்செய்து அழித்த விதத்தைப் பாடி.

பாலும் அமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. கக

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெயப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ. கஉ

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார வத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. கங

படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்

---

(கக) உடனும் பராபரமாய்-ஒருங்கு சேர்ந்தாற்போன்று மிக இனியதும், மிக மேம்பட்டதுமான பொருளாய். வரி 2, 3, 4. தன் அழகிய வடிவினால் மனதைக் குளிரச் செய்து, என் மனதைக் கவர்ந்த (தன் வசப்படுத்திய) பெருமானுடைய ஒலிக்கின்ற சிலம்புகள் அணிந்த திருவடிகள் (திருவருள் நெறி) தான் உலகத்தாரால் போற்றப்படும் பெரியோர் காட்டிய நல்ல நெறி (வழி) ஆகும். அத்திருவருள் நெறியைப் போன்ற, அவனுடைய புகழ்களைப்பாடிப் பூவல்லி கொய்வோமாக. போலும் என்பதை அசையாகக் கொண்டு, அந்நெறியே சென்று, அவனுடைய புகழைப் பாடி—என்னலுமாம்.

(கஉ) வானவன் - தேவர் தலைவன், இந்திரன். கூடல் இலாக் குணக்குறியோன் - (இயற்கையாகவே) குணம் குறி ஒன்றும் கூடாதவன். நெடுங்கடல் ஆன ஆலாலம் - பெரிய கடலில் உண்டான ஆலகால விஷம். அமுதுசெய்ய - உண்ண. போனகம் - உணவு.

(கங) ஆர வத்தும் - நிரம்ப (மனப் பூர்த்தியாக) துதிக்கும். பொன்தாது - பொன்னிறமான மகரந்தப் பொடி.

(கச) வரி 1. என் உள்ளத்தினுள்ளே எழுதிய சித்திரம்போல் தன்னுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் நிலைபெறச்செய்து என் மனமே கோயிலாகக் கொண்டு.

தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. கச

அங்கி அருக்கன் இராவணன்அந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. கரு

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. கசு

முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாகம் உள்புகுந் தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. கஎ

---

(கச) தடம்ஆர் மதில் தில்லை - நீர்த் தடாகங்களும் பெரிய மதில்களும் உடைய தில்லைப்பதியின்கண்.

(கரு) பங்கம் இல் - வெட்கம் இல்லாத. பரிசு அழியப் பொங்கிய சீர்பாடி - தங்கள் மதிப்புக் கெடும்படி இறைவன் கோபத்தினால் செய்த புகழ்ச் செயல்களைப் பாடி.

(கசு) வரி 1. வலிமைமிக்க போர் செய்யவல்ல இடபத்தை வாகனமாகவுடையவன். சிவபுரத்திலுள்ள அடியவர்களைக் காக்கும் போரில் வல்ல ஆண் சிங்கம் போன்றவன். மண்பால் - பூவுலகின்கண். தண்டு - பிரம்பு. தன்னைப் பாண்டியன் தண்டாலே பணிகொண்ட புண்பாடல் பாடி - தன்னைப் பாண்டியன் பிரம்பால் அடித்துவேலை கொண்டு அடிபட்டதால் உண்டான புண்ணைப்பற்றிய பாடல்களைப்பாடி.

(கஎ) முன்னாய - (தேவர்களுள்) முதன்மையானவராகிய. தானவர் - அசுரர். திருவடி போற்றுவதே தாம் அறியார் - திருவடிகளை எவ்வாறு வணங்குவதென்று அறியார்கள் அல்லது திருவடிகளைத் தாம் அறியமாட்டார்கள்; அவற்றை நாம் எவ்வாறு அறிந்து வணங்குதல் கூடும். என் ஆகம் - என் உடம்பு. இலங்கு அணியாம் பல் நாகம் - விளங்குகின்ற ஆபரணமாகிய பல பாம்புகள்.

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. கஅ

அத்தி யுரித்ததது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. கசு

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. உ0

திருச்சிற்றம்பலம்

---

(கஅ) ஆராத ஆசையதாய அடியேன் - அடங்காத (மேலும் மேலும் உண்டாகும்) ஆசையுடையவனுகிய அடியேன். நடம் செய் பேரானந்தம் - நடம் செய்வதனுல், தரிசிப்பவர்க்கு உண்டாகும் பேரானந்தம்.

(கசு) வரி 1. யானையை உரித்து அதன் தோலைப்போர்த்து அருள் செய்கின்ற. இவ்வுலகிற்பிள்ளை...முதல் - இவ்வுலகின் கண்ணே குழந்தை வடிவத்தோடும் வருவான். வீடுபேற்றை அளிப்பதில் வேறு எவருக்குமில்லாத சர்வ சுதந்தரமுள்ளவன். புத்தி புகுந்தவா - அறிவினுட் கலந்த விதத்தைப் பாடி.

(உ0) மா ஆர ஏறி - குதிரைமீது நன்ருகப் பொருந்தும் படி ஏறி. தேவு ஆர்ந்த கோலம் திகழ - தெய்வத்தன்மை நிறைந்த திருவுருவம் விளங்க.

தில்லையில் அருளிய

# திருவுந்தியார்

## ஞானவெற்றி

### கலித்தாழிசை

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. க

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. உ

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற. ங

---

(க) பூசல் - போர். உளைந்தன - அழிந்தன. உந்தீபறத்தல் மகளிர் விளையாட்டு.

(உ) ஏகம்பர் தம் கையில் இரண்டு அம்புகளை நாம் பார்க்கவில்லை. ஒரு அம்புதானே முப்புரங்களையும் எரியச் செய்தது. சிரித்துப் புரம் எரித்தமையால் அந்த ஒரு அம்பு கூட மிகை (அநாவசியம்) ஆயிற்று.

(ங) தச்சு விடுத்தலும் - தேவர்கள் தேரினைச் செய்து முடித்து விட்டவுடன். தாம் அடி இட்டலும் - தமது திருவடியைத் தேரின் மேல் வைத்தவுடன். அழிந்தன முப்புரம் - (ஆயினும்) முப்புரங்கள் (நகையால்) எரிந்தன.

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற. ௪

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற. ௫

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற. ௬

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற ௭

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. ௮

---

(௪) வரி 1, 2. முப்புரங்களில் உள்ள அசுரர்களில் உய்தி கூடத் தகுதியுடையவர் மூவர்களைக் காப்பாற்றி மற்றையோர்களை அழிக்க வல்லானுக்கு.

(௫) வரி 1. (வீரபத்திரர்) தாக்கியவுடன் யாகமானது நிலை கெட. ஓடியவா - ஓடின விதத்தை. உருத்திரநாதன் - உருத்திரர்கள் தலைவணுகிய சிவபெருமான்.

(௬) திருமால் தக்கன் வேள்வியில் அவிர்ப்பாகம்கொண்ட காலையில் வீரபத்திரரால் அடியுண்டு மூர்ச்சித்து உயிர் மாத்திரம் போகாதிருக்கப்பெற்றான். ஆவா - ஐயோ, இரக்கக்குறிப்பு.

(௭) வெய்யவன் அங்கி - (எல்லாவற்றையும்) தகிக்கும் ஆற்றலுடைய அக்கினிதேவன்.

(௮) உமாதேவியாரை இகழ்ந்து பகைச் சொற்களைச் சொன்ன தக்கனை. பகை - பகை மொழி. ஏடி பார்ப்பதென்னே - பெண்களே பார்ப்பதால் யாது பயன்? (பார்த்தல் கூடாது.)

புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோனென்றே உந்தீபற. ௯

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. ௧0

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. ௧௧

உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற. ௧௨

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகன்னெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. ௧௩

நான்மறை யோனும் மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியி லுந்தீபற. ௧௪

---

(௯) புரந்தரன் - இந்திரன்.

(௧0) வெம்சின வேள்வி வியாத்திரனார் - சிவபெருமானுக்குக் கொடிய கோபத்தை விளைவித்த தக்கன் யாகத்திற்குக் குருவான எச்சன். துஞ்சினவா - அறுபட்டவிதம்.

(௧௧) விதி - சிறுவிதி, தக்ஷன். விதி - பிரமனுக்குப் பெயர். அவன் மகன் தக்ஷனுக்குச் சிறுவிதி என்று பெயர்.

(௧௨) கருக்கெட - நமது பிறவி ஒழியும்படி.

(௧௩) சரஸ்வதியின் மூக்கறுபட்டதையும் பிரமன் தலையில் குட்டுப் பட்டதையும் சந்திரன் முகத்தை நெரித்ததையும் பாடி. தொல்லை வினை - பழவினை ; சஞ்சிதம்.

(௧௪) மகத்து இயமான் - யாகத்திற்கு எஜமான்; தக்கன். பட - தண்டனை அடைய. வேள்வியில் புரந்தரன் (இந்திரன்) போம்வழி தேடுமாறு (தப்பியோடும் வழியைத் தேடும் விதத்தைப் பாடி).

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. கரு

தக்கனு மன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற. கசு

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற. கஎ

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற. கஅ

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற. ககூ

ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற்கப்பா லுங் காவலென் றுந்தீபற. உ0

திருச்சிற்றம்பலம்

---

(கரு) தொண்டை வாய் - கொவ்வைக் கனிபோற் சிவந்தவாய். வாரி நெரித்தவாறு - உதிரும்படி உடைத்தவிதம். மயங்கிற்று - கலங்கியது.

(கஎ) பாலகன் - உபமன்யு முனிவர். கோலச்சடையன் - அழகிய சடைமுடியையுடைய சிவபெருமான்.

(கஅ) ஒல்லை - விரைவாக. உகிர் - நகம்.

(ககூ) மலை எடுத்தான் - மலையைத் தூக்கிய இராவணன்.

(உ0) ஏகாசம் - மேற்போர்வை.

தில்லையில் அருளிய

# திருத்தோணோக்கம்

## பிரபஞ்ச சுத்தி

### நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம். க

என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ. உ

---

தோணோக்கம் - ஒருவித மகளிர் விளையாட்டு.

(க) பூத்து ஆரும் - பூக்கள் மலர்ந்து நிறைந்துள்ள. பேய்த்தேர் முகக்குறும் - கானல் நீரை மொண்டு கொள்ள விரும்பும். பேதை குணம்......தோணோக்கம் - அறியாமைக் குணம் மேவிடாமல், உன் (தாமரை போலும்) சிவந்த திருவடியைக் கூடும் வண்ணம் தோணோக்கம் ஆடுவோமாக. தீர்த்தாய் - தீர்த்தனே ; புனித தீர்த்தமா யிருப்பவனே. கானல்நீரை உண்மையான நீரெனக் கருதும் அறிவின்மை போலத் துன்பம் நிறைந்துள்ள உலக போகங்களை மெய்யெனக் கருதும் அறிவின்மை நீங்கி, உன் சேவடியைக் கூடிப் பேரின்பம் அனுபவிக்கும் நோக்கத்துடன் தோணோக்கம் ஆடுவோமாக.

(உ) ஆழாமே - (துன்பத்தில்) அழுந்தாமல். கன்றால் விளவெறிந்தான் - கன்றுக் குட்டியைத் தூக்கி எறிந்து விளாங்கனியைப் பறித்த திருமால். துன்றுஆர் குழலினீர்-நெருங்கி நிறைந்த கூந்தலையுடைய பெண்களே.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ. ங

கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ. ச

நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகேழெனத் திசை பத்தெனத் தானொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ. ரு

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்க மாடாமோ. சு

---

(ங) பொருள்பற்றி - (பூசைக்குரிய) பொருள்களைக் கொண்டு. வரி 2, 3, 4. வேடர் குலத்திற் பிறந்த கண்ணப்ப நாயனாருடைய செருப்போடு கூடிய சிறந்த பாதங்கள், வாயாகிய குடம், புலால் உணவு ஆகிய இவற்றினிடத்து சிவபெருமான் விருப்பம் வைத்து, கண்ணப்ப நாயனாரின் அன்பினை அறிந்து உடல் குளிர்ந்து அவ்விடத்தே அருளை ஈன்று நின்ற (வெளிப்படுத்திய) விதத்தைப் பாடித் தோணோக்கம் ஆடுவோமாக. "அருளென்னும் அன்பீன் குழவி"—குறள்.

(ச) நற்பாற் படுத்து - நன்னெறியிற் புகுவித்து. சொற்பால தானவா - எல்லாரும் பாராட்டிப் பேசும்படியான விதமானதைப் பாடி.

(ரு) உயிர் - காற்று. புலனாய மைந்தன் - அறிவுடன் கூடிய ஆன்மா.

(சு) புல்லறிவிற் பல் சமயம் - அற்ப அறிவுடன் கூடிய பல சமயத்தினர். வரி 2, 3, 4. தங்கள் தங்கள் கொள்கைகளில் தடுமாற்றம் அடைந்து நிற்க, என் மனதைச் சிவமயமாக்கி, அதனால் என் செயல்களை யெல்லாம் தவச்செயல்களாகச் செய்யும் அப்பன் கருணையினால் தோணோக்கம் ஆடுவோமாக.

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். எ

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம். அ

எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம். கூ

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கர(ம்)மாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்க மாடாமோ. கO

---

(எ) வரி 1, 2. குற்றம் சிறிதுமில்லாத பிரமசாரியாகிய சண்டேச நாயனாரது சிவபூசையைக் கெடுத்தவன், குலத்தால் வேதியனென்றும் முறையால் தனக்குத் தந்தை என்றும் பாராமல், அவனது இரண்டு கால்களையும் வெட்டவே. வரி 4. சண்டேச நாயனார் செய்த பாவச் செயலே சிவபெருமானுக்கு நிவேதித்த சோற்றை அளித்த விதத்தைப் பாடி... "அண்டர் பிரானும்......அனைத்தும் நாம், உண்ட கலனும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச், சண்டீசனுமாம் பதம் தந்தோம்"—பெரியபுராணம். முன் பாட்டில் கூறிய "செய்தனவே தவமாக்கும்" என்பதற்கு உதாரணமாக இச்செய்யுள் அமைந்துள்ளது.

(அ) வரி 1. செருக்கு அழியப்பெற்றோம், தற்போதம் கெடப்பெற்றோம். வானம் - வானவர்.

(கூ) வரி 1. (திரிபுரம் எரியுற்ற போது) மதிப்புடைய திரிபுரத்தசுரர் மூவர், அதில் அகப்படாமல் தப்பி. கடைத்தலை - தலைவாயில். நின்றதற் பின் - காவலாளர்களாக நின்றதன் பிறகு. மண் மிசை மால் - மண்ணுலகை உண்ட திருமால்.

(கO) பங்கயம் - தாமரை. இடந்து - தோண்டி. அருளியவாறு - அருள் செய்த வரலாற்றை. பரவி - புகழ்ந்து பேசி.

காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணேக்க மாடாமோ. கக

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணேக்க மாடாமோ. கஉ

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணேக்க மாடாமோ. கந

---

(கக) **உரை நடை** - காமன் உடல், காலன் உயிர், காய்கதிரோன் பல், நாமகள் நாசி, பிரமன் சிரம், எரியைக் கரம், சோமன்கலை, தக்கனையும் எச்சனையும் தலை. வரி 4. குற்றம் செய்தமைக்காக இவைகளைப் போக்கி அவர்களைப் பரிசுத்தப்படுத்திய விதத்தைப் பாடி... இறைவன் உயிர்களைத் தண்டித்தல் அவைகளின் மலத்தைப் போக்கிப் பரிசுத்தம் செய்யும் பொருட்டே.

(கஉ) வரி 2. நாமே மேலான பரம் பொருள் என்று வாதிட்டவர்கள் நெஞ்சுத் துடிப்பு (செருக்கு) அழிய. அளவு இறந்து - எல்லையைக் கடந்து. பரமாகி - மேலான பொருளாகி.

(கந) ஏழைத் தொழும்பன் - அறிவில்லாத அடியவன். பாழுக் கிறைத்தேன்-பயிருக்கு நீர் இறைக்காமல் வெட்டவெளியில் இறைத்தால் ஒரு பயனும் இல்லாததுபோல,காலத்தை வீணாகக் கழித்தேன். ஊழி - படைப்பு முதல் ஒடுக்கம் வரையில் உள்ள காலம். அதற்குத் தலைவன் சிவபெருமான் ; என்றும் மாறுபடாதவன். சிந்தாத - கெடாத. தாழ் - அடிப்பாகம் ; வேர். பறித்தவா - பிடுங்கி எறிந்த விதத்தைப் பாடி.

உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ. கச

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# திருப்பொன்னூசல்

## அருட்சுத்தி

ஒப்புமை பற்றி வந்த
ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன்அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்(கு)
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ. க

---

(கச) உரை மாண்ட - சொல்லின் அளவைக் கடந்த. கரை மாண்ட காமம் - கரையில்லாத (எல்லையற்ற) உலகப்பற்று. வரி 3. ஐம்பொறிகளாகிய பறவைகள் என்னிடத்து அவைகளுக்கு உணவு கிடையாமையால் தோல்வியுற்று ஓட. துரை - துறை; தங்குமிடம். மாண்டவா - போனவிதம்.

(க) பவளம் கால்களாகவும், முத்துவடம் கயிறாகவும். ஊர் - இருப்பிடம். ஆரா - தெவிட்டாத. அருள்தாளிணை - அருளாகிய இரண்டு திருவடி. போரார் வேல் - போரில் வல்ல கூரிய வேலை யொத்த. ஊசல் - ஊஞ்சல்.

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான் தங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன் தங்(கு) இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன் றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ. உ

முன்னீறும் ஆதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்கள் தாம்நிற்பத்
தன்நீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. ௩

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ. ச

---

(உ) அங்கு - அசை. குல மஞ்ஞை - உயர்ந்த ஜாதி மயில். அ(ன்)ன நடையீர் - நடையால் அன்னத்தை ஒத்த பெண்களே.

(௩) முன் - நினைக்கின்ற. தன்நீறு - தன்னுடைய (திருவருட் பேற்றிற்கு அறிகுறியாகிய) திருநீற்றினை. மன் ஊற மன்னும் - நான் நிலைபெற்று ஊறிக் கிடக்கும்படி வீற்றிருக்கும். மாட வியன் மாளிகை - மேல் அடுக்குள்ள பெருமை மிக்க பெரிய வீடுகள். பொன் ஏறு பூண்முலையீர் - பொன்னாற் செய்த ஆபரணங்கள் அணிந்த முலையீர். அல்லது ஆபரணங்கள் அணிந்த பொன்னிறம் பொருந்திய தேமல் படர்ந்த முலையீர்.

(ச) மஞ்சுதோய் - மேகங்கள் தவழும்படி உயர்ந்த. அமுதம் ஊறிக் கருணை செய்து - பேரின்பம் சுரக்கும்படி அருள் செய்து. துஞ்சல் - இறப்பு. புஞ்சம் ஆர் - கூட்டமாய் மிகுதியான.

ஆனோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோனார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ. ரு

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. சு

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையும்ஆட் கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. எ

---

(ரு) இருவர் - அயன் மால். நாணாமே-அஞ்சாமல். கோண் ஆர்-வளைவு பொருந்திய.

(சு) மாது ஆடு - உமாதேவியார் பொருந்திய. தாது ஆடு கொன்றை - மகரந்தப்பொடி நிறைந்த கொன்றை மலர், கோதாட்டி-சீராட்டி. தீதோடா வண்ணம் - தீமை விளையாதபடி. திகழ - நான் (மலமாகிய மாசு ஒழிந்து) விளங்கும்படி. போது ஆடு - தாமரை மொக்கு போன்ற உருவத்துடன் அசையும் தன்மையுடைய.

(எ) பன்னிப் பணிந்து இறைஞ்ச - பலகாலும் சொல்லித் தாழ்ந்து வணங்க. பாவங்கள் பற்று அறுப்பான் - பாவங்களின் பிடிப்பை ஒழிப்பான். "பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்"—அப்பர். மயில்போல் என்பதை பொன்னூசல் ஆடாமோ என்பதுடன் கூட்டுக. அன்னம் ஊஞ்சலுக்கு உவமை.

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூவித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ. அ

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. கூ

திருச்சிற்றம்பலம்

(அ) வரி 1, 2, 3. அழகிய கைலைமலைச் சிகரத்தினின்றும் சிவபெருமான் இந்நிலவுலகின்கண் வந்து, அடியார்கள் அன்பு என்னும் அமுதத்தை மிகுதியாக உண்டு, தாழ்ந்த கடலைப்போன்ற பரிவாரங்களுடன் எழுந்தருளி வந்து, இப்பூவுலகம் மேம்பாடு அடையும்படி, குதிரையின் மேல் ஏறிக்கொண்டு நம்மை ஆட்கொண்டவனாகிய சிவபெருமான். சீலம் திகழும் - ஒழுக்கத்தால் மேம்பட்டு விளங்கும். பூவித்து - உடல் பூரித்து.

(கூ) தெங்கு உலவு சோலை - தென்னைமரங்கள் காற்றினால் உலவுவது போல் காணப்படும் சோலை. வரி 2. திருஉத்தரகோச மங்கையில் தங்கியிருக்கும் ஒளிமயமான ஒப்பற்ற திருவுருவம் வந்தருளி. எந்தரமும் ஆட்கொள்வான் - எம்மைப் போன்ற தகுதியற்றவரையும் ஆட்கொள்ளும் பொருட்டு. வரி 4. ஒரு பாகத்தில் இடங்கொண்ட மங்கையும் தானுமாகத் தோன்றி என் குற்றேவலைக் கொண்ட. பூண் உலவு பொங்கு முலையீர் - நகைகள் உலவுகின்ற பூரித்த முலையினையுடையீர்.

தில்லையில் அருளிய

# அன்னைப்பத்து

## ஆத்தும பூரணம்

### கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும். க

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின் றுருக்குவர் அன்னே என்னும்
உள்நின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும். உ

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னுஞ்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும். ௩

---

இப்பாட்டுகள் சிவபெருமான்மீது காதல் கொண்ட ஒரு பெண் தன் தாயிடத்துக் கூறுவதாக இயற்றப்பட்டுள்ளன.

(க) வேதமொழியர் - அவர் வாயினின்று வரும் சொற்கள் எல்லாம் வேத வாக்கியங்களாகும். நாதப் பறையினர் - நாத தத்துவத்திடத்து ஒலிக்கும் ஓங்கார ஒலியே பறை முழக்கமாக உடையவர். அன்னே - தாயே...விளி. என்னும் - என்று சொல்லுவாள்.

(உ) கண் அஞ்சனத்தர் - கண்ணில் மை தீட்டப் பெற்றவர். உலப்பிலா - அழிவில்லா. ஆல் - அசை.

(௩) நித்த மணாளர் - என்றும் மணவாளனா யிருப்பவர். அத்தர் தலைவர். ஆனந்தர் - ஆனந்தத்தைத் தருபவர்.

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுவென்னே அன்னே என்னும். ச

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும். ரு

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும். சு

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும். எ

---

(ச) வரி 1, 2. ஆடு அராப் பூண்(ஆடும் பாம்பாகிய ஆபரணமும்) புலித்தோலுடையும் திருநீறாகிய பொடியையும் பூசிக்கொண்ட ஒரு ஒப்பற்ற வேடம் இருந்தவாறு என்ன ஆச்சரியம்! அரா என்பது அரா என்று குறுகியது. இருந்தவா(று) - இருந்தவிதம்.

(ரு) நெறிதரு குஞ்சியர் - ஒழுங்காகிய சடையை உடையவர். பரந்தெழு...செய்வர் - அலைந்து திரியும் மனதை ஒருமுகப்படுத்தி (என்னை அடிமைகொண்டு)தன்னிடத்து அன்புடையதாகச் செய்வர்.

(சு) மன்னுவது - நிலைபெற்றிருப்பது. வரி 3, 4. (பெரிய தேவர்களாகிய) திருமால், அயனுலும் காணமுடியாதவர், (சிறியேனு கிய) என் மனதில் நிலைபெற்றிருப்பது என்ன ஆச்சரியம் தாயே! என்பாள்.

(எ) வரி 1. வெண்மையான ஆடையைத் தரித்தவர். வெண் ணிறமான திருநீற்றைத் திரிபுண்டரமாக அணிந்தவர்; அல்லது, வெண்மையான திருநீற்றை நெற்றியில் அணிந்தவர். பள்ளிக் குப் பாயத்தர் - அறச்சாலைக்குரிய சட்டையை அணிந்தவர்.

தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும். அ

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையுமிது வென்னே அன்னே என்னும். கூ

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும். க0

திருச்சிற்றம்பலம்

---

(அ) தாளி அறுகினர் - தாளியறுகம் புல்லினுல் தொடுத்த மாலை அணிந்தவர். அடிகள் - கடவுள் ; தலைவர் ; குரு.

(கூ) தாபத வேடத்தர் - தவவேடம் பூண்டவராய். ஐயம் புகுவர் - பிச்சை எடுப்பார்.

(க0) கூவிளம் - வில்வ பத்திரம். மத்தம் - ஊமத்தம்பூ. துன்றிய - நெருங்கிய. உன்மத்தம் - (காதலால் உண்டாகும்) புத்தி தடுமாற்றம்.

தில்லையில் அருளிய

# குயில் பத்து

## ஆத்தும விரக்கம்

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில் பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
ஆதிகுண மொன்று மில்லான் அந்தமிலான் வரக்கூவாய். க

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாம்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய். உ

---

**குயிற்பத்து** - குயிலினைப் பார்த்து சுவாமிகள் கூறுவதாக அமைந்துள்ளது இப்பதிகம்.

(க) கீதம் - இசை. கேட்டி ஏல் - நான் சொல்வதைக் கேட்பாயாக. வினவில் - எங்குள்ளதெனக் கேட்டால். வரி 3. ஒளி பொருந்திய அழகிய திருமுடி எங்குள்ளதென்று சொல்லப்புகின் சொல்லின் அளவைக் கடந்து நின்ற தொலைவிலுள்ளது. தொன்மை-தூரம். தொலைமை விகாரப்பட்டு தொன்மை என்றாயிற்று.

(உ) வரி 1. அழகுடன் விளங்கும் ஏழுலகங்களிலுள்ள மாந்தர் அனைவரும் துதிக்க எவ்வகை உருவங்களும் தன் உருவமாக உடையவனாய். ஆர்கலி - நிறைந்த முழக்கமுடைய கடல். வண்டோதரி - இராவணன் மனைவி. பேரருள் இன்பமளித்த - பேரருளினால் இன்பத்தைக் கொடுத்த.

நீல வுருவிற் குயிலே நீள்மணி மாடம் நிலாவுங்
கோல அழகில் திகழுங் கொடிமங்கை உள்ளுறை கோயிற்
சீலம் பெரிதும் இனிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயக னைவரக் கூவாய். ௩

தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேள்நீ [ல்
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்டவள்ள
ஊன்பழித் துள்ளம் புகுந்தென் உணர்வது வாயவொருத்தன்
மான்பழித் தாண்டமெல் நோக்கி மணாளனை நீவரக் கூவாய்.

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய். ௫

இன்பந் தருவன் குயிலே ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்

---

(௩) வரி 3, 4. நல்லொழுக்கத்தால் மிகவும் இன்பத்தோடு கூடிய திருவுத்தரகோசமங்கைப்பதியில் உலகத்தார்க்கு அறிவு விளக்கம் உண்டாகும்படி வீற்றிருந்த தலைவனை வரும்படி அழைப்பாயாக. மாடம் நிலாவுவதும், கோயிலை (உடையதும்), இனியதும் ஆன திருவுத்தரகோசமங்கை என்று கூட்டுக.

(௪) தேன் பழச்சோலை பயிலும் - தேன்போலும் இனிய பழங்களையுடைய சோலைகளிற் பழகும். வான் பழித்து - தேவலோகத்தில் உள்ளவர்களை ஆட்கொள்ளக் கருதாது இகழ்ந்து. வரி 3. என் உடம்பினை இகழ்ந்து, என் நெஞ்சினுட் புகுந்து, என் அறிவினுள் அத்துவிதமாய்க் கலந்த ஒப்பற்றவன்.

(௫) சுடர் சூழ் ஞாயிறு - ஒளிக் கிரணங்களால் சூழப்பட்ட சூரியன். அந்தரம் - ஆகாயம். வரி 3. உலகத்தைப் படைத்தல் காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்திகளும் அறியாத. சிந்துரம் - சிவப்பு (நிறமுடைய).

(௬) குயிலே, இன்பம் தருவன் - குயிலே! நான் உனக்கு இன்பத்தைக் கொடுப்பேன். ஆளி - ஆள்பவன். அமுது - ஞானமாகிய அமுதம். ஊறும் ஆனந்தன் - அடியார்கள் உள்ளத்தே ஊறுகின்ற ஆனந்தவடிவமாயிருப்பவன்.

நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய். சு

உன்னை உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்.

வாஇங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி
ஓவியவ ருன்னி நிற்ப ஒண்தழல் விண்பிளந் தோங்கி
மேவிஅன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன்வரக் கூவாய். அ

காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்தில் திகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய். கூ

கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தமராம் இவனென்றிங் கென்னையும் ஆட்கொண் டருளுஞ்
செந்தழல் போல்திரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.

திருச்சிற்றம்பலம்

---

(சு) நன்பொன் மணிச் சுவடு ஒத்த - நல்ல பொன்னில் மணிகளைப் பதித்தாற் போன்ற அடையாளங்களையுடைய. கொம்பின் மிழற்றும் - மரக்கிளைகளின் மேல் நின்று இசைபாடும்.

(எ) உகப்பன் - விரும்புவேன். பொன்னை அழித்த - ஒளியினால் பொன்னைத் தோற்கும்படி செய்த. புயங்கன் - பாம்பை அணிந்தவன்.

(அ) குயிற் பிள்ளாய் - இளங்குயிலே. ஓவி - (தேடுதல்) ஒழிந்து. உன்னி - ஆலோசித்து. நிற்ப - நிற்கும்படியாக.

(கூ) கார் உடைப் பொன் திகழ் மேனி-கரிய நிறத்தொடு பொன்னைப்போன்று ஒளி விளங்கும் உடம்பை உடைய. ஆர் உடை - ஆத்திமலர் அணிந்த.

(க0) கொந்து அணவும் - பூங்கொத்துகள் நெருங்கிய. கூங்குயில் - கூவுங் குயில். தமர் - உறவினர்; அன்பர்.

தில்லையில் அருளிய

# திருத்தசாங்கம்

## அடிமை கொண்ட முறைமை

### நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று. க

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதனமை ஆளுடையான் நாடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி. உ

---

அரசனது பத்து உறுப்புக் கூறும் திருப்பதிகம். அவையாவன:—தலைவனது நாமம், நாடு, பதி, ஆறு, மலை, வாகனம், ஆயுதம், முரசு, தார், கொடி என்பனவாம்.

(க) தேர்ந்து - ஆராய்ந்து, தெளிந்து. வரி 3, 4. சிவந்த மேனியையுடைய உருத்திரமூர்த்தி, வெண்தாமரை மலர்மேலிருக்கும் பிரமன், பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமால் சொல்லுவது போல், ஆரூரனாகிய எம்பெருமானைத் **தேவர் பிரான்** என்று பெருந்துறைக்கோன் சீரார்(சிறப்பு மிக்க) திருநாமத்தை ஆராய்ந்து உரைப்பாயாக. "ஆதிமூர்த்திகட் கருள்புரிந்தருளிய தேவதேவன் திருப்பெயராகவும்" என்று கீர்த்தித் திருவகவலில் (121, 122.) வருதல் காண்க. சிவபெருமான் திருநாமம் தேவர்பிரான் அல்லது தேவதேவன் என்று கூறப்பட்டுள்ளது.

(உ) ஏதம் - குற்றம். மரகதமே - மரகதம் போன்ற பச்சைக் கிளியே. பொழில் - உலகம். அன்பு ஆண்டு - அன்பினால் (கருணையினால்) ஆட்கொண்டு. மீளா அருள்புரிவான் - பிறவிக்கு மீண்டுவாராமல் அருள் செய்பவன். நாடு - பாண்டி நாடு.

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர். ங

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு. ச

கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய்—நெஞ்சத்
திருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து. ரு

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வ(து)என்னே—எப்போதும்

---

(ங) தத்தாய் - கிளியே. பதி (ஊர்) - உத்தரகோச மங்கை.

(ச) வரி 1. சிவந்த வாயினையும் பசிய (பச்சை நிறமுடைய) சிறகினையும் உடைய செல்வக்கிளியே! செல் - பறந்து செல்கின்ற. வீ - பறவை. உடையான் ஆறு மலம் கழுவ வான் வந்த சிந்தை வந்து இழியும் ஆனந்தம் காண் - நம்மை ஆளாக உடையவனுடைய ஆறனது நம்முடைய பாசங்களைக் கழுவும் பொருட்டு, பெருமை பொருந்திய மனத்தினிடத்து வந்து பாயும் **பேரானந்தம்** என்று அறிக.

(ரு) கிஞ்சுகம் - முருக்கம் பூ. அஞ்சுகம் - கிளி. மஞ்சன் - அழகன். இருள் - அறியாமை. வாள்வீசி - ஞான ஒளி பரப்பி. இன்பத்தோடு கூடிய முத்திப் பேற்றை அருளும்படியான **அருள் மலை** என்று ஆராய்ந்தறிக. "மன்னிய திருவருள் மலையே போற்றி" என்று **போற்றித் திருவகவலிலும்** (வரி 128) "இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தி அருளியபெருமை அருள் மலையாகவும்" என்று **கீர்த்தித் திருவகவலிலும்** (வரி 123, 124) வருதல் காண்க.

(சு) என் கிளியே இப்பாடே (இப்பக்கமே) வந்து இயம்பு (சொல்) கூடு புகல் (புகாதே). ஒப்பு ஆடா - ஒப்பு இல்லாத.

தேன்புரையுஞ் சிந்தையராய்த்தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரும் மகிழ்ந்து. ௬

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்—ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கோள் படை. ௭

இன்பான் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய்—அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. ௮

ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரேன்—தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார். ௯

---

(௬) தேன்புரையும் சிந்தையராய் - தேன்போலும் இனிய (ஆனந்தம் குடிகொண்ட) சிந்தையுடையவராய். ஆன் புரவி-இடபம் ஆகிய குதிரை அல்லது வான்புரவி - சிதாகாசம் ஆகிய குதிரை.

(௭) கோல் தேன் - கொம்புத் தேன். கிள்ளாய் - கிளியே. ஏற்றார் - தன்னை இரந்த அடியவர். வரி 3, 4. அவர்மேல் மும்மலங்கள் சேராதபடி அவர் மனத்தை உருகச்செய்து அம்மலங்கள் மீது பாய்ந்து அவைகளை ஒழிக்கும்படியான சூலாயுதம்.

(௮) இன்பால் மொழிக்கிள்ளாய் - இனிய பால் போன்ற சொல் லுடைய கிளியே! அன்பு - இறைவன் திருவருள். அன்பு - பறை யடிக்கும் கோல். பேரின்பம் - பறையினின்று எழும் ஒலி. நாத தத்துவம் - பறை. பிறவிப் பகை கலங்க - பிறவியாகிய பகைவன் அஞ்சி ஓட.

(௯) ஆய மொழி - தேர்ந்த சொல். அள்ளூறும் - மிகுதியாக மனம் உருகும். மெய்த் தார் - திருமேனி மிசை அணிந்த மாலை. தாளி அறுகு - கொடியறுகு.

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டுங்
கோதிலா ஏறாம் கொடி. க௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பள்ளி யெழுச்சி

## திரோதான சுத்தி

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்

---

(க௦) ஏதிலார் துண்ணென்ன - பகைவர் திடுக்கிட்டு அஞ்சும் படி. ஏர் - அழகு. ஏறும் கொடி - இடபவடிவம் எழுதப்பட்டுள்ள கொடியாகும். ஏறு - அறத்திற்கு அறிகுறி.

---

**திருப்பள்ளி யெழுச்சி.**—சிவபெருமானைத் துயிலினின்றும் எழுப்புவதுபோல் பாடப்பட்ட பாடல்கள். பள்ளி - படுக்கை.

(க) வரி 1. எனது இன்ப வாழ்விற்கு மூலகாரணமாகிய பெருமானே வணக்கம். புலர்ந்தது-பொழுது விடிந்தது. இணைதுணை மலர் கொண்டு ஏற்றி - நெருங்க இணைத்துக் கட்டிய மலர்மாலைகளைச் சாத்தி. வரி 3, 4. எங்களுக்குத் திருவருள் பாலித்தலைக் குறிக்கும் உன் திருமுகத்தில் தோன்றும் அழகிய புன்சிரிப்பைக் கண்டு உன் திருவடிகளைத் தொழுவோம்.

சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. க

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. உ

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்

---

(க) எனை உடையாய் - என்னை அடிமையாக உடையவனே.

(உ) அருணன் - சூரியன் சாரதி. இந்திரன் திசை - கிழக்குத் திசை. வரி 1. அருணோதயம் ஆகிவிட்டது இருள் நீங்கி. வரி 2, 3, 4. (இருள்போய்) முற்றிலும் நீங்கி விட்டது. உதயமாகின்ற மலர்ந்த உன் திருமுகத்தில் தோன்றுகின்ற திருவருளாகிய சூரியன் மேலெழுந்து செல்லச் செல்ல அடியார்களின் கண்களாகிய வாசனை பொருந்திய தாமரை மலர, அவைகள் பெருமையிற் சிறந்த சிவ பெருமானுடைய அழகிய கண்களைப் போன்றிருக்கின்றன. அவற்றின் அருகே கூட்டமாகவும் வரிசையாகவும் வண்டுகள் ஒலிக்கின்றன; இவற்றைக் கருதுக. வரி 7. திருவருளாகிய செல்வத்தை அளிக்கும்படியான ஆனந்தமலையே. "நெஞ்சத்து இருளகல வாள் வீசி இன்பு அமரும் முத்தி அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து" என்னும் திருவாசகம் (கிஞ்சுக) செய்யுளுடன் ஒப்பிடுக.

(ஙூ) குருகுகள் இயம்பின - பிற பறவைகளும் ஒலித்துவிட்டன. தாரகை - நட்சத்திரங்கள். ஒளி ஓவின - ஒளியிழந்தன. ஒளி -

தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அரிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. ௩

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. ௪

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கண் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. ௫

---

சூரியன். ஒருப்படுகின்றது - தோன்றுகின்றது. செறிகழல் தாள் இணை - கழல்கள் செறி (நெருங்கக் கட்டிய) இரண்டு திருவடி.

(௪) இருக்கு - வேதமந்திரம். துன்னிய பிணைமலர் - நெருங்கக் கட்டிய மலர் மாலை.

(௫) வரி 1, 2, 3, 4. நீ எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கின்றாய் எனவும், பிறப்பு இறப்பு இல்லாதவன் எனவும், உன்னை அறிஞர் கூறுவதல்லாமலும், அவர்கள் உன்னைக் குறித்து இசைப் பாடல்களைப் பாடுவதும் அதற்கேற்ப ஆனந்தக் கூத்தாடுவதும் அல்லாமலும், உன்னைத் தாமாக நேரில் கண்டறிந்தவர்களை நாங்கள் இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. இறைவன் கருணையினால் தன்னைக் காட்டினாலன்றி உயிர்கள் இறைவனைக் காணமாட்டா. எங்கண் முன்வந்து - எம்முடைய கண் முன்னே தோன்றி, அல்லது எங்கள் முன்பு வந்து.

பப்பற வீட்டிருந் துணரு(ம்)நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. கூ

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. எ

---

(கூ) பப்பு அற வீட்டிருந்து - மனவிரிவு ஒழியும்படியாகப் பற்றற்ற நிலையில் இருந்து. பந்தனை - பிறவிக்குக் காரணமான பாசக் கட்டு. அவர் பலரும் மைப்பு உறுகண்ணியர்............வணங்குகின்றார் - அடியவர் பலரும் (கருநிறம் பொருந்திய) மைதீட்டிய கண்களையுடைய மகளிரும் மனிதர்கள் வணங்குகின்ற முறையில் வணங்குகின்றார்கள். செப்புறு - சிவப்புநிறம் பொருந்திய.

(எ) அது - பரம்பொருள். வரி 2. அறிதற்குக் கூடாத பொருளென்றும் அறிதற்கு எளிதான பொருளெனவும் வாதிட்டுத் தேவரும் அதன் உண்மைத் தன்மையை அறியாத நிலையிலிருப்பர். வரி 3. எங்களை ஆட்கொள்ளும் பொருட்டு கொண்ட வடிவம் பரம்பொருளின் திருவுருவாகும். இவனே அப்பரம்பொருள் என்று சொல்லும்படியாக. வரி 7. எம்மை ஏவல் கொள்ளும் முறை எதுவோ அதன்படி நடப்போம்.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. அ

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. கூ

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்

---

(அ) மூவர் - மும்மூர்த்திகள். மற்று யாவர் அறிவார். பந்தணை விரலி - பந்தின் தன்மை (உருட்சி) வாய்ந்த விரலையுடைய உமா தேவியார். குடில் - குடிசை.

(கூ) விழு - மேலான; சிறந்த. தொழுப்பு அடியோம் - தொழும்பு அடியோம், தொண்டு செய்யும் அடியவர். வாழச் செய்தானே - வாழும்படிச் செய்தவனே. எண்ணகத்தாய் - மனத்தினுள் இருப்ப வனே. எண் - மனம்.

(கo) வரி 1—7. திருப்பெருந்துறையில் உறையும் சிவபெரு மானே! இந்தப் பூவுலகம் சிவன் உயிர்களை உய்யும்படி ஆட்கொள் கின்ற வகையை யுடையதென்று அறிந்து, நாம் பூமியிற் பிறந்து ஆட்கொள்ளப் பெறாமல் வாழ்நாளை வீணாகக்கழிக்கின்றோமே என்று

அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. கO

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# கோயில் மூத்த திருப்பதிகம்

## அநாதியாகிய சற்காரியம்

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானல் அடியேன்உன், அடியார் நடுவுளிருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம், முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே. க

---

திருமாலும் பிரமனும் பூமியில் பிறக்க விருப்பமடையவும், மலர்ந்த மெய்ப்பொருளாகிய திருவருட் சத்தியும் நீயும் பூமியிற் புகுந்து எங்களை அடிமையாகக் கொள்ள வல்லவனே.

---

(க) நம்மை ஆளாக உடைய உமாதேவியாகிய சிவசத்தி உன்னிடத்தே கலந்திருக்கின்றாள். நீயும் அவளிடத்தே கலந்திருக்கின்றாய். எனக்குள் நீங்கள் இருவரும் இருப்பது உண்மையானல், நீ எனக்கு முன்னின்று என் எண்ணம் நிறைவேறும் பொருட்டு (நான் முத்தி அடையும்பொருட்டு) அடியேன் உன் அடியார் நடுவிலே இருக்கும்படி திருவருள் செய்யவேண்டும். அல்லது அடியேனுக்கு உன் அடியார் நடுவில் இருக்கும் உன்திருவருளைக் கொடுக்க வேண்டும்.

முன்னின் றாண்டாய் எனைமுன்னம் யானும் அதுவே முயல்வுற்றுப், பின்னின்றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மானே, என்னின் றருளி வரநின்று போந்தி டென்னு விடில்அடியார், உன்னின் றிவனுர் என்னுரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. உ

உகந்தானே அன்புடை அடிமைக்(கு) உருகாவுள்ளத் துணர்விலியேன், சகந்தான் அறிய முறையிட்டால் தக்க வாறன்(று) என்னுரோ, மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தாய் அடியேற்குன், முகந்தான் தாரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுதலே. ௩

முழுமுத லேஐம் புலனுக்கும் மூவர்க்கும் என் தனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க இரங்குங் கொல்லோஎன்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம் பலத்தரைசே.

(உ) யானும்......பிற்பட்டொழிந்தேன் - நானும் உனக்கு அடிமையாக நடந்துகொள்ள முயற்சிசெய்து, (திருவருளை முன்னிட்டுப்) பின்னே நின்று பணிசெய்கின்றேன். அப்படிப் பணி செய்வதிலும் பின்னிடைந்து விட்டேன். என் னின்று அருள் இவர நின்று போந்திடு என்னுவிடில் - என்னோடு நீ கலந்திருந்து திருவருளே மேம்பட்டு நிற்கச்செய்து "வீடு புகுந்திடுக" என்று கட்டளையிடாவிடின். இவர்தல் - மேலெழுதல். உன்னின்று - உன்பால் நின்று.

(௩) வரி 1. அன்போடு கூடிய அடிமைத் தொண்டை விரும்பி ஏற்றுக் கொண்டவனே. வரி 2. உலகமெல்லாம் அறியும்படி முறையிட்டால், நீ அருளாதொழிவது தக்கவாறு அல்ல என்று உன் அடியார்கள் சொல்லமாட்டார்களா ? மகம் - வேள்வி. வழி வந்தார் - அருள் வழி நின்றார்; அல்லது, வழிபாடு செய்தவர். வாழ வாழ்ந்தாய் - இன்பவாழ்வு பெறும்படி அருள் செய்தாய். முகந்தான் தாராவிடின் - உன் திருமுகத்தைத் தானும் காட்டாவிட்டால். முடிவேன் - இறப்பேன்.

(௪) மூவர்க்கும் - மும்மூர்த்திகளுக்கும். வழி முதலே - நல்வழியிற்செலுத்தும் முதல்வனே. உன் பழஅடியார் திரள் வான் குழு மிக் கெழுமுதலே. உன் பழவடியார் கூட்டம் தேவர் கூட்டத்தினும் மேம்பட்டு எழும்படி அருள்செய்யும் முதல்வனே. "அறுகெடுப்பார்" என்னும் திருப்போற் சுண்ணச் செய்யுளோடு ஒப்பிடுக.

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே என்றுன் அருள்நோக்கி, இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற்றிரு ந்தே வேசற்றேன், கரைசேர்அடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பால், பிரைசேர் பாலில் நெய்போலப் பேசா திருந்தால் ஏசாரோ. ரு

ஏசா நிற்பர் என்னைஉனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும் பேணு நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தாய் இனித்தான்இரங்காயே.

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென்றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களும்நீயும் நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வேவாவென்(று)அருளாயே.

---

(ரு) நோக்கி - எதிர்ப்பார்த்து. ஏசற்றிருந்தே வேசற்றேன் - கவலைப்பட்டிருந்து இளைப்புற்றேன். கரை - முத்திக்கரை. வரி 4. பிரை கலந்த பாலின் நெய்யைப் போல வெளிப்படாமல் மறைந்து இருந்தால் உலகத்தார் வையமாட்டார்களா? பாலில் நெய் மறைந்து நிற்கும். தயிரில் நெய் வெளிப்பட்டு நிற்கும். பிரைசேர் பாலில் நெய் தாமதித்துத் தோன்றும்.

(சு) வரி 1. என்னை (உன் அடியவர் அன்பிலன் என்று)வைவர். பிறரெல்லாம் என்னை உனக்கு அடியானென்று பேசாநிற்பர். பேசா நிற்பர் - பேசுவார்கள். பேணுநிற்பேன் - விரும்புகின்றேன். தேசா- ஒளியுருவானவனே. திரு ஓலக்கம் - திருச்சபை. சேவிக்க - வணங்க.

(எ) ஏமாந்திருப்பேனை - விரும்பிய பொருள் கிடைக்காமை யால் திகைத்திருப்பேனை. வரி 2. அரிய ஞானோபதேசம்செய்து ஆட்கொண்டாய். ஆள்வாரிலி மாடு ஆவேனோ-மேய்ப்பவன் இல்லாத மாட்டுக்கு ஒப்பாக நெறிதப்பிப் போவேனோ. நெருங்கும் அடியார் கள் - உனக்கு மிக நெருங்கிய தொண்டர்கள், அணுக்கத் தொண் டர்கள். நிலாவி - விளங்கி.

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார்
ஆர்இங்குப், பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம் பலக்கூத்தா, மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன், தெருளார் கூட்டங் காட்டா
யேல் செத்தே போனுற் சிரியாரோ. அ

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன்
திருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே
றிருந்துன் திருநாமந், தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே, நகிப்பாய் நாயேன் இருப்
பேனே நம்பீ இனித்தான் நல்காயே. கூ

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறு வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப்பொன்னம்பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி அருளாய் என்னை உடையானே.

திருச்சிற்றம்பலம்

---

(அ) பொருளா - ஒரு பொருளாக மதித்து. தெருள் ஆர் - தெளிவு (ஞானம்) மிக்க.

(கூ) தேனிப்பார் - தியானிப்பார். திருவார்த்தை - திருப்புகழ்; அஞ்செழுத்து - என்னலுமாம். விரிப்பார் - விரித்துப் பேசுவார்கள். தரிப்பார் - சொல்லுவார். நகிப்பு ஆய் - இகழ்ச்சிக்கிடமாய். நம்பி - ஆடவரிற் சிறந்தவன். இனித்தான் நல்காயே - இனியாவது உன் திருவருளை எனக்குக் கொடுத்து அருள்வாயாக.

(க0) பிதற்றி - தன்வச மிழந்து கூறி. நயனநீர் மல்கா வாழ்த்தா - ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி வாழ்த்தி. குழறு வணங்கா - குழறி வணங்கி. பாவித்து - தியானித்து. ஒல்கா - தளர்ந்து.

தில்லையில் அருளிய

# கோயிற்றிருப்பதிகம்

## அனுபோக இலக்கணம்

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்(து)அமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. க

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர்கைம் மாறு

---

(க) மாறி நின்று - (என்வழி வராமல்) மாறுபட்டு நின்று. வழி அடைத்து - வாயில்களை மூடி. அமுதே........வந்தருளாய் - பேரானந்தமே சுரந்துகொண்டிருக்கச் செய்து என் உள்ளத்தில் எழுகின்ற மேலான ஒளியே, உன் உண்மையான சொரூபத்தை நான் காணும்படி வந்து அருள் செய்வாயாக. தேறல் - தேன். வரி 7, 8. பதவிகள் எல்லாவற்றையும் கடந்த ஈறில்லா (முடிவில்லாத) இன்பமயமானவனே (அல்லது இன்பத்தை அளிப்பவனே), என்னுடைய அன்பு வடிவா யிருப்பவனே. பதங்கள் யாவையும் கடந்த ஈறில்லாத இன்பமே என்று கூட்டுக.

(உ) என்பரம் அல்லா - எனக்கு(க் கிடைக்க)த் தகுதியில்லாத.

முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. உ

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. ௩

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே

---

(உ) வரி 5. எல்லாவற்றிற்கும் முன்னுமாய் அவற்றிற்குப் பின்னுமாய் (கலப்பினுல்) அவை முழுதுமாய் வியாபித்துள்ள பாச நீக்க முள்ளவனே.

(௩) புரை புரை - உள் துளை(எலும்புத் துளை) வரையில். வரி 4. பொய்யாகிய அஞ்ஞானத்தைப் போக்கிய மெய்யொளியே. வரி 5. அலை மோதாத (கலக்கம் இல்லாத) நிலைபெற்ற அமுத மயமாகிய தெளிந்த (ஆனந்தக்) கடலே. வரி 7. சொல்லையும் சுட்டறிவையும் கடந்து நின்று (சிவஞானத்தால்) அறியப்படும் பேரறிவே. உரைக்கு மாறு - புகழ்ந்து கூறும் அல்லது பாடும் விதத்தை.

(௪) உணர்ந்த - கலை ஞானம் கைவரப் பெற்ற. ஒழிந்தார் - பிறர். வரி 3. ஒன்றிற்கொன்று தொடர்பில்லாத சகல உயிர்களிடத்தும் உயிர்க்குயிரா யிருப்பவனே. "உரைசேரு மெண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனிபேதம் நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயி ராய் நின்றான்கோயில்"—**சம்பந்தர்.** வரி 4. என்னுடைய பிறவிப் பிணியைப் போக்கும் மருந்துபோல்பவனே.

திணிந்ததோர்இருளில் தெளிந்த தூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. ௪

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. ௫

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. ௬

---

(௪) திணிந்ததோர் இருள் - (உயிரைப் பற்றியுள்ள) மிகுந்த ஒப்பற்ற (ஆணவ) இருள். இருளில் தெளிந்த தூவெளியே - இருள் நீங்கித் தெளிவடைதற் கேதுவாகிய பரிசுத்தமான அருள்வெளியே. வரி 7. முக்குணங்களின் தொடர்பில்லாத பேரானந்தமே.

(௫) கொழும் - வளமான. மன்னிய - நிலைபெற்று நின்ற. மன்னே - அரசனே. சிறைபெறா நீர்போல் - அணையை உடைத்துச் செல்லும் நீரைப்போல. வரி 7, 8. இறைவன் உடலை இடமாகக் கொண்டபின் பூரண இன்பம் கிடைத்தமையால் யாசிப்பதற்கு ஒன்றுமில்லை என்றார்.

(௬) வரி 1, 2. உன் திருவருளை வேண்டி வேண்டி என் மனம் உருகும்போது அங்கே தோன்றுகின்ற ஒளியே. நிரந்த - எல்லாப் பொருளிலும் கலந்துள்ள. ஆயவை அல்லையாய் - கலப்பினால் அவைகளாயும், பிரித்து நோக்கும்போது அவைகளினின்று வேறுபட்டும். கண்ணுற - கண்ணார.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று(ம்)நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. எ

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதீ. அ

---

(எ) இருள் கடிந்து - அறியாமையைப் போக்கி. நினைப்பற நினைந்தேன் - நினைக்கின்றேன் என்ற தற்போத உணர்ச்சி கெட்டு நினைந்தேன். வரி 4,...8. அப்படி நான் நினைக்கும்போது உன்னையல்லாமல் வேறு தோற்றம் ஒன்றும் இல்லாதபடி, பிறபொருள்கள் எல்லாம் சுருங்கிச் சுருங்கி அணுவளவினவாகி உன்னோடு சேர்ந்து ஒன்றாய்விட்டன. காணப்படுகின்ற பொருள்கள் ஒன்றும் நீ அல்ல. உன்னையல்லாமல் ஒரு பொருளும் தனித்து இருக்கமாட்டாது. ஆகையால் உன்னை யார் அறியவல்லவர்?

(அ) பார்பதம் - பூமண்டலம். பரந்ததோர் - வியாபித்திருக்கும் ஒப்பற்ற. நீர் உறு தீயே - நீரினிடத்துள்ள வெப்பம் போன்றவனே. நின் அருள்.........தேனே - உன் திருவருள் வெள்ளத்தில் மூழ்கிய சிறப்பினையுடைய சிந்தையில் எழுகின்ற பேரின்ப உணர்வே.

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. கூ

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம் மாறே. கo

திருச்சிற்றம்பலம்

---

(கூ) வரி 1, 2. ஒளிப்பிழம்பாய்க் காணப்படும் வடிவத்தையுடையவனே, ஒரு வடிவமும் இல்லாத ஒப்பற்றவனே. வரி 7, 8. நீ போவதோர் வகை யாது? வந்து நின் இணையடிதந்து எனக்கு அருளாய்.—உரைநடை. நீ என்னை எப்படிக் கைவிடலாம். உன் இரண்டு திருவடிகளையும் தந்து எனக்கு அருள்புரிய வேண்டும்.

(கo) வரி 1, 2, 3, 4. உன்னை எனக்குக் கொடுத்தாய், அதற்கு ஈடாக என்னை நீ ஏற்றுக் கொண்டாய். உன்னை எனக்குக் கொடுத்ததனால், முடிவில்லாத பேரின்பத்தை நான் பெற்றேன். என்னை நீ ஏற்றுக்கொண்டதனால் நீ என்னிடத்தில் என்ன பயன் அடைந்தாய்? ஒன்றுமில்லை. ஆகையால் நம் இருவரில் சாமர்த்தியமுடையவர் யார்? **நிந்தாஸ்துதி.** இந்தச் செய்யுளில் இறைவனது கைம்மாறு கருதாத பெருங்கருணையை வியந்து கூறுகின்றார்.

திருப்பெருந்துறையில் அருளிய

# செத்திலாப்பத்து

## சிவானந்தம் அளவறுக் கொணுமை

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்த னேஅயன் மாற்கறி யொண்ணுச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. க

புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணு
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்

(க) அகம் நெக - மனம் உருக. கையனேன் - வஞ்சகமுடையேன். வரி 4. கண் திறந்திருந்தும் மனதில் எண்ணிய (வீடு அடையும்) எண்ணத்தை நிறைவேற்ருமல் நழுவவிட்டேன்.

(உ) வரி 1, 2. விண்ணுலகில் வாழும் தேவர்களும் பிற முனிவர்களும், தவம் செய்யும் நிலையில் புற்றினுல் மூடப்பட்டும், மரம்போல அசைவற்று இருந்தும். ஓர் வார்த்தையுட்படுத்து - ஒரு மொழியை உபதேசம் செய்து.

பற்றிஞய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றிலேன் இன்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. உ

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னுல்நடந் தேன்விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னே அலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. ௩

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார்எ னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்கும்என் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. ச

---

(உ) பரிகிலேன் - அன்பு செய்யமாட்டேன். செற்றிலேன் - வெட்டி எறியமாட்டேன். திரிதருகின்றேன் - (பயனின்றி) உயிரொடு திரிந்துகொண் டிருக்கிறேன்.

(௩) தலையினுல் நடந்தேன் - முறைக்கு மாருக நடந்தேன், செருக்குக்கொண்டு திரிந்தேன். எண்ணில் - அளவற்ற. நிலையனே - ஆதாரமானவனே. அடையார் - உன்னை அடையாதவர்களுடைய.

(ச) என்பராய் - (உணவை வெறுத்து) தசையின்றி எலும்பு வடிவினராய். வன்பராய் முருடு - கடினமான பராய்க் கட்டை. பராய் - ஒருவகை மரம். பராய்த்துறை - ஒரு சிவஸ்தலம்.

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
　　ஐயனே என்றுன் அருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
　　நாத னேஉனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
　　காயமா யத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர் பிரானே
　　திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. ரு

அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
　　கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன்
　　போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
　　என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
　　திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. சா

---

(ரு) வரி 1. வினைவழி என்னை ஆட்டுவிக்கும் தேவர்கள் விதி (கட்டளை)யினின்று விலகி. நாட்டுத்தேவர் - பூசுரர். காயமாயம் - மாயகாயம் ; நிலையில்லாத உடல். சேட்டைத் தேவர் - (படைத்தல் முதலிய) தொழிலைச் செய்கின்ற தேவர்கள். அல்லது சேடு + ஐ தேவர் - பெருமையும் தலைமையும் உடைய தேவர்கள்.

(சா) தீப்புக்கு ஆர்கிலேன் - தீயில் விழுந்து இறக்கமாட்டேன். வரி 3. உடல் பொறுக்கிலேன் போக்கிடம் காணேன் - உடம்புடன் கூடியிருக்க சகிக்கமாட்டேன், புகலிடம் அறியேன். வரி 4. வணக்கம், வணக்கம். போரில் வல்ல இடப வாகனத்தையுடைய எனக்கு உரிய பெருமானே. வரி 5. உன்னைப் பிரிந்து இன்பமாக இருப்பதைப் பார்க்கிலும் இறந்துபடுகின்றேனில்லை. வரி 7. வரப்புகளில் நீர் நிறைந்துள்ள வயல்களாற் சூழப்பட்ட.

மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. எ

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. அ

ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்

---

(எ) மாயனே - சூழ்ச்சியில் வல்லவனே. மறிகடல் - அலைகள் மடங்கி வீழ்கின்ற கடல். மணிகண்டம் - நீலகண்டம். குலாம் - குலாவும்; பிரகாசிக்கும். சேயன் - தூரத்திலுள்ளவன்.

(அ) கோது - குற்றம். மாட்டி - மாள்வித்து. குறிக்கொள்க என்று - இலட்சியத்தை உறுதியாய்ப் பிடி என்று. இனிதோ - உனக்கு இன்பமா யிருக்கிறதா? வார் புனல் - மிகுந்த நீர்.

(கூ) ஞாலம் - உலகத்தில் உயர்ந்தோர். நயந்து - விரும்பி.

மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. ௯

அளித்து வந்தெனக் காவஎன் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைந்துந் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே. ௧௦

திருச்சிற்றம்பலம்

---

(௯) அம்மலர்க்கே - அழகிய திருவடித் தாமரைகளுக்கே. மரக்க ணேன் - மரத்தாற் செய்தாற்போன்ற (ஆனந்தக் கண்ணீர் சொரியாத) கண்ணையுடையேன்.

(௧௦) அளித்து உவந்து - மகிழ்ந்து அருள்செய்து. திளைத்தும் - மூழ்கியும். தேக்கியும் - நிரம்பப்பெற்றும். வளைக்கையான் - சங்கை ஏந்திய கையையுடையவன் ; திருமால். களிப்பெலாம் இக - மகிழ்ச்சியெல்லாம் ஒழிய.

திருப்பெருந்துறையில் அருளிய

# அடைக்கலப்பத்து

## பக்குவ நிண்ணயம்

### கலவைப்பாட்டு

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே. க

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவனே அராப்பூண் பவனேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவனே நின் திருவரு ளால்என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. உ

பெரும்பெருமான் என்பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன்நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

---

(க) திரள(ன்)ன - தொகுதியை ஒத்த. அமைந்த - அமைதி பெற்ற. பழுத்த மனத்து - கனிந்த (இளகிய) மனத்தையுடைய. புழுக்கள் நுடைப் புன்குரம்பை - புழுக்கள் நெளியும் இழிவான. கூட்டை (சரீரத்தை)யுடைய. பொல்லா......மனத்து - தீமைமிக்க, கல்வியும், மெய்ஞ்ஞானமும் இல்லாத, அசுத்தமான மனத்தையுடைய. உடையாய் - என்னை அடிமையாக உடையவனே.

(உ) வெறுப்பனவே - பெரியோர் வெறுக்கும்படியான காரியங்களையே. செறுப்பவனே - அடக்குபவனே.

(ங) பிச்சு - பித்து; பேரன்பு. சதுரப்பெருமான் - திறமை மிக்க பெருமான்.

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்தில்நின் கழற்புணைகோண்(டு)
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின்றனன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. ச

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரியாய் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. ரு

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே. சு

மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. எ

---

(ச) துன்பப் புயல் (மேகம்) பொழிகின்ற வெள்ளத்தில். இழிகின்ற - கடந்து செல்லுகின்ற. வரி 3. துன்பக்கடலின் கண் சுழியிலகப்பட்டு மாதர்களாகிய அலைகள் மோத ஆசையாகிய சுறா மீன் தாக்க.

(ரு) வரி 1. சுருண்ட கூந்தலையுடைய பெண்களது சூழ்ச்சியில் அகப்பட்டு உன் மேன்மையை மறந்து. கூழை - தலைமயிர். இருள் புரி-அஞ்ஞானத்தை வளர்க்கின்ற. வரி 3. அச்சங்கொண்ட மானின் கண் பார்வையை யொத்த நோக்குடைய உமாதேவியாரை ஒரு பாகத்தில் உடையவனே.

(சு) மாழை - மாம்பிஞ்சின் பிளப்பை ஒத்த. தாழியைப் பாவு - பானையின் பக்கமெங்கும் பரவுகின்ற. வரி 3. தடமலர்த்தாள் வாழக் கடவது. அதனை வலிய வினையில் அகப்பட்ட நான் எப்போது உவந்து (மகிழ்ந்து) எக்காலத்து வணங்குவேன். ஆழி அப்பா - கருணைக் கடலாகிய அப்பனே.

(எ) நுடங்கும் - துவளும். வெகுளி வலையில் அகப்பட்டு - கோப வலையில் சிக்கி, கோபப்பட்டும் அவர்கள் மாய வலையில் சிக்கி. புன்கணன் - துன்பமுடையவன். வரி 3. என்னிடத்தில் அமுத ஊற்றெடுப்பது போல் பேரானந்தத்தை உண்டாக்கி.

மாவடு வகிரன்ன கண்ணி பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற்கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. அ

பிறிவறியா அன்பர்நின் அருட்பெய் கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையேஅறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. கூ

வழங்குகின் றுய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக் கொண்டு, விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்என் விதியின்மையால், தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகதந் துய்யக்கொள்ளாய், அழுங்கு கின்றேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே. கo

திருச்சிற்றம்பலம்

---

(அ) வரி 2. மலரடிக்கே என்னை அழைத்துக் கொள்வாயோ அல்லது கும்பீபாகமென்னும் நரகத்தில் இடுவாயோ? உன் திருவுளக் கருத்தை நான் அறியேன். வரி 3. நூற்பாவினிடையில் ஓடுகின்ற நூலிழை சுற்றியுள்ள குழாய் மறைந்து நின்று அங்குமிங்கும் ஓடுவதுபோல், என் மனம் உலகப்பற்றில் மறைந்து அலைவதாயிற்று.

(கூ) வரி 1. உன்னைவிட்டு நீங்குதலை அறியாத அன்பர்கள் உன் திருவருளாகிய கழல் கட்டிய திருவடியிணையின் கீழ் திரும்புதலை அறியாத (மாறுபடாத) பேரின்பச் செல்வத்தை வந்து அடைந்தனர். வந்தித்தல் - வழிபடுதல்.

(கo) வரி 1, 2. உன் திருவருளாகிய அரிய அமுதத்தை வழங்குகின்ற உன் பொருட்டு வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்; எனக்கு உன் அருளைப் பருகும் நல்லூழ் இன்மையால் தீவினையேன் விக்கினேன். விக்குதல் - தொண்டையில் தடைபடுதல். தழங்கு - சப்திக்கின்ற. அழுங்குகின்றேன் - வருந்துகின்றேன்.

திருப்பெருந்துறையில் அருளிய

# ஆசைப்பத்து

## ஆத்தும இலக்கணம்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருடக் கொடியோன் காணமாட்டாக் கழற்சேவடி யென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. உ

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. ௩

---

(க) கருடக்கொடியோன் - திருமால். பொருள் - திருவருட் செல்வம். பொல்லாமணி - பொள்ளாமணி; தொளைக்கப்படாத மணி. இருளைத் துரந்திட்டு - அறியாமையை ஓட்டி. அங்கே கூவும் - வீட்டுலகத்தில் நின்று அவ்விடத்திற்கு வரும்படி அழைக்கின்ற.

(உ) வரி 1. செருங்கிய பால்போன்ற வெள்ளிய நரம்பு ஆகிய கயிற்றினால் மூளை எலும்பு முதலியவற்றைக் கட்டி அவற்றைத் தோலினாற் போர்த்து மறைத்த. குப்பாயம் - சட்டை.

(௩) சீவார்ந்து - சீழ் வடிந்து. சிறுகுடில் இது - சிறிய குடிசையாகிய இவ்வுடம்பு. சிதையக் கூவாய் - அழிந்து போகும்படி அழைத்துக் கொள்ள மாட்டாயா ?

மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல் வீறிலி நடைக் கூடந், தொடர்ந்தெனை நலியத் துயருறுகின்றேன் சோத்தம் எம்பெருமானே, உடைந்து நைந்துருகி உன்னொளி நோக்கி உன்திரு மலர்ப்பாதம், அடைந்து நின்றிடுவான் ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. ச

அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி அடியே னுடை யாக்கை, புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும் விடை யாய் பொடியாடீ, எளிவந் தென்னை ஆண்டு கொண்ட என்னா ரமுதேயோ, அளியேன் என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. ரு

எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்ககில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. சா

---

(ச) எலும்பு மிடைந்து - எலும்புகள் நெருங்கி. வீறு இலி நடைக் கூடம் - சிறப்பில்லாத நடைவீடாகிய இவ்வுடம்பு. தொடர்ந்து எனை நலிய - என்னைவிடாது பற்றித் துன்புறுத்துவதால். சோத்தம் - வணக்கம்; வணங்குகின்றேன். உடைந்து நைந்து உருகி - அன்பினால் (கல்லைப்போன்ற மனம்) உடைந்து, இளகி, உருகி. ஒளி - அருள் ஒளி.

(ரு) வரி 1. அளிந்த புண்ணைப்போன்ற தசையை உட்பக்கம் கொண்டு, வெளியே தோலால் மூடப்பட்டுள்ள அடியேனுடைய சரீரம். புளியம்பழம் ஒத்திருந்தேன் - புளியம்பழம் ஓட்டிற்குள் இருப்பினும், அது ஓடுடன் சம்பந்தப்படாமல் வேறாயிருத்தல் போல் இவ்வுலகில் இருந்தும் பற்றில்லாமல் இருந்தேன். அளியேன் - இரங்கி அருள் புரியத் தக்கவன்.

(சா) வரி 1. (இவ்வுடலைத்தாங்கி) இளைப்புற்றேன்; இனிமேல் இவ்வுலகில் இருக்கமுடியாது. இவ்வாழ்க்கை வைத்தாய் வாங்காய் - இவ்வுலகவாழ்க்கையை எனக்குக் கொடுத்தாய்; இதை நீக்கிவிடுவாயாக. முத்தா - இயல்பாகப் பாசங்களின் நீங்கியவனே.

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. எ

கையால் தொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்
டெய்யாதென்றன் தலைமேல் வைத்தெம் பெருமான் பெருமானென்
றையா என்றன் வாயா லரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே. அ

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென் கண்ணிணை களிகூரப்
படி,தா னில்லாப் பரம்பர னேஉன் பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

திருச்சிற்றம்பலம்

---

(எ) பரவி - வணங்கி. ஆரா - தெவிட்டாத.

(அ) கழும - நன்றாக. எய்யாது - சலியாது. மெழுகு ஒப்ப - மெழுகைப் போல உருகுவதற்கு.

(கூ) செடிஆர் - குற்றங்கள் நிறைந்த. ஆக்கைத் திறம் அறவீசி - உடம்பின் குற்றங்கள் நீங்கும்படி அதனை ஒழித்து. கடி ஆர் - அழகு மிகுந்த. படி - ஒப்பு.

(கo) வெம் சேல் அனைய கண்ணார் - உருவத்தால் சேல்மீன் போன்ற, கொடிய (துன்பத்தை விளைவிக்கும்) கண்களையுடைய மாதர்கள். நைஞ்சேன் - நைந்தேன்; துயருற்றேன். வரி 3. பஞ்சு போல் மெல்லியதும், அழகுடையதுமான திருவடிகளையுடைய உமா தேவியாரை ஒருபாகத்திலுடைய ஒப்பற்றவனே.

திருப்பெருந்துறையில் அருளிய

# அதிசயப்பத்து

## முத்தி இலக்கணம்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வைப்புமா டென்றும் மாணிக்கத் தொளியென்றும் மனத்திடை உருகாதே, செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள் திறத்திடை நைவேனை, ஒப்பி லாதன உவமனி லிறந்தன ஒண்மலர்த் திருப்பாதத், தப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. க

நீதி யாவன யாவையும் நினைக்கிலேன் நினைப்பவரொடுங்கூடேன், ஏத மேபிறந் திறந்துழல் வேன்தனை என்னடி யானென்று, பாதி மாதொடுங் கூடிய பரம்பரன் நிரந்தர மாய்நின்ற, ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. உ

முன்னை என்னுடை வல்வினை போயிட முக்கணதுடையெந்தை, தன்னை யாவரும் அறிவதற் கரியவன் எளி

---

(க) வைப்பு மாடு - சேமித்துவைத்த செல்வம். செப்பு - சிமிழ். திறத்திடை நைவேனை - குணங்களில் ஈடுபட்டுத் துன்புறுவேனை. உவமனில் இறந்தன - உவமானமாகச் சொல்லக்கூடிய பொருள்கள் யாவற்றையும் கடந்து நிற்பன. கண்டாமே - பார்த்தோம்.

(உ) பிறந்து இறந்து ஏதமே உழல்வேன் - பிறந்தும் இறந்தும் துன்பத்தில் அலைந்து திரிவேன். நிரந்தரம் - நித்தியம்; அழியாத தன்மை.

(ங) என்னுடைய முன்னை வல்வினை போயிட - என்னுடைய பழமையாகிய கொடிய வினைகள் ஒழிய. இதை ஆண்டு என்பதோடு முடிக்க.

யவன் அடியார்க்குப், பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில் இளமதி யதுவைத்த, அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. ௩

பித்த னென்றெனை உலகவர் பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற் கொருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய எம்மிறை எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற்கூட்டிய அதிசயங் கண்டாமே.

எண்ணி லேன்திரு நாமவஞ் செழுத்தும்என் ஏழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மோடு நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற் கொருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற்கூட்டிய அதிசயங் கண்டாமே

---

(௪) வரி 1. பித்தன் என்று உலகவர் பகர்வதோர் காரணம் எ(ன்)னை - (சிவபெருமானைப்) பித்தன் என்று உலகோர் சொல்வதற்குக் காரணம் என்ன. இது கேளீர் - நான் சொல்லுகிறேன், இதைக் கேளுங்கள். பித்தன் என்று என்னை உலகோர் சொல்வதற்குக் காரணம் சொல்லுகின்றேன் கேளுங்கள்—எனவும் பொருள் கொள்ளலாம். அடியரிற் கூட்டியதுதான் காரணம். வரி 2. திருவருளுக்கு மாறுபடாமல் அதன் வழியே நடந்து சென்று அத்திருவருளோடு கலந்து நிற்கும்படியான தந்திரம் அறியாமல். ஒருப்படுகின்றேனை - சம்மதிக்கின்ற என்னை.

(௫) வரி 1. இறைவனை வணங்குபவர்களுடைய பக்கம் சென்று சேரமாட்டேன். வரி 2. நறுமணம் கமழும் நீண்ட கூந்தலையுடைய மாதர்கள் குணங்களில் ஈடுபட்டு நின்று (இன்ப) வாழ்வுக்குக் கேடு விளைவிக்கின்ற என்னை. எரிசடை - நெருப்பை யொத்த சிவந்த ஒளி பொருந்திய சடை.

(௬) வரி 1. என் அறியாமையினால் இறைவன் திருப்பேராகிய திருவைந்தெழுத்தை நினைந்திலேன். வரி 2. நல்வினைப் பயன் கூட்டுவிக்காமையால் கலைஞானங்களில் வல்ல பெரியாரொடு சேர்ந்திலேன். நயத்தல்-பயன்படல். அண்ணல்-பெருமையிற் சிறந்தவன்.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்(து)அசும் பொழுகிய பொய்க்கூரை, இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை, முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. எ

நீக்கி முன்னெனைத் தன்னொடு நி(ல்)லாவகை குரம்பை யிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற் செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. அ

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள் பாராதே, பெற்றவா பெற்ற பயனது நுகர்ந் திடும் பித்தர்சொல் தெளியாமே, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே. கூ

---

(எ) வரி 1. நவத்துவாரங்களை யுடையதும், தசையைச் சுவ ராக வுடையதும், புழுக்களைத் தன்னகத்தே கொண்டதும், வலி யற்று நிணநீர் வடிகின்ற நிலையில்லாத வீடாகிய இவ்வுடம்பை. சுழித்தலைப் படுவேனை - சுழியில் அகப்பட்டுக் கிடப்பேனை.

(அ) வரி 1. முன்னாளிலே என்னைத் தன்னொடு நில்லாதபடி விலக்கிக் குடிசையாகிய இவ்வுடம்பில் புகச்செய்து. வரி 2. அருள் நோக்கம்செய்து நொடிப்பொழுதில் நுண்ணிய பொருள்களை உப தேசம் செய்து, வேறு தொடர்பு ஒன்றும் இல்லாதபடி தன்னோடு கலக்கும்படி கைகொடுத்துத் தூக்கி. வரி 3. நான் முன் செய்த பொய் (தீவினை) ஒழியும்படி குற்றங்களைப் போக்கி. எழுதரு சுடர் சோதி ஆக்கி - மேலெழுந்து விளங்கும் சுடராகிய சிவபெருமான் (என்னைப் பக்குவ முடையவனாகச்) செய்து.

(கூ) வரி 1, 2. (வினைக்கு ஈடாக) வந்து சேர்ந்த இந்த உடம் பினால் பெறவேண்டிய பொருள் யாதெனின், நறுமணமுள்ள பூவி னிடத்து எழுகின்ற வாசனையைப் போன்று இருந்து, ஐம்புலன் களால் பற்றப்படாத தன்மையுடைய மேலான பொருளைக் காணு

இருள் திணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச் சிறுகுடி
லிதுஇத்தைப், பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத், தெருளும் மும்மதில் நொடிவரை
யிடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ, அருளும் மெய்ந்நெறி
பொய்ந்நெறி நீக்கிய அதிசயங் கண்டாமே. க0

திருச்சிற்றம்பலம்

---

தல். அப்பரம்பொருளைக்காணமுயலாமல். வரி 3. வினைக்குத தக்கபடி கிடைத்த பயனைக் கிடைத்த முறையிலே அநுபவித்தொழியும் அறிவீனர்கள் சொற்களை நம்பாதிருக்குமாறு.

(க0) வரி 1. இந்த உடம்பானது மிக்க அறியாமையாகிய ஆணவ மலத்தால் உண்டான கொடியவினைகளால் நிறைக்கப்பட்ட சிறுகுடிசையாகும். வரி 3. தெளிவாகக் காணப்படும் முப்புரங்களை ஒரு நொடிப் பொழுதில் இடிந்து விழும்படி கோபக்குறிப்பொடு செந்நிறமாகிய தீ எழும்படி அருள்செய்த. மெய்ந்நெறி - உண்மை நெறியே வடிவமாகவுடைய சிவபெருமான். "நெறியே நின்மலனே."—சுந்தரர்.

திருப்பெருந்துறையில் அருளிய

# புணர்ச்சிப்பத்து

## அத்துவித இலக்கணம்

### ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைப்பட் டேனை ஆண்டுகொண்ட
கருணாலயனைக் கருமால்பிரமன்
தடைப்பட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த என்னாரமுதைப்
புடைபட் டிருப்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. க

ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்(து)ஐம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி

---

(க) தோளா - துவாரமிடாத. வாளா தொழும்பு உகந்து - பயனற்ற என் தொண்டை மகிழ்வுடன் ஏற்று அல்லது தற்போத உணர்ச்சியற்று நான் செய்த தொண்டை மகிழ்வுடன் ஏற்று. கருணா + ஆலயன்-கருணையே (கோயிலாக) இருப்பிடமாகக் கொண்டவன். புடைபட்டிருப்பது - பக்கத்தில் இருப்பது. பொல்லாமணி - பொள்ளாமணி; தொளைக்கப்படாத மாணிக்கம். புணர்ந்து - அத்துவிதமாய்க் கலந்து.

(உ) ஆற்றகில்லேன் - இவ்வுலக வாழ்க்கையைப் பொறுக்க முடியவில்லை. அழுந்தாச் சிந்தை செய்து - அழுந்தாதபடி சிவனடியைச் சிந்தித்து.

ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. ௨

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என் ஆரமுதை
அள்ளூறுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. ௩

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. ௪

---

(௨) வரி 5, 6. மணல் ஊற்றுப்போல மனம் நெகிழ்ந்து உருகிக் கூவி அழைத்து.

(௩) நீண்ட மாலும் - (வாமனாவதாரத்தில்) நெடிய உருக்கொண்ட திருமாலும். நீண்டநெருப்பை - உயர்ந்த அனற்பிழம்பானவனை. "அயன் நெடிய மாலுக்கும் நெடியரோ"—சுந்தரர் (நீடுவாழ்). விருப்பிலேனை ஆண்டுகொண்ட - (அயனுக்கும் மாலுக்கும் அரியராயினும்) தன்னிடத்து அன்பு இல்லாத என்னை அடியவனாக்கிக்கொண்ட. அள்ளூறு உள்ளம்-மிகுதியாக (அமுதம்) ஊறும் மனம். வேண்டும் தனையும் - வேண்டுமளவும்; கூடுமளவும். பூண்டு - திருவடியைச் சிரமேற் சூடி.

(௪) அல்லி - அகவிதழ்களையுடைய. இறந்த சுடரை - கடந்த ஒளியுருவனை. நிறை இன்அமுதை-நிறைந்த இனிய அமுதம்போல்பவனை. புல்லி - இறுகப்பற்றி.

திகழத் திகழும் அடியும் முடியுங்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நில(ம்) முழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்(டு)
ஆவா என்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. ரு

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. சு

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டங்

---

(ரு) திகழத் திகழும் - மிகவும் ஒளிவிட்டு விளங்கும். கீழும் மேலும், மாலும் அயனும், அகழ்ந்தும் (தோண்டிச் சென்றும்) பறந்தும். அம்மான் - அம்மஹான்; அப்பெரியோன். நிகழ - செய்தி பரவ. வரி 6. ஐயோ என்று இரங்கி அருள் புரிந்த தன்மையெல்லாம்.

(சு) அருள் செய்ய - அருள் செய்யவும். அருமால் - பெருமயக்கம். என்று என்று - என்று பல தடவைகள் எண்ணி. சொரிந்த கண் நீர் சொரிய - நீரைப் பொழியும் கண்கள் நீரைப் பொழிந்து கொண்டேயிருக்க. உள்நீர் உரோமம் சிலிர்ப்ப - உள்ளன்பினால் மயிர்க்கூச்செறிய. புரிந்து - விரும்பி.

(எ) வரி 1. (அன்பரல்லாத) பிறருக்கு நினைத்தற்கு அரிய. தனியை - ஒருவனாகிய கடவுளை. தழைத்து - களித்து. தழுத்த

கனையக் கண்ணீர் அருவிபாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. எ

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. அ

தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
மேதா மணியே என்றென்றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. கூ

---

கண்டம் கனைய - நாத்தடுமாறிப் பேச, கண்டத்தில் கனைப்பு உண்டாக.

(அ) வரி 1. மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி உருகி. கூத்தும் நவிற்றி - கூத்து ஆடி. சிலிர் சிலிர்த்து - மயிர் சிலிர்த்து.

(கூ) வரி 1. பழமையான ஏழுலகங்களுக்கும் தந்தையே, தாயே! நாயனைய என்னை ஆட்கொண்ட அறிவிலியே !—ஆள்கொள்ளத் தகுதியற்றவனை ஆண்டுகொண்ட இறைவன் பெருங் கருணையை வியந்து கூறியது. நிந்தாஸ்துதி. பெருந்தேன் பில்க - பேரானந்தம் பெருக. மேதா மணியே - பேரறிவே ; இரத்தினமே. பாதப்போது ஆய்ந்து அணைவது - பாதமலரை அறிவினால் ஆராய்ந்து சேர்வது.

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போ தணைவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. க0

திருச்சிற்றம்பலம்

---

(க0) முழுதும் - எல்லாவற்றையும். பூப்போது - அழகிய மலர்.

திருப்பெருந்துறையில் அருளிய

# வாழாப்பத்து

## முத்தி உபாயம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. க

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. உ

---

(க) பற்று - ஆதரவு. அருள் இலை ஆனல் - நீ வீட்டின்பத்தைக் கொடுத்து அருள் செய்யாவிட்டால்.

(உ) வம்பன் - வீணன். இருவர் - அயன், மால். உணர்வு இறந்து - அறிவினைக் கடந்து.

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ(டு) உவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. ௩

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. ௪

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. ௫

---

(௩) வரி 5, 6. பிணங்குவதும் உன்னோடுதான். மகிழ்வதும் உன்னைக்கண்டு. எனக்கு உறுதி அளிப்பது உன்னுடைய கடன்.

(௪) வல்லை - விரைவாக. வல்லையாய் - வலிமை யுடையனாய்.

(௫) வரி 6. ஆகிய இவைகளை உன் வசமே ஒப்புவித்து.

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. சு

பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. எ

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்து(ய்)ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. அ

---

(சு) செஞ்செ(வ்)வே - மிகச் செம்மையாக.

(எ) பரிதிவாழ் ஒளியாய் - சூரியனை வாழ்விக்கும் ஒளியை யுடையவனே ; சூரியனுடைய ஒளிக்கும் காரணமாயிருப்பவனே. திருஉயர் கோலம் - செல்வத்தாற் சிறந்த அழகு. மருளன் - மயக்க உணர்வை உடையவன்.

பாவநா சாவுன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. ௯

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. க0

திருச்சிற்றம்பலம்

---

(௯) முழங்கு அழல் - சப்திக்கின்ற அனற் பிழம்பாய். மா உரி யானே - விலங்கின் (யானையின்) தோலைப் போர்த்தவனே.

(க0) மழவிடையானே - இளங் காளை வாகனனே.

திருப்பெருந்துறையில் அருளிய

# அருட்பத்து

## மகாமாயா சுத்தி

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. க

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. உ

---

(க) சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே - ஒளி வடிவினனே, (ஞாயிறு திங்கள் என்னும்) இரு சுடரானவனே, அவற்றைச் சூழ்ந்த ஒளியுடைய விளக்குபோன்ற நட்சத்திரங்களானவனே. சுரிகுழல் - சுருண்ட கூந்தல். பால் கொள் - பால்நிறத்தைக் கொண்ட. நீதியே - பட்சபாதமில்லாதவனே. குருந்தம் மேவிய சீர் - குருந்த மரத்தின் கீழ் குருவாக எழுந்தருளிய சிறப்பையுடைய. ஆதரித்து - விரும்பி. அதெந்துவே - அஞ்சாதே.

(உ) ஒருத்தனே - ஒப்பற்றவனே. திருத்தம் ஆம் பொய்கை - (மூழ்குவோர் பாவங்களைப் போக்கும்) தூய்மை வாய்ந்த தடாகம், அருத்தனே - செல்வனே ; மெய்ப்பொருளானவனே.

எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண்நா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. ங.

கமலநான் முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் 'நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படாய்' என்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே. ச

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே

---

(ங) ஏலம் வார் குழலிமார் இருவர் - இயற்கை மணம்கொண்ட நீண்ட கூந்தலையுடைய தேவிமார் இருவர் (பார்வதி, கங்கை). தக்க நல் - சிறந்த அழகுடைய. அங்கணா - அழகிய (அருட்) கண்ணை யுடையவனே.

(ச) வியன் தழல் - பெரிய நெருப்பு வடிவமாய். விமலன் - இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவன். நான்மறைத் திமிலம் சேர் - நான்கு வேத முழக்கத்தின் பேரொலி சேர்ந்த. அமலன் - குற்றமற்றவன்.

(ரு) துடிகொள் - உடுக்கை வடிவம்கொண்ட. நேர் இடையாள் - நுண்ணிய இடையை யுடையவள். துணை - இரண்டு. பொடிகொள் வான்தழல் - நீறுபூத்த நெருப்பு.

செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. ரு

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்(து)
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை யளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. சு

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. எ

---

(ரு) செடிகொள் வான் பொழில் - செடிகள் அடர்ந்துள்ள பெரிய சோலைகள். அடிகள் - கடவுள்.

(சு) துப்பு - அறிவு ; பவளம். துப்பனே - அறிவு வடிவினனே; பவளம் போன்ற நிறத்தையுடையவனே. நீறு துதைந்து எழு துளங்கு ஒளி - நீறு படிந்து எழுகின்ற விளக்கமாகிய ஒளி (பொருந்திய). உறு சுவை - நிலைத்த (இனிய) சுவை. செப்பமாம் - திருத்தமாகிய.

(எ) மெய்யனே - நிலையான பொருளானவனே. விகிர்தா - வேறு வேறு வடிவம் கொள்பவனே. வில்லா - வில்லாகக் கொண்டு. மேவலர் - பகைவர். தழற் பிழம்பு - அக்கினித் திரட்சி. செய்யன் - செந்நிறமுடையவன்.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மோட்டரு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. அ

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே. கூ

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்

---

(அ) முனிவா - தவ வடிவங் கொண்டவனே. மொட்டு அரு மலர்-அரும்பு நிலை மாறாத பூ ; மலரும் பருவத்தில் உள்ள பூ. பரகதி- மேலான பதவி ; முத்தி. சித்தன் - ஞானவடிவினன்.

(கூ) மருளனேன்-மருளும் (மயங்கும் அல்லது அஞ்சும்) தன்மை யுடையேன். வரி 2. மறுமை இம்மை என்னும் இரண்டின் சார்பான பிறவியை ஒழித்த. பொருளனே-மெய்ப்பொருளானவனே. பொங்கு வாள் அரவம் - சீறுகின்ற ஒளி பொருந்திய பாம்பு. தெருளும் - தெளிவு உணர்ச்சியைக் கொடுக்கும்.

(க0) சீர் - சிறப்பான நிலை. ஏசறா - ஏசற்று, (காணப்பெறா மையால்) துக்கித்து.

றருந்தவா நினேந்தே ஆதரித் தழைத்தால்
அலேகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலே புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. கO

திருச்சிற்றம்பலம்

திருக்கழுக்குன்றத்தில் அருளிய

# திருக்கழுக்குன்றப் பதிகம்

## குரு தரிசனம்

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு மான்உன் நாமங்கள் பேசுவார்க், கிணக்கி லாததோர் இன்ப மேவருந் துன்பமேதுடைத் தெம்பிரான், உணக்கி லாததோர் வித்துமேல்விளே யாமல் என்விணே ஒத்தபின், கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து காட்டி னுய்கழுக் குன்றிலே. க

(கO) அரும்தவா - அரிய தவ வடிவினனே. பொருந்தவா - என்னே அடைவதற்கு வா. போதராய் - போவாய்.

(க) பிணக்கு - சண்டை; மாறுபாடு. இணக்கு - ஒப்பு. வரும் - உண்டாகும். எம்பிரான்! துன்பமே துடைத்து, உணக்கிலாததோர்......காட்டினுய் - உரைநடை. உணக்கிலாத......விளேயாமல் - கெட்டுப்போகும் தன்மை இல்லாத பிறவிக்கு வித்தாகிய அவாவை அறுத்துப், பிறப்பு உண்டாகாதபடி செய்து. என் விணே ஒத்தபின் - இருவிணே யொப்பு எனக்கு வந்த பிறகு. இருவிணே யொப்பாவது நல்விணேயால் வரும் இன்பத்திலும், தீவிணேயால்வரும் துன்பத்திலும், சம புத்தி பண்ணுவது. கணக்கு இலாத் திருக்கோலம் - அளவு படாத திருவுருவம்.

பிட்டு நேர்பட மண்சு மந்த பெருந்து றைப்பெரும் பித்தனே, சட்ட நேர்பட வந்தி லாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன், சிட்டனேசிவ லோக னேசிறு நாயி னுங்கடை யாயவெங், கட்டனேனையும் ஆட்கொள் வான்வந்து காட்டி னுய்கழுக் குன்றிலே. உ

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி மலங்கெ டுத்த பெருந்துறை, விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி மேல் விளைவ தறிந்திலேன், இலங்கு கின்றநின் சேவடிகள் இரண் டும் வைப்பிட மின்றியே, கலங்கி னேன்கலங் காமலேவந்து காட்டி னுய்கழுக் குன்றிலே. ங

பூணொ ணாததொ ரன்பு பூண்டு பொருந்தி நாள்தொறும் போற்றவும், நாணொ ணாததொர் நாணம் எய்தி நடுக்கடலுள் அழுந்திநான், பேணொ ணாதபெ ருந்துறைப்பெருந் தோணி

(உ) வரி 1. பிட்டுக்குச் சமமாக மண்சுமந்த, (அதாவது மண் சுமப்பதற்குப் பிட்டைக் கூலியாக ஏற்றுக்கொண்ட) திருப்பெருந் துறையில் வீற்றிருக்கும் பெரிய பித்தனே (பேரன்புடையவனே). **நிந் தாஸ்துதி.** வரி 2. உன்னுடைய சட்டத்திற்கு (கட்டளைக்கு) ஒத்து நடவாத குற்றமுடைய நான் உன்னைச் சாராமற் போனேன். சழக்கு - குற்றம். சிட்டனே - நல்லோனே ; நன்மையைச் செய் வோனே. வெம் கட்டனேனையும் - கொடிய துன்பத்தை யுடை யேனையும். "கட்டனேன் பிறந்தேன் உனக்காளா"—**சுந்தரர்.**

(ங) மலங்கினேன் - (துயராற்) கலங்கினவன். கண்ணில் நீரை மாற்றி - துன்பத்தைப் போக்கி. மலம் கெடுத்த பெருந்துறை - மலத்தைப் போக்கிய திருப்பெருந்துறைப் பெருமான் ; அல்லது மலத்தைப் போக்குதற்கு ஏதுவாகிய பெரிய நெறி. விலங்கினேன் - விட்டு விலகினேன். வினைக் கேடனேன் - தீவினையாகிய கெடுதியை உடையேன். வைப்பு இடமின்றி - வைப்பதற்குத் தகுந்த இடம் இல்லாமையால்.

(ச) வரி 1. (உனது அன்பர்) பிறரால் மேற்கொள்ளப்படாத பேரன்பினைப் பூண்டு அவ்வன்பிலே நிலைத்து நின்று, நாடொறும் வழிபடவும். வரி 2, 3. வெட்கப்படக் கூடாத ஒரு வெட்கத்தை அடைந்து கரை காணமுடியாத துன்பமாகிய கடலின் நடுவில் அழுந்தி, விரும்புதற்கரிய திருப்பெருந்துறைப் பெருமானாகிய தோணியைப் பற்றிக்கொண்டு செலுத்தலும்.

பற்றி யுகைத்தலும், காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. ச

கோல மேனிவ ராக மேகுண மாம்பெருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன் சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓதநீ வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. ரு

பேதம்இல்லதொர் கற்பளித்த பெருந்துறைப்பெருவெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை ஏதிலார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே. கூ

இயக்கி மாரறு பத்து நால்வரை எண்குணம் செய்த ஈசனே, மயக்க மாயதோர் மும்ம லப்பழ வல்வி னைக்குள்

---

(ச) காணொணாத் திருக்கோலம் - யாவராலும் காணுதற்கரிய அழகிய திருவடிவம்.

(ரு) கோலம் மேனி - அழகிய திருமேனியுடைய. வராகமே - பன்றியுருவனே.கொண்டலே (அருளைப் பொழியும்) மேகமே. கரி - சாக்ஷி. நச்சி நச்சிட - மிக்க அன்பு செய்யச் செய்ய. காலமே - காலத்தை வடிவமாக உடையவனே. உனை ஓத - உன்னை நான் துதிக்க, அதனால்.

(கூ) பேதம் இல்லதோர் கற்பு - பேதிக்கப்படாததோர் (மாறுபாடு அடையாத) கற்பு; பிறதேவரை நாடாத நிலை. வெள்ளமே - அருட்பெருக்கே. வரி 2. அயலார்கள் என்னைப் பற்றிக் குற்றமான வார்த்தைகள் பேசும்படி விட்டு அதைத் தடுக்க நீ யாது செய்தாய்? (ஒன்றும் செய்யவில்லை). வரி 3, 4. மீண்டும் மீண்டும் இறத்தல், தீங்கு இவைகளில்லாத ஒப்பற்ற உனது திருவடி எனக்கு அடைக்கலம் என்று அன்பினால் உன்னைத் துதிக்க, நீ திருக்கழுக்குன்றில் உனது திருக்கோலத்தைக் காண்பித்தாய்.

(எ) வரி 1. இயக்கப் பெண்கள் அறுபத்து நால்வரை எண் குணங்கள் உள்ளவர்களாகச் செய்த ஆண்டவனே! வரி 2. மயக்கத்திற்குக் காரணமாகிய மும்மலங்களின் விளைவாகிய பழய கொடிய வினையில் அழுந்திக்கிடக்கவும்.

அழுந்தவுந், துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின் தூய்
மலர்க்கழல் தந்தெனைக், கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டினாய் கழுக்குன் றிலே. எ

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# கண்ட பத்து

## நிருத்த தரிசனம்

### கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. க

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை

(எ) துயக்கு - தளர்வு. கயக்க வைத்து-மெலியும்படிச் செய்து. வரி 4. (உன்னோடு அழைத்துச் செல்லாமல் இந்நிலவுலகில்) மெலியும்படிச் செய்து, இப்போது வந்து உன் அடியவர்கள் முன்னிலையில் உன் திருவருட் கோலத்தைக் காட்டினாய்.

(க) வரி 1,2. ஐம்பொறிகளின் வசப்பட்டு அதனால் மயக்கத்தையடைந்து, அக்காரணத்தினால் இறந்து, இறந்தபின் ஆகாய மார்க்கமாய் அலைந்து சென்று, கடத்தற்கரிய நரகத்தில் வீழும் இயல்புடைய எனக்கு. சிவமாக்கி - தற்போதத்தை ஒழித்து, சிவத்தின் வசமாகச் செய்து. ஆனந்தம் - ஆனந்தமயமா யிருப்பவனை.

(உ) வினைப்பிறவி - வினைக்குப் பயனாகிய பிறப்பு. த(ன்)னை - இறைவனை.

எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்தஇணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே. உ

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே.

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணஎன் தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. ச

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்(து) ஆட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. ரு

(ங) வரி 1. 2, என்னுடைய உருவம் தோற்றப்படாத (நான் கருவிற் கிடந்த) காலத்திலே என்னுள்ளே புகுந்து என் மனத்தில் நிலைத்து நின்று, கருவிலேயே திருந்தச் செய்து, ஊனாலாகிய சரீரத்துட் புகுந்து, திருவருளினால் ஆண்டுகொண்ட. கருத்து இருத்தி என்று பிரித்து - என் எண்ணத்தைத் தன்னிடத்தில் பதியச்செய்து என்றும் பொருள் கொள்ளலாம். "கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்" "கருவுற்றநாள் முதலாக உன்பாதமே காண்பதற்கு உருகிற்றென் உள்ளமும்..." என்னும் அப்பர் தேவாரக் கருத்துக்களோடு ஒப்பிடுக. தித்திக்கும் சிவபதத்தை - இன்ப மயமான சிவபதவியை (சிவனோடு கலந்த நிலை). அருத்தி - அன்பு.

(ச) கல்லாத - அருள் நூல்களைக் கல்லாமையால் உண்டான. வல்லாளன் - அறிவுத் திறமுடையவன். வனப்பு எய்தி - அருளழகு அடைந்து. பசு பாசம் அறுத்தானை - பசுத் தன்மையையும் (தற்போதத்தையும்) மும்மலங்களையும் போக்கினவனை.

(ரு) தடுமாறும் - அறிவு கலங்கும். ஆதம்இலி - ஆதரவு இல்லாதவன் (ஆகிய). பேதை குணம் - அறியாமைக் குணம்.

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே. சு

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் போமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. எ

அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்(கு)
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. அ

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தோளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே. கூ

---

(சு) உறவினொடும் - சுற்றத்தார் பற்றுடன் அல்லது பிணி மூப்பு என்ற இவற்றோடு தொடர்புடைய தீமைகளோடும். ஒழியச்சென்று - முற்றிலும் நீங்கும்படியாகப் போய்.

(எ) பத்திமை - அன்புடைமை. பரிசு - நற்குணம். இலா - இவற்றோடு தொடர்பில்லாத. பித்தன் இவன் எ(ன்)ன - இவன் பித்தன் என்று உலகத்தார் சொல்லும்படி. போமே - நழுவாமல். வித்தகனார் - அறிஞர்.

(அ) பாவகம - எண்ணம். வரி 2. இனிமேல் நிகழப்போவது இன்னதென்று அறியாமல். வெறுவியன் - பயனற்றவன். களவு இலா - வஞ்சகம் இல்லாத.

(கூ) வரி 1. (இறைவனை அடையும்) முறையும், அடைவதனால் வரும் பயனும் அறியாத. உளத்து ஒளி ஓங்கி வளர - மனத்தின்கண் (மாயாமலத்தைப் போக்கும்) ஞான ஒளி மிகுந்து வளரும்படியாக. உலப்பு இலா - முடிவு இல்லாத. வாங்கி வினை மலம் அறுத்து - வினைப்பயன் என்னை அடையாமற் செய்து, ஆணவ மலத்தைப் போக்கி. மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மும்மலங்களையும் போக்கினமை கூறப்பட்டுள்ளது.

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# பிரார்த்தனைப் பத்து

## சதா முத்தி

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கலந்து நின்னடியா ரோடன்று வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்துபோனேன் உடையானேஉலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங் கூர அடியேற்கே.

---

(௧0) புலன் - ஐம்புலன்கள், அறிவு. பொருளாகிப் பேதங்கள் அனைத்துமாய் - எல்லாப் பொருள்களும் ஆகி அவற்றின் பலவகையான வேறுபாடுகளுமாகி. கேதங்கள் - துன்பங்கள். கிளர் ஒளி - தானே விளங்கும் ஒளி, சுயஞ்சோதி. மரகதம் - பச்சைமணி; அம்மையின் நிறம்.

(௧) வரி 1. (நீ என்னை ஆட்கொண்ட) அந்நாளில் உனது அடியார்களுடன் கூடி வாளா (செயலற்று, தற்போத உணர்ச்சியை இழந்து) மகிழ்ந்திருந்தேன். "வாளாநின்று தொழுமடியார்கள் வானாளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்"—**சுந்தரர்.** வரி 2. அவர்களோடு கூடிக் களித்த காலங்கள் கழிந்து போயின. பின்னாளில்

அடியார் சிலருன் அருள் பெற்றார் ஆர்வங் கூர யான் அவமே, முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன் மூக்கின்றேன், கடியேனுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக் கடல்பொங்க, உடையாய் அடியேன் உள்ளத்தே ஓவா துருக அருளாயே. உ

அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த, இருளார்ஆக்கை யிதுபொறுத்தே எய்த்தேன் கண்டாய் எம்மானே, மருளார் மனத்தோர் உன்மத்தன் வருமால் என்றிங் கெனைக்கண்டார், வெருளா வண்ணம் மெய்யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே. ௩

வேண்டும் வேண்டும் மெய்யடியா ருள்ளே விரும்பி எனைஅருளால், ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே அருமா மணிமுத்தே, தூண்டா விளக்கின் சுடரனையாய்

---

(அவர்களை விட்டுப் பிரிந்தபின்) துன்பம் புகுந்து நிலைபெற்றது. உலர்ந்துபோனேன் - வாடிப்போனேன். உலவா..............அடியேற்கே - என்றும் அழியாத பேரின்பத்தைத் தருகின்ற ஒளிவடிவினனைக் காணும்பொருட்டு வருந்தினேன். அடியேனுக்கு உன்மீது அன்பு மிகும்படி அருள் செய்யவேண்டும்.

(உ) ஆர்வம் கூர (அன்பு மிகுந்ததனால்)அருள் பெற்றார். வரி 2. நாற்றம் மிக்க பிணத்தின் இறுதி நிலையை அடையாமல் (இறந்தொழியாமல்), (அன்பில்லாமையால்) நீ கொண்ட கோபம் காரணமாக, அடியேன் ஒரு பயனுமின்றி மூப்பு அடைகின்றேன்.பொங்க - பொங்கும்படி. ஓவாது உருக - இடைவிடாது உருகும்படி.

(௩) அருள் ஆர் அமுதம் - திருவருளாகிய கிடைத்தற் கரிய அமுதம். வரி 2. அறியாமை நிறைந்த இந்த உடலைச் சுமந்து இளைத்தேன். வரும் ஆல் - வருகின்றான். ஆல் - அசை. வெருளா வண்ணம் - பயப்படாதபடி.

(௪) வரி 1. வேண்டத் தக்கனவற்றையே (அல்லது உன்மீது மிக்க அன்பையே) உன்னிடத்துப் பெற விரும்பும் மெய்யடியார் நடுவே (என்னை வைக்க) விரும்பி. தூண்டா விளக்கு - தூண்ட வேண்டாது தானே எரியும் விளக்கு.

தொண்ட னேற்கும் உண்டாங்கொல், வேண்டா தொன்றும்
வேண்டாது மிக்க அன்பே மேவுதலே. ச

மேவும் உன்தன் அடியாருள் விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா உன்தன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாதுமின்றி அறுதலே. ரு

அறவே பெற்றார் நின்னன்பர் அந்தமின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே. சூ

---

(ச) வேண்டாது ஒன்றும் வேண்டாது - வேண்டத் தகாதன (இவ்வுலகப் பொருள்கள்) ஒன்றையும் வேண்டாமல். மிக்க அன்பு மேவுதலே உண்டாங்கொல் - உன்னிடத்து மிக்க அன்பு பொருந்துவது அடியேனுக்கும் உண்டாகுமோ? (அவ்வாறு உண்டாக நீ அருள் புரிய வேண்டும். அதுதான் நான் வேண்டுவது.)

(ரு) காவி சேரும் கயற் கண்ணாள் பங்கா! உன்தன் அடியாருள் மேவும் (பொருந்தியிருக்கும்) மெய்ம்மையே யானும் விரும்பி, உன்தன் கருணையினால் பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து ஆவி யாக்கை யான் எனதென்று யாதுமின்றி அறுதலே பாவியேற்கும் உண்டாமோ?—உரைநடை. காவிசேரும் - நீலோற்பல மலரைப்போன்ற நிறத்தினையுடைய. மெய்ம்மை - திருவருளோடு கலந்து நிற்கும் தன்மை.

(சூ) வரி 1. உன் அன்பர்கள் முடிவில்லாமல் உள்ளம் உருகவே (பரமானந்தப் பழங் கடல் சேர்ந்து ஆவி ஆக்கை யான் எனதென்பது யாதுமின்றி) அறவே (முற்றிலும் நீங்கப்) பெற்றார்கள். புறமே - அவர்கள் கூட்டத்திற்கு வெளியே. பேரா - நிலைபெயராத. ஒழியா - என்றும் நிலைத்த. பிரிவு இல்லா - விட்டு நீங்காத. மறவா நினையா - மறப்பு நினைப்பு அற்ற நிலையில் அனுபவிக்கப்படுகின்ற. அளவிலா - அளவுகடந்த; எல்லையில்லாத. மாளா - முடிவு இல்லாத. இன்ப மா கடலே - பேரானந்தக் கடலே. எழுகடல் என்று சொல்லப் படுவது போல, இன்ப மா கடலுக்கு எழு அடைமொழிகள் கொடுத்திருப்பது காண்க.

கடலே அனைய ஆனந்தம் கண்டா ரெல்லாங் கவர்ந்
துண்ண, இடரே பெருக்கி ஏசற்றிங் கிருத்த லழகோ அடி
நாயேன், உடையாய் நீயே அருளுதியென் றுணர்த்தா
தொழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரார் அருளால் இருள்
நீங்கச் சோதீ இனித்தான் துணியாயே. ௭

துணியா உருகா அருள்பெருகத் தோன்றுந் தொண்ட
ரிடைப்புகுந்து, திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே
நின்று தேய்கின்றேன், அணியா ரடியா ருனக்குள்ள அன்
புந் தாராய் அருளளியத், தணியா தொல்லை வந்தருளித்
தளிர்ப்பொற் பாதந் தாராயே. ௮

தாரா அருளொன் றின்றியே தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும் அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்கவேண்டும் பெருமானே. ௯

---

(௭) கவர்ந்து உண்ண - வாரி உண்ண, கொள்ளைகொண்டு அநுபவிக்க. ஏசற்று - துக்கித்து. வரி 3. என்னை அடிமையாக உடையவனே! (கடல்போன்ற பேரானந்தத்தை, நான் கேளாமலே) நீயே அருள் செய்வாயென்று எண்ணி உனக்கு என் விருப்பத்தைத் தெரிவிக்காமலே காலத்தைக் கழித்து விட்டேன். வரி 4. ஒளி வண்ணனே! இனியாவது ஞான ஒளிவீசும் உன் அருள் வாளினால் என் மல இருள் நீங்கும்படி அதனை வெட்டி யெறிவாயாக.

(௮) வரி 1.(நீயே ஆதரவு என்று)துணிந்து,மனம் உருகி,அதனால் திருவருட் பொலிவு மிகும்படி விளங்குகின்ற அடியார் கூட்டத்திற் புகுந்து. வரி 2. வன்மை மிகுந்த மூங்கில் போன்று உருகாத மன முடைய யான் இவ்வுலகில் நிலையுற்றுத் தளர்கின்றேன். அணியார் - உனக்கு சமீபமாயுள்ள அல்லது கூட்டமாயுள்ள. அருள் அளிய-உன் திருவருளினால் என் மனம் உருகும்படி. அல்லது, உன் திருவருள் கனிந்து. தணியாது ஒல்லை - தாமதியாமல் விரைவாக.

(௯) வரி 1. நீ கொடுக்காத அருள் ஒன்றும் இல்லை என்று சொல்லும்படி உன் அருள் முழுவதையும் கொடுத்து விட்டாய் என்று உன் உறவினர் (அடியார்) எல்லாம். ஆராநின்றார் - (பேரானந்தத்தை) முழுவதும் அநுபவிக்கின்றார்கள். அயர்வேனோ - தளர்வேனோ. பேராமை - பேர்தல் (நீங்குதல்) இல்லாதபடி.

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனநெகா
நானோர் தோளாச் சுரையொத்தால் நம்பிஇத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான் கொடியேற் கென்றோகூடுவதே.

கூடிக் கூடி உன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி ஆடி ஆனந்தம் அதுவே யாக அருள்கலந்தே. ௧௧

திருச்சிற்றம்பலம்

---

(௧௦) வந்திப்பார் மதுரக் கனியே-வணங்குவார்க்கு இனிய கனி போல் இன்பம் அளிப்பவனே. வரி 2. நான் ஒரு தொளையிடாத சுரைக் குடுக்கை போன்று பயனற்றுக் கிடந்தால், நம்பியே ! நீ இதனால் நன்றாய் வாழ்ந்து விட்டாய் போலும் ! உருகிப் பெருகும் உள்ளத்தை - உருகி அன்பு மிகும் மனதை.

(௧௧) குனிப்பார் - கூத்தாடுவார் (ஆகவும்). களிப்பாரா - ஆனந்திப்பாராகவும். வழியற்றேன் - வழி தெரியாமல் திகைக்கின்ற நான். வற்றல் மரம் - பட்டுப்போன மரம். ஊடி - பிணங்கி. உடையாயொடு கலந்து - என் நாயகனாகிய உன்னோடு கூடி. பெருகி நெக்கு- அன்பு பெருகி ; மனம் நெகிழ்ந்து. வரி 4. ஆனந்தக் கூத்தாடி நான் ஆனந்த மயமே ஆகும்படி என்னோடு (அத்துவிதமாகக்) கலந்து அருள் செய்வாயாக.

திருப்பெருந்துறையில் அருளிய

# குழைத்த பத்து

## ஆத்தும நிவேதனம்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாய் உடையாய் கொடுவினையேன், உழைத்தா லுறுதி யுண்டோதான் உமையாள் கணவா எனைஆள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர் சடையாய் முறையோவென், றழைத்தால் அருளா தொழிவதே அம்மா னேஉன் னடியேற்கே. க

அடியேன் அல்லல் எல்லாம்முன் அகல ஆண்டாய்என் றிருந்தேன், கொடியே ரிடையாள் கூறுஎங் கோவே ஆவா என்றருளிச், செடிசேர் உடலைச் சிதையாத தெத்துக் கெங்கள் சிவலோகா, உடையாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தால் ஒன்றும் போதுமே. உ

---

(க) வரி 1. என்னை (அடிமையாக) உடையவனே! பழைய கொடிய வினையாகிய நோய் என்னை வாட்டினால் காப்பாற்றுவாயாக. உழைத்தால் உறுதி உண்டோ தான்-நான் முயற்சித்தால் மாத்திரம் உறுதியான பயன் கிடைக்குமோ? அதற்கு நீயும் அருள் புரிய வேண்டும். வரி 4. என் தந்தையே! உன் அடியவனாகிய எனக்கு அருளாதொழிவது தகுதியோ?

(உ) அகல முன் ஆண்டாய் - நீங்கும்படி முற்காலத்தில் என்னை ஆட்கொண்டாய். வரி 3, 4. என்னை அழைத்து ஏவல் கொள்ளாது தண்டித்தால் அது ஒன்று மாத்திரம் சாலும். தீமை (பாவம்) சேர்ந்த உடலை அழித்து ஒழிக்காதது எதற்காக?

ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின் கருணை, இன்றே இன்றிப் போய்த்தோதான் ஏழை பங்கா எங்கோவே, குன்றே அனைய குற்றங்கள் குணமா மேன்றே நீகொண்டால், என்தான் கெட்ட(து) இரங்கிடாய் எண்தோள் முக்கண் எம்மானே. ௩

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் றனைநூக்கி உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள் என்றென் றுன்னைக் கூறுவதே.

கூறும் நாவே முதலாகக் கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பு(ம்)நீ தீமைநன்மைமுழுது(ம்)நீ[கில்
வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை உன்னை விரித்துரைக்
தேறும் வகைஎன்சிவலோகா திகைத்தால் தேற்றவேண்டாவோ.

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ, வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய், வேண்டி நீயா தருள் செய்தாய்

---

(௩) ஒன்றும் போதா - ஒன்றுக்கும் உதவாத. இன்றே இன்றிப் போய்த்தோதான் - இப்போது இல்லாமற் போய்விட்டதோ? என்தான் கெட்டது - என்ன கெட்டுப்போயிற்று ?

(௪) வரி 2. இந்த உடலிலே புகும்படி என்னைத் தள்ளி என்னை அலையும்படி செய்துவிட்டாய். வரி 3, 4. அப்படி ஆனபோதிலும், அரசனே! அடியேனுடைய அறிவில்லாமையை நீயே தெரிந்து எனக்கு அருள் புரிந்து, உன்பால் என்னை அழைத்துக்கொள்ளு நாள் எப்போது என்று நான் உன்னிடத்து முறையிட வேண்டுமோ? நான் முறையிடாமல் நீயே அழைத்துக்கொள்ளவேண்டும்.

(௫) கூறும் கரணம் - பேசப்படும் கருவிகள். தேறும் - தெளிவு அடையும். பரிசு - தன்மை. மெய்ம்மை உன்னை விரித்து உரைக்கில் - உண்மையாகவே உன்னுடைய தன்மைகளை விரிவாகப் பேசினால். இதைப் பாட்டின் முதலிற் கொண்டு, கூறும் நாவே முதலாக—என்று கூட்டுக.

(௬) வேண்ட முழுதும் - (வேண்டத் தக்கனவற்றை உன்பால்) இரந்து கேட்க அவை முழுவதையும். வேண்டி - நீயே விரும்பி.

யானும் அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசொன்
றுண்டேன்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே. ௬

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை
எல்லாமுங், குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ, இன்றோர் இடையூ றெனக்குண்
டோ எண்தோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய்
பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே. ௭

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன தோஇங் கதிகாரம்
காயத்திடுவாய்உன் னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாதிரவும்பகலும்நா னவையேஎண் ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கேபுகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமைசால அழகுடைத்தே.

---

(௬) வேண்டின் அல்லால்-விரும்புவதல்லாமல். பரிசு-வெகுமதி.

(௭) குன்றே அனையாய் - (பாதுகாப்பிற் சிறந்த) மலை போன்றவனே. வரி 4. நீ நன்மை செய்தாலும் செய்க, தவறு (கெடுதி) செய்தாலும் செய்க ; இச் செயல்களுக்கெல்லாம் நானோ தலைவன். இனி என் செயல் ஒன்றுமில்லை.

(அ) நீயே நயந்து - நீயே விரும்பி வந்து. மாயப் பிறவி - நிலையில்லாத பிறப்பு. ஆயக் கடவேன் நானோ தான் - அதனைப்பற்றி ஆராய உரிமை உடையவன் நானோ. என்னதோ இங்கு அதிகாரம் - இதைப்பற்றிய அதிகாரம் என்னுடையதல்ல, எல்லாம் உன்னுடையதே. வரி 4. இந்த உடம்போடு என்னை இருத்தி வைத்தாலும் சரி, உன்னுடைய திருவடிக்கீழ் வைத்தாலும் சரி, எல்லாவற்றிற்கும் நான் உடன்படுகின்றேன்.

(௯) வரி 2, 3, 4. இரவும் பகலும் (வேறொன்றனையும்) எண்ணாமல் உன் திருவடிகளையே எண்ணிக்கொண் டிருப்பதல்லாமல், இந்நிலவுலகில் என் உடலை விடும்படியும், உன் திருவடிக்கே வந்து சேரும்படியும், பெரியோனே ! நான் நினைக்க உரிமை உடையேனோ ? அப்படி எண்ணினால் என் அடிமைத் தன்மை மிக்க அழகுடையது ! அப்படி எண்ணுவது அடிமைத் தன்மைக்குத் தகாது.

அழகே புரிந்திட் டடிநாயேன் அரற்று கின்றேன் உடையானே, திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய், புகழே பெரிய பதம்எனக்குப் புராண நீதந் தருளாதே, குழகா கோல மறையோனே கோனே என்னைக் குழைத்தாயே. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# உயிருண்ணிப் பத்து

## சிவானந்தம் மேலிடுதல்

### கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாட்களித் தெந்நாள்இறு மாக்கேன் இனியானே. ௧

(௧௦) வரி 1. அழகனே! உன் திருவடியைப் பெற விரும்பி அலறுகின்றேன். வரி 3, 4. (அழியாப்) புகழையுடையவனே! பெரிய பேரின்பநிலையை நீ எனக்குக் கொடுத்தருளாமல் என்னை நீ வாட்டினையே. புராண - பழையோனே. குழகா - இளமை வடிவினனே.

(௧) அழகிய நாவையுடைய பாம்பின் படத்தை ஒத்த. மெய் - உடம்பு. வினைக்கேடா - வினைகளைத் தொலைப்பவனே. செந்நாவலர் பரசும் - செம்மையான நாவன்மையுடைய புலவர்கள் போற்றும். வரி 4. இனி நான் உன்னைக் கண்டு களிப்பது எந்த நாள் உன்னைக் கண்டு இறுமாந்திருப்பது எந்த நாள். இறுமாந்திருப்பது

நானாரடி யணைவாமெனொரு நாய்க்குத் தவிசிட்டிங்(கு)
ஊனாருடல் புகுந்தான்உயிர் கலந்தான்உளம் பிரியான் [வான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை உறை
வானோர்களும் அறியாததோர் வளமீந்தனன் எனக்கே. உ

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்த னாக்கிச் [யும்
சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறைஉறை
பனவனெனைச் செய்தபடி றறியேன் பரஞ்சுடரே. ௩

வினைக்கேடரும் உளரோபிறர் சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந்தெல்லேபெருந் துறையில்உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான்மறு மாற்றத் திடையானே.

---

என்பது நான் பெற்ற பேறு யார் பெறுவார் என்று எண்ணி இறைவன் கருணையைப் பாராட்டி யிருப்பது. "இறுமாந் திருப்பன் கொலோ ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டு, சிறு மான் ஏந்திதன் சேவடிக்கீழ் சென்றங்கு இறுமாந்திருப்பன் கொலோ"—**அப்பர்.** "மற்றுநான் பெற்றதார் பெறவல்லார் வள்ளலே கள்ளமே பேசிக் குற்றமே செய்யினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால் மிகைபல செய்தேன்"—**சுந்தரர்.**

(உ) வரி 1. நான் யார் (என்ன தகுதியுடையன்)? நான் தனது திருவடியை அடையும் பொருட்டு, நாய் போன்ற எனக்கு உயர்ந்த ஆசனத்தை யளித்து. வளம் - (பேரின்பச்) செல்வம்.

(௩) வரி 1. என்னை நான் யாரென்று அறிந்திலேன். பகலும் இரவும் கழிவதையும் தெரிந்திலேன். (மாணிக்கவாசகர் தன்னுணர்ச்சி யின்றி இறைவனையே நினைந்திருந்தமையால் இவற்றை யுணராதவர் ஆயினர்.) மத்த உன்மத்தன் - மிகப் பித்தன். பனவன்-அந்தணன். படிறு - சூழ்ச்சி.

(௪) வரி 1. அகன்ற இந்நிலவுலகில் வினையை ஒழிப்பவர் (பெருந்துறைப் பெருமானைத் தவிர) வேறு யாராவது இருக்கின்றார்களா? சொல்லுங்கள். இதைப் பாட்டின் கடைசியில் கொள்ளுக. புரை - உள்துளை. பி(ன்)னைத்தான் - மறுபடியும். எல்லே - பகற்காலத்திலேயே. மறுமாற்றத் திடையானே - மற்றும் எனது சொல்லினிடையும் உள்ளான்.

பற்றுங்கவை அற்றீர்பற்றும் பற்றுங்கது பற்றி
நற்றுங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றுங்கவன் கழல்பேணின ரோடுங்கூடுமின் கலந்தே. ௫

கடலின்திரை யதுபோல்வரு கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந் தொழியாவண்ணம் நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்தான் செய்தபடிறே. ௬

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும், வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்த(ம்)மை நாளுந், தீண்டேன்சென்று சேர்ந்தேன்
மன்னு திருப்பெருந்துறை இறைதாள், பூண்டேன்புறம்
போகேன்இனிப் புறம்போக லொட்டேனே. ௭

---

(௫) வரி 1, 2. உலகப்பற்றுகளை ஒழித்தவராய், பற்றவேண்டிய ஆதாரவு தன்னைப்பற்றி (நன்று ஆம் கதி) நல்லதோர் பதவியினை யடையவிரும்பினால், கெட்டொழியும் இயல்பினரே, ஓடி வாருங்கள். தெற்று ஆர் சடை - பின்னலையுடைய சடை. தெற்று - பின்னல். ஆங்கு - கற்றவாறே.

(௬) பின் இரண்டு அடிகளை முதலிற் கொள்க. சுடரும் சுடர் மதி - ஒளி பரப்பும் கதிர்களை யுடைய பிறை. படரும் சடை மகுடம் - விரிந்த சடையாகிய கிரீடம். படிறு - சூழ்ச்சி (யாதெனில்). வரி 1. கடலின் அலைகள்போல ஒன்றன்பின் ஒன்றாக ஓயாது வருகின்ற கலக்கத்தைச் செய்யும் பாசங்களைத் தொலைத்து. ஒழியா வண்ணம் - நீங்காதபடி.

(௭) சிவம் வேண்டார் - சிவபெருமானிடத்து அன்பில்லாதவர். நாளும் தீண்டேன் - எப்பொழுதும் ஒருவித தொடர்பும் வைத்துக் கொள்ளமாட்டேன். மன்னு திருப்பெருந்துறை சென்று சேர்ந்தேன். இறை தாள் பூண்டேன் - இறைவன் திருவடிகளைத் தலைமேற் கொண்டேன். வரி 4. திருவடிகளுக்குப் புறத்தே போகமாட்டேன், அவைகள் அகலுவதற்கும் விடமாட்டேன். ஒட்டேன் - இசையேன். இப்பாட்டில் சிவம் வேண்டாதவர் தான் தீண்டத்தகாதவர் என்று கூறப்பட்டுள்ளது. "ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார், பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில் பிறப்பினிலும்

கோற்றேன்எனக்கென்கோகுரை கடல்வாய்அமுதென்கோ
ஆற்றேன்எங்கள் அரனேஅரு மருந்தேஎன தரசே
சேற்றூர்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்
நீற்றூர்தரு திருமேனிநின் மலனேஉனை யானே. அ

எச்சம்அறி வேன்நான்எனக் கிருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனேஅரு மருந்தேஎன தமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி யானாகிநின் றானே. கூ

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந் தடவிமர மானேன் [உறைவாய்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை
நான்பாவியன் ஆனால்உனை நல்காய்என லாமே. கO

திருச்சிற்றம்பலம்

---

இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ........... " என்னும் **சிவஞான சித்தியார்** செய்யுளோடு ஒப்பிடுக.

(அ) முதல் இரண்டு அடிகளை இறுதியிற்கொள்க. உனையானே (உன்னை நான்)கொம்புத்தேன் எனக்கு என்று சொல்வதா?தேவாமிர்தம் என்று சொல்வதா ? உன்னோடு கலந்து அனுபவிக்கும் பேரின்பத்தைப் பொறுக்கமாட்டேன். " ஆற்றேனாக அவயவம் சுவைதரு கோற்றேன் கொண்டு செய்தனன் " என்று **திருவண்டப்பகுதி** யில் (கருகூ, கருஎ) வருதல்காண்க. கோற்றேன் - கோல்தேன்; கொம்புத் தேன். குரை கடல்வாய் - சப்திக்கும் கடலினிடத்து உண்டான.

(கூ) வரி 1. நான் இன்னும் பெறவேண்டிய பாக்கி இன்னதென்று அறிவேன். அதைப் பெறுவதற்கு எனக்கு என்ன தகுதி யிருக்கின்றதென்பதை அறியேன். நிச்சம் என - நிச்சயமாக, அல்லது நித்தியமாக (சதாகாலமும்). யானாகி நின்றானே - என்னோடு அத்துவிதமாகக் கலந்து நின்றவனே.

(கO) வரி 1. பெருமை பொருந்திய உலக மக்கள் தவம் செய்யவும். அவமே - வீணாக. ஊன் பாவிய உடல் - புலால் நிரம்பிய உடம்பு. வரி 4. நான் பாவியன் ஆனபோதிலும், நீ பேரருள் உடையன் ஆனமையால், உன்னை அருள் புரிவாயாக என வேண்டுதல் தகுதியே.

தில்லையில் அருளிய

# அச்சப்பத்து

## ஆனந்த முறுதல்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன், கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி, மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற், கற்றிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே. க

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல்கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா எம்பிரான் தம்பி ரானாந்
திருவுரு அன்றி மற்றோர் தேவரேத் தேவரென்ன
அருவரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. உ

---

இப்பதிகத்தில் சிவபெருமானிடத்து அன்பிலாதவரைக் காண்டலும் தீது என்று கூறப்பட்டுள்ளது.

(க) புற்றில் வாள் அரவும் - புற்றில் வாழுகின்ற (மாணிக்கத்தினால்) ஒளியையுடைய பாம்பிற்கும். மெய்யும் - மெய் போன்ற வஞ்சக மொழிக்கும். பெம்மாற்கு அற்றிலாதவரை - பெருமானுக்கு உண்மை (அன்பு) இல்லாதவரை. அல்லது பெம்மான் (ஐ) கற்றிலாதவரை எனக்கொண்டு பெருமானுடைய புகழ்களைக் கல்லாதவரை என்னலுமாம். அற்று - அற்றம்; உண்மை. நாம் அஞ்சுமாறே - நாம் பயப்படும் விதம் என்னென்பேன். நாம் மிகவும் பயப்படுவோம்.

(உ) வேட்கை - பேராசை, அல்லது காம இச்சை. கொளினும் - மூடினாலும். இருவரால் மாறுகாணா-அயனும் மாலும் தம்முள் மாறுபட்டுக் காணமுயன்றும் காணமுடியாத. அருவராதவரை - அருவருப்படையாதவரை.

வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடுகின்ற
என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே. ௩

கிளியனார் கிளவி அஞ்சேன் அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித் தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. ௪

பிணியெலாம் வரினும்அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன் தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ(று)
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே. ௫

வாளுலாம் எரியும் அஞ்சேன் வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன் சொற்பதங் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித் தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. ௬

---

(௩) வன்புலால் வேலும் - வன்மையுடைய தசையில் ஊடுருவிச் செல்லும் வேலிற்கும். பொலா மணி - பொள்ளாத மணி ; துவாரமிடாத மாணிக்கம். இனிது அருள் பருக மாட்டா - இனிமையாகிய திருவருளை நுகரமாட்டாத.

(௪) வரி 1. கிளியைப்போன்ற அழகுடைய மகளிர் பேச்சுக்கும் அஞ்சமாட்டேன். அவர்களுடைய பொய்யான (வஞ்சகம் பொருந்திய) புன்சிரிப்பிற்கும் அஞ்சேன். நீறு ஆடும் மேனி - திருநீற்றினால் முழுதும் பூசப்பட்ட திருமேனியையுடைய. துளி உலாம்கண்ணராகி- ஆனந்தக்கண்ணீர் ததும்பும் கண்ணையுடையவராகி. அளி - அன்பு.

(௫) துணி நிலா அணியினான்-பிறைச் சந்திரனை ஆபரணமாகத் தரித்த சிவபெருமான். தொழும்பரோடு அழுந்தி-தொண்டர்களுடன் (ஆனந்தத்தில்) தோய்ந்து.

(௬) வாள் - ஒளி. ஏற்றன் - இடப வாகனன். சொற்பதம் - சொல்லின் தரம். தாள் தாமரை . தாள் ஆகிய தாமரை. ஆள் அ(ல்)லாதவர் - அடியவர் அல்லாதவர்.

தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்தஅம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை முன்னவன் பாத மேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. எ

தறிசெறி களிறும் அஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர் நண்ணமாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. அ

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுதமாக்கும் நம்பிரான் எம்பிரானாய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான் திருமுண்டம் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. கூ

கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. க0

திருச்சிற்றம்பலம்

---

(எ) தகைவு இலா - தடுக்கமுடியாத. புகைமுகந்து எரிகை - புகையைக்கொண்ட நெருப்பை ஏந்திய கை. முகை நகை - மொட்டுகள் விரியும்.

(அ) தறி செறி - கட்டுத்தறியைத் தாக்குகின்ற (அசைத்துப் பிடுங்குகின்ற). உழுவை - புலி. வெறி - வாசனை. சிறந்து இனிது இருக்கமாட்டா - (அதனால்) சிறப்புற்றுப் பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டு இருக்க மாட்டாத.

(கூ) மஞ்சு உலாம் உருமும்-மேகத்தினிடை உண்டாகும் இடிக்கும். செஞ்செவே - மிகச் செம்மையாக. திருமுண்டம் - திரிபுண்டரமாக (மூன்று கோடுகளாக) அணியும் விபூதி. தீட்டமாட்டாது - அணியமாட்டாது.

(க0) கோள் நிலா வாளி - கொலைத்தன்மை மிக்க அம்பு. நீள் நிலா - நீண்டபிறை. வாள் நிலா(வு)ம் - ஒளியைப் பரப்பும். சோர - நீரைச்சொரிய. ஆண் அலாதவர் - ஆண்மை இல்லாதவர்.

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பாண்டிப் பதிகம்

## சிவானந்த விளைவு

### கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரை ஒன்று மிலாதவரைக் கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன் உள்ளமதே. க

சதுரைமறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர்சாற்றிச்சொன்னோ[ம்]
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே. உ

---

(க) பருவரை மங்கை - பெரிய (இமய) மலை அரசன் புதல்வியாகிய உமாதேவியார். ஒன்றும் - பெயர் வடிவு குணம் ஒன்றும். தெரிவர நின்று - தோன்றும்படி நின்று. உருக்கி - மனதை உருகச் செய்து. என்றன் உள்ளமது பருவரை......கழற்போது இறைஞ்சி தெரிவர......ஒருவரையன்றி உருவறியாது என்று கூட்டுக.

(உ) வரி 1. அவனை அடைந்தவர்கள் தம் திறமையை மறந்து (தற்போதங் கெட்டு) ஞானப்பித்துக் கொள்வர்; பறை சாற்றினாற் போலச் சொன்னோம். வரி 2. சூரியனைத் தன் ஒளி மிகுதியால் மறைத்தாற் போன்ற சோதி வடிவினனாகிய சிவபெருமான் சூலத்தைக் கையிற் கொண்டு. குடிகேடு கண்டீர் - உலகவாழ்விற்கு இறுதி வரும் (பிறவி ஒழியும்) என்று அறிவீர். மதுரையர் மன்னன் - பாண்டிய மன்னனாக எழுந்தருளிய சிவபெருமான். மறுபிறப்பு ஓட மறித்திடுமே - மறுபிறப்பு நிகழாமல் தடைசெய்வார்.

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர், பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார், ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை உள்ளங் கொண்டார், பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று பேணுமினே. ௩

செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னனன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக் காலம்எக் காலத்துள்ளும்
அறிவோண் கதிர்வாள் உறைகழித் தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள இருநிலத்தே. ௪

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே. ௫

ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல வல்லன் அல்லன்

(௩) இன்ப நீர் வெள்ளம் - இன்பமாகிய மிகுந்த நீர். நெஞ்சங் கொண்டீர் - எண்ணங் கொண்டவர்களே! பார் - உலகத்தவர். தொண்டரை உள்ளம் கொண்டார் - தொண்டர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து கொண்டார். பேணுமினே - வழிபடுங்கள்.

(௪) செறியும் பிறவி - (துன்பம்) மிக்க பிறப்பு அல்லது மேலும் மேலும் தொடர்ந்து வரும் பிறப்பு. கிளர்கின்ற - விளக்கமாய்த் தோன்றுகின்ற. வரி 3, 4. அறிவாகிய ஒளிக்கதிர் வீசும் வாளினை உறையினின்றும் எடுத்து, ஆனந்தமாகிய குதிரையின்மேல் ஏறிச் செலுத்திப் பிறப்பாகிய பகைவர்களைப் பெரிய நிலவுலகத்தே புரளும்படி ஞான வாளினாற் சேதிப்பன். பிறப்பை எதிர்த்தார் - பிறப்பாகிய எதிர்த்தாரை.

(௫) காலம் உண்டாகவே - காலம் கடந்து போவதற்கு முன்னமே. நண்ணரிய ஆலம் - நெருங்க முடியாத கொடிய விஷம். மூல பண்டாரம் - மூல பொக்கிஷம் (Reserve treasure); பேரின்பச் செல்வம். வழங்குகின்றான் - வாரிக் கொடுக்கின்றான்.

(௬) ஈண்டிய மாயா இருள்-மாயா மலத்தாலுண்டாகும் மிகுந்த அறியாமை. நிலையில்லாதவற்றை நிலையுடையனவென் றுணரும் திரிபு

வேண்டிய போதே விலக்கிலே வாய்தல் விரும்புமின்தாள்
பாண்டிய னாருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே. ௬

மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொளலும்
போயறும் இப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு ளேஅருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே.

அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கோடை யேசென்று முந்துமினே. அ

---

உணர்ச்சி. இருள்கெட........சோதியை - இருள்கெடவும் எல்லாப் பொருள்களுடைய உண்மைநிலை விளங்கவும், தூண்டிவிட்ட விளக்கைப்போன்ற பேரொளி வடிவினனாகிய சிவபெருமானை. "தூண்டு சுடரனைய சோதி கண்டாய்"—அப்பர். வரி 3. வேண்டியபோதே ஐவாய்தல் (ஐம்பொறிகளை) விலக்க வேண்டுமாயின் அவன் திருவடிகளை விரும்புங்கள். விலக்குதல் - தீயநெறியிற் செல்லவொட்டாமல் தடுத்து நல்ல நெறியிற் செலுத்துதல். முத்திப் பரிசு இதுவே - முத்தி என்று சொல்லும் வெகுமதி இது (அவனுடைய திருவடிகள்) தான். அல்லது முத்தியாகிய கரையிற் சேர்ப்பிக்கும் பரிசு (தோணி) அவனுடைய திருவடிகள்தான்.

(எ) மாயவனப் பரிமேல் கொண்டு - மாயமாகிய அழகிய குதிரையின் மேல் ஏறி. மற்று அவர் கைக்கொளலும் - அவர் (பாண்டியனார்) கழுக்கடையைக் கையில் எடுத்தவுடன், அல்லது அவர் கையைப்பற்றி ஆட்கொண்டவுடன். மற்று - அசை. புகுந்தவருக்கு - சரணடைந்தவர்களுக்கு. புகும் தவருக்கு எனப் பிரித்து, சரண் புகும் தவமுடையாருக்கு என்னலுமாம். ஆய - (முத்திக்குச் சாதனம்) ஆகிய. சேய நெடுங்கொடைத் தென்னவன் - செம்மையாகிய பெரிய கொடையாளனாகிய பாண்டியன் (சிவபெருமான்).

(அ) கழிவுஇல் - நீங்குதல் இல்லாத. பழமலம் பற்றறுத்து - பழமையாகிய ஆணவமல வேரை அறுத்து. பாண்டிப் பெரும்பதமே - பாண்டியனாகி (அரசு செய்யும்) பெரிய பதவி மாத்திரமன்றி. முந்துமினே - முற்பட்டுப் போய்ப் பெறுங்கள்.

விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாம்அறி யார்மறந்தே.

கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே. க0.

திருச்சிற்றம்பலம்

---

(கூ) வரி 1. தீவினைக் கலப்பு காரணமாக வருகின்ற பிறவிக் கடலைக் கடந்து செல்லும்படி. புந்தி......மறந்தே-புத்தி சுவாதீனத்தை இழந்த அழகிய கொடிபோன்ற மாதர்கள் மரத்தின் தன்மை வாய்ந்து (அசைவற்று நின்று) தம்மை மறந்து தம்மையும் அறியாராயினர்.

(க0) பெருந்தேவியும்......சேவகனே, கூற்றை......வீற்றிருந் தான் - **உரைநடை**. கூற்றை வென்றாங்கு - யமனை வென்றதுபோல. ஐவர்கோக்கள் - ஐம்புலன்களாகிய அரசர்கள். ஓர் மீனவன்...... சேவகனே - ஒரு பாண்டியனிடத்து இரந்துவந்து அவனுடைய உயிரை (தற்போதத்தை)ப் போக்கிய வல்லமையுடைய ஒப்பற்ற வீரனே. தேற்றமிலாதவர் - தெளிவில்லாதவர்களே! சிக்கென - உறுதியாக. சேர்மின்கள் - சென்று பிடியுங்கள்.

திருத்தோணிபுரத்தில் அருளிய

# பிடித்த பத்து

## முத்திக் கலப்புரைத்தல்

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. க

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. உ

---

(க) வரி 1, 2. தேவர்களுக்கு அரசனே, எங்கும் நீக்கமற நிறைந்த மேலான பொருளே! மன அழுக்குடையேனுக்கு. வம்பெனப் பழுத்து - புதுமையாக அருள் கனிந்து. வரி 4. இவ்வுலக வாழ்வு நீங்கிப் பேரின்ப வாழ்வு பெறச் செய்த அமுதமே. வரி 5. செம்மையான நூல்களிற் கூறப்பட்டுள்ள உறுதிப் பொருளே, சிறப்பு வாய்ந்த திருவடிகளையுடையவனே. சிக்கென - உறுதியாக.

(உ) வரி 3, 4. முடைநாற்றம் நீங்கப்பெறாத அடியேன் முழுவதும் புழுக்கள் நிறைந்துள்ள கூட்டிற் கிடந்து முதிர்ச்சி அடைந்து

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ரு

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. சு

---

முழுமையும் மண்ணுகி. கடைபடாவண்ணம் - எல்லாருக்கும் கீழ்ப் பட்டவனுகாதபடி.

(ரு) வரி 2. அன்பாகிய வித்தினின்றும் விளைந்த தெவிட்டாத அமுதமே (பேரானந்தமே). "அருச்சனை வயலுள் அன்பு வித் திட்டுத்-தொண்ட உழவ ராரத் தந்த-அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க"—திருவண்டப்பகுதி (வரி கரு...கசு). அல்லது அன்பாகிய கடலினிடத்துத் தோன்றிய ஆரமுதே. வரி 3. நிலையில்லாதவற் றின்கண் அறிவினைப் பெருகச்செய்து அல்லது பொய்யினையே மிகுதியாகப் பேசிக், காலத்தை வீணுகக் கழிக்கின்ற. புழுத்தலை - புழுத்து + அலை, அல்லது புழு + தலை.

(சு) அளிந்ததோர் கனியே-பக்குவமாய்ப் பழுத்த பழம் போல் பவனே. வரி 3. மெய்ப்பொருளை விளக்கும் நூலானவனே; வாயி ஞல் புகழ்ந்து உரைக்க முடியாத சிவானுபவமானவனே; யோகத் தின் விளக்கமான பயனுயிருப்பவனே. தெருளிடத்து - தெளிவு எய்திய இடத்து. இருளிடத்து - அறியாமை நிறைந்த இவ்வுலகில்.

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ௫

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்(டு)
அளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ௬

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ௭

---

(௫) மெய்ப்பதம் - மெய்ப்பொருள். வீறிலியேன் - சிறப்பில்லாதவன். விழுமியது-உயர்ந்த பொருள் அல்லது நிலை (பேரின்பம்.) எய்ப்பிடத்து - தளர்ந்த இடத்தில்.

(௬) அறவையேன் - திக்கற்றவன். திறவிலே - வெளிப்படையாக. இறவிலே - முடிவிலே.

(௭) பற்றும் ஆறு - கூடும் வகை.

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. அ

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. கூ

---

(அ) அண்டர் அண்டம் - தேவர்கள் வசிக்கும் உலகம். யாதும் ஈறில்லாச் சித்தனே - முடிவு ஒன்றும் இல்லாத சித்திகளில் வல்லவனே, அல்லது ஞானவடிவினனே. பித்தனே - அன்பரிடத்து மிக்க அன்புடையவனே. தழைத்து - பெருகி. பிழைத்து - அவற்றின் நீங்கி. எத்தன் - தந்திரக்காரன்.

(கூ) வரி 2. பாலினைக் குழந்தைக்குப் பசிக்கும் காலம் அறிந்து அது அழுமுன்னே ஊட்டுகின்ற தாயைப் பார்க்கிலும் மிகவும் இரங்கி. தாய் நினைப்பும் மறப்பும் உள்ளவள். சில சமயங்களில் பால் ஊட்ட மறந்தும் விடுவாள். ஆனால் சிவபெருமானோ வெனில் நினைப்பும் மறப்புமில்லாது எக்காலத்தும் உயிர்களிடத்துக் கருணை புரிபவர். உலப்பிலா - அழிவில்லாத. சொரிந்து - பொழிந்து. புறம் புறம் திரிந்த - நான்கு பக்கங்களிலும் என்னொடும் சுற்றித் திரிந்த.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தேன்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. க0

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருவேசறவு

## சுட்டறிவு ஒழித்தல்

### கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே. க

(க0) புரை புரை கனிய - எலும்பின் உள் துளைகள் தோறும் இனிக்க. தொடக்கு - கட்டு.

(க) இரும்பு தரு - இரும்பை ஒத்த; உருகாத. ஈர்த்து ஈர்த்து- (நான் நெறிவிட்டு விலகுந்தோறும்) பலகாலும் தன் வசம் இழுத்து. வரி 2. கரும்பின் சுவைபோன்ற இன்பம் என்னிடத்து உண்டாகும் படி உன் திருவடியிணையை எனக்குக் காட்டி யருளினாய். ஒருங்கு திரை - அடங்கிய கங்காநதியின் அலைகள். உன் பேரருளே அன்றே- உனது பேரருள் அல்லவா ?

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்(கு)
உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாஎன்னக்
கண்ணார உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே. ௨

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாவென்
றோத(ம்)மலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே. ௩

பச்சைத்தாள் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே. ௪

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்

---

(௨) பண் ஆர்ந்த - இசை நிரம்பிய. உண்ணார்ந்த ஆரமுதே - உண்ண உண்ண நிறைந்த (இன்பம் பயக்கும்) கிடைத்தற்கரிய அமுதமே. வரி 3. மண்ணுலகில் நிறைந்த (தொடர்ந்து வரும்) பிறப்பை அறுத்திட்டு அடியேனை ஆண்டருள்பவனே! நீ என்னை வா என்று அழைக்க. வரி 4. உன் திருவடிகளைக் கண்ணாரக் கண்டல்லவா எனக்கு உய்வு கிடைத்தது.

(௩) ஆதமிலி - ஆதரவு இல்லாதவன். அரு நரகு - கடத்தற்கு அரிய நரகம். தமர் ஆரும் இன்றியே - உறவினர் யாரும் உதவுதற்கு இல்லாமல். ஆவா என்று - ஐயோ என்று. ஓதம் மலி - கடலில் மிக்கெழுந்த. காட்டியவாறு - காட்டியவிதம். அன்றே - (உன் பேரருள்) அல்லவா?

(௪) பச்சைத் தாள் அரவு ஆட்டீ - பசிய பாதங்களையுடைய பாம்பாட்டியே! உச்சத்தார் - தலைமீது வைத்துள்ள அன்பர். எச்சத்து ஆர் - குறைபாடுகள் நிரம்பிய. வரி 4. உன் குணங்களையே நினைந்து என் எண்ணத்தின்படி பிழைத்த விதம் என்ன ஆச்சரியம்! அச்சோ - வியப்புக்குறி.

(௫) கலைஞானம்-நூல்களைப் படிப்பதால் உண்டாகும் ஞானம். வாக்கு இயலால் - உன்னைப் புகழ்ந்து பாடும் வாக்கின் தன்மையால்; அல்லது நீ அருளிய திருவாக்கின் தன்மையால்.

துற்றிருமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. ரு

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேன்எம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே. சா

என்பாலைப்பிறப்பறுத்திங் கிமையவர்க்கும்அரியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட(து)
என்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே. எ

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே. அ

---

(ரு) வரி 4. உன் பொன் போன்ற (மாறுபடாத) திருவருளை எனக்குக் கொடுத்தது பொன்னாற் செய்த ஆசனத்தை நாய்க்குக் கொடுத்தது போலல்லவா ?

(சா) நஞ்சு ஆய துயர் கூர-நஞ்சுபோன்ற துன்பம் மிகுதலினால்.

(எ) என் பாலை - என்னிடத்தே உள்ள.தென்பாலை - தெற்கே உள்ள. வரி 4. என்னிடத்துக் கருணை நோக்கம் வைத்ததனால் அல்லவா ?

(அ) முடிவில்லா ஓத்தானே - எல்லையில்லாத வேதத்தின் (அருள் நூல்) வடிவானவனே. பொருளானே-அவற்றின் பொருள் வடிவானவனே. உண்மையுமாய் இன்மையுமாய் - அடியவர்களுக்கு மெய்ப்பொருளாயும், அல்லாதவர்களுக்கு மறைந்தும் இருப்பவனே. பூத்தானே-தோன்றினவனே. புகுந்திங்குப் புரள்வேனைப் பேர்த்தே நீ ஆண்டவா று கருணையினால் அன்றே - இவ்வுலக வாழ்வில் உழன்று கிடப்பேனை அந்நிலையினின்று நீக்கி என்னை நீ ஆட்கொண்ட விதம் உன் திருவருளினால் அல்லவா ?

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா(று)
அருளெனக்கிங்(கு) இடைமருதே இடங்கொண்ட அம்மானே.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. க0

திருச்சிற்றம்பலம்

---

(கூ) மருவ இனிய - கூடுதற்கு இனிமையான. மலர்ப்பாதம் - அழகிய திருவடிகள். வரி 3. இதுவரையில் நான் சிறிது பருகி இனிதென்று உணர்ந்த உன் கருணைக் கடலில் மூழ்கி நன்றாக அனுபவிக்கும்படி அருள் செய்க. "கடலினுள் நாய் நக்கி யாங்குன் கருணைக் கடலி னுள்ளம் விடலறியேனை விடுதிகண்டாய்'' என்று நீத்தல் விண்ணப்பம் (கரு)ல் வருதல் காண்க.

(க0) வரி 1. நானோ நல்ல தவம் செய்தேன். (வீடு விரும்புவார் சொல்லும் சூக்கும பஞ்சாட்சரமாகிய) சிவாயநம என்னும் மந்திரத்தைச் சொல்லப் பெற்றேன். தானேவந்து - தானே வலிய வந்து. வரி 4. ஊனொடுங் கூடிய உடம்பில் உயிர் வாழ்தலைக் கண்டித்து வெறுத்திடும்படி அடியேனுக்கு அருள்செய்தான். எனது உள்ளம் புகுந்து, ஊனாரும்........வெறுத்திடவே அடியேற்கு அருள்செய்தான்—உரைநடை.

திருவாரூரில் அருளிய

# திருப்புலம்பல்

## சிவானந்த முதிர்வு

### கோச்சகக் கலிப்பா

*திருச்சிற்றம்பலம்*

பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேனின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே. க

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதி பசுபதீ மழவெள்ளை [நான்
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே. உ

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டே
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங் [ன்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. ௩

*திருச்சிற்றம்பலம்*

---

(க) கோங்கலர்சேர் - கோங்கின் அரும்பை ஒத்த. ஓங்கு எயில் - உயர்ந்த மதில்.

(உ) தயங்கும் - விளங்கும். மழ - இளமையான. உறுதுணை - உற்றதுணை; துன்பம் உற்றபோது உதவும் துணை.

(௩) கற்றாரை - (திருவடி ஞானம் பெறாத) கலை ஞான முடையாரை. அமையும் - போதும். கற்றா - கன்று + ஆ, கன்றையுடைய பசு.

தில்லையில் அருளிய

# குலாப்பத்து

## அநுபவம் இடையீடுபடாமை

### கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட்(டு) உள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. க

துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. உ

(க) கவந்தி - கோவணம். உறவு என்றிட்டு - உறவு (பற்றுவன) என்று கருதி. தேடும் - தேடத்தக்க. வரி 3, 4 கூடும் (உடலும்) உயிரும் (அன்பினால்) மகிழ்ச்சி பொங்க அடியேன் வளைந்து கூத்தாடி, நடனம் செய்யும் விளக்கம் பொருந்திய தில்லை ஆண்டவனைப் பற்றிக் கொண்டேன். கொண்டன்று - கொண்டேன்.

(உ) எ(ன்)னைத் தனதாள் முயங்குவித்த குலாத்தில்லை ஆண்டானை அடியேன் கொண்டன்று. ஆதலால் துடியேறு...முடியேன் பிறவேன்—உரைநடை. வரி 1. உடுக்கையை யொத்த அழகிய நுண்ணிய இடையும் புனிதச்சொல்லும் உடைய மகளிரது தோளின் பாலுள்ள விருப்பத்தால். செடியேறு - பாவம் மிகுதற்குக் காரணமாகிய. செய்திடினும் - ஒருகால் செய்துவிட்டாலும். முடியேன் - இறக்கமாட்டேன். எனைத் தனதாள் முயங்குவித்த - தன்னுடைய திருவடியிலே என்னைக் கூடும்படிச் செய்த; தன்னுடைய திருவருளிலே என்னை மூழ்கும்படிச் செய்த. சிவபெருமான் ஆட்கொண்ட பிறகு சிவஞானிகளின் செயல்களெல்லாம், சிவன் செயல்களாகின்றன. "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்" என்று திருத்தோணோக்கம் 6-வது செய்யுளில் வருதல் காண்க.

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. ௩

குறியும் நெறியுங் குணமுமிலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. ௪

பேருங் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும்பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. ௫

---

(௩) ஈடு அழித்து - வலியினைப் போக்கி. துவந்துவங்கள் - உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் வருகின்ற பற்றுக்கள். விருப்பு வெறுப்பு, போற்றல் இகழ்தல் போன்றவை. தூய்மை செய்து - போக்கிப் பரிசுத்தப்படுத்தி. முன்பு உள்ளவற்றை - அநாதியே பற்றியுள்ள மும்மலங்களை.

(௪) வரி 1, 2. குறிக்கோளும் அதை அடையும் வழியும், நற்குணமும் இல்லாதவருடைய கூட்டங்களைப் பிரிந்து வாழும் மனத்தையுடைய மெய்யடியார்களைப் பிரியாத தன்மையுடையவனை. வரி 3. (அன்பு) மிகுந்த உள்ளத்தில் தோன்றுகின்ற பேரின்ப உணர்ச்சியாகிய சிவபெருமானோடு அத்துவிதமாகக் கலக்கின்ற முத்தி நிலையை. உருத்தல் - தோன்றுதல். அறியும் - (எல்லாவற்றையும்) அறிகின்ற.

(௫) வரி 1, 2. பேரும், பல்வகைக் குணங்களும் நம்மைக் கட்டுப்படுத்தற்கு ஏதுவாகிய இப்பிறவிக் குழியைத் தூர்த்து ஒழிக்கும் வண்ணம் மலமாகிய குற்றத்தை அறுத்து. சேரும் வகையால் - சிவபெருமானைக் கூடும் விதத்தால். ஆரும் - நிறைவடைவதற்கு ஏதுவாகிய. ஆரும் ஆண்டான் என்று கூட்டுக.

கோம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. சு

மதிக்குந் திறலுடைய வல்அரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. எ

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என்தலைமேல் நட்டமையாற்
கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. அ

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்

---

(சு) வரி 1, 2. மரக் கிளையில் முதலில் அரும்பாகத் தோன்றிப் பிறகு மலர் காய் கனி ஆகி உதிர்ந்து போகிறது போல, உடலும் உலகில் தோன்றி வளர்ந்து வீணே முதிர்ந்து அழிந்து போகாதபடி. வம்பு - வீணுக. வரி 3. நான் நம்பித் துணையாகக்கொண்ட என் மனமானது இறைவனைக் கூடும்படி நான் சென்று சேரும்.

(எ) மதிக்கும் - யாவரும் புகழும். கதிக்கும் - மேற்பட்டு எழும். பசு பாசம் - தற்போத உணர்ச்சியும், மும்மலக்கட்டும். எனக்களித்து இங்கு அதிர்க்கும் - என்று மகிழ்ந்து இவ்வுலகில் ஆரவாரித்தற்கு ஏதுவாகிய.

(அ) வரி 1. பூமியைத் தோண்டும் இயல்புடைய, கரிய விறகுக் கட்டை போன்ற பன்றியின் பின் நடந்த.—இதில் அர்ச்சுனன் தவம் செய்யும்போது அவனைக் கொல்லப் பன்றி வடிவொடு வந்த மூகாசுரனைக் கொல்ல சிவபெருமான் வேடவுருவம் கொண்டு வந்த கதை கூறப்பட்டுள்ளது. வரி 3. என்னை வெல்லும் திறமையுடைய ஐம்பொறிகளாகிய கொடியவர்களுடைய வலிய ஆட்டங்களை அடக்க வல்ல.

(க) வரி 1, 2. (விளையாத) பாழான வயலைக் கிளரிக்கொண்டு ஒரு பயனுமடையாமல் கிடந்த எனக்கு, முன் செய்தவத்தினுல் புதையலாகத் துணியிற் கட்டப்பட்ட நிதி கிடைத்தாற்போல்.

தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. ௯

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# அற்புதப்பத்து

## அநுபவமாற்றுமை

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மைய லாய்இந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியு ளகப்பட்டுத், தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான் தலை தடு மாறுமே, பொய்யெ லாம்விடத் திருவருள் தந்துதன்

(௯) வரி 3, 4. தாமரைபோன்ற சிவந்த பாதங்களையுடைய சிவபெருமானுக்கு என் இழிவான தலையினால் அடிமைத்தொழில் செய்தற்குரிய விளங்கும் தில்லை ஆண்டவனைப் பற்றிக்கொண்டேன்.

(௧௦) கொம்மை வரி - திரட்சியும் கோடுகளும் உள்ள. வரி 3. செம்மை மனம் - அன்போடு கூடிய மனம். இப்பிறப்பில் நிகழக் கூடிய வினைப்பயன்கள் அத்தனையும் இவ்வுலகிலேயே ஒழிக்கவல்ல. அம்மை - தாய் போன்ற.

(௧) மையலாய் - (நிலையாதவற்றை நிலை என்று உணரும்) மயக்க உணர்ச்சியுடையனாய். தலை தடுமாறுமே - அறிவு மாறுபாடு அடையாமல். பொய்யெலாம் - நிலையிலாதனவற்றை யெல்லாம்.

பொன்னடி யிணைகாட்டி, மெய்ய னுய்வெளி காட்டிமுன் நின்றதோர் அற்புதம் விளம்பேனே. க

ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோர் இயல்பொடும் வணங்காதே, சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடுந் தலை தடு மாறுகிப், போந்து யான் துயர் புகாவணம் அருள்செய்து பொற்கழ லிணைகாட்டி, வேந்த னுய்வெளி யேஎன்முன் நின் றதோர் அற்புதம் விளம்பேனே. உ

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானெனு தேனுமாயங், கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக் கழ றியே திரிவேனைப், பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய அரும்பொருள் அடியேனை, அடித்த டித்துவக் கார முன் தீற்றிய அற்புதம் அறியேனே. ௩

பொருந்தும் இப்பிறப் பிறப்பிவை நினையாது பொய் களே புகன்றுபோய்க், கருங்கு ழலினர் கண்களால் ஏறுண்டு கலங்கியே கிடப்பேனைத், திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத் திருவொடும் அகலாதே, அருந்து ணைவனாய் ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. ச

---

(க) மெய்யனுய் வெளி காட்டி - உண்மைப் பொருளாய் அருள் வெளியினைக் காட்டி. அற்புதம் விளம்பேனே - வியப்பான செயலை இன்னதென்று சொல்ல அறியேன்.

(உ) ஏய்ந்த - பொருத்தமான. முட்டாததோர் - எப்பொழு தும் தவறுததோர். சாந்தம் ஆர் - சந்தனக் குழம்பு நிறையப் பூசிய.

(௩) நடித்து - தக்கவன் போலப் பிறர் நம்பும்படி ஒழுகி. யான் எனது எனும்...திரிவேனை - யான் எனது என்னும் செருக் கிற்குக் காரணமான மயக்கமாகிய பாம்பு கடித்த வாயின் வழி, வினை யாகிய விடம் மிகுதியாகச் செல்ல அதனுல் புலம்பி அலறித் திரி வேனை. அடித்து அடித்து - பலகாலும் தண்டித்துத் திருத்தி. அக் காரம் முன் தீற்றிய-பேரின்பமாகிய சர்க்கரையை முன்னே நின்று உண்பித்த. அக்காரம் - சர்க்கரை.

(ச) வரி 1. (மாறிமாறி வந்து) பொருந்துகின்ற பிறப்பு இறப் புக்களை ஒழிக்கும் வழிகளை எண்ணுமல் பொய்களையே சொல்லி. ஏறுண்டு - தாக்கப்பட்டு. திருந்து - அழகிய. திருவொடும் - அருட் சத்தியோடும். அருந்துணைவன் - கிடைத்தற்கரிய உதவியாளன்.

மாடுஞ் சுற்றமும் மற்றுள போகமும் மங்கையர் தம்மோடுங் கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு குலாவியே திரிவேனை வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி ஆடுவித்தென தகம்புகுந் தாண்டதோர் அற்புதம்அறியேனே.

வணங்கும் இப்பிறப் பிறப்பிவை நினையாது மங்கையர் தம்மோடும், பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்தி நான் பித்தனுய்த் திரிவேனைக், குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல் கோமளத் தொடுங்கூடி, அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. ௬

இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான் இயல்பொ டஞ் செழுத்தோதித், தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாது நான் தடமுலை யார்தங்கள், மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை மலரடி இணைகாட்டி, அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. ௭

---

(ரு) வரி 1, 2. செல்வம், உறவினர், ஏனைய போகப்பொருள் கள், மாதர்கள் ஆகிய இவற்றோடு சேர்ந்து, அவ்வவற்றின் குணங் களால் தாக்கப்பட்டு (அவற்றை மேலானதென்று) பாராட்டித் திரி வேனை. குலாவி - பாராட்டி. வெந்தொழில் வீட்டிட - தீவினை களை அழிக்க. ஆடுவித்து - என்னை ஆனந்தக் கூத்தாடச்செய்து.

(௬) வரி 1. தாழ்வடையச்செய்யும் தன்மையுள்ள பிறப்பு இறப் புகளை நீக்கும் வகையை நினையாமல். பிணைந்து - கூடி. குணங்கள் - (முக்குணச் சார்பான) இயல்புகள். கோமளம் - இளமையழகு (வாய்ந்த உமாதேவியார்). அணைந்து - நெருங்கி.

(௭) இணைமலர் - பொருத்தமான பூக்கள். இயல்பொடு-முறைப் படி. மைப்பு உலாம் கண் - கருமை நிறமும், உலாவும் தன்மையும் உடைய கண். ஏறுண்டு - தாக்குண்டு.

ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின இருவினை அறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவன் உணர்வதந் தொளியாக்கிப்
பாசமானவை பற்றறுத்துயர்ந்ததன் பரம்பெருங்கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புதம் அறியேனே. அ

பொச்சை யானஇப் பிறவியிற் கிடந்துநான் புழுத்தலை
நாய்போல, இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங் கிணங்
கியே திரிவேனை, இச்ச கத்தரி அயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி, அச்சன் என்னையும் ஆண்டுகொண்
டருளிய அற்புதம் அறியேனே. கூ

செறியும் இப்பிறப் பிறப்பிவை நினையாது செறிகுழ
லார்செய்யுங், கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்
களும் உன்னியே கிடப்பேனை, இறைவன் எம்பிரான் எல்லை
யில் லாததன் இணைமலர்க் கழல்காட்டி, அறிவு தந்தெனை
ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே. ௧0

திருச்சிற்றம்பலம்

---

(அ) வரி 1. இவ்வுடலையும் உயிரையும் ஊஞ்சல் போல் இங்கும் அங்கும் ஆட்டுகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டையும் களைந்து. ஓசையால் - கேள்வி அறிவினால். உணர்வார்க்கு உணர்வு அரியவன் - உணரமுயல்வார்க்கு அறியமுடியாத பெருமான். ஆசை தீர்த்து - அவாவை அறுத்து.

(கூ) பொச்சையான - புழுக்கூடான. புழுத்தலை - புழு+தலை அல்லது புழுத்து+அலை. இணங்கி - அவர் சொற்படி நடந்து. அச்சன் - அப்பன்.

(௧0) செறியும் - மேன்மேல் நெருங்கி வரும். செறிகுழலார் - அடர்ந்த கூந்தலையுடைய மாதர்கள். கிறி - பொய்ச் செயல்கள். கெண்டை அம் கண்கள் - கெண்டைமீன் கண்களை ஒத்த அழகிய கண்கள். அறிவு - மெய்யுணர்வு.

திருப்பெருந்துறையில் அருளிய

# சென்னிப்பத்து

## சிவ விளைவு

### ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேவ தேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொ ணாமுத லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்பரன்றி அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கணம் சென்னி மன்னிச் சுடருமே.

அட்ட மூர்த்தி அழகன் இன்னமு தாய ஆனந்த வெள்ளத்தான், சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன் தென்பெருந்துறைச் சேவகன், மட்டு வார்குழல் மங்கை யாளையோர் பாகம் வைத்த அழகன்தன், வட்ட மாமலர்ச் சேவ டிக்கண் நம் சென்னி மன்னி மலருமே. உ

நங்கை மீரெனை நோக்குமின் நங்கள் நாத னம்பணி கொண்டவன், தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை மேய சேவகன் நாயகன், மங்கை மார்கையில் வளையுங் கொண்

---

(க) மெய்ச்சேவகன் - உண்மை வீரன். மூவர் - மும்மூர்த்திகள். முதலாய - ஆதியாய. வரி 3- அன்பர்கள் அல்லாத பிற எவர்களாலும் அறியமுடியாத மலர்போன்ற (மென்மையும் குளிர்ச்சியுமுடைய) சோதி வடிவினன். வரி 4. பரிசுத்தமான பெருமை வாய்ந்த தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளினிடத்து நமது தலை நிலைபெற்றுப் பொருந்திப் பிரகாசிக்கும்.

(உ) ஆனந்த வெள்ளத்தான் - ஆனந்தக் கடலாயிருப்பவன். சிட்டன் - நல்லோன். மட்டு வார் - தேன் ஒழுகும். வட்டம் - வட்ட வடிவத்தையுடைய.

(௩.) நாதன் நம் பணி கொண்டவன் - தலைவன் நம்முடைய தொண்டை ஏற்றுக் கொண்டவன். சேவகன் நாயகன் - வீரனாகிய தலைவன்.

டெம் உயிருங் கொண்டெம் பணிகொள்வான், பொங்கு மாமலர்ச் சேவ டிக்கணம் சென்னி மன்னிப் பொலியுமே.

பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்துபார்ப் பானெனச்
சித்தர்சூழச் சிவபிரான் தில்லை மூதூர்நடஞ்செய்வான் [வான்
எத்தனாகிவந்தில்புகுந்தெமை ஆளுங்கொண்டெம்பணிகொள்
வைத்த மாமலர்ச் சேவடிக்கணம் சென்னிமன்னி மலருமே.

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்தி டாவகை நல்கினான், வேய தோளுமை பங்கன் எங்கள் திருப் பெருந்துறை மேவினான், காயத் துள்ளமு தூற ஊறநீ கண்டு கோள்ளேன்று காட்டிய, சேய மாமலர்ச் சேவ டிக்கணம் சென்னி மன்னித் திகழுமே. ௫

சித்தமேபுகுந்தெம்மையாட்கொண்டுதீவினைகெடுத்துய்யலாம்
பத்திதந்துதன் பொற்கழற்கணே பன்மலர்கொய்துசேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்பு றத்தெமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கணம் சென்னிமன்னி மலருமே.

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன் பேரருள்தந் தருளி னான், அறவை யென்றடி யார்கள் தங்க ளருட்கு ழாம்புக

---

(௩) எம் உயிரும் கொண்டு - எம்முடைய உயிரையும் (பசு போதம்) கவர்ந்துகொண்டு. பொங்கும் - விளங்குகின்ற.

(௪) பார்ப்பான் என - வேதியன் போல வடிவு கொண்டு. சித்தர் - சித்தில் வல்லவர் ; ஞானிகள். எத்தன் - தந்திரக்காரன். இல் புகுந்து - (உடம்பாகிய) வீட்டில் புகுந்து.

(௫) வரி 3. உடம்பினுள் (பேரின்ப) அமுதமானது சுரக்கச் சுரக்க நீ கண்டு கொள்வாய் என்று எனக்குக் காண்பித்த சிவந்த மலர்ச் சேவடி.

(௬) தீவினை கெடுத்து உய்யலாம் பத்தி தந்து - தீவினைகளை அழித்து உய்வதற்குரிய அன்பினைத் தந்து. வரி 2. அவ்வன்பு காரணமாகத் தன் அழகிய திருவடியின்கண் பல மலர்களைப்பறித்து சூட்டியவுடன்.

(௭) பேரருள் தந்து-பேரருளாகிய புணையைத் தந்து. அறவை - அநாதை ; யாரும் அற்றவன். அடியார்கள் தங்கள் அருட்குழாம் புக விட்டு - திருவருள்வழி நிற்கும் அடியார்களுடைய கூட்டத்தில் புகுவித்து.

விட்டுநல், உறவு செய்தெனை உய்யக்கொண்ட பிரான்தன் உண்மைப் பெருக்கமாம், திறமை காட்டிய சேவ டிக்கணநம் சென்னி மன்னித் திகழுமே. எ

புழுவி ஞற்பொதிந் திடுகுரம்பையிற் பொய்தனை யொழி வித்திடும், எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரான் என் னுடை யப்பன் என்றென்று, தொழுத கையின ராகித்தூய் மலர்க் கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு, வழுவிலா மலர்ச் சேவ டிக்கணநம் சென்னி மன்னி மலருமே. அ

வம்ப னுய்த்திரி வேனை வாவென்று வல்வி னைப்பகை மாய்த்திடும், உம்ப ரான்உல கூடறுத்தப் புறத்த னுய்நின்ற எம்பிரான், அன்ப ரானவர்க் கருளிமெய்யடி யார்கட் கின்பந் தழைத்திடுஞ், செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கணநம் சென்னி மன்னித் திகழுமே. கூ

முத்த னைமுதற் சோதியை முக்கண் அப்பனை முதல் வித்தினைச், சித்த னைச்சிவ லோக னைத்திரு நாமம் பாடித் திரிதரும், பத்தர் காள்இங்கே வம்மின் நீர்உங்கள் பாசந் தீரப் பணிமினோ, சித்த மார்தருஞ் சேவ டிக்கணநம் சென்னி மன்னித் திகழுமே. கº

திருச்சிற்றம்பலம்

---

(எ) நல் உறவு செய்து - அடியார்களை எனக்கு நல்ல உறவின ராகச்செய்து. உண்மைப் பெருக்கமாம் திறமை - மெய்த் தன்மை மிக்கு விளங்கும் தன் அருள் திறத்தை.

(அ) குரம்பையிற் பொய்தனை - உடலாகிய பொய்யை. குரம் பை - கூடு ; உடல். தூய் மலர்க் கண்கள் - பரிசுத்தமான தாமரை மலர் போன்ற கண்கள். ஆனந்தக் கண்ணீர் சொரிவதால் கண்கள் தூயனவாயின. வழுவிலா - தவருது நலம் கொடுக்கும்.

(கூ) வம்பன் - வீணன். வா என்று-வா என்று கூவி அழைத்து. உலகு ஊடறுத்து அப்புறத்தனுய் - உலகங்க ளெல்லாவற்றினுள் ளும் பொருந்தி இருந்தும் அவற்றிற்கும் அப்பாற்பட்டவனுயும்.

(கº) முதல் வித்தினை - எல்லாப் பொருள்களும் தோன்று வதற்குக் காரணமாய், மூலவித்து போன்றவனை. சித்தம் ஆர்தரும் - நம் உள்ளத்தில் நிறைந்துள்ள.

திருப்பெருந்துறையில் அருளிய

# திருவார்த்தை

## அறிவித்து அன்புறுதல்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேய சோதி, கோதில் பரங்கருணையடியார் குலாவு நீதிகுண மாகநல்கும், போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்திழிந்(து), ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருளறிவார் எம்பிரா னாவாரே. க

மாலயன் வானவர் கோனும்வந்து வணங்க அவர்க் கருள் செய்தஈசன், ஞாலம் அதனிடை வந்திழிந்து நன்னெறி காட்டி நலந்திகழுங், கோல மணியணி மாடநீடு குலாவும் இடவை மடநல்லாட்குச், சீலம் மிகக்கருணையளிக்குந் திறமறிவார் எம்பிரா னாவாரே. உ

---

(க) மாது இவர் பாகன் - பெண் அமர்ந்த பாகத்தையுடையவன். மலர் - இதய கமலம். கோதில் பரங் கருணை - குற்றமற்ற மேலான கருணையே வடிவானவன். அடியார்......நல்கும் - அடியார்கள் கொண்டாடுகின்ற நீதியினையே குணமாக அவர்களுக்கு அருள்புரியும். வரி 4, எல்லாவற்றிற்கும் முதலாய பரம்பொருளின் தன்மையை வெளிப்படுத்திய அருட்டிறத்தை அறிவார்களாகிய அடியவர்கள் எமது தலைவராவார். இப்பதிகத்தின் பாட்டின் கடைசி அடிகளை **'சுந்தரமூர்த்தி சுவாமிகள்'** அருளிய திருவானைக்கா பதிகத்தில் "இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே" எனவரும் கடைசி அடிகளோடு ஒப்பிடுக.

(உ) நீடுகுலாவு......திறமறிவார் - நெடுங்காலமாக விளங்கும் திருவிடை மருதூரில் ஒரு இளம்பெண் அடியவர்க்கு சீலம் (நல்லொழுக்கம்) மிகும்படி அளித்த கருணைத் திறத்தை (தன்மையை) அறியும் அடியார்கள். இடவை - திருவிடைமருதூர்.

அணிமுடி ஆதி அமரர்கோமான் ஆனந்தக் கூத்தன் அறுசமயம், பணிவகை செய்து படவதேறிப் பாரொடு விண்ணும் பரவியேத்தப், பிணிகெட நல்கும் பெருந்துறை யெம் பேரரு ளாளன்பெண் பாலுகந்து, மணிவலை கொண்டு வான் மீன்விசிறும் வகையறிவார் எம்பிரா னாவாரே. ௩

வேடுரு வாகி மகேந்திரத்து மிகுகுறை வானவர் வந்து தன்னைத், தேட இருந்த சிவபெருமான் சிந்தனை செய்தடி யோங்களுய்ய, ஆடல் அமர்ந்த பரிமாவேறி ஐயன் பெருந் துறை ஆதிஅந்நாள், ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட இயல்பறிவார் எம்பிரா னாவாரே. ௪

வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கட லாய்அடியார், பந்தனை விண்டற நல்கும் எங்கள் பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள், உந்து திரைக்கட லைக்கடந்தன் றோங்கு மதிலிலங் கைஅதனிற், பந்தணை மெல்விர லாட்கரு ளும் பரிசறிவார் எம்பிரா னாவாரே. ௫

---

(௩) அணிமுடி ஆதி - அழகிய சடைமுடியை யுடைய முதல் வன். பணிவகை செய்து - பணியும்படி செய்து. பிணிகெட நல்கும் - பிறவி நோய் ஒழியும்படி அருள் புரியும். பெண்பால் உகந்து - (வலை ஞர் மகளாகிய) உமையம்மையை மணக்க விரும்பி. வான்மீன் விசி றும் - பெரிய (கெளிற்று) மீனைப் பிடிக்க வீசிய. இதில் குறிக்கப் பட்ட வரலாறு திருவிளையாடற் புராணம் வலை வீசின படலத்துள் காண்க.

(௪) வரி 1. மகேந்திர மலையில் வேட்டுவ வடிவங் கொண்டு இருந்து, மிகுந்த குறைகளையுடைய தேவர்கள் தன்னைத் தேடும்படி யிருந்த சிவபெருமான். ஆடல் அமர்ந்த - ஆடுதலை விரும்பிய. பரிமா - குதிரை. ஏடர்களை - தோழர்களை.

(௫) பந்தனை விண்டு அற நல்கும் - பாசக்கட்டுகள் அறுபட்டு ஒழியும்படி அருள் புரியும். பந்து அணை மெல் விரலாட்கு - பந்தின் வடிவமைந்த மெல்லிய விரல்களையுடைய வண்டோதரிக்கு. பரிசு - தன்மை.

வேவத் திரிபுரம் செற்றவில்லி வேடுவ னுய்க்கடி நாய்கள்சூழ, ஏவற்செ யல்செய்யுந் தேவர்முன்னே எம்பெருமான் தான் இயங்குகாட்டில், ஏவுண்ட பன்றிக் கிரங்கியீசன் எந்தை பெருந்துறை ஆதிஅன்று, கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த கிடப்பறிவார் எம்பிரா னுவாரே. கூ

நாதம் உடையதோர் நற்கமலப் போதினில் நண்ணிய நன்னுதலார், ஓதிப் பணிந்தலர் தூவியேத்த ஒளிவளர் சோதியெம் ஈசன்மன்னும், போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப், பேதங் கெடுத்தருள் செய்பெருமை அறியவல்லார் எம்பிரா னுவாரே. எ

பூவலர் கொன்றைய மாலைமார்பன் போருகிர் வன்புலி கொன்றவீரன், மாதுநல் லாளுமை மங்கை பங்கன் வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன், ஏதில் பெரும்புகழ் எங்கள்ஈசன் இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும், ஓவிய மங்கையர் தோள்புணரும் உருவறிவார் எம்பிரா னுவாரே. அ

---

(கூ) கடிநாய் - காவல் செய்யும் அல்லது வேகத்தையுடைய நாய்கள். ஏவுண்ட - அம்பு தைத்து இறந்த. கேவலம் கேழலாய் - அற்பமான பன்றியாய். கிடப்பு - தன்மை.

(எ) நாதம் - வண்டுகளின் ரீங்கார ஒலி. நன்னுதலார் - அழகிய நெற்றியையுடைய கலைமகளும் திருமகளும். ஓதி - வாழ்த்தி; இறைவனுடைய புகழ்களைக் கூறி. பேதம் கெடுத்து அருள் செய் - மும்மலங்களால் உண்டான வேற்றுமையைக் கெடுத்துச் சிவமாக்கித் திருவருள் புரிந்த.

(அ) போருகிர் வன்புலி - போர் செய்தற்குரிய நகங்களையுடைய வலிய புலி. ஏதில் - குற்றமில்லாத. கடல் வாணன் - கடல் அரசன்; வருணன். ஓவிய மங்கையர் - சித்திரம்போல் அழகிய நங்கையர்.

தூவெள்ளை நீறணி எம்பெருமான் சோதிம கேந்திர காதன்வந்து, தேவர் தொழும்பதம் வைத்தஈசன் தென்னன் பெருந்துறை ஆளிஅன்று, காதல் பெருகக் கருணைகாட்டித் தன்கழல் காட்டிக் கசிந்துருகக், கேதங் கெடுத்தென்னைஆண் டருளுங் கிடப்பறிவார் எம்பிரா னவாரே. ௯

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான் அடியார்க் கமுதன் அவனிவந்த, எங்கள் பிரான்இரும் பாசந்தீர இகபர மாயதோர் இன்பமெய்தச், சங்கங் கவர்ந்துவண் சாத்தி னோடுஞ் சதுரன் பெருந்துறை ஆளிஅன்று, மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த வகையறிவார் எம்பிரா னவாரே. ௰

திருச்சிற்றம்பலம்

---

(௯) பதம் வைத்த - பாதங்களை (என் தலைமீது) வைத்த. கேதம் - துன்பம். கிடப்பு - தன்மை.

(௰) அமுதன் - இனிய அமுது போல்பவன், பேரின்பத்தைக் கொடுப்பவன். இரும்பாசம் தீர.........எய்த - பெரிய மும்மலக் கட்டு நீங்கவும், இம்மையிலும் மறுமையிலும் பேரின்பம் அடையவும். சங்கம் கவர்ந்து - காதலினால் சங்கினாலாய வளையல்களைக் கழலும்படி செய்து. அல்லது (விற்பதற்காக) சங்கினாலாகிய வளையல்களை எடுத்துக்கொண்டு. வண் சாத்தினோடு - வளமையான அணிகலன் முதலியவற்றோடு.

தில்லையில் அருளிய

# எண்ணப்பதிகம்

## ஒழியா இன்பத்துவகை

### ஆசிரிய விருத்தம்

*திருச்சிற்றம்பலம்*

பாருரு வாய பிறப்பற வேண்டும் பத்திமை யும்பெற வேண்டுஞ், சீருரு வாய சிவபெரு மானே செங்கம லமலர் போல், ஆருரு வாயஎன் னாரமு தேஉன் அடியவர் தொகை நடுவே, ஓருரு வாயநின் திருவருள் காட்டி என்னையும் உய் யக்கொண் டருளே. க

உரியேன் அல்லேன் உனக்கடிமை உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந், தரியேன் நாயேன் இன்னதென் றறி யேன் சங்கரா கருணையினாற், பெரியோன் ஒருவன் கண்டு கொள் என்றுன் பெய்கழல் அடிகாட்டிப், பிரியேன் என் றென் றருளிய அருளும் பொய்யோ எங்கள் பெருமானே. உ

என்பே உருக நின்அருள் அளித்துன் இணைமலர் அடி காட்டி, முன்பே என்னை ஆண்டு கொண்ட முனிவா முனி

(க) வரி 1. இப்பூவுலகில் உடலெடுப்பதாகிய பிறவி ஒழிய வேண்டும், உன்னிடம் அன்புடைமை வேண்டும். ஆருருவாய - அரிய செம்மேனியனை. உன் அடியவர்.........காட்டி - உன் அடி யவர் கூட்டத்தின் நடுவில் ஒப்பற்ற உருவத்தோடு விளங்கும் உன் திருவருளைக் காட்டி. "உன் அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரி யாய்" திருவாசகம். (உடையார).

(உ) உனக்கு அடிமை(க்கு) உரியேன் அல்லேன் - உனக்கு அடிமையாயிருத்தற்குத் தகுதி உடையேன் அல்லேன். கருணை யினால்............பொய்யோ - என்மீது வைத்த கருணையினால் குரு வாகி எழுந்தருளி வந்து, வீரக்கழல் அணிந்த உன் திருவடியைக் காட்டி (உன் திருவருளின் தன்மையை வெளிப்படுத்தி) "இதனை நீ கண்டுகொள்வாயாக" என்று சொல்லி, உன்னை விட்டுப் பிரிய மாட்டேன் என்று அருளிச் செய்ததும் பொய்யாகுமோ? பொய் யாகாதபடி பிரியாதிருத்தல்வேண்டும்.

வர் முழுமுதலே, இன்பே அருளி எனையுருக்கி உயிருண் கின்ற எம்மானே, நண்பே யருளாய் என்னுயிர் நாதா நின் னருள் நாணுமே. ௩

பத்தில னேனும் பணிந்தில னேனும்உன் உயர்ந்த பைங் கழல்காணப், பித்தில னேனும் பிதற்றில னேனும் பிறப்பறுப் பாய்எம் பெருமானே, முத்தனை யானே மணி யனை யானே முதல்வனே முறையோஎன், றெத்தனையானும் யான்தொடர்ந் துன்னை இனிப்பிரிந்(து) ஆற்றேனே. ௪

காணும தொழிந்தேன் நின்திருப் பாதங் கண்டுகண் களிகூரப், பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன் பின்னைஎம் பெருமானே, தாணுவே அழிந்தேன் நின்னி னைந் துருகுந் தன்மைஎன் புன்மைகளாற், காணும தொழிந்தேன் நீயினி வரினுங் காணவும் நாணுவனே. ௫

---

(௩) உயிர் உண்கின்ற - பசு போதத்தைத் தொலைக்கின்ற. வரி 4. என் உயிர்க்குத் தலைவனே! உன் திருவருள் என்னிடம் வருவதற்கு நாணம் கொள்ளாமல் இருக்கும்படி உன்னுடைய நட்பை அருள் செய்ய வேண்டும். திருவருளைப் பெண்ணாக உருவகப்படுத்தி யிருத்தல் காண்க. என் உயிர் நாதா (நான்) நாணுமே நின் அருள் நண்பே அருளாய்—என உரைநடை கொண்டு, என் உயிர்த்தலை வனே! நான் உலகவர் இகழ்ச்சிக்கு நாணமடையாமல் இருக்கும் பொருட்டு, உன் திருவருள் எனக்கு நட்பாகும்படி அருள்புரிய வேண்டும்—எனவும் கொள்ளலாம்.

(௪) பத்திலனேனும் - பத்தி (அன்பு) இல்லாதவனானாலும். பித்து - மிக்க ஆசை. வரி 4. இனி உன்னைப் பிரிந்து (பிரிவை) சகித்திருக்க மாட்டேன். ஆகையால் எவ்வகையாலும் நான் உன் னைத் தொடர்ந்தேன்.

(௫) நின் திருப்பாதம் கண்டு கண் களிகூரக் காணுமது ஒழிந் தேன் - உன் திருவடிகளைக் கண்டு கண்கள் மகிழ்ச்சி மிகும்படிக் காண்பதை விட்டேன். வரி 2. உன்னை விரும்புவதை விட்டேன். உன் புகழ்களை (அன்பு மேலீட்டால்) வாய் குழறிக் கூறுவதை விட் டேன். பின்னை - பின்பு. சிவபெருமான் சுவாமிகளை ஆட்கொண்ட கொஞ்ச காலத்திற்குப் பிறகு தனக்குச் சிவபெருமானிடத்து அன்பு குறைந்து விட்டதைப் பற்றி இப்பாட்டில் தெரிவிக்கின்றார். பின்னை என்பதைப் பாட்டிற்கு முதலிற் கொள்க. தாணு - அழிவில்லாதவன். நின்னினைந்துருகும்.........காணும தொழிந்தேன் - (முன்பு என்

பால்திரு நீற்றெம் பரமனைப் பரங்கரு ணையோடும் எதிர்ந்து, தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ் சோதியை நீதியிலேன், போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப் புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே, ஆற்றுவ னாக உடையவ னேஎனை ஆவஎன் றருளாயே. சூ

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# யாத்திரைப்பத்து

## அனுபவ அதீதம் உரைத்தல்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறி யோமை, ஓவா துள்ளம் கலந்துணர்வாய் உருக்கும் வெள் ளக் கருணையினால், ஆவா என்னப் பட்(டு)அன்பாய் ஆட்பட்

---

னிடத்திருந்த) உன்னை நினைந்து உருகும் தன்மை என் கீழ்மை காரணமாக என்னிடத்துக் காண்பதும் அரிதாகிவிட்டது.

(சூ) பரங்கருணையோடும்......சோதியை - மேலான திருவருள் வடிவோடு எதிர்ப்பட்டுத் தோன்றி உண்மை அடியார்களுக்குத் திரு வருள் நெறியைக் காட்டுகின்ற ஒளியுருவனை. நீதியிலேன்-அறவழி நில்லாத நான். என் உள்ளே ஆற்றுவனாக - என் மனத்தின்கண் ஆறுதல் உடையவனாகும்படி. ஆவ என்று - ஐயோ என்று இரங்கி.

---

(க) புயங்கப் பெருமான்-(1)பாம்புஅணிந்த பெருமான் (உ) புயங் கம் என்னும் கூத்து ஆடும் பெருமான். ஓவாது - ஓயாமல். ஒருப்படு மின் - ஒருங்கே சேருங்கள்.

டீர்வந் தொருப் படுமின், போவோங் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான் கழல்புகவே. க

புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள், மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள், நகவே ஞாலத் துள்புகுந்து நாயே அனைய நமையாண்ட, தகவே யுடையான் தனைச்சாரத் தளரா திருப்பார் தாந்தாமே. உ

தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு விதிவகை யும், யாமார் எமதார் பாசமார் என்ன மாயம் இவைபோகக், கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப் பே குறிக்கொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங் கன் ஆள்வான் பொன்னடிக்கே. ௩

---

(க) வரி 4. பொய் (நிலையில்லா உலக வாழ்வை) விட்டு உடை யான் கழல்புகவே போவோம். (அதற்கு ஏற்ற) காலம் வந்தது.

(உ) புலன்களில் - ஐம்புல விடயங்களில். வரி 3. உலகத்தவர் நம்மை நகைசெய்ய இவ்வுலகினுள் புகுந்து நாய் போன்ற நம்மை ஆட்கொண்ட. "நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்த" என்று **திருவம்மானை** (6)ல் வருதல் காண்க. நகவே ஞாலத்துள் புகுந்து - உலகம் விளக்கம் அடையும்படி உருவுகொண்டு வந்து—என்னலு மாம். தகவு - கருணை. வரி 4. (மேற் சொன்னபடி பிற சார்புகளை விட்டு) நம்மை ஆட்கொண்ட கருணையுடையவனைச்சார்ந்து நிற்பாரா யின், தாம் தாமாகவே (பிறருதவியின்றி) தளர்ச்சியடையாதிருப்பர்.

(௩) வரி 1. கோமான் (இறைவன்) பழந்தொண்டர்கள் தங்க ளுக்குத் தாங்களே சுற்றத்தவராவர். அவர்கள் தங்களுக்குத் தாங் களே கட்டளை விதிக்கும் இயல்பினராவர். (பிறர் கட்டளைப்படி நட வார்.) வரி 2. நாம் யார், எம்முடையது என்பது யாது, மலக்கட்டு என்பது எது ? இவைகளெல்லாம் என்ன மயக்கங்கள் ; இந்த மயக் கங்கள் நம்மைவிட்டு நீங்க. அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு பொய்நீக்கிப் புயங்கனுள்வான் பொன்னடிக்கே போமாறு அமை மின் - சிவபெருமானுடைய திருவுள்ளக் குறிப்பே இலட்சியமாகக் கொண்டு பொய்யைத் தவிர்த்து, புயங்கனும் நம்மை ஆள்பவனுமான சிவபெருமானுடைய பொன்போல ஒளிரும் திருவடியினிடத்து போய்ச் சேரும் வழியில் செல்லுங்கள்.

அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டைக், கடிசே ரடியே வந்தடைந்து கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச், செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ கத்தே நமைவைப்பான், பொடிசேர் மேனிப் புயங்கன்தன் பூவார் கழற்கே புகவிடுமே. ௪

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் காலம்இனி யில்லை, உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன்போ வதற்கே ஒருப்படுமின், அடைவோம் நாம்போய்ச் சிவ புரத்துள் அணியார் கதவ தடையாமே, புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்கன் ஆள்வான் புகழ்களையே. ௫

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் தாளே புந்திவைத்திட், டிகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர் இடையூ றடையாமே, திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம், நிகழும் அடியார் முன்சென்று நெஞ்சம் உருகி நிற்போமே. ௬

---

(௪) அகல விடுமின் விளையாட்டை - உலக விஷயங்களில் ஈடுபட்டுச் செய்யும் செயல்களை முற்றிலும் விட்டொழியுங்கள். திருக்குறிப்பைக் கடைக்கொண்டிருமின் - சிவபெருமானுடைய திருவுள்ளக் குறிப்பை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். செடிசேர் உடலைச் செல நீக்கி - பாவம் சேரும் உடலைப் போகும்படி நீக்கி. கழற்கே புகவிடுமே - திருவடியினிடத்துச் சேர்ப்பிப்பான்.

(௫) மிக ஓர் காலம் இனியில்லை - இதனினும் மேலான காலம் இனி வரப்போவதில்லை. மிக என்பதற்கு மேன்மைப்பட என்றும் பொருள் கொள்ளலாம். சாத்து - கூட்டம். ஒருப்படுமின் - இசையுங்கள். அடையாமே - மூடப்படுமுன். புடைபட்டு - பக்கத்தில் இருந்து.

(௬) புந்தி வைத்திட்டு - மனதில் அல்லது அறிவினில் பதிய வைத்து. இகழ்மின் - பொருட்படுத்தாதீர்கள். திகழும் - (அருளொளியுடன்) விளங்கும்.

நிற்பார் நிற்க நில்லா வுலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே, பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே, நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின், பிற்பால் நின்று பேழ்கணித் தாற் பெறுதற் கரியன் பெருமானே. எ

பெருமான் பேரா னந்தத்துப் பிரியா திருக்கப் பெற்றீர்காள், அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா அழுங்கி அரற்றாதே, திருமா மணிசேர் திருக்கதவந் திறந்தபோதே சிவபுரத்துத், திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே. அ

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற் கிடந்து புரளாதே.

---

(எ) நிற்பார் நிற்க - நிற்க விரும்புவார் நிற்கட்டும். பொற்பால் ஒப்பாம் - பொன்னின் நிறத்தை ஒத்த. பொன் அடிக்கே நிற்பீர் - அழகிய திருவடிகளை அடையும் பொருட்டு நிற்கின்ற நீர். தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின் - தாமதியாமல் முயற்சிக்கும் தன்மையிலே ஈடுபடுங்கள். பிற்பால் - காலம் கடந்த பிறகு. பேழ்கணித்தால் - தயங்கினால்.

(அ) வரி 1. சிவபெருமான் தரும் பேரானந்தத்தில் பிரியாமல் மூழ்கியிருக்கப் பெற்றவர்களே. வரி 2. நீர் கடத்தற்கரிய உலக மயக்கத்தில் அழுந்தித் துன்புற்று அம்மா என்று அலறாமல்.

(கூ) வரி 1. (இறைவன் திருவடியைச்)சேர எண்ணி, மனதைப் பரிசுத்தமாக வைத்து நினையுங்கள். ஆரப் பருகி - நிரம்ப உண்டு. ஆராத ஆர்வம் கூர - மேன்மேலும் பெருகுகின்ற அன்பு மிகும்படியாக. அழுந்துவீர் - பேரின்பத்தில் மூழ்கிக் கிடப்பீர். வரி 4. நிலையற்ற உலகவாழ்விற் சிக்குண்டு, துன்பத்தில் உழலாமல், சிவபெருமான் திருவடியையே போய்ச் சேர விரும்புங்கள். பொர என்பது போர என எதுகைபற்றி நீண்டது.

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாள் ஆகாதீர், மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்குவீர், தெருள்வீ ராகில் இதுசெய்மின் சிவலோ கக்கோன் திருப்புயங்கன், அருளார் பெறுவார் அகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே. கo

திருச்சிற்றம்பலம்

---

(கo) புரள்வார் - (அன்பினால்) புரண்டு வலம் வருவாராயும். இன்றே வந்து ஆள் ஆகாதீர் - இன்றைய தினமே வந்து ஆட்படாதவர்களே. பின்னை மருள்வீர், பின்னை மதிப்பாரார், பின்னை மதியுட் கலங்கி மயங்குவீர். பின்னை - தாமதிப்பீராயின். வரி 3, 4. கலக்கம் நீங்கித் தெளிந்த உணர்வு அடைய விரும்புவீரானால் புரண்டு, தொழுது, புகழ்ந்து ஆட்படுங்கள். இதைச் செய்யாதொழிவீராயின், சிவலோகத்து அரசனான புயங்கப்பெருமான் திருவருளை இவ்வுலகில் யார் பெறக்கூடும்? ஐயோ! ஐயோ!! ஐயோ!!! அந்தோ என்னும் மூன்று அடுக்கு அருளைப்பெறாமல் உலகில் மக்கள் ஒழிகின்றார்களே என்னும் பேரிரக்கம் பற்றி எழுந்தது.

தில்லையில் அருளிய

# திருப்படையெழுச்சி

## பிரபஞ்சப் போர்

### கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. க

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா(டு) ஆள்வோம்நாம் அல்லற்படை வாராமே. உ

திருச்சிற்றம்பலம்

---

(க) வரி 1. சிவஞானமாகிய வாளினைக் கையிற் பிடியுங்கள். தலைவருடைய பேரைச் சொல்லுதலால் உண்டாகும் ஒலியாகிய பறையை அடியுங்கள். வரி 2. மானம் (சிவநேசம்) ஆகிய குதிரை மேல் ஏறிக்கொள்ளுங்கள். ஐயர்மதி (இறைவன் அருள்) ஆகியவெண் குடையைப் பிடியுங்கள். ஐயர் என்பதை விளியாகக்கொண்டு பெருமை மிக்கோரே என்று அடியார்களை விளிப்பதாகவும் கொள்ளலாம். வரி 3. நன்மையைத் தருவதான திருநீறாகிய பாதுகாப்புச் சட்டையை எல்லோரும் அணிந்துகொள்ளுங்கள். வரி 4. மாயா காரியமாகிய சேனைகள் வந்து தாக்குமுன் நாம் முத்திப் பதியைப் பிடிப்போம்.

(உ) தூசி செல்லீர் - முன் அணியிற் செல்லுங்கள். பேரணி உந்தீர்கள் - பெரிய படையைச் செலுத்துங்கள். கடைக்கூழை - பிந்திய அணிவகுப்பு. வரி 4. துன்பமாகிய சேனை நம்மைத் தாக்குதற்கு முன் முத்தி உலகத்தை ஆள்வோம். தொண்டர்கள் - சரியையாளர். பத்தர்கள் - கிரியையாளர். சித்தர் - ஞானிகள்.

திருப்பெருந்துறையில் அருளிய

# திருவெண்பா

## அணைந்தோர் தன்மை

### நேரிசை வெண்பா

*திருச்சிற்றம்பலம்*

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்யா
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. க

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்—தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து. உ

---

(க) வெந்து அகல - வெந்து ஒழியும்படியாக. பொய்யும் பொடியாகாது - இப்பொய்யுடலும் ஒழிந்து போகாது. தேனுந்து செந்தீ - தேனை (இன்பத்தை)ப் பொழிகின்ற செஞ்சுடர் போன்ற திருவருளை. வரி 4. மனத்திலே அத்துவிதமாகக் கூடாதிருந்தேன். திருவருளாகிய செந்தீயை மருவினால் வினையும் வெந்தொழியும்; பொய்யும் பொடியாகும். "அருட்பெருந்தீயின் அடியோம் அடிக் குடில்......ஒடுக்கினன்" என்னும் திருவண்டப்பகுதியோடு (வரி 160,161) ஒப்பிடுக. அன்பினால் உருகிய விடத்து உடல் 'மெய்' ஆகின்றது, உடலாலாகிய உண்மைப்பயனை அடைதலின். உருகாத விடத்து உடல் பொய்யாகின்றது. உடலை 'மெய்' என்றும் 'பொய்' என்றும் எதிர் மறையாகக் கூறிய நயம் காண்க. பொய்யும் என்பதற்கு பொய்த் தன்மையும் எனவும் கொள்ளலாம்.

(உ) ஆர்க்கோ - ஆரவாரிப்பேனோ. அரற்றுகோ-அலறுவேனோ. பார்க்கோ - பார்ப்பேனோ. தீர்ப்பரிய - நீங்காத. வரி 3, 4. யாரொருவர் பேரின்பப் பித்தைக் கொடுக்கும்படியான தந்தை திருப்பெருந் துறைப் பெருமான் ஒருவன்தான் என்று சொல்லுவார்களோ? அவரை வணங்கி, ஆர்க்கோ......என்று முடிக்க.

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். ௩

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து. ௪

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும்—இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா(து)
இருந்துறையும் என்நெஞ்சத் தின்று. ௫

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. ௬

---

(௩) பெருந்துறையில் மேய பிரான் வையத்து இருந்து உறையுள் (இருந்து) வேலை மடுத்து(எடுத்து) என் சிந்தனைக்கே கோத்தான் (பாயச் செய்தான்) அவன் அப்படிச் செய்தற்கு நான் செய்த பிழை (இன்னதென்று) அறியேன். சேவடியைக் கைதொழுவதே உய்தி கூடும் வழிக்கு ஆதாரமென்பதை அறிந்திலேன்.

(௪) முன்னின்றான் - எதிர்ப்பட்டு நின்றான். பேராளன் - பெருமையை உடையவன்.

(௫) அறிவார்க்கு அறையோ - அறிய விரும்புவார்க்கு பறை சாற்றினாற் போல் சொல்லுகின்றேன். இதனை இறுதியிற் கொள்க. ஈன்ற - படைத்த. மறையோன் - பிரமன். மால்கொள்ளும் - அடி முடி காணாது மயங்குதற்கு ஏதுவாகிய.

(௬) அத்தன்......வந்து, பித்தென்னை.........பிறப்பறுக்கும் வந்து என்மனத்தைப் பேச்சரிதாம் மத்தமேயாக்கும்—**உரை நடை.** பித்தென்னை ஏற்றும் - தன்மீது பேரன்பு கொள்ளச் செய்வான். பேச்சு அரிதாம் மத்தமே யாக்கும் - வாயினால் கூறமுடியாத அளவு கடந்த களிப்பு வடிவமாகச் செய்வான். மருந்து - அமுதம்போல்வான். இறவாப் பேரின்பம் வந்து-அழியாத பேரின்பமயமாக வந்து.

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. எ

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கேன் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. அ

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். கூ

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாந்—தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. க0

---

(எ) வாரா வழி அருளி - பிறவிக்கு மீண்டு வாராத வழியினைக் காட்டியருளி. மாறு இன்றி ஆரா அமுதா - என்றும் மாறாத தன்மையதாய் தெவிட்டாத அமுதமாய். அமைந்தன்று - அமைந்தது. ஒளி - அருளொளி. ஒளி, வழியருளி, மாறின்றி, அமைந்தன்று—என்று கூட்டுக.

(அ) செய்யும் வகை - கைம்மாறு செய்யும் விதம்.

(கூ) மூவர் - மும்மூர்த்திகள். முப்பத்துமூவர் - தேவர்கள். மா - குதிரை.

(க0) இருந்து - என்மனத்துள்ளிருந்து. எல்லாம் தரும்காண் - (இரந்து கொண்ட) எல்லாவற்றையும் தந்தருளுவான். வரி 4. அமுதவடிவாய் என் மனத்தில் வந்து இருந்து என்னை ஆண்டான்—என்று கூட்டுக.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. கக

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# பண்டாய நான்மறை

## அனுபவத்துக் கையமின்மை உரைத்தல்

### நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. க

உள்ள மல(ம்)மூன் றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த—வள்ளல்

---

(கக) இருள் - அஞ்ஞானம். தொடர்வு அறுத்து - என்னைப் பற்றுமல் நீக்கி. சோதியாய் - அருள் ஒளியாய். அன்பு அமைத்து - (தன்மீது) அன்பை என்னிடத்துப் பொருந்தச் செய்து. ஊராக - இருப்பிடமாக.

(க) வரி 1. பழமையான நான்கு வேதங்களும் அவன்பால் நணுகமாட்டா (அவன் தன்மையை அறியமாட்டா). தொண்டு ஆக - அடியவனாக. கோகழி - திருப்பெருந்துறை.

(உ) வரி 1, 2. உயிரைப் பற்றியுள்ள மும்மலங்களும் நீங்கி யொழிய, சொரிகின்ற தேனை யொத்த பேரின்ப வெள்ளத்தைத் தரும் குதிரையின்மேல் ஏறிவந்த கொடையாளன்.

மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. உ

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. ௩

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலகம் ஏத்தத் தருவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். ௪

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். ரு

---

(உ) பிறவிக்காடு கருவும் கெடும் - பிறவியாகிய காடு வேரோடு கெட்டொழியும்.

(௩) வரி 1, 2. வேடனையும், வலைஞனையும், குதிரைப்பாகனையும் தோன்றி நம் வினையை அழித்து.

(௪) வாழ்ந்தார்கள் ஆவாரும் - (உலகிற் பயன்பட) வாழ்ந்தவர்கள் ஆவார்களும். அமரர் சென்று சூழ்ந்து (வலஞ் செய்து) இறைஞ்சித் துதிக்கும் செல்வம் மிக்க திருப்பெருந்துறைப் பெருமானை நன்றாகத் தொழுது துதிக்கும் அடியார் தான் ஆவாரும், மாய்ப்பாரும், தருவாரும் ஆவர். நமர் - நம்மவர்; அடியார்.

(ரு) நம் இடர்கள் போய் அகல என்பதைப் பெருந்துறையை நண்ணி, எழுகோகழிக்கரசை எண்ணி, கழியாதிருந்தவனைக் காண் என்னும் மூன்று தொடர்களோடும் கூட்டுக. எழு கோகழிக்கரசு - மேலெழுந்து விளங்கும் கோகழிக்குத் தலைவன். கோகழி - திருவாவடுதுறை அல்லது திருப்பெருந்துறைக்குப் பெயர். கழியாதிருந்தவன் - விட்டு நீங்காதிருந்தவன்.

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. ௬

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. ௭

திருச்சிற்றம்பலம்

---

(௬) வரி 1, 2. அறிதற்கு ஏதுவாகிய கருவிகள் எல்லாம் அன்பு செய்யும் அடியார்கள் பிறப்பை நீங்கும்படிச் செய்யும். கரணங்கள்—அகக்கரணம் 4: மனம், புத்தி, சித்தம், அகங்காரம். புறக் கரணம் 5: மெய், வாய், கண், மூக்கு, செவி.

(௭) வரி 1, 2. பேசப்பட்ட பொருள்களுக்கெல்லாம் இலக்காகி (முடிவிடமாகி) சொல்லின் அளவைக் கடந்த குற்றமற்ற மாணிக்கம் போன்றவனது இதமாகும் மணிவார்த்தை (நன்மையைச் செய்யும் புகழை) உரைத்து. பெருந்துறையே என்று - திருப்பெருந்துறைப் பெருமானே என்று சொல்லி. மருந்து - பிறவிப்பிணிக்கு மருந்து போல்வான்; அல்லது அமுதம் போல் இன்பத்தைச் செய்பவன்.

தில்லையில் அருளிய

# திருப்படையாட்சி

## சீவ உபாதி ஒழிதல்

### பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள் தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும்ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும்ஆகாதே

---

ஜீவ உபாதி ஒழிதல் - உயிரின் துன்பம் நீங்குதல்.

இப்பதிகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் தமக்குமுன் சிவ பெருமான் உருவு கொண்டு எதிர்ப்பட்டுத் தோன்றியபோது தமக்கு உண்டான துன்ப நீக்கமும் பேரின்பப் பேறும் தெரிவிக்கின்றார். ஒவ்வொரு அடியின் இறுதியில் உள்ள ஆகாதே என்ற பதத்திற்கு ஆகாதோ=ஆகும் என்பது பொருள். சிலர் "சிவபெருமான் வெளிப் பட்டபோது உயிரின் புறச்செயல்கள் அற்று ஒழிதலின் செய்யுளிற் கூறிய புறச்செயல்கள் நிகழ இடமில்லை" என்று கொண்டு, 'ஆகாதே' என்பதற்கு'ஆகாது' என்று பொருள்உரைக்கின்றனர்.ஞானிகளுக்குச் சிவபெருமான் காட்சி கொடுத்த பின்னும் உடலோடு கூடியிருக்கும் வரையில் புறச்செயல்களும் உளவாதலினாலும், ஐம்புலன்களோடு கூடி அனுபவிக்கும் சிற்றின்பமே அவர்களுக்குப் பேரின்பமாகத் திகழ்தலினாலும், அங்ஙனம் பொருள் உரைப்பதற்கு ஆதாரமின்மை அறிக.

இதில் வரும் பாட்டுகளில் இறுதி அடியை முதலிற் கொள்க.

முதல் பாட்டு ஆரம்பிக்கும்போது சிவபெருமான் காட்சி கொடுத்தவுடன் கண்கள் தரிசித்துப் பெற்ற ஆனந்தத்தைச் சொல்லு கின்றார்.

(க) ஆகாதே - ஆகாதோ, ஆகும். வரி 2. காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும் ஆகாதே - மகளிரொடு வாழும்

பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன்னுடை யான்படையாட்சிகள்பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே. க

ஒன்றினொடொன்று மோரைந்தி னொடைந்தும் உயிர்ப்பறுமாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமென உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே
காரண மாகும் அனாதி குணங்கள் கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம் நடந்தன ஆகாதே
நாமுமெ லாமடி யாருட னேசெல நண்ணுது மாகாதே
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு தெய்துவ தாகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன்என்னுள் புகுந்திடிலே. உ

---

வாழ்க்கையோடு தொடர்புள்ள என் உலக வாழ்க்கை இறுதியடைத லும் ஆகும். பண்களி கூர்தரு-இசையோடுகூடி மிக்க மகிழ்ச்சியைத் தருகின்ற. படை ஆட்சிகள் - படையின் வீரச்செயல்கள். வரி 7. விண்ணுலகினர் மகிழ்வதற்கு ஏதுவாகிய வேறுபாடாகிய நிலை தோன்றுதல் நிகழும். வேதகம் - சீவபோதம் கெட்டுச் சிவமாம் தன்மை. வரி 8. சிவபெருமான் உருவுகொண்டு வெளிப்பட்டுத் தோன்றிவிட்டால், முன்சொன்னவெல்லாம் நிகழும். கானவன் - வேடன்.

(உ) வரி 1. உடலினொடு உயிரும், ஐம்பொறிகளோடு ஐம்புலன் களும் கலந்து இயங்குவது நிகழும். வரி 3. தனது கன்றை நினைந்து அன்போடு எழுந்து செல்லும் தாய்ப் பசுவைப் போல உயிர்களிடத் துக் கருணை காட்ட வந்த செயலும் நிகழும். வரி 4. எல்லாச் செயல் களுக்கும் காரணமாகிய இறைவனது அனாதியாகிய குணங்கள் மன திற் பதிதலும் நிகழும். வரி 5. இது நல்லதோ இது தீயதோ என்று ஆராய்வதால் உண்டாகும் மனக்கலக்கம் போய் ஒழிதலும் நிகழும். செல நண்ணுது மாகாதே - முத்திநெறியிற் செல்ல, அவர்களைக் கிட்டுவதும் நிகழும்.

பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த பராஅமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள் அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர் அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடு மாகாதே
சேலன கண்கள் அவன்திரு மேனி திளைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துய ரேகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய ஈசன் எதிர்ப்படு மாயிடிலே. ௩

என்னணி யார்முலை ஆகம் அளைந்துடன் இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி தாடுது மாகாதே
நன்மணி நாதம் முழங்கியென் உள்ளுற நண்ணுவ தாகாதே
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும் நண்ணுவதாகாதே
மன்னிய அன்பரில் என்பணி முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மலர் என்தலை எய்துவ தாகாதே
என்னையுடைப்பெரு மான்அருள்ஈசன் எழுந்தருளப்பெறிலே. ௪

---

(௩) வரி 1. பாசத்தொடர்பினால் உண்டாகும் பலவேற்றுமைப் பட்ட குணங்கள் பறிக்கப்பட்டு தடைப்படுதல் (மீண்டு வாராமை) நிகழும். வரி 2. இறைவனைத் தியானிக்கும்படியான மனதில் மேலான அமுதம் (பேரின்ப உணர்ச்சி) எழுதல் நிகழும். நம்முள் அகப்படும் - நம் உள்ளத்துள் தோன்றுதல். அண்ணுவது - அடைவது. மடவார் இடர் - பெண்களால் வரும் துன்பம். சிந்திடும் - ஒழிந்துபோதல். வரி 6. சேல்மீன்போன்ற (அடியார்) கண்கள் அவன் திருமேனியின் அழகில் ஈடுபடுதல் நிகழும். சேல்மீன் கண்கள் மகளிர் கண்களுக்கு உவமையாகக் கூறுவது வழக்கு. இதில் இறைவனை நாயகனாகவும் அடியாரை நாயகியாகவும் கருதப்பட்டுள்ளது. வரி 7. இந்திரஜாலம் போல நிலையற்ற பிறவியினாலுண்டாகும் மிகுந்த துன்பம் ஒழிதல் நிகழும்.

(௪) வரி 1. என் அழகு மிகுந்த முலைகள் அவன் மார்பிற் படிந்து இன்புறுதல் நிகழும். இனிது ஆடுதும் - இன்பமாக மூழ்குதலும். மணி நாதம் - மணி ஓசை. நீற்றினை நண்ணுவது - நீற்றினைப் பூசுவதும். முந்துற வைகுவது - முற்பட்டுப் பொருந்துவது. இன் இயல் - இனிய தன்மையுடைய.

மண்ணினில் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த கலக்கறு மாகாதே
காதல்செ யும்அடி யார்மனம் இன்று களித்திடு மாகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த பிணக்கறு மாகாதே
பேரறி யாதஅ னேக பவங்கள் பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை எய்துவ தாகாதே
என்னையுடைப்பெரு மான்அருள்ஈசன்எழுந்தருளப்பெறிலே. ரு

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து வெளிப்படுமாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுத்திடு மாகா
தன்னடி யாரடி என்தலை மீது தழைப்பன ஆகாதே [தே
தானடி யோம்உட னேஉ(ய்)ய வந்து தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடைஈசன் என் அத்தன் எழுந்தருளப்பெறிலே. சூ

---

(ரு) வரி 1. உலகினில் மாயா காரியங்களை எண்ணிச் செய்ததினுல் உண்டான மயக்க உணர்ச்சி நீங்குதல் நிகழும். கண்ணிலி காலம் - அறிவில்லாதவனுய்க் கழிந்த காலம். நாம் என - நாம் எனவும் நீரெனவும். பிணக்கு - மாறுபாடு. வரி 6. பேர் கூட சொல்ல முடியாத பல பிறவிகளில் நின்று தப்பிப் பிழைத்தல் நிகழும். எண்ணிலியாகிய சித்திகள் - எண்ணமுடியாத பல அற்புதத் திறன்கள்.

(சூ) முரன்று - முழங்கி. வீணை முரன்று எழும் இன்பம் மிகுத்திடும் - (மற்ற காலங்களில் உள்ளதைவிட இறைவன் வெளிப்பட்ட காலத்தில்) வீணையினுல் உண்டாகும் இன்பம் மிகுதியாகத் தோன்றும். தழைப்பன - விளங்குவன. வரி 6. இறைவன் அடியவர்களாகிய எங்களுடன் உய்யும்படி எழுந்தருளி வந்து தோன்றுதலும் நிகழும். இன் இயம் - இனிய வாத்தியங்கள். இயம்பிடும் - ஒலிக்கும்.

சொல்லிய லாடுதெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென என்னுளம் மன்னிய சோதி தொடர்ந்தெழு
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே [மாகாதே
பண்டறி யாதப ரானுப வங்கள் பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மயல் இன்று விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்அறி யாத விழுப்பொருள் இப்பொருளாகாதே
எல்லையிலாதன எண்குண மானவை எய்திடு மாகாதே
இந்து சிகாமணி எங்களை ஆள எழுந்தரு ளப்பெறிலே. எ

சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனும் மாயை அடங்கிடு மாகாதே
ஆசைஎ லாம்அடி யாரடி யோம்எனும் அத்தனை யாகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள் தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர் எய்துவ தாகாதே [அ
ஈறறி யாமறை யோன்எனை ஆள எழுந்தரு ளப்பெறிலே.

திருச்சிற்றம்பலம்

---

(எ) வரி 1. பரிசுத்தமான மணி ஓசை சொல்லினுல் இன்ன தன்மையதென்று தெரிவிக்க முடியாதபடி மேலான இன்பத்தைத் தருதல் நிகழும். துண்ணென - அதிவிரைவாக. தொடர்ந்து எழும்-விடாது பற்றி எழுதலும். வரி 3. பல திறப்பட்ட மனவிரிவுகள் கெடும்படி வந்த மிக மேலான பொருளைக் காண்பது நிகழும். வரி 4. முன்பு அறிந்திராத மேலான அனுபவங்கள் விரிந்து எழுதலும் நிகழும். வில் இயல் நல் நுதலார் மயல் - வில்லைப்போன்று வளைந்த அழகிய மகளிர்க்குக் காதலால் உண்டாகும் மயக்க உணர்வு. இந்து சிகாமணி - சந்திரனைத் தலைமீது இரத்தினம்போல் வைத்த பெருமான்.

(அ) வரி 1. பல சங்குகள் ஒன்றுசேர்ந்து முழங்கினுற் போன்ற ஓசை மிகுதிப் படுதல் நிகழும். சலித்திடும் ஆகாதே - நீங்குதல் நிகழும். வரி 3. அவ்விடத்தில் இது நல்லது இது நல்லது என்று கருதும் மயக்க உணர்ச்சி ஒழிதலும் நிகழும். திளைப்பன - களித்தலும். தெரிந்திடும் - உணர்ந்திடுதல். அமுதூறு பரஞ்சுடர்-பேரின்பத்தைப் பொழிகின்ற மேலான சோதிவடிவினனை.

தில்லையில் அருளிய

# ஆனந்தமாலை

## சிவானுபவ விருப்பம்

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மின்னே ரனைய பூங்கழல்க ளடைந்தார் கடந்தார் விய னுலகம், பொன்னே ரனைய மலர்கொண்டு போற்றா நின்றா ரமரரெல்லாங், கன்னே ரனைய மனக்கடையாய்க் கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த, என்னே ரனையே னினியுன்னைக் கூடும் வண்ண மியம்பாயே. க

என்னா லறியாப் பதந்தந்தாய் யான தறியா தேகெட் டேன்,உன்னா லொன்றுங் குறைவில்லை உடையாய் அடிமைக் காரென்பேன், பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும் பழைய அடிய ரொடுங்கூடா, தென்னா யகமே பிற்பட்டிங் கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே. உ

சீல மின்றி நோன்பின்றிச் செறிவே யின்றி அறிவின்றித்[னை தோலின் பாவைக்கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்பே

---

(க) வரி 1. மின்னலை ஒத்த அழகிய தாமரை மலர்போன்ற திருவடிகளை அடைந்த அடியவர்கள் பெரிய உலகிற்கு மீண்டு வாராத படி கடந்தவராவார்கள் ; (பிறவி எய்தார்). மனக்கடையாய்க் கழிப் புண்டு - மனத்தையுடைய கீழ்ப்பட்டவனாய் (அடியவரால்) கழிக்கப் பட்டு. என் நேர் அனையேன் - இழிவால் எனக்கு வேறு ஒப்பில்லா தேன்.

(உ) வரி 1. என்னால் அறியக்கூடாத பெருமையையுடைய பதவி யைக் கொடுத்தாய். அடிமைக்கு ஆரென்பேன் - உன் அடியவனா யிருத்தற்கு என்ன தகுதியுடையவன் என்று சொல்வேன். என் நாயகமே - என் தலைவனே. விருந்தாய் - உணவாக.

(ங) சீலம் - நல் ஒழுக்கம். நோன்பு - விரதம். செறிவு - அன்பு. அறிவு - ஞானம்.

மாலுங் காட்டி வழிகாட்டி வாரா வுலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக் கொடியே னென்றோ கூடுவதே.

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடிலாதாய்ப் பழிகொண்டாய், படுவேன் படுவ தெல்லாம்நான் பட்டாற் பின்னைப் பயனென்னே, கொடுமா நரகத் தழுந்தாமே காத்தாட் கொள்ளுங் குருமணியே, நடுவாய் நில்லா தொழிந் தக்கால் நன்றோ எங்கள் நாயகமே. ச

தாயாய் முலையைத் தருவானே தாராதொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன் தயாநீ யென்பாலில்லையே
நாயே னடிமை யுடனாக ஆண்டாய் நான்றான் வேண்டாவோ.

கோவேயருள வேண்டாவோ கொடியேன்கெடவேயமையுமே
ஆவா வென்னு விடிலென்னை அஞ்சே லென்பார் ஆரோதான்

---

(ங) மாலும் - மிகுந்த விருப்பமும். வாரா உலக நெறி ஏற-உலகிற்கு மீண்டு வாராத வழியில் செல்லும்படி. சீலம், நோன்பு செறிவு, அறிவு என்பன முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கைக் குறிக்கும் என்பர். இவற்றோடு கூத்தாட்டாய், சுழன்று, விழுந்து, கிடப்பேனை என நான்கும், மாலும் காட்டி, வழிகாட்டி, கோலங்காட்டி, ஆண்டானை என நான்கும் அடுக்காய் வருதல் காண்க.

(ச) வரி 1. கெடும் தகுதியுடையேன் கெடும் வழியிற் சென்று கெடுகின்றேன். கேடிலாதாய் பழிகொண்டாய் - அழிவில்லாதவனே என்னை ஆட்கொண்ட பிறகு என்னைத் திருத்தி நல்வழிப்படுத்தாமல் என்னைக் கெடும்படி விட்டு விட்டமையால், உனக்குப் பழிவந்து சேர்ந்தது. படுவேன் - துன்பப்படுவேன். நடுவாய் - நடுநிலைமையில்.

(ரு) முலையை - முலைப்பாலை (ஞானத்தை). சவலையாய்-தாய்ப் பால் இல்லாத குழந்தைபோல் மெலிவுற்று, (அறிவின்றி). இனித் தான் நல்குதியே - இனியாவது அருள் புரிவாயாக. வரி 4. நாய் போன்ற உன் அடியவனாக நான் உன்னுடன் கூடி இருக்கும்படி என்னை ஆட்கொண்டாய். இப்போது என்மீது தயவு வைக்காதபடியால், நான் உனக்கு வேண்டியதில்லை போலும்.

(சு) அருள வேண்டாவோ - அருள் செய்ய வேண்டாமா? கெடவே அமையுமே - கெட்டுப் போதல் தகுதியோ?

சாவா ரெல்லா மென்னளவோ தக்க வாறன் றென்னாரோ
தேவே தில்லை நடமாடி திகைத்தே னினித்தான் தேற்றாயே.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாநிகழ்வித்துப்[யாய்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறை
அரிய பொருளே அவிநாசி யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ செய்வ தொன்றும் அறியேனே. எ

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

# அச்சோப்பதிகம்

## அனுபவ வழி யறியாமை

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. க

(கூ) வரி 3. பயன் பெறாது இறப்பவர்கள் எல்லோரும் என்னைப் போன்றவர்கள் தாமோ? நீ அருளாதொழிவது உனக்குத் தகுதியல்ல என்று பெரியோர்கள் சொல்லார்களோ? இனித் தான் தேற்றாயே - இனியாவது தேறுதலைச் செய்யமாட்டாயா?

(எ) வரி 1. நரிகளைக் குதிரைத் திரளாகச் செய்து உலகத்தாரெல்லாம் அறியும்படிச் செய்து. பிச்சது ஏற்றும்-திகைப்பு அடையச் செய்யும். பாண்டி வெள்ளமே - பாண்டியனுன கருணை வெள்ளமே.

(க) மூர்க்கரொடு முயல்வேனை - கீழ் மக்களொடு சேர்ந்து அவர் நெறியிற் செல்ல முயல்கின்ற எனக்கு. பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து-அற்று ஒழியும்படி மன அழுக்கைப் போக்கி. சிவமாக்கி - சிவத்துடன் கலக்கும்படிச் செய்து. அருளிய ஆறு - அருள்செய்த விதம். அச்சோவே - என்ன அதிசயம்!

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவா ரச்சோவே. உ

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. ந

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி யெனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. ச

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றேன்
உய்ஞ்சேனான் உடையானே அடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவா ரச்சோவே. ரு

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்

---

(உ) நெறிஅல்லா - நல்ல நெறி (முத்திநெறி) அல்லாத. சிறு நெறிகள் சேராமே - தாழ்வான நெறிகளிற் செல்லாமல். குறி - (பெயர் வடிவு முதலிய) அடையாளங்கள். கூத்தன் - நடராஜப் பெருமான்.

(ந) வரி 1. நிலையில்லாதவற்றை யெல்லாம் நிலையுடையனவென் றெண்ணி. புணர் - நெருங்கிய. மாளாமே - பிறவியினாற் பெறவேண் டிய பயனைப் பெறாமல் வீணே இறந்தொழியாமல்.

(ச) எய்த்து - இளைத்து. எண்ணம் இல்லா - நினைப்பதற்கரிய; அளவு கடந்த. தூய்நெறியே - பரிசுத்தமான வழி.

(ரு) நெஞ்சு ஆய - மனத்தில் உண்டாகிய. துயர்கூர - துன்பம் மிகும்படி. உய்ஞ்சேன் - உய்ந்தேன்.

(சு) உடற் பிறவி - உடலோடு கூடிய பிறப்பு. கொந்துகுழல் கோல்வளையார் - பூங்கொத்துகளை அணிந்த கூந்தலையும், சங்கினு லாகிய வளையல்களையும் அணிந்த மாதர்கள்.

பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் துரிசுமறுத்(து)
அந்தமெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. ௬

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட்(டு) ஓங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. ௭

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. ௮

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. ௯

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம் முற்றிற்று.

ஆகத் திருப்பதிகங்கள் ௫௧-க்குப் பாடல் தொகை - ௬௫௮

---

(௬) பரிசு - தன்மை, பசு போதம், யான் எனது என்னும் செருக்கு. துரிசு - குற்றம். அந்தம் - எல்லாவற்றிற்கும் முடிவாகிய சிவபெருமான்.

(௭) வரி 1. அழகுடைய மாதர் மயக்கத்தில் வீழ்ந்து அழுந்திக் கிடக்கும் தன்மையுடையேனை. வரி 2. மெதுவாகத் தூக்கிக்கொண்டு போய் மும்மலங்களாகிய தாட்பாளை நீக்கி.

(௮) தடஞ்சுழி - பெரிய நீர்ச்சுழல். ஆதி - எல்லாவற்றிற்கும் முதலாயிருப்பவன்.

(௯) செம்மை நலம் - செம்மையான (துன்பம் கலவாத) இன்பம். சிதடர் - மூடர். நாய் சிவிகை ஏற்றுவித்த அம்மை - நாயைச் சிவிகையில் ஏற்றினாற்போல் உயர்ந்த பதவியை அளித்த தாய் போன்ற சிவபெருமான்.

# திருவாசக உண்மை

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்தில்
பேசுதிருச் சிவபுரா ணத்தகவற் பெருமைசொலில்
ஈசர்தமக் கியல்பான திருநாமம் முதலெவையும்
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட்குறிப்பாம். ௧

புகழ்பெருகுஞ் செய்கையெலாம் புகல்அகவல்* ஒன்றாகும்
திகழ்திரு வண்டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவாய்
அகலமுறத் தேர்ந்திடவே யருளியநற் பொருளாகும். ௨

முத்திபெறு நெறியறியு மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருதே சிகர்மோகஞ் சதகமதாம்
மித்தையுல கினையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தாறிந் திடநீத்தல் விண்ணப்பம் அறைந்ததுவாம். ௩

மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகருள்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை
நலமுறுமந் தணர்வடிவாய் காரணன்காண் பரியபதம்
நிலமதில்வந் தாள்கருணை நினைந்தாடல் அம்மானை. ௪

சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கடமை
அத்தனுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூவுதலே
ஒத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பி. ௫

பொன்னார்மெய் யண்ணலரும் போதவின்ப மேமிகுந்து
தென்னாதென் னாவெனவே தெள்ளேணங் கொட்டியதாம்
முன்னார் கலையுமுண ராமூகை யாமேடி
தென்னாற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல். ௬

தேவறி யாதசிவன் தேடியே யாண்டநலம்
ஆவலொடுஞ் சொல்லி யடியாரோ டுங்கூடிப்

---

* கீர்த்தித் திருவகவல்.

பூவியந்து கொய்தல்திருப் பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடல்திரு வுந்தியதே. எ

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமாய்
அத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்தியகை கொட்டிப் புகழ்தல்தோ ணோக்கமருள்
சத்தியிருந் தாடத்தா லாட்டிடுதல் பொன்னூசல். அ

நேயம்மி குந்த நிலைகுலையக் கூடுதலை
ஆயவருட் டாய்க்கங் கறைதல்அன்னைப் பத்தாகும்
தூயவருட் குயிலேசற் சோதியெனைக் கூடுதற்குன்
வாயினூற் கூவெனமுன் வாழ்த்தல்குயிற் பத்தாமே. கூ

பேர்நாடே ராறுமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடியெ லாமரற்குச் சாற்றல்தசாங் கமதாம்
ஏர்மருவு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்
டார்வமுட னுண்டவரற் கன்புசெயு மியல்பே. க௦

கோயின்மூத்ததிருப்பதிகம் சிதம்பரத்திலருளடையுங் குறிப்பதாகும்
ஏயுங்கோயிற்றிருப்பதிகம்பெருந்துறைத்தேசிகர்மோகமியம்பலாகும்
ஆயபசு போதம்முற்றுங் கெடவேண்ட லேசெத்தி லாப்பத் தாகும்
ஓதுவல்வாதனைகள்வந்தணுகாமலடைக்கலப்பத்துரைத்ததாமே. கக

கருவியுறும் ஊனுடற்கண் வாராமற் றிருவருளிற் கலப்பதற்கே
அரனடியைப் புகழ்ந்துபெரு கார்வமொடு பாடுதலே ஆசைப்பத்தாம்
வெருவிமலத் தினைச்சிலத்தொன்றுகு மடியர்குழாத் துடனேகூட்டும்
பரமருட் பெருமைமிகு தியைப்புகழ்ந்து பாடல்அதி சயப்பத்தாமே.

ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி பிரிந்துமிகு மன்போ டின்பம், பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ வெனும்விருப் பம் புணர்ச்சிப் பத்தாம், நீண்டவுல கத்தினிற்பற் றொன்றிலே னிவ்வுடற்க ணின்று வாழேன், மாண்டகுநின் பதநிழற்கீழ் வருக வருள் புரியெனுஞ்சொல் வாழாப் பத்தே. கரு

சோதியருட் சுடர்விளக்கே துயர்ப்பிறவிக் கடல்விடுத் தின்றுள் சேர்தற், காதரித்துங் குனையழைத்தா லதெந்துவெனக் கேளெ னுஞ்சொல் அருட்பத் தாகும், நீதிமறை பரவுதிருப் பெருந்துறையிற்

குருவடிவாய் நிகழ்ந்தகோலம், காதலொடுங் காட்டினையே யெனுங் களிப்புப் பகர்தல்திருக் **கழுக்குன் றமே.** கச

இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத் தாளுக்கு மெழிலா னந் தம், கந்தமலி தில்லையினுட் கண்டேனென் றுவந்துரைத்தல் **கண்ட பத்தாம்**, அந்தமிலா வானந்தத் தகலாம லெனையழுத்தி யாள்வா யென்று, "சிந்தைகலந் துரைத்ததுவே **பிரார்த்தனைப்பத் தாய்**ப்புக லுஞ் செய்கை யாமே. கரு

இழைத்தேனிவ் வாக்கைபொறுத் தினிக்கணமும் பொறுக் ககிலே னேழை யேனைக், குழைப்பதேன் பிழைபொறுத்தா ளென விரங்கிக் கூறுதலே **குழைத்த பத்தாம்**, தழைத்துவளர் பேரின்பந் தாளுகி யுயிர்தோன்றுத் தன்மை யாய்த்துன், பொழித்துநிறை வைப்பெறுதல் **உயிருண்ணிப் பத்தா**யிங் குரைத்த தாமே. கசு

தரையில்வளர் வினைமுழுதும் வரினுமஞ்சேன் சிவசமயத் தவஞ்சா ராதார், அருகின்வரக் காண்கின்மன மஞ்சுமென இகழ்ந் துரைத்தல் **அச்சப் பத்தாம்**, புரவியின்மேற் பாண்டியன்முன் வரும் பதத்தை யாம்பெறுமற் புதம்போல் யாரும், விரவுமின்க ளென்றடி யார்க் குறுதிசொலல் **திருப்பாண்டி** விருத்த மாமே. கஎ

மிக்கபிற வித்துயரெ லாமொழித்து விபுத்துவமிங் களித்த லாலே, பிக்கறச் சிக்கெனப் பிடித்தே னின்னையென்று துணிவுசெப் பல் **பிடித்த பத்தாம்**, தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ லெனைப் பெரிதாய்த் தாக்கித் தாட்கீழ், அக்கணம்வைத் தனையேயென் றிரங் கல்**திரு வேசற**வென் றியம்ப லாமே. கஅ

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே கற்றுவின் மனம்போ லென்றும், திருந்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்டல் **திருப் புலம்ப லாது** முள்ளம்,விரும்புசிவா னந்தவெள்ளம் விளைந்துதில்லை நாயகனை மிகக்கொண் டாடி, விரம்புமனக் களிமிகுத்த விறுமாப்பே **துலாப்பத்**தாய் நிகழ்த்த லாமே. கக

மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமின்னுர் கண்வலையுண் மயங்கு வேற்கிங்,காயுமறி வளித்தாள லதிசயமென் றுரைத்தல்**அற்பு தப்பத்** தாகும், தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப் பெற்றவுயிர்

சுகத்தை நோக்கிச், சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும் வியந் துரைத்தல் **சென்னிப் பத்தே.** ௨0

அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட செயன்முதலா வரன்சீ ராட்டின், திறமறிவா ரெம்பிரா னுவரென வுரைத்தல்**திரு வார்த்தை** யாகும், நிறம்வளரு மலர்ப்பொழில்சூழ்ந் தோங்குதிருத் தில்லைமன்றுள் நிமல னுமத், திறம்பெருகு மின்பமரு ளென்றல்**எண் ணப் பத்**தெனவுந் திகழ்த்த லாமே. ௨௧

பொல்லாத பவத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்ப் புகுங்காலம் புணர்ந்த தெற்கிங், கெல்லாரும் வாருமெனக் கருணையினு லழைத் திடல்**யாத் திரைப்பத்** தாகும், அல்லாத துர்க்குணமா யப்படைகள் விளையாம லருள்வா ளேந்தி, நல்லோர்க ளியாரு மெம்மோ டெய்து மெனப் **படையெழுச்சி** நவிற லாகும். ௨௨

தொந்தமாம் மலமொறுத்துச் சுகம்பெருக்கிப் பெருந்துறைவாழ் சோதி யென்றன், சிந்தனையே யூராகக் கொண்டிருந்தா ரென் றுரைத்தல் **திருவேண் பா**வாம்,எந்தைதிருப் பெருந்துறையை யேத் துநம ரேவாழ்வுற் றிடர்சேர் பாச, பந்தமறுத் திடுவரெனப் **பண் டாய நான்மறை**யும் பகர்ந்த தாமே. ௨௩

வாகுதிருப் பெருந்துறையா ரெழுந்தருளப் பெறிலெல்லா வளங்கண் முற்றும், ஆகுமெமக் கல்லாத வாகாவென் றியம்பல்**படை யாட்சி** யாகும், மோகமிகு மடியரொடுங் கூடவிரும் பிய(து)**ஆனந் த***மொழியு மீசர், போகசுக மெனக்களித்தா ரார்பெறுவா ரெனும ருமை புகறல் **அச்சோ.** ௨௪

---

**குறிப்பு** :—மேற்கண்ட பாட்டுகள் மஹா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருப்பெருந்துறை புராணத் தில் உள்ளன.

*ஆனந்த மாலை.

# பாட்டு முதற்குறிப்பகராதி

## திருவாசகம்


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அங்கணன் | ௨௪௪ |
| அங்கிஅருக்கன் | ௧௩௨ |
| அடர்புல | ௭௮ |
| அடற்கரி | ௭௭ |
| அடியார் ஆனீர் | ௨௪௯ |
| அடியார் சிலர் | ௨௦௪ |
| அடியேன் அல்ல | ௨௦௮ |
| அடியேன்அல்லே | ௬௧ |
| அட்டமூர்த்தி | ௨௩௮ |
| அணிமுடி | ௨௪௨ |
| அண்டப்பகுதி | ௧௪ |
| அண்ணமலே | ௯௨ |
| அதுபழச் | ௧௫௮ |
| அத்தனே | ௨௨௫ |
| அத்தியுரித் | ௪௩௩ |
| அத்தேவர் | ௧௧௨ |
| அப்பனே | ௬௬ |
| அம்பரமாம் | ௧௨௭ |
| அம்பலத்தே | ௧௨௭ |
| அம்மையே | ௨௨௩ |
| அயனை அனங் | ௧௨௪ |
| அயன்தலே | ௧௦௯ |
| அரிக்கும் | ௧௧௭ |
| அரியானே | ௪௦ |
| அருணன் | ௧௫௯ |
| அருந்தவருக் | ௧௨௭ |
| அருமந்த | ௧௧௮ |
| அருளாதொ | ௧௬௩ |
| அருளாரமுத | ௨௦௪ |
| அருளுடை | ௨௨௩ |
| அரைசனே | ௧௯௫ |
| அரைசே அறியா | ௭௮ |
| அரைசேபொன் | ௧௬௨ |
| அரையாடு | ௧௧௮ |
| அலரவனும் | ௧௨௪ |
| அல்லிக்கமல | ௧௮௫ |
| அவமாய | ௧௧௮ |
| அழகேபுரிந் | ௨௧௧ |
| அழிவின்றி | ௨௨௦ |
| அழுகேன் | ௬௨ |
| அளவறுப் | ௪௭ |
| அளவிலாப் | ௨௦௨ |
| அளித்து | ௧௭௩ |
| அளிபுண் | ௧௭௮ |
| அறவேபெற் | ௨௦௫ |
| அறவையே | ௨௨௪ |
| அறிவனே | ௫௧ |
| அறிவிலாத | ௪௬ |
| அறுகெடு | ௧௦௪ |
| அறுக்கிலேன் | ௧௭௧ |
| அறையோ | ௨௫௪ |
| அன்பராகி | ௧௭௦ |
| அன்பினால் | ௧௬௪ |
| அன்றாலநீழ | ௧௩௧ |
| அன்றேஎன் | ௨௧௦ |
| அன்னேயி | ௮௬ |
| ஆடரப்பூ | ௧௪௭ |
| ஆடுகின்றிலே | ௪௬ |
| ஆட்டின் | ௧௩௬ |
| ஆட்டுத்தேவர் | ௧௭௧ |
| ஆணேஅலியோ | ௧௪௪ |
| ஆதமிலி | ௨௨௭ |
| ஆதியும் | ௮௩ |
| ஆமாறுன் | ௩௯ |
| ஆயநான் | ௪௩ |
| ஆயமொழி | ௧௫௪ |
| ஆர்க்கோ | ௨௫௩ |
| ஆர்த்தபிறவி | ௮௯ |
| ஆவகைநாமும் | ௧௦௮ |
| ஆவாஅரி | ௧௧௮ |
| ஆவாதிரு | ௧௩௫ |
| ஆற்றகில்லே | ௧௮௪ |
| ஆனையாய்க் | ௯௮ |
| ஆனைவெம் | ௭௩ |
| இடக்குந் | ௨௩௩ |
| இணையார் | ௧௨௮ |
| இந்திரனும் | ௯௫ |
| இந்திரிய | ௨௦௦ |
| இப்பாடே | ௧௫௩ |
| இப்பிறப்பி | ௨௩௬ |
| இயக்கிமாராறு | ௧௧௯ |
| இரங்கும்நம | ௧௬௨ |
| இராந்திரா | ௧௬௯ |
| இருகை | ௪௯ |
| இருதலேக் | ௭௦ |
| இருந்தென்னை | ௨௫௫ |
| இருந்தென்னையா | ௭௩ |
| இருப்பு | ௬௦ |
| இரும்பு | ௨௨௬ |
| இருள்திணிந் | ௧௮௩ |
| இல்லை | ௬௫ |
| இழித்தனன் | ௫௫ |
| இன்பந்தரு | ௧௫௦ |
| இன்பம்பெரு | ௨௫௬ |
| இன்பான் | ௧௫௪ |
| இன்றெனக் | ௧௬௭ |

இன்னிசை ௪௫௭
ஈசனேநீ ௫௯
ஈசனேஎன் ௫௨
ஈண்டிய ௨௨௦
ஈரம்பு ௧௩௪
உகந்தானே ௧௬௧
உங்கையிற் ௯௨
உடையநாதனே ௬௬
உடையாள் ௧௬௦
உடையானே ௫௩
உணர்ந்த ௧௬௫
உண்டொடார் ௪௯
உண்ணப் ௧௩௬
உத்தமனத்தன் ௩௬
உம்பர் ௨௨௨
உய்யவல்லா ௧௩௫
உரியேன் ௨௪௫
உருகிப்பெருகி ௪௨௧
உருத்தெரியா ௨௦௧
உரைமாண்ட ௧௪௨
உலக்கை ௧௦௪
உலவாக் ௫௨
உவலைச் ௪௨௧
உழிதரு ௩௮
உழைதரு ௮௧
உள்ளப்படாத ௧௧௫
உள்ளமல ௨௫௬
உள்ளன ௭௪
உற்றஆக்கை ௧௮௨
உற்றாரை ௨௩௦
உன்னற்கரியசீர் ௧௪௭
உன்னற்வரியதி ௧௪௪
உன்னைஉகப் ௧௫௧
ஊசலாட்டு ௨௩௭
ஊனாய்உயிராய் ௯௯
எங்கள்நாயக ௧௯௪
எச்சம்அறிவே ௨௧௪
எண்ணிலேன் ௧௮௧
எண்ணுடை ௧௪௦
எந்தையா ௫௧
எந்தையெந் ௧௨௮
எம்பிரான் ௫௬
எய்தலாவ ௫௯
எய்த்தேன் ௧௭௮
எரிமூன்று ௧௨௯
எறும்பிடை ௭௪
எனைநானெ ௨௧௨
என்பாலைப் ௨௨௮
என்புள்ளுரு ௨௩௨
என்பே ௨௪௬
என்றும் ௧௩௮
என்னணி ௨௬௧
என்னப்பன் ௧௨௩
என்னலறியா ௨௬௪
என்னை ௭௨
ஏகாசமிட்ட ௧௩௭
ஏசாநிற்பர் ௧௯௨
ஏசினும் ௮௨
ஏதமிலா ௧௫௨
ஏய்ந்த ௨௩௫
ஏரார்இளங் ௧௫௨
ஏர்தரும் ௧௪௯
ஏழைத்தொழும் ௧௪௧
ஏனையாவ ௪௮
ஐயநின் ௫௮
ஒண்மை ௭௪
ஒப்புனக் ௨௨௪
ஒருவனே ௫௬
ஒள்நித்தில ௮௫
ஒன்றாய் ௧௧௩
ஒன்றினொ ௨௬௦
ஒன்றும்போ ௨௦௯
ஓடுங்கவந்தி ௨௩௧
ஓயாதே ௯௬
ஓய்விலா ௪௮
ஓரொருகால் ௯௦
கடகரியும் ௧௨௬
கடலினுள் ௭௧
கடலின்திரை ௨௧௩
கடலேஅனைய ௨௦௬
கடவுளே ௫௫
கடையவ ௬௮
கட்டறுத் ௫௧
கண்களிரண் ௨௫௯
கண்டது ௭௭
கண்ணஞ் ௧௪௬
கண்ணப்பன் ௧௧௨
கண்ணார் ௨௧௦
கதியடியேற் ௮௦
கமலநான் ௧௯௪
கயல்மாண் ௧௨௦
கரணங்கள் ௧௧௩
கருடக்கொடி ௧௭௭
கருவாய்உல ௧௧௫
கலந்துநின் ௨௦௩
கலநாருரித் ௧௧௯
கல்லாதபுல் ௨௦௧
கல்லாமன ௯௫
களிவந்த ௭௨
கள்வன் ௧௧௯
கறங்கோலை ௧௧௯
கற்போலு ௧௩௯
கற்றறியேன் ௨௨௭
கனவேயுந் ௧௧௯
காசணிமின் ௧௦௩
காட்டகத்து ௨௫௭
காணலாம் ௫௦
காணுங் ௨௫௮
காணும ௨௪௬
காணுமாறு ௬௧
காதார் ௯௦
காப்பாய் ௧௮௮
காமனுடலு ௧௪௧
காருடைப் ௧௫

| | |
|---|---|
| காருறு | ௬௯ |
| காலமுண்டாக | ௨௧௯ |
| காணுர்புலித் | ௧௨௫ |
| கிஞ்சுக | ௧௫௩ |
| கிளியனுர் | ௨௧௬ |
| கிளிவந்த | ௧௦௦ |
| கிற்றவா | ௪௭ |
| கீதமினிய | ௧௪௯ |
| குதிகுதிப் | ௭௭ |
| குலங்களைந் | ௭௬ |
| குலம்பாடி | ௧௨௨ |
| குழைத்தாற் | ௨௦௮ |
| குறியும்நெறி | ௨௩௨ |
| குறைவிலா | ௧௬௬ |
| கூடிக்கூடி | ௨௦௭ |
| கூவின | ௧௫௬ |
| கூறும்நாவே | ௨௦௯ |
| கூற்றை | ௨௨௧ |
| கெடுவேன் | ௨௬௫ |
| கேட்டாயோ | ௯௬ |
| கேட்டாரும் | ௪௫ |
| கையார் | ௯௮ |
| கையால்தொழு | ௧௭௯ |
| கோந்தணவும் | ௧௫௧ |
| கொம்பரில்லா | ௭௩ |
| கொம்பில் | ௨௩௩ |
| கொம்மை | ௨௩௪ |
| கொழுமணி | ௭௫ |
| கொள்ளுங் | ௫௦ |
| கொள்ளேர் | ௬௮ |
| கொள்ளேன் | ௩௯ |
| கொன்றை | ௧௪௮ |
| கோணிலா | ௨௧௭ |
| கோயில்சுடு | ௧௨௪ |
| கோலமேனி | ௧௯௧ |
| கோலவரை | ௧௪௫ |
| கோலாலமாகி | ௧௨௫ |
| கோவே | ௨௧௫ |
| கோழிசிலம்ப | ௮௭ |
| கோற்றேன்மொ | ௧௫௪ |
| கோற்றேன்என | ௨௧௪ |
| சங்கம்அரற்ற | ௧௦௮ |
| சங்கரா | ௫௫ |
| சங்கு | ௨௬௩ |
| சச்சை | ௭௯ |
| சடையானே | ௨௩௦ |
| சட்டோமினை | ௧௧௩ |
| சதுரை | ௨௧௮ |
| சந்திரனை | ௯௯ |
| சலமுடைய | ௧௨௭ |
| சாடியவே | ௧௩௫ |
| சாதல் | ௨௬௮ |
| சாதிகுலம் | ௨௦௧ |
| சாவமுன் | ௩௬ |
| சித்தமேபுகு | ௨௩௯ |
| சிந்தனை | ௪௪ |
| சிந்தை | ௬௦ |
| சிரிப்பார் | ௧௬௩ |
| சிரிப்பிப்பன் | ௮௨ |
| சீரார்திரு | ௧௩௩ |
| சீரார்பவள | ௧௪௨ |
| சீலமின்றி | ௨௬௪ |
| சீவார்ந்தீ | ௧௭௭ |
| சுடர்பொற் | ௧௮௪ |
| சுந்தரத் | ௧௫௦ |
| சுந்தரநீற | ௧௦௩ |
| சுருள்புரி | ௧௭௫ |
| சூடகந்தோள் | ௧௦௫ |
| சூடுவேன் | ௯௯ |
| சூரியனுர் | ௧௩௭ |
| செங்கணவன் | ௯௧ |
| செங்கண்நெடு | ௯௪ |
| செடியாராக் | ௧௭௯ |
| செப்பார் | ௯௭ |
| செம்மை | ௨௬௮ |
| செய்த | ௨௫௪ |
| செய்யவாய் | ௧௫௩ |
| செய்வதறியா | ௫௨ |
| செல்வம்நல் | ௫௧ |
| செழிகின்ழ | ௬௯ |
| செழுக்கமல | ௧௭௪ |
| செறியும்இப் | ௨௩௭ |
| செறியும்பிற | ௨௧௯ |
| சோக்கருதி | ௨௫௦ |
| சோல்லிய | ௨௬௩ |
| சோதியாய் | ௧௬௮ |
| சோதியே | ௧௯௩ |
| சோலைப்ப | ௧௫௫ |
| ஞாலம் | ௧௭௨ |
| ஞானக்கரும் | ௧௦௮ |
| ஞானவாள் | ௨௫௨ |
| தகைவிலா | ௨௧௭ |
| தக்கனுர | ௧௩௭ |
| தக்கனையும் | ௧௨௪ |
| தச்சுவிடு | ௧௩௪ |
| தந்ததுன் | ௧௬௮ |
| தரிக்கிலேன் | ௫௪ |
| தவமே | ௩௭ |
| தறிசெறி | ௨௧௭ |
| தனித்துணை | ௭௯ |
| தனியனேன் | ௪௪ |
| தன்மை | ௫௩ |
| தாதாடு | ௧௫௩ |
| தாதாய்மூவே | ௧௮௭ |
| தாமே | ௨௪௮ |
| தாயாய் | ௨௬௫ |
| தாரகை | ௮௨ |
| தாராய்உடையாய் | ௬௨ |
| தாராஅருளொ | ௨௦௯ |
| தாளிஅருகி | ௧௪௮ |
| தானந்தம் | ௧௨௫ |
| தீகழத்திகழும் | ௧௮௬ |
| திண்போர் | ௧௩௨ |
| திருந்துவார் | ௧௯௬ |

| | |
|---|---|
| திருமாலும் | ௧௧௭ |
| திருவார் | ௧௧௭ |
| தில்லைமூதூர் | ௭ |
| தினைத்தனை | ௧௧௨ |
| தீதில்லை | ௧௪௦ |
| தீர்க்கின்ற | ௭௦ |
| தீர்ந்தஅன் | ௫௬ |
| துடிகொள் | ௧௯௪ |
| துடியேர் | ௨௩௧ |
| துணியாஉருகா | ௨௦௬ |
| துண்டப்பிறை | ௯௭ |
| துப்பனே | ௧௯௫ |
| தூவெள் | ௨௪௪ |
| தேங்குலவு | ௧௪௫ |
| தென்பாலுகந் | ௧௨௫ |
| தேரைநிறுத்தி | ௧௩௭ |
| தேவதேவன் | ௨௩௮ |
| தேவர்கோ | ௪௫ |
| தேனகமாமலர் | ௧௦௯ |
| தேனாடுகொ | ௧௨௯ |
| தேனைப்பாலை | ௫௩ |
| தேன்பழச் | ௧௫௦ |
| தேன்புக்க | ௧௨௬ |
| தையலார் | ௨௬௮ |
| தையலோர் | ௧௪௮ |
| தொண்டர்காள் | ௨௫௨ |
| தோலுங் | ௧௧௬ |
| நங்காய் | ௧௨௫ |
| நங்கைமீரெனை | ௨௩௮ |
| நஞ்சமர் | ௧௪௩ |
| நடித்து | ௨௩௫ |
| நண்ணிப் | ௨௫௭ |
| நமச்சிவாய | ௧ |
| நரியை | ௨௬௬ |
| நல்கா | ௧௬௩ |
| நல்லமலரின் | ௧௩௭ |
| நன்றாக | ௧௨௬ |
| நாடகத்தா | ௩௯ |
| நாதம்உடை | ௨௪௩ |
| நாமகள் | ௧௩௬ |
| நாயிற்கடைப் | ௧௨௯ |
| நாயிற்கடையா | ௨௧௦ |
| நாயேனை | ௧௧௪ |
| நானாரடி | ௨௪௨ |
| நானார்என் | ௧௧௧ |
| நானும்என் | ௧௧௫ |
| நானேயோ | ௨௨௯ |
| நான்தனக் | ௧௧௪ |
| நான்மறை | ௧௩௬ |
| நான்முகன் | ௨௫ |
| நீத்தமனாள | ௧௪௬ |
| நிருத்தனே | ௧௯௩ |
| நிலம்நீர் | ௧௩௯ |
| நிற்பார் | ௨௫௦ |
| நினைப்பதாக | ௫௯ |
| நினையப்பிற | ௧௮௬ |
| நீக்கிமுன் | ௧௮௨ |
| நீண்டகர | ௧௪௭ |
| நீண்டமாலும் | ௧௮௫ |
| நீதியாவன | ௧௮௦ |
| நீரின்பவெ | ௨௧௯ |
| நீலவுரு | ௧௫௦ |
| நெக்குநெக் | ௧௮௭ |
| நெடுந்தகை | ௭௧ |
| நெறிசெய் | ௧௩௦ |
| நெறியல்லா | ௨௬௭ |
| நோயுற்று | ௧௧௪ |
| பங்கயம் | ௧௪௦ |
| பச்சைத்தாள் | ௨௨௭ |
| பஞ்சாய...ந | ௨௨௮ |
| பஞ்சாய...நெ | ௨௬௭ |
| பஞ்சின்மெல் | ௧௯௧ |
| படமாக | ௧௩௧ |
| பணிவார் | ௯௨ |
| பண்சுமந்த | ௯௬ |
| பண்டாய | ௨௫௬ |
| பண்ணார்ந்த | ௨௨௭ |
| பண்ணினேர் | ௧௯௦ |
| பண்பட்ட | ௧௨௯ |
| பத்தர்சூழப் | ௨௩௯ |
| பத்திமை | ௨௦௨ |
| பத்திலனே | ௨௪௬ |
| பந்தணைவிர | ௧௯௧ |
| பந்தவிகார | ௨௩௧ |
| பப்பற | ௧௩௮ |
| பரந்துபல் | ௩௭ |
| பரம்பரனே | ௭௭ |
| பரவுவாரவர் | ௧௮௧ |
| பரவுவார்இமை | ௪௦ |
| பரிதிவாழ் | ௧௯௧ |
| பரிந்துவந்து | ௧௮௬ |
| பருவரை | ௨௧௮ |
| பவனெம் | ௩௮ |
| பழிப்பில் | ௮௧ |
| பழுதில்தொல் | ௧௯௨ |
| பற்றாங்கவை | ௨௧௩ |
| பன்னாட்பரவி | ௧௩௦ |
| பாங்கினொடு | ௨௦௨ |
| பாசம்பரஞ் | ௮௪ |
| பாசவேரறு | ௨௨௪ |
| பாடவேண்டு | ௬௭ |
| பாடியால்புக | ௧௯௦ |
| பாடிற்றிலேன் | ௮௧ |
| பாதாளம் | ௮௮ |
| பாரார்விசும் | ௯௪ |
| பாருருவாய | ௨௪௫ |
| பாரொடு | ௧௮௯ |
| பாரோர் | ௧௭௯ |
| பார்பதம் | ௧௬௭ |
| பார்பாடும் | ௧௨௦ |
| பார்ப்பதி | ௧௩௫ |
| பாலகனார்க் | ௪௩௭ |
| பாலும் | ௧௩௧ |
| பால்திரு | ௨௪௭ |

| | |
|---|---|
| பால்வினைந் | ௨௨௫ |
| பாவநாசா | ௧௯௨ |
| பாழ்ச்செய் | ௨௩௩ |
| பிட்டுநேர்பட | ௧௯௮ |
| பிணக்கிலாத | ௧௯௭ |
| பிணியெலாம் | ௨௧௬ |
| பித்தனென் | ௧௮௧ |
| பித்தென்னை | ௨௫௪ |
| பிரமன் | ௧௪௧ |
| பிறவிதனை | ௨௦௨ |
| பிறவியென் | ௨௩௯ |
| பிறிவறியா | ௧௭௬ |
| புகவேதகே | ௩௮ |
| புகவேவேண்டா | ௨௪௮ |
| புகழ்மின் | ௨௪௧ |
| புகுவதா | ௪௭ |
| புகுவேனெ | ௫௪ |
| புணர்ப்ப | ௫௭ |
| புத்தன்புரந்த | ௧௨௧ |
| புத்தன்முத | ௧௩௯ |
| புரந்தாரு | ௧௩௬ |
| புரள்வார் | ௨௫௧ |
| புலன்கள் | ௭௫ |
| புலையனேனை | ௧௭௦ |
| புவனியிற் | ௧௫௯ |
| புழுவினுற் | ௨௪௦ |
| புறமே | ௬௨ |
| புற்றில்வாள் | ௨௧௫ |
| புற்றுமாய் | ௧௯௯ |
| புன்புலால் | ௨௨௬ |
| பூங்கமல | ௨௩௦ |
| பூசுவதும் | ௧௨௩ |
| பூணுத | ௧௯௮ |
| பூதங்கள்ஐந் | ௨௦௩ |
| பூதங்கள்தோறு | ௧௫௭ |
| பூத்தாரும் | ௧௩௮ |
| பூமேல் | ௧௧௬ |
| பூவலர் | ௨௪௩ |
| பூவார் | ௨௪௭ |
| பூவியல் | ௧௦௨ |
| பூவேறு | ௧௧௧ |
| பெருநீரற | ௭௫ |
| பெருமான் | ௨௫௦ |
| பெரும்பெரு | ௧௭௪ |
| பெற்றது | ௭௪ |
| பெற்றிபிறர்க் | ௧௦௧ |
| பேசப்பட் | ௬௧ |
| பேசிற்றாம் | ௪௩ |
| பேசும் | ௨௫௮ |
| பேதம்இல்ல | ௧௯௯ |
| பேராசை | ௧௩௦ |
| பேருங்குண | ௨௩௨ |
| பைங்குவளை | ௮௯ |
| பைந்நாப்ப | ௨௧௧ |
| போச்சை | ௨௩௭ |
| பொதும்புறு | ௭௮ |
| பொத்தை | ௧௮௨ |
| பொய்யவ | ௭௦ |
| பொய்யனேன் | ௪௯௯ |
| பொய்யாய | ௪௧௬ |
| பொய்யெல் | ௨௬௭ |
| பொருட்பற்றி | ௧௩௯ |
| பொருத்த | ௬௪ |
| பொருந்தும் | ௨௩௫ |
| பொருளே | ௭௨ |
| பொலிகின்ற | ௭௧ |
| பொழிகின்ற | ௧௭௫ |
| பொன்னிய | ௨௬௨ |
| போகம் | ௫௭ |
| போதுசேரய | ௧௭௨ |
| போரேறே | ௫௨ |
| போற்றி அருளுக | ௬௩ |
| போற்றியிப் | ௫௯ |
| போற்றியென் | ௫௫ |
| போற்றி...வா | ௧௫௫ |
| போற்றியென்று | ௫௦ |
| போற்றியோ | ௫௪ |
| மஞ்சுலாம் | ௨௧௭ |
| மடங்க | ௭௩ |
| மண்ணதனிற் | ௨௬௭ |
| மண்ணினில் | ௨௬௨ |
| மதிக்குந் | ௨௩௩ |
| மத்துறு | ௭௬ |
| மருவினிய | ௨௨௯ |
| மருளனேன் | ௧௯௬ |
| மலங்கினேன் | ௧௯௮ |
| மலைமகளை | ௧௨௪ |
| மலையரை | ௧௨௬ |
| மறுத்த | ௬௯ |
| மன்னஎம் | ௬௭ |
| மன்னவனே | ௮௦ |
| மாடுஞ்சு | ௨௩௬ |
| மாடுகை | ௧௦௬ |
| மாதாடு | ௧௪௪ |
| மாதிவர் | ௨௪௧ |
| மாயவனப் | ௨௨௦ |
| மாயவாழ்க் | ௨௩௯ |
| மாயனே | ௧௭௨ |
| மாலயன் | ௨௪௧ |
| மாலறியா | ௮௫ |
| மாலேபிரமனே | ௧௨௦ |
| மாவடுவகிர | ௧௭௬ |
| மாவார | ௧௩௩ |
| மாழைமை | ௧௭௫ |
| மாறிநின்றெனை | ௪௬ |
| மாறிநின்றென் | ௧௧௪ |
| மாறிலாத | ௬௩ |
| மாறுபட் | ௭௧ |
| மானம்அழிந் | ௧௪௦ |
| மானேநீ | ௮௬ |
| மானேர்நோ உமை | ௫௩ |
| மானேர்நோக்கி | ௨௦௯ |
| மானேர்நோக்கியு | ௯௧ |
| மானேர்பங்கா | ௨௦௭ |

| | |
|---|---|
| மிடைந்தெ | களஅ |
| மின்கணி | களரு |
| மின்னிடை | கoஎ |
| மின்னேர | உகூச |
| முடித்தவாறும் | ருங |
| முதலை | எக |
| முத்தணி | கoகூ |
| முத்தனே | ககூகூ |
| முத்தனை | உசo |
| முத்தன்ன | அச |
| முத்திக்குழன்று | கஉo |
| முத்திநெறி | உகூகூ |
| முத்துநல் | கoஉ |
| முந்தியமுதல் | கருக |
| முழுதயில் | அo |
| முழுமுதலே | ககூக |
| முழுவதும் | ஙஎ |
| முன்ஈறும் | கசங |
| முன்னாய | கஙஉ |
| முன்னானை | கoo |
| முன்னிக் | கூக |
| முன்னின்ற | ககூக |
| முன்னை என் | கஅo |
| முன்னைப்பழ | அஎ |
| முன்னைவி | உருச |
| மூத்தானே | உஉஅ |
| மூவரும் | உருரு |
| மூன்றங் | கசங |
| மெய்தான் | ஙரு |
| மெய்யனே | ககூரு |
| மேலைவானவ | ருo |
| மேவும்உன் | உoரு |
| மை இலங்கு | கூச |
| மைப்பொலியு | கூஅ |
| மையமர் | கoஎ |
| மையலாய் | உஙச |
| மொய்ப்பால் | களஎ |
| மொய்யார் | அஅ |
| யாவர்க்கும் | உருரு |
| யானேதும் | ஙக |
| யானேபொய் | கூங |
| வட்டமலர் | ககo |
| வணங்கத் | கஙo |
| வணங்கும்இப் | உஙகூ |
| வணங்கும்நின் | ருஅ |
| வண்ணம் | சங |
| வந்திமை | உசஉ |
| வம்பனாய்த் | உசo |
| வம்பனேன் | கஅக |
| வருந்துவன் | ஙக |
| வலைத்தலை | எக |
| வல்லைவா | ககூo |
| வழங்குகின் | களகூ |
| வளர்கின்ற | கூக |
| வளைந்தது | கஙச |
| வன்புலால் | உககூ |
| வன்னெஞ்ச | ககச |
| வா இங்கே | கருக |
| வாராவழி | உருரு |
| வாழ்கின்றாய் | சக |
| வாழ்த்துவதும் | சo |
| வாழ்ந்தார் | உருஎ |
| வாளுலாம் | உககூ |
| வாள்தடங் | கoரு |
| வானநாட | கூரு |
| வானவன் | கஙக |
| வானாகி | சo |
| வான்கெட்டு | கஉக |
| வான்பாவிய | உகச |
| வான்வந்த | கூரு |
| விச்சதின்றி | கூகூ |
| விச்சுக்கேடு | கூo |
| விச்சைதான் | சரு |
| விடுமின் | உசகூ |
| விடைவிடா | உஉஉ |
| விண்ணகத் | கருகூ |
| விண்ணாளுந் | கூஎ |
| விண்ணோர் | கஉஉ |
| விரவிய | உஉக |
| வினைக்கேடரும் | உகஉ |
| வினைப்பிறவி | உoo |
| வினையிலே | சஉ |
| வினையென் | சஅ |
| வெஞ்சின | கஙகூ |
| வெஞ்சேலனைய | களகூ |
| வெந்து | உகூஎ |
| வெய்யவன் | கஙரு |
| வெய்யவினை | உருங |
| வெருவரேன் | உகரு |
| வெள்ளத் | எஉ |
| வெள்ளந்தாழ் | சஉ |
| வெள்ளைக் | கசஎ |
| வெறுப்பன | களச |
| வேடுருவாகி | உசஉ |
| வேண்டத்தக்க | உoகூ |
| வேண்டும்நின் | ருஅ |
| வேண்டும்வே | உoச |
| வேண்டேன் | உகங |
| வேதமும் | ககo |
| வேதமொழி | கசகூ |
| வேவத் | உசங |
| வேனில்வேள்ம | சக |
| வேனில்வேள்க | சகூ |
| வைத்தநிதி | ககங |
| வைப்புமா | கஅo |
| வையகம் | கoரு |